

மாணிக்கவாசகர் வரலாற்று ஆய்வுரை

மறை. திருநாவுக்கரசு

"தமிழ்நாடு அரசின் சிறந்த நூல்களுக்கான
திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்றது"

உ

அன்பே சிவம் !

மாணிக்கவாசகர் வரலாற்று ஆய்வுரை

ஆசிரியர் :

மறைமலையடிகள் மகனார்

'திருமுறைச் செல்வர்' சித்தாந்த தினகரன்'

பேராசிரியர், வித்துவான்

மறை. திருநாவுக்கரசு

ஓய்வு பெற்ற தமிழ் விரிவுரையாளர்

வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி

மறைமலையடிகள் பதிப்பகம்

24, மூன்றாம் முதன்மைச்சாலை

சவகர் நகர், அகரம்

பெரம்பூர், சென்னை-82.

தி. பி. 2016 (1985)] [விலை : உரு. 25-00

மாணிக்கவாசகர் வரலாற்று ஆய்வுரை

— மறை. திருநாவுக்கரசு

முதற்பதிப்பு 1985

விலை : உருபா. 25-00

அச்சிட்டோர் :
மறைமலை அச்சகம், புன்செய்ப் புளியம்பட்டி - 638459
பெரியார் மாவட்டம்.

பதிப்புரை

"திருவாசகத்திற் குருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்"

" மனம் கரைத்து மலம் கெடுக்கும் வாசகம் "

என்பன பழமொழி.

எல்லாம் வல்ல மெய்ப் பொருளாகிய அம்மையப்பராம் சிவபெருமான் திருவருளின் ஆணையால் என் தந்தையார் இம் மாணிக்கவாசகர் ஆய்வுரை நூல் வெளிவரும் முன்னரே சிவபிரான் திருவடி சேர்ந்துவிட்டார்கள்.

தேவாரம் பாடிய மூவர் வரலாற்று ஆய்வு நூல்களும், நான்காம் தொகுதியில் அறுபதடியார் வரலாற்றாய்வுரை நூலும் முன்னரே வெளியிட்டுள்ளார். மணிவாசகப் பெருமானின் ஆய்வுரை நூலையும் எழுதி வெளியிடுமாறு பல பெரியோர்களும் மெய்யன்பர்களும் நீண்டநாள் வற்புறுத்தியதன் கரணியமாக, சிவபெருமானின் அருளால் இந்நூலை எழுதி முடித்தார். பின்னர் இந்நூல் அச்சாகிக் கொண்டிருக்கும சமயத்தில் சிவபெருமான் அவரை அழைத்துக் கொண்டு விட்டார்.

" ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே " என்ற அப்பரடிகள் அருளுரைப்படி எந்தையாரின் எண்ணம் நிறைவெய்தியமைக்கு, " வேண்டுவார் வேண்டுவதே ஈவான் " திருக்கழல்களை வணங்கி வாழ்த்துகிறேன்.

இக்காலத்தில் நூல் எழுதி வெளியிடுதல் என்பது எளிதான செயல் அன்று. அதுவும் சமய நூல் என்றால் மிகத் துன்பம். சமய நூல்களை வாங்கிப் படித்து இன்புறும் அன்பர்களும் தொண்டர்களும் குறைவாக உள்ள காலத்தில் இந்நூல் வெளிவருகிற தென்றால் சில இறைப்பற்றுள்ள அன்பர்களின் ஆர்வமும் எம் சிவபெருமானின் அருளும்தான் கரணியமாகும்.

என் தந்தையார் 15 அகவையிலிருந்தே பாடல்பெற்ற திருக்கோயில்கட்கும் நாயன்மார்கள் திருக்கோயில்கட்கும் பன்முறை சென்று வழிபாடு செய்துள்ளார். தான் இறக்கும் தறுவாயிலும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று இறைபணி செய்து வந்தார்கள். அதுபோல் இந் நாட்டுக்கும், உயிரினும் மேலான நம் தமிழ்மொழிக்கும் தம் வாணாள் முழுதும் தொண்டாற்றினார்.

நாட்டு விடுதலைக்காகச் சிறை சென்றும் தமிழ்மொழிக் காக என் அன்னையுடன் சிறை சென்றும் (இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி) இந்நாட்டுக்கும் மொழிக்கும் தொண்டாற்றி நற் பெயர் பெற்று இந்நூல் வெளிவரும் வேளையில்

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்"

என்ற குறளுக்கு இலக்கணமாகி அதை மெய்ப்பித்து இறைவனடி சேர்ந்து விட்டார்கள்.

அவர் இருக்கும் காலத்து அவர்பால் பேரன்பு கொண் டிருந்த பெரியோர்களுக்கும் அன்பர்களுக்கும் அவருக்குத் தொண்டு செய்வதே பெரும் பேறு எனக் கருதி, பணியாற்றிய நல்லுள்ளங்கட்கும் என் உயிர் உள்ளவரை நன்றியறிதலைக் காட்டக் கடப்பாடுடையேன் என்பதைக் கூறாமல் இருக்க முடியாது.

பெரிய புராண ஆய்வுரைகள் அனைத்தும் எழுதும் எண்ணங் கொண்டு எழுதத் தொடங்கியவுடன் உடல்நிலை அதற்கு இடம் கொடாமல் இருந்தது. அச்சமயத்தில், "ஆற்றங்கரையில் நின்ற இருவரில் ஒருவரது ஆடை ஆற்றில் அடித்துச் செல்ல, மற்றவர் கலிங்கம் (ஆடை) செல்கின்றதே என்று கவன்று கூற, முன்னவர் இக் கலிங்கம் சென்றாலென்ன? சொக்கலிங்கம் இருக்க" என்ற சொல்லிற் கிணங்க நம் பண்டுவர் (டாக்டர்) திரு. ஆர். எம். சொக்க லிங்கனார் அவர்கள் ஏதொரு கைம்மாறும் கருதாது உள்ளன்புடனும் உண்மையுடனும் ஊசிகளும் மருந்துகளும் கொண்டு இல்லம் வந்து அவ்வப்போது கவனித்தும் வந்தார் என்றால், என் தந்தையார் சிவபெருமானை உள்ளன்போடு வணங்கியமை இச் செயலால் உண்மையென அறிவிக் கின்றோம்.

மேலும் என் தந்தையார் அகவை முதிர்ந்தமையால் வெளியூர் செல்வதற்குப் பல வகையிலும் இடையூறு ஏற்பட்டது. அவ்வமயம் சென்னை அம்பத்தூரில் வசிக்கும் திரு. செ. ப. சிவம் அவர்கள் பல ஊர்களுக்கும் (சைவ சித்தாந்தப் பெருமன்ற மாநாடு, சின்னமனூர்) இலக்கிய நிகழ்ச்சிகளுக்கும் தந்தையாருக்குப் பாதுகாப்பாகச் சென்று வந்தார். இந்நேரத்தில் அவரையும் அவர் குடும்பத்தாரையும் நினைக்க வேண்டியது நன்றியறிதலைக் காட்ட வாய்ப்பாயிற்று.

அத்துடன் தந்தையாருடன் நெருங்கிப் பழகிப் பல உதவிகள் பணத்தினாலும் உள்ளத்தாலும் செய்தவைகளும் செய்தவர்களும் கணக்கில் அடங்கார். அவர்கள் அனைவர்க்கும் என் உளம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

எந்தையார் தெய்வச் சேக்கிழார் இயற்றிய பெரிய புராண ஆய்வுரை எழுதியதோடு அவர் வாழ்ந்த குன்றத்தூரில் (சென்னைக்கு அருகில்) அவருக்கு 33 ஆண்டுகள் தொடர்ந்தாற்போல் ஆண்டில் (மே மாதம்) 10 நாள்கள் விழாக் கொண்டாடினார். அவ் விழாக்களில் பல அறிஞர்களின் சொற்பொழிவுகளும் பெரிய புராண மாணவர் வகுப்புகளும் நிகழும் விழாவில் கலந்து கொள்ளும் அனைவர்க்கும் தங்குமிடமும் உணவும் இலவயமாக அளித்துத் தம் இறைப் பணியைச் செவ்வையாகச் செய்து வந்தார். சேக்கிழார் திருப்பணிக்கு நன்கொடை அளித்த பல பெரியோர்களில் கைவண்டூர் திரு. இராசு முதலியார் அவர்கள் மிகவும் முக்கியமானவர். ஒவ்வோர் ஆண்டும் சேக்கிழார் விழாவின்போது அரிசியும் மற்றும் பல உணவுப் பண்டங்களும் இலவயமாகக் கொடுத்ததோடு விழாவிலும் அன்புடன் கலந்து கொள்வார். அவர்தம் கொடை உள்ளத்தினையும் உண்மை அன்பையும் இந்நேரத்தில் எண்ணுவது என் கடமையன்றோ!

என் தந்தையார் நேபாளத்தில் இருக்கும் மூன்று கண்களையுடைய சிவபெருமானை வழிபடப் பலமுறை முயன்றும் முடியாமற் போயிற்று: கடைசியாக எந்தையாரின் ஆருயிர் நண்பரும் கொடை வள்ளலும் வணிகருமான சேலம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் வாயிலாகத் தம் 75-ஆம் அகவையில் வட இந்தியத் திருத்தலச் செலவினை மேற்கொண்டு சிவபெருமானை வழிபட்டு மகிழ்ச்சியுடன்

திரும்பினார்கள். எந்தையாரின் ஆசையை நிறைவேற்றிய பெருமை திரு. சுப்பிரமணியம் அவர்களையே சாரும்.

இன்று சிவநெறி உலகம் முழுதும் பரவியிருப்பது அனைவரும் அறிந்ததே! அமெரிக்காவில் "Saivaties World" என்ற அமைப்பை நிறுவி அதன் தலைவராக இருக்கும் சுவாமி குருதேவ், சிவத்திரு. சிவாய சுப்பிரமணி அவர்கள் சிவநெறி உலகெங்கும் பரவ மிக முக்கியக் காரணராக விளங்கி வருகிறார்கள். அவர் தமிழகத்திற்கு வந்தபொழுது தந்தையாக அவர்களைச் சந்தித்துத் தாம் எழுதிய பெரிய புராண ஆய்வுரை நூல்கள் பற்றியும் 'சைவ மத வினா விடை' நூல் பற்றியும் அவைகளின் மூலம் தாம் ஆற்றிவரும் பணி குறித்தும் குறிப்பிட்டுள்ளார்கள். அவைகளைப் படித்த குருதேவ் அவர்கள் இவைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலக முழுதும் பரப்புதல் வேண்டும் என்று பேரவாக் கொண்டார். அதன்படி முதற்கட்டமாகச் சைவ மத வினா விடை நூல் என் தந்தையின் நெருங்கிய நண்பரும் ஈரோடு வாசவிக் கல்லூரிப் பேராசிரியரும், பன்மொழிப் புலவருமான திரு. மு. சதாசிவம் அவர்கள் இப்பொறுப்பினை ஏற்று மொழி மாற்றம் செய்து முடித்தார்கள். ஏனைய நூல்களும் இவ்வாறே படிப்படியாக மொழி பெயர்க்கப் பெறும். மேலும் குருதேவ் அவர்கள் எம் இல்லம் வந்து சிறப்பித்தார். அவரை எம் இல்லத்திற்கு அழைத்து வரும் பேறு எனக்கு வாய்த்தது, நான் முற்பிறப்பில் செய்த நல்வினையே என்று சிவ அன்புடன் கூறிக் கொள்கிறேன்.

மேலும் என் பாட்டனார் பெயர் கொண்டு மறைமலையடிகள் மன்றமும், அச்சகமும் புன்செய்ப் புளியம்பட்டியில் சிவமணம் பரப்பியும் தமிழ்த் தொண்டாற்றியும் இன்றளவும் நடைபெற்று வருகிறது. இம்மன்றத்தின் தலைவராக இருந்த இரா. ஆறுமுகனார் சைவமும் தமிழும் வளர அரும்பாடு பட்டுப் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுது காலன் அவரைத் திடுமென அழைத்துச் சென்று விட்டான். அவர் மறைவு ஈடு செய்ய முடியாத ஒன்றாக இருப்பினும், மறைமலையடிகள் மன்றச் செயலாளரும் தமிழாசிரியருமான திரு கா இளமுருகன் அவர்கள் நல்லெண்ணம் கொண்டு மன்றத்தை நடாத்தி வருவதோடு இந்நூல் வெளிவருவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்து வந்தார். அவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

நூல் வெளிவருவதற்கு மிக்க ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்த பண்டுவர். (டாக்டர்) திரு ஆர். எம். சொக்கலிங்கம் அவர்களைப் பாராட்டச் சொற்களே கிடையாது. என் தந்தையார்க்கு எவ்வாறு யாதொரு கைம்மாறும் கருதாமல் உடல் நலம் பேணினார்களோ அதுபோல் நூல் வெளிவருவதற்கு அவர் பேரார்வம் காட்டியமைக்கும் அவருடைய தமிழ்ப்பற்றிற்கும் நான் மீண்டும் என் அன்பார்ந்த நன்றியை நல்குகிறேன்.

தந்தையாரிடம் சுமார் 41 ஆண்டுகள் பழகி அவர்மேல் தனித்த மதிப்புக் கொண்டிருக்கும் தமிழரசுக் கழகத்தின் உயிர் மூச்சாகவும், தலைவராகவும் உள்ள தமிழகச் சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர், பண்டாகர். (டாக்டர்) திரு. ம. பொ. சிவஞானம் அவர்களை அணுகி இந்நூலுக்கு அணிந்துரை கேட்டவுடன் மனமுவந்து அளித்தார். அதுபோல் என் உடன்பிறந்த தமையனார் திரு. மறை. ஆலங்காடன் அவர்கள், திரு. பொன். பரமகுரு. ஐ. பி. எசு. அவர்களிடத்தில் அணிந்துரை பெறும்பொருட்டுச் சென்றதும் அவர் அன்புடன் அளித்தார். அணிந்துரை அளித்து உதவிய இருவர்க்கும் என் நன்றியறிதலை நல்குகிறேன்.

இந் நூல் தந்தையாரின் மறைவு காரணியமாக காலதாமதமாக வெளிவந்துள்ளது. இதுவரை வெளிவந்துள்ள ஆய்வு நூல்கள் அனைத்தும் புன்செய்ப் புளியம்பட்டி மறைமலை அச்சகத்தின் வாயிலாகவே சிறப்புடன் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளன. அவைகளைப் போலவே இந் நூலும் அழகாக அச்சிடப் பெற்று வெளிவந்துள்ளது அப் பொறுப்பை மனநிறைவுடன் ஏற்றுக் குறைவின்றி நிறைவேற்றிய அச்சக உரிமையாளர் திரு. நா. த. அருணாச்சலன் அவர்கட்கும் அச்சக ஊழியர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தந்தையார், அவர் எழுதிய அனைத்து நூல்களையும் பதிப்பிடல், விற்பனை செய்தல் ஆகிய உரிமைகளை எளியேனுக்கே கொடுத்துள்ளார்கள். அப்பணியையும் தந்தையார் செய்து வந்த பிற சமயப் பணிகளையும் யான் தவறாமல் செய்ய வேண்டியது என் கடமையன்றோ !

இந் நூல் வெளிவருவதற்கு மிகவும் அன்புடன் பல உதவிகள் செய்து, ஊக்கம் அளித்த பெரியோர்கட்கு என் மனமார்ந்த நன்றியறிதலை என் தந்தையாரின் நினைவாகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'தமிழக அரசின் சிறந்த நூல்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ்'' இந்நூல் வெளிவருகிறது. இந் நூலுக்கு நிதி உதவி அளித்தமைக்கு, தமிழகஅரசுக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


இன்னவண்ணம்

மறை. திரு. தாயுமானவன்

(நூலாசிரியர் மறை. திருநாவுக்கரசு அவர்கள் மகன்)

அகரம், சென்னை - 82

28—12—1984



ம. பொ. சிவஞானம்
தலைவர்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009
31—3—1984

அணிந்துரை

அண்மையில் இறையருளில் கலந்துவிட்ட என் அருமை நண்பர் 'தனித் தமிழ்க் காவலர்' மறைமலையடிகளாரின் மைந்தர் மறை. திருநாவுக்கரசு அவர்கள், என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதவராவார்.

தமிழரசுக் கழகத்திடம் அவருக்கிருந்த ஆர்வத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. கழகக் கொள்கையான "எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்" என்பதனை அவர் தமது உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார்.

அப்பெருமகனார், தம் வாழ்நாளின் முடிவிலே, மாணிக்கவாசகரின் வரலாற்றாய்வுரை" என்ற இந்த உரைநடை இலக்கியத்தைப் படைத்தார். அதனை, தமது காலத்தில் தாமே வெளியிடுவதில் ஆர்வங் கொண்டிருந்தார். ஆனால் காலம் அந்தப் பணியை அவருடைய வாரிசுகளின் தலையில் சுமத்தி விட்டது.

திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமானிடம் மறை. திருநாவுக்கரசு எல்லையற்ற பக்தி கொண்டவர். அதனை இந்த ஆய்வுரையைப் படிப்போர் அறியலாம்.

இந் நூலின் தொடக்கத்திலே மணிவாசகரைப் பற்றி வள்ளற்பெருமான் புனைந்த இரண்டு செய்யுட்களைக் காண்கிறோம். அவற்றுள் ஒன்று வருமாறு:

"மணிபுருவ நடுமுதலான மனம்புதைந்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லோரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினை நீ எழில்வாதவூர் இறையே".

இச்செய்யுள் மாணிக்கவாசகர் இறையருளில் கலந்தவர் என்பதனை ஐயமற மெய்ப்பிக்கத் தக்கதாகும். மறை. திருநாவுக்கரசுவுக்கு வள்ளற் பெருமானிடம் பக்தி உண்டு. அதனாற்றான், அவருடைய செய்யுட்களைக் கொண்டு தமது நூலைத் தொடங்குகிறார்.

இவ்வாய்வுரையிலே, மாணிக்கவாசகரின் வரலாற்றைச் சுருக்கமாகத் தந்துள்ளார் ஆசிரியர். அதனையடுத்து, தமது ஆய்வுரையைப் பற்றிய சில விளக்கங்களையும் கொடுத்துள்ளார். மாணிக்கவாசகரை வரலாற்று நாயகராகவே ஆசிரியர் காண்கின்றார். அதையே இவ்வாய்வுரைக்கு மைய மாகவும் செய்துள்ளார்.

திருவாசகத்தைப் படிப்போரில் சிலர் 'மணிவாசகருக்கும் மாதர்பால் மையலுண்டோ' என்று ஐயுறுவதுண்டு. அந்தக் கருத்துக்களைத் திருவாசக ஆசிரியரின் வாழ்க்கை அனுபவமாகக் கருதக் கூடாது என்று இவ்வாய்வுரையில் மறை. திருநாவுக்கரசு கூறுகிறார். அதற்கான சான்றுகளையும் காட்டியுள்ளார் மாணிக்கவாசகரைப் போலவே தாயுமானவர், வள்ளற்பெருமான் போன்ற ஞானியரும் உலோகாயுதச் சேற்றில் சிக்கியுள்ள மனிதருடைய காமவேட்கையைத் தங்கள்மேல் ஏற்றிக் கொண்டு, அந்த வேட்கையிலிருந்து விடுவிக்குமாறு இறையருளை வேண்டுகின்றனர். ஆகவே, மாணிக்கவாசகர் பற்றி ஆய்வாளர் கூறுவதை ஐயமற ஏற்கலாம்.

திருவாசகத்தின் அமைப்பை ஆராயும் பகுதி, அந்தப் பக்தி இலக்கியத்திலே ஆசிரியருக்குள்ள ஆழந்த புலமையைக் காட்டுவதாகும்.

இறைவன் பரிமேல் வந்த நிகழ்ச்சியை நம்புகிறார்; நம்மையும் நம்ப வைக்க முயல்கிறார். இறைவன் பரிகளை நரிகளாக்கியதாக வரும் புராணச் செய்திகளையும் வரலாற்று நிகழ்ச்சியாகவே கருதி ஆசிரியர் இவ்வாய்வுரையில் விளக்குகிறார்.

மாணிக்கவாசகர், பாண்டி வேந்தன் பரிகள் வாங்கி வருவதற்காகத் தந்த பொருளைக் கொண்டு, திருப்பெருந்துறையில் சிவபெருமானுக்குக் கோயில் கட்டியதாகப்

புராணம் கூறுகின்றது. இதைப்பற்றி ஒன்றோடொன்று முரண்பட்ட பல செய்திகள் இலக்கிய உலகில் உலவி வருகின்றன. அவற்றிலே உண்மை இதுவென எடுத்துக் காட்டும் வகையிலும் இவ்வாய்வுரையில் மறை. திருநாவுக்கரசு சான்றுகள் தந்துள்ளார்.

தனித் தமிழில்தான் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறதென்றாலும், தமிழிலே ஓரளவே ஞானம் உள்ளவரும் படித்துச் சுவைக்கத்தக்க வகையிலே ஆசிரியரின் தமிழ் நடை அமைந்துள்ளது.

மறை. திருநாவுக்கரசு மறைந்ததோடு இந்நூலும் மறைந்து விடாமல், இதனைப் பதிப்பிக்க முன்வந்த அவருடைய மைந்தர்களைப் பாராட்டுகிறேன். அருளாளரான திருநாவுக்கரசுவின் ஆன்மாவும் இந்நூல் வெளிவருவது கண்டு மகிழும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மக்கள்—குறிப்பாக, தமிழ்ப் புலவர்கள், இந்நூலை வாங்குவதன் மூலம் தமிழ்த் தொண்டராகிய மறை. திருநாவுக்கரசுவின் ஆன்மாவுக்கு அஞ்சலி செலுத்தலாம்.

இவ்வணிந்துரையும் அந்தப் புனித ஆன்மாவுக்கு யான் செலுத்தும் அஞ்சலியென்றே இந்நூலைப் படிப்போர் கருத வேண்டும்.

(ஒப்பம்) ம. பொ. சிவஞானம்

பொன். பரமகுரு, எம்.ஏ.பி.எல், ஐ.பி.எசு. சென்னை

தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் 3—3—1984

அணிந்துரை

பேராசிரியர் உயர்திரு மறை. திருநாவுக்கரசு அவர்கள் திறம்பட எழுதியுள்ள 'மாணிக்கவாசகர் வரலாற்றாய்வுரை' என்னும் இந்நூல் தமிழ் இலக்கியத்திற்கு ஓர் ஒப்பற்ற அணிகலமாய் அமைந்துள்ளது. ஆழ்ந்த ஆய்வு, அகச்சான்றுடன் கூடிய அர்த்தமுள்ள வாதம், தெளிவான விளக்கம் யாவும் ஒருங்கிணைந்து சிறந்து விளங்குகிறது இவ்வரிய நூல்.

திருவாசகம் அருளிய மாணிக்கவாசகப் பெருமான் தெய்வப் பற்றோடு நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் உடையவர் மதுரைக்கு அருகேயுள்ள திருவாதவூரில் பிறந்தவராதலால், பாண்டி நாட்டிடம் பெரும் பற்று வைத்திருந்தார். அவர் பொன்னுக்கும், மண்ணுக்கும் வேற்றுமை அறியாத புண்ணியர். பாண்டி மன்னரிடம் தாம் வகித்த மந்திரிப் பதவியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு திருப்பெருந்துறையில் திருப்பணி புரிந்துகொண்டு சிவத்தொண்டிலேயே ஈடுபடலானார். அவர் பதவி துறந்ததனாற்றான் நமக்குத் திருவாசகம் என்ற அரிய பக்தி நூல் கிடைத்தது. திருவாசகம் தமிழ் மொழிக்கே பெருமை தரும் பேரிலக்கியமாகும். தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களிலே தலையானது திருவாசகம். அதனாற்றான், "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்பது உலக வழக்காக வழங்குகிறது.

பி. யு. போப் என்னும் ஆங்கிலேயப் பாதிரிப்பெருமகனார், திருவாசகத்தைப் படித்து மனமுருகி, திருவாசகப் பக்தராகவே மாறி, அந்த சைவ சமய இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற்கு வழங்கினார். "திருவாசகத்தைப் பாடினால், அது ஊனிலே கலக்கும்; உயிரிலே கலக்கும்; நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து உண்டாற்போல் உடம்பெல்லாம் இனிக்கும்" என்கிறார் இராமலிங்கனார்.

இந்த அனுபவத்தைத் தாமே பெற்றதாகவும் அவர் பாடுகிறார்.

"வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்தென்
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

இது திருவாசகத்துக்கு வள்ளலார் தந்த மதிப்புரை.

இவ்வளவு சிறந்த இலக்கியத்தைத் தமிழிலே படைத்த மாணிக்கவாசகரின் வரலாறு கூறும் மூவர்: நம்பிகள், பரஞ்சோதியார். முனிவர் ஆவர். "இவர்களில் ஒருவராவது அடிகள் காலத்தில் இருந்தவரல்லர். பரவலாக அன்பர்களும் புலவர்களும் பெருமானின் பெருமை மிகு வரலாற்றினைத் தமிழ் நாடெங்கணும் பேசிப் புகழ்ந்து பாராட்டிய செய்திகளையும், திருவாசகத்தில் வெளிப்படையாகவும், குறிப்பாகவும், பெருமான் கூறும் தம் வரலாற்றுக் குறிப்புகளையும் கொண்டே, தம் கூரிய அறிவினால் எண்ணியும் இம்மூவரும் அடிகள் வரலாற்றைப் பாடியுள்ளனர். எனவே, பெருமான் வரலாற்றுச் செய்திகளை எல்லாம் அவர்கள் கூறுமாறே நடந்தவை எனக்கொள்ள முடியாது' எனத் தக்க ஆதாரத்துடன் கூறுகிறார் ஆசிரியர்.

"புறச்சான்றின் இலக்கணமாவது, ஒருவரது வரலாற்றையோ அல்லது வாழ்க்கை நிகழ்ச்சிகளையோ தகுதி சான்ற ஒருவர் கூறுவதும், எழுதுவதுமாம். ஆனால், அகச்சான்று அப்படிப்பட்ட தல்ல. ஒருவர் தம் வரலாற்றைத் தாமே நூலாக எழுதுவது, அல்லது அவர்தம் மற்றைய நூல் குறிப்பிடுவது. ஆகவே, இச்சான்றுகளில் புறச்சான்றிலும் அகச்சான்றே மறுக்கவியலா முடியும் என்பது வரலாற்று அறிஞர்களின் ஒன்றுபட்ட கருத்தாகும்" என விளக்கம் கூறி, இக்கருத்துக்களைக் கொண்டே எளியேன் சிற்றறிவால் வானை அளப்பதுபோல் பெருமான் வரவாற்றாய்வுரையைத் தொடங்குகின்றேன்; வியப்புத்தான்; பொறுக்க வேண்டுகின்றேன்" என்று மிக அடக்கத்தோடு தமது ஆய்வுரையைத் தொடங்குகிறார் ஆசிரியர்.

"பெருமானின் பெயர் 'மாணிக்கவாசகர்' என்பது காரணப் பெயரே. அவரது இயற்பெயர் தெரியவில்லை.

ஊர் திருவாதவூர்; காலம் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியே'' எனத் தக்க விளக்கத்துடன் தெளிவாகக் கூறியுள்ளார்.

பின்னர் பெருமானின் வரலாற்றில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகள் குறித்து திருவாசகப் பாடல்களில் உள்ள அகச் சான்றுகள் கொண்டு மிகத் தெளிவாக ஆய்வு செய்துள்ளார் ஆசிரியர். பல பாட்டின் வரிகளால், குறிப்புக்களால் பெருமான் பாண்டியனுக்கு அமைச்சராய் இருந்ததையும், குதிரை வாங்கத் திருப்பெருந்துறைபுறப்பட்டதையும் தெளிவு படுத்துகிறார்.

திருப்பெருந்துறையில் சிவபெருமான் குருவாய் வந்து மாணிக்கவாசகருக்கு அருளினார் என்பதை ஆய்ந்து கூறுமிடத்து, பெரும் இறைத் தத்துவ ஞான விளக்கமே அளித்துள்ளார் ஆசிரியர்.

"உலகச் சமயங்கள் யாவும் கடவுள் அருவம் என்றே கூறும். ஆனால், இந்து சமயம் அருவம் என்பதை ஒப்புக் கொண்டு, அவர் உருவமும் ஆவர். அருவுருவமும் ஆவர். என்றே கூறுகின்றது. அருவத்திற்கும் அப்பாற்பட்டதும் என்றும் கூறும்..... சிவநெறியில் அருவம் என்பது உருவத்தின் நுண்பொருளேயாகும். இதனைச் சைவ சமயக் கொள்கைகளை விள்க்கும் சிவஞான சித்தியார் என்ற மெய் யுணர்வு (தத்துவம்) நூல்,

"அருவினில் உருவந்தோன்றி அங்காங்கி பாவமாகி
உருவினில் உருவமாயே உதித்திடும் உலகமெல்லாம்''

என்று விளக்குகின்றது.

உலகப் பொருள்களை ஆராயும் இக்காலத்து விஞ்ஞானிகள் அனைவரும் வானம் என்ற வெளியாக விளங்குவதும் உருவுடைய நுண்பொருளே என்றும், இவ்வான் நுண் பொருள் மேலும் மேலும் அடுக்கடுக்காக நுண்பொருளாக முடிவின்றி உள்ளது என்றும் ஆய்ந்து நிலைநாட்டியுள்ளனர். இவ்வகையில் அருவம் என்ற சொல்லுக்கு இல்லாத பொருள் என்று பொருள் கூறல் பொருந்தாது என்பதை அறியலாம். மூலப் பொருளில்லாது பொருட்கள் எங்ஙனந் தோன்றும்? தாயில்லாது சேயேது? வித்தில்லாது மரமேது? அருவம்

என்னும் மிக மிக, காணக்கூடாத நுண்பொருளில்லாவிடில் உலகில் காணப்படும் பொருள்கள் எல்லாம் தோன்றா அன்றோ? இம்முறையினாற்றான், வானத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நீரும், நீரிலிருந்து தீயும், தீயிலிருந்து மண்ணும், மண்ணிலிருந்து எல்லாப் பொருள்களும் தோன்றுகின்றன. இம்முறையினைப் பொருளாராய்ச்சியாளர், நாத்திகர் யாவரும் ஒருமுகமாகக் கண்டு கூறும் உண்மையாகும். ஆகவே, இல்லாத பொருளிலிருந்து இருக்கும் பொருளாகிய கடவுள் விளங்காது, தோன்றாது என்றறிகின்றோம். ஆகவே, கடவுள், இறைவன் உள்பொருளே என்பது உறுதியாகின்றது. ஆம்; மண் முதல் ஐந்து பொருட்களின் அணுக்கள் வானில் உள்ளதால் அவை வானிலிருந்து தோன்றலாம். வானுக்கு மூலப்பொருள் யாதுஎன்னில், ஐம்பொருள்களுக்கும் மூலமாய நுண்பொருளாம் மாயை என்க. மாயைக்கு மூலம் ஆற்றல் (சக்தி). அதற்கு மூலம் கடவுள் (சிவம்) ஆகும்.

இவ்வாறு கூறுவது சிவநெறி ...

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி யுயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே''

என்று மாணிக்கவாசகப் பெருமானும் கூறியுள்ளார்.

ஆகவேதான். இறைவன் எல்லா உயிர்களிலும் பொருட்களிலும் உடலில் உயிர்போல் ஊடுருவி நிற்கின்ற நிலைமைச் சிவநெறி 'அத்துவிதம்' (இரண்டற்ற நிலை) என்று கூறும். இந்நிலையில் இறைவனை அருவன், உருவன், அருவுருவன் என்று மூன்று திருமேனிகளை உடையவன் என்று சிவநெறி கூறும், என விளக்குகிறார்.

திருப்பெருந்துறையில் இறைவன் மாணிக்கவாசகப் பெருமானைத் தம் அடிமையாக்கிக் கொண்டான் எனக் கூறுமிடத்து மூவகைத் தீட்சைகள் பற்றி விளக்கம் தருகிறார் ஆசிரியர். "சைவ சமயக் கொள்கைப்படி இறைவன் மெய்யடியார்களை ஆட்கொள்ளும் முறைகள் மூன்று வகையாகும். அவை அடியவர்களைக் கண்ணால் பார்த்தல் (நயன தீட்சை), தொடுதல் (பரிச தீட்சை), வாக்கினால் அருளல் (வாக்குத் தீட்சை) ஆகும்" என்று தெளிவுப்படுத்துகிறார்.

மாணிக்கவாசகருக்கு இறைவன் குரு வடிவில் தோன்றி அருளிய மேற்கண்ட மூவகை அருளிப்பாடுகளையும் அவற்றால் மாணிக்கவாசகர் பெற்ற பெரு நலன்களையும் விளக்கமாகக் கூறுகிறார்.

'கடவுளைக் கண்டார்' என்ற பகுதியில் கடவுளை யார் எவ்விதம் கண்டுவர இயலும் என்பதை நமக்கு அறிவுறுத்துகிறார்: 'இல்லை என்பார்' அதற்குக் கூறும் முதன்மையான காரணம், கடவுளை அவர்கள் ஓர் உருவில் மனித வடிவில் காண விரும்புகின்றார் என்னலாம். குறிப்பிட்ட வடிவில் இருந்தாலன்றோ அவரைக் காணக்கூடும் நம் உடலிலுள்ள உயிரையும், அன்பு இரக்கம் சினம் முதலாய குணங்களையும் காணக் கூடவில்லையே? வானத்தையும் பார்க்க முடியவில்லையே; அறுவகைச் சுவைகளையும் காண்கின்றோமா; இல்லையே; ஆனால் நம்புகின்றோம். நம்பித்தானாக வேண்டும். எனவே, எல்லா நுண்பொருட்களையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் மிக நுண்பொருளாம் கடவுள் அவற்றிலும் நுண்மையாகத்தானே இருப்பான்; கண் பொருட்களைத்தான் காணும்; இசையை, ஒலியைக் காதுதான் கேட்கும். இப்படியே ஏனைய புலன்களும் ஒவ்வொன்றை மட்டுமே உணரும். அன்பு, அருள் இரக்கம் முதலாய உணர்ச்சிகளை ஐம்புலன்கள் அறியா. ஆனால் மனத்தின் வாயிலாக உயிரறிகின்றது; உணர்கின்றது. அது போல இறைவன் இருப்பை மேலான பண்புகள், ஒழுக்கங்கள், செயல்கள் முதலியவற்றால் நிறைந்த ஆன்றோர்களால் தான் நன்கு உணர முடியும்' என்கின்றார்.

இறைவனைப் பெறப் பெருமான் பட்ட பெருந்துன்பங்களும் பெற்ற பேரின்பங்களும் ஆசிரியரால் வெகு அமைதியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இறைவனை அடையப் புலனடக்கம், தியானம், நோன்பு, பூசை முதலிய முயற்சிகளையும், இடைவிடாத பத்திமையையும், அவற்றால் தான் பெற்ற கடவுட் காட்சியையும், பேரின்பத்தையும் தெய்வம் நிகழ் மாணிக்கவாசகப் பெருமான் போன்றோர்தாம் உணர்வர்; உணர்ந்து கூறுவர். உலகந் தோன்றிய காலந்தொட்டு இன்றளவும் மனிதன் பெற்ற மெய்யுணர்வுக் காட்சி நுகர்ச்சிகட்கு நம் பெருமானே எடுத்துக்காட்டாவார்; முதன்மைத் தலைவராவார்...... ஏனைய ஆன்றோர்கள் பெரும்பாலும்

இறைவனைப் படர்க்கையிலேயே பாடுவர். நம் பெருமானோ இறைவனை முன்னிலைப்படுத்தியே தொன்னூறுவிழுக்காடு பாடுவர். அவனிடம் பேசுவர். தம் குறைகளைக் கூறுவர். அவனை வேண்டுவர், புகழ்வர், போற்றுவர், அழுவர், கெஞ்சுவர், மிஞ்சுவர், ஊடுவர், கூடுவர், ஏசவுஞ் செய்வர். அவன் தமக்குத் தந்த ஒப்பில்லாப் பேரின்பங்களையும், பதவிகளையும் கூறுவர். கூறிப் பெருமகிழ்வு கொள்வர். களி கூர்வர், ஆடுவர், பாடுவர், ஆனந்த நிலை எய்துவர், தம்மை முற்றிலும் மறந்து பேரின்ப நிலையில் (சமாதி) மூழ்கியிருப்பர். பின்பு அவரருளைப் பெறத் துடிப்பர், புரண்டு அழுவர், வேண்டுவர், அவனோடு கூடுவர், இரண்டறக் கலந்து சிவமாவர், சிவநிலையில் நிற்பர்' எனத் தெள்ளத் தெளிய முழுமையாகப் பெருமானின் சிறப்பியல்களை யெல்லாம் விளக்கியுள்ளார்.

பரஞ்சோதியார் திருவிளையாடல், நம்பிகள் திருவிளையாடல், மற்றும் பல புறச்சான்றுகளாலும் அகச்சான்றுகளாலும் அரசன் குதிரை வாங்கத் தந்த பொருளைக் கொண்டு மாணிக்கவாசகர் கோயில் கட்டினார் என்று கூறுதல் சிறிதும் பொருந்தாமையும், உண்மையில்லாமையும் ஆகுமென ஆணித்தரமாக விளக்குகிறார்.

திருப்பெருந்துறைக் கோயில் வரலாற்று ஆய்வுடன், இறைவன் பரிமேல் வந்தது உண்மை இறைவன் குற்றமுடையாரை ஆட்கொள்ளான், நரியைப் பரியாக்கியது உண்மை, இறைவன் கூலியாளாய் வந்தது உண்மை, ஆகியவற்றையும் திறம்பட ஆய்ந்து ஆதாரமான முடிவுரை கூறுகிறார். அதுசமயம் இறைவனுடைய மூவகைத் தொண்டுகளையும் விளக்குகிறார். 'தலைவன் ஒருவன் தன்பால் அன்பு செய்வோரின் அன்பினுக்கேற்ப அவன் அவர்களில் ஒரு சிலர்க்குத் தன் ஏவலர்கள் மூலம் உதவுவான். ஒரு சிலர்க்குத் தக்காரைக் கொண்டு உதவுவான். ஒரு சிலர்க்கு நேரில் சென்று உதவுவான். இதுபோலவே கடவுளும் மனிதர், சான்றோர், குருமார் மூலம் உதவுவான். ஒரு சிலர்க்கு உலகிலுள்ள ஒரு மனிதர் வடிவில், சான்றோர் வடிவில் தானே குருவாய் வந்து அருள் செய்வான், வானொலியில் பேசியும், உள்ளத்தில் இருந்தும், கனவில் தோன்றியும் அருள் செய்வான், தொண்டும் செய்வான்'' என்கிறார்.

ஆசிரியர் தமது அரும் பெரும் ஆய்வுகளால் மாணிக்க வாசகருக்குத் திருப்பெருந்துறை, திருஉத்திரமோசமங்கை, திருக்கழுக்குன்றம் ஆகிய தலங்களில் எவராலும் காண இயலாத தன் திருவுருவக்காட்சியை இறைவன் காட்டினான்; பெருமான் கண்டுகளித்தார்; ஈடில்லா இன்பத்தில் மூழ்கினார் என்பவற்றை யெல்லாம் நன்கு விளக்கிக் கூறியுள்ளார். "மெய்யுணர்தலுக்கு திருவள்ளுவர் இலக்கணம் கூறினார்; அதற்கு இலக்கியமாகத் திகழ்ந்தார் மணிவாசகர்; திருக்குறள் இலக்கணம், திருவாசகம் இலக்கியம்' என இரத்தினச் சுருக்கமாக மிக உயர்வாகத் தீர்வு காண்கிறார் ஆசிரியர்.

சிவபிரானால் ஆட்கொள்ளப்பட்ட பின் மணிவாசகர் ஊர், பதவி, மனைவி, மக்கள், தாய், தந்தை, சுற்றம் உலகப் பொருட்கள் யாவற்றையும் விட்டு வெளியேறினார் என்பதும், அப்போதவர் மனைவியார், மக்கள் முதலியோர் துன்பங் கொண்டு பெரிதும் வருந்தினார்கள் என்பதும், அவர் மனைவியாரின் பெரும் சிவ பத்திமை இத்தன்மையது என்பதும் மணிவாசகரின் பாட்டுக்களை ஆழ்ந்து ஆய்வு செய்து ஐயத்திற்கு இடமின்றி ஆசிரியர் தெளிவாக விளக்கங் கூறியுள்ளார்.


"உலகில் பல கோடி மக்கள் கொலை, களவு, கள் நீக்கி! நெறி முறைப்படியே வாழ்கின்றனர். சிறுபான்மை பொய்யும், முறையற்ற காமக்களியும் விட்டோர் ஓரிரு கோடிக்குமேல் இரார். அவற்றுடன் சிற்றுயிர்க் கொலையும், புலையும் புசிப்பும் நீக்கியோர் பன்னூறாயிரவர்க்கு மேலிரார். இவருள்ளும் ஒழுக்கம் கல்வி, கேள்விகளால் நிறைந்த சீலமும் நோன்பும், பத்திமையும், மெய்யுணர்வும், மெய்ப் பொருளைக் காணும் ஆர்வமும் மிக்கார் சில நூறாயிரவர் இருக்கலாம். அவரிலும் எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி அன்பு செய்தும், அவை வாழத் தன்னலத்தை அறத்துறந்து தொண்டு செய்யும் மெய்ஞ்ஞானியராய் வாழ்வார் ஓராயிரவர் இருப்பர் இவர்களில் குற்றமொன்றுமிலராய்க் குணங்களில் நிறைந்தவராய்த் தவத்தில் மிக்காராய் விளங்குவார் ஓரிரு நூற்றாவர் தாம் நிகழ்வர். இவருள்ளும் இறைவனைத் தவிர வேறொன்றும் நினையாதராய் அவனை" டையும் நோக்கம் ஒன்றே கொண்டு துடிப்பவர் ஒரு சிலரே. கொக்கு ஒன்று யாவும் மறந்து தன் இறையாம் மீனையே நோக்கி அசைவற

நிற்றல்போல் நம் பெருமான் இறைவனைக் காண அவனை அடைய இராப்பகலாக ஒன்றிய மனத்தினராய்த் துடியாய்த் துடித்து நின்றார். இவ்வாறு தாம் நின்ற நிலையினைப் பெருமானே தம் திருவாக்கால் :

‘ அரைசே பொன்னம்பலத்தாடும்
அமுதே என்றுன் அருள் நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவு பகல்
ஏசற்றிருந்தே வேசற்றேன் ’

என்று கூறியுள்ளார். இப்பெரு நிலையில் நின்றார், நிற்பார் உலகந்தோன்றிய நாள் முதல் இன்றளவும் ஒரு சிலரே இருந்தனர். இனி இருப்பாரோ? அறியோம் நாம், உலகம் அறிந்தவரையில் இவ்வாறு இணையில்லாப் பெருநிலையில் நின்றார். உலகஞ் செய்த உயர் தவத்தால் தோன்றிய நம் மணிவாசகப் பெருந்தகையாரே ஆவர் எனக் கூறி நிறைவு செய்கிறார் தமது அரும்பெரும் இந்நூலை ஆசிரியர்.

அப்பெரியாரின் இந்நூல் ஆழ்ந்த ஆய்வுத் திறன் கொண்ட ஒப்பற்ற இலக்கியப் படைப்பாகும். இதனைத் தமிழறிஞர் அனைவரும் ஆர்வமுடன் படித்து, ஆன்மீக அருள் பெற வேண்டுகிறேன்.



பொருளடக்கம்

பக்கம்

திருத்தம் . . .

பக்கம் 1 முதல் 40 வரையுள்ள பக்கங்களின் இடப்பக்கமுள்ள 'பெரிய புராண ஆய்வுரை' என்னும் தலைப்பினை 'மாணிக்கவாசகர் வரலாற்றாய்வுரை' எனவும்,

பக்க எண் 20-க்கு அடுத்து 13 முதல் 24 எண் உள்ள பக்க எண்களை 21 முதல் 32 எனவும்,

பக்க எண் 139 முதல் 154 எண் வரை உள்ள பக்க எண்களை 137 முதல் 152 எனவும் திருத்திக் கொள்ள வேண்டுகிறோம்.



நூலாசிரியர்

மறை. திருநாவுக்கரசு ஐயா அவர்கள்

●

தோற்றம்: 21—8—1907 மறைவு: 1—9—1983



மதுரை மாவட்டம் - சின்னமனூரில்
மாணிக்கவாசகருக்குக் கோயில் எழுப்பிய
திரு. பாலசுப்பிரமணியம் அவர்களின் பெற்றோர்
சிவத்தொண்டா - சைவத்திரு.

க. அண்ணாமலைப் பிள்ளையும்

அவர்தம்

துணைவியாரும்

*

இவர்கள் வழிநடந்து சிவப்பணியாற்றி வரும் இவர்தம் மகனுர்
திரு. அ. சேதுசுப்பிரமணியப் பிள்ளை, சின்னமனூர்

உ

அன்பே சிவம்

மாணிக்கவாசகர் வரலாற்றாய்வுரை

திருச்சிற்றம்பலம்

"தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே ஆனந்த வடிவான மாதவனே!
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்த தமிழ்மாமறையின்
ஆசகன்ற அனுபவம் நான் அனுபவிக்க அருளுதியே."

"மன்புருவ நடுமுதலான மனம் புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுசிவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினைநீ எழில்வாதவூர் இறையே"

— வள்ளலார் அருட்பா.

வரலாற்றுச் சுருக்கம்

பெருமான் பாண்டி நாட்டில் *திருவாதவூரில் அந்தணர் குலத்தில் தோன்றினார். இளமையிலேயே கற்பன கற்று, ஒழுக்கங்களிற் சிறந்து பேரறிவாளராக விளங்கினார். இவர்தம் அருமை பெருமைகளை அறிந்த பாண்டியன் இவருக்கு

* திருவாதவூர் மதுரைக்கு வடகிழக்கில் 14 கல் அருகில் உள்ளது. மதுரையிலிருந்து பேருந்துண்டு.

முதலமைச்சர் பதவி யளித்தான். இளமை முதலே இவர்க்கு இயல்பாயமைந்த பத்திமை உணர்வு முதிர்ந்து வந்தது. அதனால் சிவபெருமானுக்கே ஒப்பிலாப் பேரன்பு செய்து ஆட்பட்டு அவன் வழிபாட்டில் ஈடுபட்டு உருகி நின்றார். அவன் திருவருளையே முற்றாகப் பெறும் நாள் என்று என்றே ஏங்கி நின்றார். புறத்தே அரசனுக்கான பணிகளைச் செம்மையாகச் செய்து வந்தாராயினும் அகத்திலேயே,

'எம்பெருமானைப் புல்லிப் புணர்வது என்று கொலோ'

'ஊற்று மணல் போல்,
உள்ளே உருகி ஓலம் இட்டு,
போற்றிப் புகழ்வது என்று கொலோ'

— **புணர்ச்சிப் பத்து.**

'ஏழைத் தொழும்பனே னெத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே.'

— **திருத்தோள் நோக்கம்.**

என்றெல்லாம் ஏங்கித் தவிக்கலானார்.

இந்நிலையில், அரசன் குதிரைகள் வாங்கி வரும் பொருட்டு ஏராளமான பொற்குவியல்களை இவரிடந் தந்து விடுத்தான். அப்பெரும் பொற் செல்வத்தைக் கொண்டு குதிரை வாங்க இவர் மதுரைக்கு வடகிழக்கே உள்ள சோழ நாட்டுத் திருப் பெருந்துறை என்னும் நகரை நெருங்கி வருகின்றார். அவ் வளவில் முன்னைப் பெருந் தவத்தால் இவருள்ளத்தே மடை உடைந்த வெள்ளம் போல் இறை அன்பு பெருக் கெடுத்தது. மெய்ம்மயிர் பொடிப்ப, விழி நீர் பொழிய தம்மை மறந்த நிலையில் கடவுள் உணர்வொன்றே தோன்ற 'ஆ! நம்மை ஆளும் பெருமான் இந்நகரிற்றான் உள்ளார்' என்றே உறுதி யும், வான் போல் பத்திமையும் கொண்டு அந்நகரிலுள்ள திருக்கோயிலுட் புகுந்தார். ஆங்கிருந்த குருந்த மரத்தடியில்

அடியார்கள் புடை சூழச் சிவபெருமான் அருட் குரவன் கோலத்தில் வீற்றிருப்பக் கண்டார். காந்தங் கண்ட இரும் பென ஓடிச் சிவகுருவின் திருவடிகளில் வீழ்ந்தார். சிவ பெருமான் தன் அருட் கண்ணால் அவரை நோக்கியும், தன் திருவடிகளை அவர் தலைமேல் வைத்தும், அவர்க்குத் திருவைந் தெழுத்தினை ஓதி அருளினான்.

அவ்வளவில் பெருமான் தம்மையாட் கொண்ட சிவ பெருமான் திருவடிகளில் அழற்படு வெண்ணெய் என மனம் உருகி வீழ்ந்தார்; வணங்கினார்; அன்புருவமானார். குருவுக்குத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் காணிக்கையாக் கினர். விழி நீர் பெருக, உரை குழற, உடம்பெல்லாம் புளகம் போர்ப்பப் பெருமானைப் பன்முறையும் பணிந்தெழுந்தார். அவனருளால் அவனை அன்பாற் புகழ்ந்து பாடும் பேராற்றல் தோன்றப் பலவாகிய பாடல்களைப் பாடினார். அவை, சொல்லாலும், பொருளாலும், ஒலியாலும் ஒப்புயர் வில்லாச் செழுந்தமிழ்ப் பாக்களாய்த் திகழுந் திறம் நோக்கிச் சிவபிரான் அவர்க்கு **'மாணிக்கவாசகன்'** எனுந் திருப்பேர் தந்தான்.

அவ்வளவில், இறைவன் அடியவரோடும் மறைந்தருளி னான். அவனுடன் செல்லாத அடியார்கள் ஆங்கோர் பொய்கையின் நடுவில் தோன்றிய ஒளிப் பிழம்பில் (சோதி யில்) கலந்தனர். அதுகண்டு அன்பின் பிழம்பாய் - பத்திமை உருவாய்த் திகழும் மாணிக்கவாசகப் பெருந்தகையார், தேவ தேவன் பிரிவாற்றாது அஞ்சி, நடுங்கி, அழுது புலம்பி ஆற்றா ராகித் தரையில் வீழ்ந்து புரண்டு, கன்றைப்பிரிந்த ஆவினைப் போற் கதறி அழைக்க இறைவன் 'இன்னும் சில காலம் இவ் வுலகிலிருப்பாயாக! வருந்தற்க! தில்லையுள் விளங்கும் பொன்னம்பலத்திற்கு வருக!' என்றருளினான்.

இதனாற் பெருமான் ஒருவாறு உளந்தேறிக் குதிரைகள் வாங்கத் தாங்கொணர்ந்த பெரும்பொற்குவைகளை எல்லாம் இறைவனை வழிபடும் திருக்கோயில் மறையோர்க்கும், பூசனைக்கும், செல்வ மிக்க திருக்கோயிற் றிருப்பணிகட்கும், அடியவர்கட்கும் வழங்கித் திருப்பெருந்துறையில் குருந்த

மரச் சூழலில் தியானத்தில் அமர்ந்திருந்தார். தூதுவரால் ‘இஃதறிந்த பாண்டியன் குதிரைகள் எப்போது வரும்?’ என்று அடிகட்கு ஓலை விடுத்தான். ஆளுடையடிகள், செய்வதறியாது, அம்மையப்பனை வேண்ட ‘ஆவணி மூல நாளில் குதிரைகள் மதுரை மாநகர்க்கு வரும் என அரசனுக்கு ஓலை விடுப்பீர்’ என்று வானொலியாற் கூறினான். அதனை அடிகள் தூதுவர் மூலம் பாண்டியனுக் கறிவித்தார்.

நரி பரியாதல்

பின்பு, இறைவன் ஆணைப்படி மதுரை யடைந்தார். மன்னனைக் கண்டு குதிரைகளின் வருகையை அறிவிக்க அவன் மகிழ்ந்து அவர்க்கு வரிசைகள் பல அளித்தான். அடிகள் குறித்த நாளில் ‘குதிரைகள் வாரா’ என்று ஒற்றர்கள் அரசனுக்கு ஒற்றால் அறிந்து கூற அரசன் பெருமானைச் சிறையிலடைத்தான். ஏவலர்களை ஏவித் துன்புறுத்தினான்.

அவ்வளவில், இறைவன் காட்டிலுள்ள நரிகளை எல்லாம் குதிரைகளாக்கித் தம் பூத கணங்களை அவற்றின் பாகர் களாக்கித் தானும் ஓர் அழகிய பெரிய குதிரையின் தலைமைப் பாகனாக அமர்ந்து மதுரை மாநகரம் வந்து சேர்ந்தான். அரசன், மாணிக்கவாசகரைச் சிறையிலிருந்து விடுவித்தான். தன் பிழையைப் பொறுக்க வேண்டினான். அடிகளை அமைச்சர் கோலஞ் செய்து வரிசை பல செய்து பாராட்டி அவருடன் குதிரைகளை வரவேற்றான்.

தலைமைச் சேவகனைச் ‘சிவபெருமானே’ என அறிந்து கொண்ட வாசகப்பிரான் அனலிற்பட்ட மெழுகாய் உருகித் தம் பொருட்டு சிவபிரான் குதிரைச்சேவனாகி அமர்ந்திருக்கும் பேரருளைப் பேர் இரக்கத்தை எண்ணி எண்ணிக் கண்ணீர் மழை பொழிய நிற்கின்றார். ஈசனை அறியாப் பாண்டியன், தலைமைச் சேவகனைக் குதிரைகளின் திறங்களை எல்லாம் காட்டுமாறு கேட்கின்றான். அவனும் அவற்றின் ஆடல்கள், சிறப்புக்களெல்லாங் கூறி அவற்றை அவனிடம் ஒப்படைக் கின்றான்.

பெற்றுக் கொண்ட பாண்டியன் வேண்டும் பரிசுகளை எல்லாம் பாகர்களுக்கும், தலைப்பாகருக்கும் அளித்தான். பெரிய பொற்றுகில் ஒன்றைப் பாண்டியன் பெரும் பாகனார்க் களிக்க, அவன் அதனைத் தம் சாட்டையின் நுனியால் வாங்கித் தன் முடிமேல் அணிந்தான். அவ்வளவில் அரசன் சினங்கொள்ள அமைச்சர் பெருமான் 'இது அவர் நாட்டு முறை' என்று கூறி அரசனை அமைதி செய்தார். இவ்வள வுக்கும் தலைமைப் பாகனைப் பாண்டியன், எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாம் சிவமே என்று உணர்ந்தானல்லன். நம் பெருமானோ 'எளி வந்த கருணையை நினைந்து நினைந்து' அளவிலா அன்பினால் நெக்கு நெக்கு உருகி நின்றார்.

குதிரைகளை ஒப்படைத்த உலக நாயகன் பாகர்களோடு மறைந்தான். இரவு வந்துற்றது; பாண்டியன் அரண்மனை யுற்றான். அடிகளோ அவன் அருட்பெருக்கை எண்ணி உளங் குழைந்து குழைந்து உருகி இன்பக் கண்ணீர் பொழிந்து கொண்டிருக்கின்றார்.

பரி நரியாதல்: அரசன் கொடுமை

நள்ளிரவில், சொக்கன் அருளால் குதிரைகளாக வந்தவை எல்லாம் நரிகளாகி ஊளையிட்டன. பந்தியிலிருந்த பழைய பரிகளை எல்லாம் கடித்தன. தசைகளைப் பிய்த்துத் தின்றன. நகருள் புகுந்து எதிர்த்த காவலர்களையுந் தாக்கின. நகர மக்கள் கதி கலங்கினர். அவர்களையும் எதிர்த்துத்தாக்கி, காட்டுக்குள் சென்று மறைந்தன. ஈதறிந்த பாண்டியன் பெருமானைச் சீற்றத்துடன் பேசி, ஏசி அவரைத் தண்டிக்கு மாறு கொடிய காவலர்களை ஏவினான். அவர்கள் சிவப் பொலிவால் அருட் பொலிவால் திகழும் நம் பெருமானைக் கொடிய வெம்மை மிக்க வையை யாற்றின் மணலில் நிற்க வைத்து வளைத்து முதுகின்மேல் கல்லேற்றிக் கொடுந் துன்பங்கள் பல செய்தனர்.

வைகையில் வெள்ளம்

இந்நிலையில், அடியார் துன்பம் அகலச் சிவபிரான் ஆற்றில் பெரு வெள்ளம் பெருக, கரையை அரித்து நகருக்குள் புகலாயிற்று. நகரைக் காக்கப் பாண்டியன் நகரத்தார்க்குக் கரையை உயர்த்துமாறு ஆணையிட்டான். ஒவ்வொரு வருக்கும் கரையை உயர்த்தும் அளவை வகுத்தான்.

வந்தியம்மையார்

நகரத்தின் புறத்து ஓர் பகுதியில், ஆலவாயப்பனிடம் பேரன்பு பூண்டிருக்கும் வயது முதிர்ந்தாள் '**வந்தி**' என்னும் பிட்டு சுட்டு விற்கும் ஏழை அம்மைக்குக் கரையை உயர்த்த எவ்வகையான வாய்ப்பும் இல்லாமையால் சொக்கன் கோயிலை நோக்கி 'ஐயனே ! அப்பனே ! யான் என்ன செய்வேன்?' என்றழுதாள். அவளுக்கு அருளவும், பெருமான் துயர்தீர்த்து மன்னனும், உலகரும் அவர் பெருமை யறிந்து உய்யவும் இறைவன் அவள் முன் மண்வெட்டி, கூடையுடன் ஏவலாள் தோற்றத்துடன் வந்தான். வந்தி அம்மை கூலி தரும் வாய்ப்பில்லாமையை அவனிடங் கூறி வருந்தினாள். வேலையாளாய் வந்தவன் 'அம்மா! நீ சுடும் பிட்டில் உதிர்ந்தவைகளை எனக்குக் கூலியாகத் தந்தாற் போதும்' என்றான். உதிர்ந்த பிட்டை வாங்கி உண்டான்; மிகுந்த வற்றைத்தன் இடையிலுள்ள துண்டில் கட்டிக்கொண் டான். கரை அடைக்கும் இடம் சென்றான்.

ஆனாலது செய்யாது ஆடியும், பாடியும், வெள்ளத்தில் நீந்தியும், இடையிடையே பிட்டைஉண்டும் வீண்காலம் போக் கினான். மாலை வந்துற்றது. பாண்டியன் மேற்பார்வையிடப் பரிவாரங்களுடன் கரை அடைப்பட்ட இடங்களைப்பார்த்துக் கொண்டு வருகின்றான். அடை படாமல் உள்ள இடத்தைப் பார்க்கின்றான். அங்குப் பெருந்தகையாரும் காவலர் சூழ நிற்கின்றார். வந்தியம்மையும் கவலையோடு அஞ்சி நிற்கின்றாள். அரசன் கேட்கிறான்'இவ்விடம் ஏன் உயர்த்தப் படவில்லைஇதற்குரியார் யார்?கூலியாள் யார்?'என்றெல்லாம் அடங்காச் சினத்துடன் சீறுகின்றான்.

சிவபெருமான் அடிபடல்

அவ்வளவில் அமைச்சர்கள், 'இது வந்தியம்மையின் பகுதி, இதை அடைக்கும் கூலியாள் இவனே! இவன் தன் பணி ஒன்றுஞ் செய்யாது நாளெல்லாம் ஆடிப்பாடி ஆரவாரஞ் செய்கின்றான்' என்றனர். கேட்ட பாண்டியன் பெருஞ் சினங் கொண்டு, அப்போது ஒரு கூடை மண்ணைத் தோளில் சுமந்து நின்ற கூலியாளாம் தேவ தேவனைத்தன் கையிலிருந்த பிரம்பால் 'ஏடா! ஏன் வீண் காலம் போக்கினாய்?' என்று அவன் முதுகில் ஓங்கி ஓரடியடித்தான். அவ்வளவில் கங்கை முடியான் தன் தோளிலிருந்த கூடை மண்ணை உடைப்பில் கொட்டி மின்னல் என மறைந்தான். கரை உயர்ந்து விட்டது. பாண்டியன் அடித்த அடி அரசன் முதுகிலும், ஆங்கு நின்றார் அனைவர் மேலும் அண்டங்களிலுள்ள அசையும், அசையா உயிர்கள், பொருள்கள் மேலும் பட்டது. வெள்ளம் வற்றியது.

அரசன் பணிதல்

யாவரும் இச் சிறப்பைக் கண்டு வியந்தனர். அரசன் பெருமான் சேவடிகளில் வீழ்ந்து வணங்கிப் போற்றிப் பொறுக்க வேண்டினான். தமக்காக இறைவன் 'மண் சுமந்து அக்கோவால்' (பாண்டியன்) அடிபட்ட அருமையைப் பெருமையை அருளைக்கண்டு அளவிலாப் பரிவினால் உருக்கத்தால் அழுது புலம்பி ஆறாக்கண்ணீர் ஓடத் தரையில் விழுந்து புரண்டழுதார்; வந்தியம்மையார் வீடுபேறு பெற்றார், பின்பு பெருமான் ஒருவாறு தேறி அரசனுக்கு அமைதி கூறி அமைச்சர் பதவியைத் துறந்து திருப்பெருந்துறை உற்றார்.

தில்லைக்கு வருக எனல்

அங்கே குருந்த மர நிழலில் வைகித் தம் குரு பெருமானை நினைந்து உருகிப்பரவிப்பாடல்களால் போற்றிச் சிவயோகத்தில் தம்மை மறந்து இருக்கையில் ஒரு நாள், பெருமான்,

ஈசன் அழைத்தவாறு தில்லையம்பலத்தை வணங்கப் புறப் பட்டார். திருப்பெருந்துறையை விடுத்தார்.

திருவுத்திரகோச மங்கை என்னுந் திருத்தலத்தை அடைந்து வானனைய பேரன்பால் உளங்கரைந்து, உளமுருக அங்கே கோயில் கொண்டுள்ள சிவபெருமானை வணங் கினார். அங்கே சிவபிரானை ஒளி உருவில் கண்டு அளவிலா ஆனந்தத்தால் ஆடிப்பாடித் தொழுது மகிழ்ந்தார். சில காலம் அங்கிருந்தார். 'திருச்சதகம்' என்னும் செந்தமிழ்ப் பாடல்கள் ஒரு நூற்றினைப் பாடியருளினார். பின் பாண்டி நாட்டுத் தலங்களை வணங்கிச் சோழ நாடுற்றுத் திருவாரூர், திருவிடைமருதூர், சீர்காழி, திருவண்ணாமலை முதலிய திருத் தலங்கட்குச் சென்று செம்பொருளை ஆரா அன்பால் வழிபட்டுப் பாடிப் பரவினார்.

திருவெம்பாவை

அவ்வகையில் திருவண்ணாமலையில் வாதவூரண்ணல் திருவெம்பாவை, திருவம்மானை ஆகிய சீர்மிகு செந்தமிழ் மறைச் செய்யுட்களை அருளினர். அங்குச் சில காலம் இருந்தார்.

பின், திருவாசகப் பெருமான், திருக்கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம்) சென்று ஏகம்பத்துறை எந்தையை வழிபட்டுத் 'திருவுந்தியார்' பதிகத்தை அருளிச்செய்து திருக்கழுக்குன்றஞ் சேர்ந்தார். அங்கு உலக முதல்வன் ஒளி உருவில் காட்சி தரக் கண்டு பேரின்பங் கொண்டு திருப்பதிகம் அருளிச் செய்தார்.

தில்லையைச் சேர்தல்

தில்லையை யடைந்து அளவிலாப் பேரன்பால், பெரும் மகிழ்ச்சியால் தம்மை மறந்த நிலையில் பொன்னம்பலமுற்று அண்டங் கடந்த பொருளாய், ஆனந்த வெள்ளப் பொருளாய் உயிர்கள் உய்ய ஐந்தொழிலியற்றும் ஆனந்த நடமிடும் பெருமானைக் கண்டார். சொல்லுக் கடங்காப் பத்திமையின் உருவானார். கண்களில் இன்ப வெள்ளம் பெருக் கெடுக்க,

உடம்பெல்லாம் புல்லரிக்கக் கும்பிட்டும், வீழ்ந்து வணங்கியும், இன்ப நடனமாடியும் மறைகளின் முடிவாம் திருவாசகச் செந்தமிழ்ப் பாடல்கள் பலபாடி வாழ்த்தி வணங்கினார்.

பின், தில்லை நகரின் ஒருபால் சென்றார். சோலை ஒன்றில் இலைக்குடிலில் அமர்ந்தார். தம் உயிராற்றல் அனைத்தையும் அம்பலவன் அடிமலர்களில் இருத்தி இரவு பகலாகப் பன்னாள் தவ நிலையிலிருந்தார். விழிப்புற்ற நிலையில், சிவபுராணம், முதலாம் அகவல்களையும் பல பதிகங்களையும் கரை கடந்த அன்பினால் பாடிப் பரவினார். இங்ஙனம் அகத்தும், புறத்தும் தம்மை மறந்த நிலையில் இறைவனையே நினைந்து சிவமய மாய்த் தவஞ் செய்திருக்கின்றார்.

புத்தரை வாதில் வெல்லல்

சோழ நாட்டுச் சிவநேயச் செல்வர் ஒருவர் எப்போதும் ஆராப் பேரன்பால் ஆடும் பெருமானை நினைந்து உருகும் நிலையில் 'பொன்னம்பலம்' 'பொன்னம்பலம்' என்று ஓதுவார். ஒரு போது இச் சீர்மிகு சிவநேசர் இலங்கை சென்று திருக் கோயில்களில் சிவபெருமானை வழிபட்டார். இவர் நிற்கும் போதும், இருக்கும் போதும், நடக்கும் போதும், எச் செயலைச் செய்யும் போதும் 'பொன்னம்பலம்' 'பொன்னம்பலம்' என்று ஓதுவதைக்கண்ட ஆங்குள்ள புத்தர்கள் அதனை அரசனுக்கு அறிவித்தனர். அவரை அரசனிடம் அழைத்துச் சென்றனர். அரசன் புத்த சமயத்தவனாதலில் 'ஏன் அவ்வாறு இடை யறாது பொன்னம்பலம் என்று ஓதுகின்றீர். அதன் பொருள் என்ன? பெருமை என்ன!' என்று கேட்டான். அவர் தில்லைக் கூத்தன் பெருமை, பொன்னம்பலத்தில் அவன் ஆடும் அருமை, சிவ சமயத்தின் மேன்மை யாவும் விரிவாக விளக்கி உரைத்தார்.

அரசவையில் இருந்த புத்த குரு, இவை கேட்டுப் பொறுக்காமல், 'இப்போதே சிதம்பரம் சென்று பொது மன்றத்தில் இவர் உரைத்த யாவற்றையும் வழக்கால்

வெல்வேன், புத்தனே கடவுள்; புத்த சமயமே உண்மைச் சமய மென நாட்டுவேன். சைவ சமயத்தைத் தோல்வி யடையச் செய்வேன்' என்று வஞ்சினங் (சபதம்) கூறிப் புறப் பட்டான். அரசனும் தன் ஊமை மகளுடன் புறப்பட்டான். புத்தர்களும் அரசப் பணியாளர்களும் உடன் புறப்பட்டு இலங்கையை நீங்கிச் சிதம்பரம் சேர்ந்தனர்.

ஆன்றோர் அவையில் புத்த குருவுக்கும், பெருமானுக்கும் வழக்குரை - சொற்போர் நிகழ்ந்தது. 'புத்த மதம் தோற்றது; சைவ சமயம் வென்றது.' அது பொறாது புத்தர்கள் பொய்ம் மொழி பேசி ஏசினர். பெருமான் கலைவாணியை உள்ளத்தால் நோக்கி, 'இத்தீயோர் நாவில் நீ உள்ளனையோ?' என்னப் புத்தர்கள் ஊமையராயினர். இலங்கை மன்னன் அது கண்டு பெருமானை அடி வணங்கித் தன் மகளை ஊமை நீக்கிப் பேச அருள வேண்டினன். பெருமான் இறைவனை வேண்ட அவள் ஊமை நீங்கிப் பேசலானாள். அரசன் பெருமானின் அடிகளில் வீழ்ந்து வணங்கிச் சைவனாயினன்.

அவ்வளவில், பெருமான் தமக்கும், புத்த குருவுக்கும் நிகழ்ந்த வழக்கின் பொருள்களமைத்து வினாக்கள் விடுக்க, அவள் சிவபெருமான், மாணிக்கவாசகப் பெருமான் அருளால் விடையளித்தாள். இவ்வினா விடையே பெருமா னின் 'திருச்சாழல்' பதிகமாக உருவாயிற்று. பின், பெருமான் அருளால் புத்தர்களும் ஊமை நீங்கிப்பேசலாயினர்; அடிகளை அடியில் வீழ்ந்து வணங்கிச் சைவராயினர். பின்னர் அவர்கள் இலங்கை சென்றனர்.

பெருமான், முன்போல் தவச்சாலை சென்று சிவயோகத் தமர்ந்தார்.

அம்பலவாணன் எழுத்தாளனாதல்

ஒரு நாள் மாலை விளக்கொளி மிளிரும் நேரத்தில் கூத்தப்பிரான் சிவவேடப் பெரியார் ஒருவர் வேடங் கொண்டு பெருமானைக் கண்டு உரையாட முற்பட்டார். பெருமான்

சமாதி நிலையிலிருந்து ஒரு சிறிதே நன வுலகில் மீள - அவ் வளவில் சிவப்பெரியார், 'நீர் சிவபிரான் மீது பாடிய பாடல் களை அன்பு கூர்ந்து அருள வேண்டும். அவற்றை எல்லாம் எழுதிக் கொள்வேன்' என்று வேண்டினார். பெருமான் அதற்கிசைந்தார். திருவாசகப் பாடல்களைச் சிவபுராணந் தொடங்கி 'அச்சோப் பதிகம்' வரையிலான எல்லாப் பாடல் களையும் பாடி நிறைவு செய்தார். மேலும், சிவப்பெரியார் வேண்டத் 'திருக்கோவையார்' என்னும் அகப் பொருள் பாடல்கள் 400 கொண்ட திருமறையையும் அருளிச் செய் தார். இவற்றை எல்லாம் சிவப்பெரியார் எழுதி முடித்தார். உடனே, பெருமானிடம் விடை பெற்றுத் தம் பொன்னம்பல மடைந்தார். அவ்வம்பலத்தின் பொற்படியில், இவ்விரு நூல்கள் எழுதிய ஓலைச் சுவடிகளை வைத்துத் தம் திருவுருவில் மறைந்தார்.

அவ்வளவில், பொழுது புலரத் தில்லை வாழ் அந்தணர் கள் கோயில் வாயில்களைத் திறந்து கொண்டு பூசனை புரியப் பொன்னம்பலம் போந்தனர். பொன்னம்பலப் படி களின் மேல் படியிலிருந்த ஓலைச் சுவடிகளை எடுத்துப் பிரித்துப் பார்த்துப் பெரிதும் வியந்து மகிழ்ந்து 'திருவாசகம், திருக்கோவையார்' பாடல்களை முற்றும் ஓதினர். அவற்றின் இறுதிப் பாடலின் அடியில் 'மாணிக்கவாசகன் சொல்லப் பொன்னம்பலவன் எழுதியது'என்று கூத்தன் கைச்சாத்தைக் கண்டு அளவிலா ஆனந்தங் கொண்டு ஆடும் பெருமானை வணங்கி அந்நூற்களின் பொருள் யாது எனக் கூறுமாறு வேண்டினர்.

அவ்வளவில் அருட் கூத்தன் ஆணை தந்தவாறு சோலையில் சிவயோகச் சமாதியில் மூழ்கி இருந்த பெருமா னிடஞ் சென்று வணங்கி வீழ்ந்து 'அம்பலவர் மாணிக்க வாசகரே என்றும்மை அழைக்குமாறு கூறினான்' என்ன, அடிகள் உலக நிலைக்கு இறங்கி வந்து திகழ, மறையோர்கள், 'பெருமானே! தாம் அருளிய நூற்களின் பொருளை அருள் கூர்ந்து யாங்கள் உணர்ந்துய்ய உரைத்தருள வேண்டும்' என்றனர்.

அடிகள்
அம்பலவாணன் திருவடி சேர்தல்

அவ்வளவில், அடிகள் அவர்களுடன் பொன்னம்பலஞ் சேர்ந்து 'என் நூற்களுக்குப் பொருள் இவரே' என்று ஆடும் பெருமானைச் சுட்டிக் காட்ட அப்போது ஆங்கே பெருஞ் சோதி தோன்றப் பெருமான் சென்று அப்பேரொளியிற் கலந்தார். திருச்சிற்றம்பலம்.



வரலாற்றாய்வுரை பற்றிச் சில விளக்கங்கள்

பெருந்தகையின் காலம் 10-ஆம் நூற்றாண்டே எனக் கொண்டாலும், அவர் வரலாறு கூறும் மூவரில் நம்பிகள் 7-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவ ரல்லர், பரஞ்சோதியார் 15-ஆம் நூற்றாண்டினர்; முனிவர் 18-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவ ரல்லர். இவர்களில் பரஞ்சோதியார் நம்பி திருவிளையாடலைப் பார்த்தும், முனிவர், பரஞ்சோதியையும் நம்பியையும் பார்த்தும் நம் பெருந்தகையின் வரலாற்றைப் பாடியிருத்தல் வேண்டும். இவர்களில் ஒருவராவது அடிகள் காலத்திலிருந்தவ ரல்லர். பரவலாக அன்பர்களும், புலவர் களும் பெருமானின் பெருமை மிகு வரலாற்றினைத் தமிழ் நாடெங்கணும் பேசிப் புகழ்ந்து பாராட்டிய செய்திகளையும், திருவாசகத்தில் வெளிப்படையாகவும், குறிப்பாகவும், பெருமான் கூறும் தம் வரலாற்றுக் குறிப்புக்களையும் கொண்டே, தம் கூரிய அறிவினால் எண்ணியும் இம் மூவரும் அடிகள் வரலாற்றைப் பாடியுள்ளனர். ஒருகால் இம் மூன்று ஆசிரியர்களுக்கும் முன் பெருமானைப் பற்றிய வரலாற்று நூல்கள் இருந்திருக்கலாம். அவற்றையும் அம் மூவரும் பார்த்திருக்கலாம். இவர்களில் எவரும் பெருமான் வரலாற்றை நேரிலறிந்தவ ரல்லர் என்பது வெளிப்படை. இவை தவிர வேறு நூற் சான்றுகள் கொண்டோ, நேரிலறிந் தார் கூறக் கேட்டவை கொண்டோ இவர்கள் பெருமான் வரலாற்றை ஆக்கியிருக்க முடியாது. எனவே, பெருமான் வரலாற்றுச் செய்திகளை எல்லாம் அவர்கள் கூறுமாறே நடந்தவை எனக் கொள்ள முடியாது.

ஏனெனில், யான் எழுதியுள்ள எந்தையார் வரலாற்று நூலில் அவர் பிறந்த வீடு, நாகப்பட்டினத்தில், இடையர் தெருவில் 19-ஆம் எண்ணுள்ளது என்று குறித்துள்ளேன். ஆனால், அதன்பின் எழுதப் பெற்ற எந்தையார் பற்றிய கட்டுரைகளிலும், சிறு நூலிலும், நூல்களிலும் பாட நூல் களிலும் பலர் அடிகள் பிறந்தது ‘காடம்பாடி’ என்று பிழை பட எழுதியுள்ளனர். காடம்பாடி நாகப்பட்டின நகரை

ஒட்டியுள்ள சிற்றூர், இவ்வாறே, அவர் வரலாற்றில் நிகழாச் செய்திகளும், நிகழ்ந்தவற்றில் திரிபுகளும், மாறுபாடுகளும் நிறையக் கேட்டு வருகின்றேன்; வியப்படைகின்றேன்.

நம் நாட்டு மாபெருந் தலைவர் சவகர்லால்நேரு தம் வாழ்க்கை வரலாற்று நூலில் 'தம் குடும்ப உடைகள் பாரிசு நகரில் சலவை செய்யப்பட்டுக் கப்பலில் வருகின்றன என்று எங்கும் பேசப்படுகிறது. நம்பப்படுகிறது; சற்றும் எண்ணிப் பாராது எங்கள் குடும்பத்திற்குப் பெருமை காட்டும் ஆர்வத்தால் இவ்வாறெல்லாம் கதைகள் கட்டப்படுகின்றன' என்றெழுதியுள்ளார்.

நாளேடுகள் முதலாம் ஏந்துகள் உள்ள இக்காலத்திலேயே இப்படி என்றால்,இவ்வேந்துகளில்லா அக்காலத்தில் வரலாறுகளில் இல்லாத பொல்லாத செய்திகள் இடம் பெறுதல் இயல்பு தானே! வேண்டுமென்று செய்யப்படும் தவறுகளல்ல இவை. ஆன்றோர்களைச் சிறப்பிக்க அறிவுக்கும், வாழ்வியலுக்கும் பொருந்தாத கற்பனைக் கதைகள்,வரலாறுகள் மிகப் பலவாகும். பாரதம், கந்த புராணம், இராமாயணம் முதலிய நூல்களில் இறைவன் இருப்பு, நம்பிக்கை, நல்லொழுக்கங்கள், பண்பாடுகளை மக்களினம் பெற்றுய்யக் கவிஞர்களால் ஆக்கப்பட்ட கற்பனைக்கதைகளை நூற்றுக்கு நூறு உண்மை எனப்போற்றி வழிபடும் நல்லவர்கள் இன்றும் நூறாயிரம் நூறாயிரமாக உள்ளனர் அன்றோ?

இராவணனுக்குப் பத்துத் தலைகள், முருகப் பெருமானுக்கு ஆறுமுகங்கள், விநாயகருக்கு ஆனைமுகம், அனுமார் குரங்கு, சாம்பவான் கரடி, என்றறெல்லாம் காவியங்களில் காண்கின்றோமே! இவைகளிலுள்ள உண்மைகளைப் (தத்துவம்) பெரும்பாலோர் ஒப்புவதில்லை. அக்கதைகளில் கண்ட யாவும் உண்மைகளே, நடந்தவைகளே என்று எண்ணுகின்றனர்; நம்புகின்றனர்; வழிபடுகின்றனர்.

இவ்வாறே, முன்னோர் எழுதிய நூல்களில் எழுதியவை யாவும் உண்மைகளே, என நம்பும் பத்திமை மிக்க மக்கள் மணிவாசகர் பற்றிய புராணங்களில் காணும் செய்திகள்

யாவும் உண்மைகளே, நடந்தவையே என்று நம்புகின்றனர். இவற்றிற்குச் சான்றுகள் உண்டா? அவற்றிற் கூறப் பெற்ற கதைகள் பல அறிவிற்குப் பொருந்தியனவா? என்று கூட அவர்கள் ஆய்வதில்லை; எழுதுவதில்லை; பேசுவதில்லை; மாறாக அக்கதைகள் நடந்தவையே என்று வற்புறுத்திப் பேசியும் எழுதியும் வருவதை அறியாதார் யார்?

ஆகவே, மேற்சொன்ன புராணங்களில் பெருமான் வரலாற்றில், கூறப் பெறும் நிகழ்ச்சிகள், செய்திகள் உண்மையா? நிகழக் கூடியனவா என்பவற்றை அகச்சான்று, புறச்சான்றுகள் கொண்டு ஆராய்ந்து உண்மை காண்போம்.

விளக்கம்

1 புறச் சான்றின் இலக்கணம்

புறச் சான்றின் இலக்கணமாவது, ஒருவரது வரலாற்றையோ அல்லது வாழ்க்கை நிகழ்ச்சிகளையோ தகுதி சான்ற ஒருவர் கூறுவதும், எழுதுவதுமாம். எடுத்துக் காட்டாக, மாபெரும் புலவர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் வரலாற்றைப் பெரும் புலவர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் எழுதியுள்ளதை மேற்கோளாகக் கொள்ளலாம். பிள்ளையவர்களின் மாணவராயிருந்து நெருங்கிப் பழகியவர்கள் ஐயரவர்கள். அப்படிப் பழகியது பிள்ளையவர்களின் வாழ்நாளின் கடைசி ஐந்தாண்டுகள் மட்டுமே. ஆயினும் பிள்ளையவர்களின் வாய் மொழியாலும் தாம் நேரிற் கண்ட அவர்தம் வரலாற்று நிகழ்ச்சிகளாலும், அவர்களோடு நெருங்கிப் பழகிய நண்பர்கள், உறவினர்கள், மாணவர்களாலும் அவர்தம் வரலாற்றை அருமையாக வடித்துப் பெரு நூலாகத் தந்துள்ளார்கள். ஆதலால், இவ்வரலாற்றை நம்பவே வேண்டும் - தந்தவர் தகுதியான சான்றோராகலான். ஆனால், நம்பித்தானாக வேண்டுமென்பதில்லை.

ஏனென்றால், ஐயரவர்கள், தம்மாசியர்பால் கொண்டுள்ள பேரன்பினால், அல்லது வேறு காரணங்களினால் சிறப்பான சில பகுதிகளைத் தாமே புனைந்து விட்டார், என்றொருவர் கூறின், அவர்களை மறுத்துக் கூறுதற்கான சான்றுகள் இல்லை எனின் ஐயர் அவர்களின் கூற்றை ஒப்ப முடியாமல் போகுமன்றோ? மேலும் பிள்ளையவர்களின் வரலாற்றின் சில நிகழ்ச்சிகளை ஐயரவர்கள் பிறர் கூறக் கேட்டும் எழுதியுள்ளார்கள். அப்பிறர் கூற்றுக்கள் உண்மையானவை என்பதற்குச் சான்றுகள் வேண்டுமே!

2. அகச் சான்றின் இலக்கணம்

ஆனால், அகச்சான்று அப்படிப்பட்டதல்ல. ஐயரவர்கள் தம் வரலாற்றை 'என் சரித்திரம்' என்று தாமே நூலாக எழுதியுள்ளார். அவ்வரலாற்றிலுள்ள நிகழ்ச்சிகள் எல்லாம் அவருடையனவே; அவரறிந்தனவே. ஆகவே, தகுதி சான்ற பெரியாராகிய அவர் கூற்றை ஒப்பித்தானாக வேண்டும். எவராவது ஒப்ப மறுக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். அவர் ஒப்பாதபடியினாலேயே ஐயரவர்கள் கூறும் நிகழ்ச்சிகள் நடக்கவில்லை என்றாகி விடா அன்றோ? ஆகவே, இச்சான்றுகளில் புறச்சான்றினும் அகச்சான்றே மறுக்க வியலா முடிபாம் என்பது வரலாற்று அறிஞர்களின் ஒன்றுபட்ட கருத்தாகும். மேலும் இவ்விரு சான்றுகளை விளக்கப்புகின் அவை விரிவாகி விடும்; ஆகவே, இச்சான்றுகளின் இயல்புகளை உய்த்து உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

எனவே, நம் பெருமான் வரலாறு கூறும் நூல்களிற் செய்திகள் நிகழ்ச்சிகள் அப்படியே ஏற்றுக் கொள்ள இயலாது. ஐயரவர்களாவது பிள்ளையவர்கள் உடனிருந்தவர்கள். பெருமான் வரலாறு கூறும் அம்மூவரோ பெருமான் காலத்தவரல்லர். அவர் காலத்துக்குப் பன்னூறு ஆண்டுகட்குப் பிற்பட்டவர்கள். ஆகவே அவர்கள் கூறும் செய்திகளும், நிகழ்ச்சிகளும், நம் பெருமானுடைய திருவாசகமாம், தன் வரலாற்றுத் திருமறையின் செய்திகள் நிகழ்ச்சிகளுக்கு

ஒத்திருக்குமாயின் அவை பெருமானின் உண்மை வரலாறாகக் கொள்ளலாம். உறுதியுடைய தென்று முடிவு செய்வதும் பொருத்தமாகும்.

பெருமான் சிவபெருமான் தன்னிடங் கொண்ட எல்லையில்லாப் பேரருளினால் நிகழ்த்திய ஆடல்களை எல்லாம் நன்றி மிகப்போற்றிக் கொண்டாடும் வகையில் தம் பாக்களில் ஆங்காங்கே கூறுகின்றார். அவை சில விடங்களில் தெளிவாக இருக்கும். சில விடங்களில் குறிப்பாகவும், சில விடங்களில் குறிப்பில் குறிப்பாகவுமிருக்கும். அவற்றை எல்லாம் சான்றோர்கள் ஓரளவே உணர்ந்துரைத்தல் கூடும். முற்றிலுங் கூறவியலாது. பெருமானின் இணையில்லா இறைப் பற்றைச் சான்றோரும் உணர்ந்துரைக்க ஒண்ணாது.

உலகியல் அறிஞர்கள் தம் வரலாற்றைத் தாம் என்ற உணர்வுடன் எழுதுவர். பெருமானோ தம்மை மறந்த நிலையில் பாடும் பாடல்களில் அவ்வாறு கூறும் விருப்பமும் வாய்ப்பும் இல்லாதவர். சிவத்தைத் தவிர ஏதொன்றும் எண்ணா நெஞ்சினர்; நிலையினர். அத்தகையார் வரலாற்றில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தெளிவான அகச்சான்றை எதிர்பார்ப்பது பொருத்தமாகாது. இக் கருத்துக்களைக் கொண்டே எளியேன் சிற்றறிவால் வானை அளப்பதுபோல் பெருமான் வரலாற்றாய்வுரையைத் தொடங்குகின்றேன்! வியப்புத்தான்! பொறுக்க வேண்டுகின்றேன்.

பிற் கூறப் பெறும் பெருமான் வரலாறு கூறும் மேற்காணும் புராணங்களின் ஆசிரியர் மூவர் நூல்களிலும் 90 விழுக்காடு வரலாற்றுச் செய்திகள் ஒத்தனவாகவே உள்ளன. ஆம். இவர்கள் பெருமான் வரலாற்றை ஒருவரைப் பார்த்து ஒருவர் பாடியவைதாமே! 10 விழக்காடு மாறுப்பட்டவை. மாறுபட்ட பகுதிகள் முதன்மை யானவையல்ல. இவற்றைக் கருத்திற் கொண்டு பெருமானின் வரலாற்றுச் சுருக்கத்தை ஈண்டுக் காண்போம். பெருமான் வாழ்ந்த காலம் பற்றி இம் மூவரும் ஒன்றுங் கூறிற்றிலர் என்பதையும் இங்குக் கருதிக் கொள்ளல் வேண்டும்.

ஊரும் பேரும்

பெருமானின் பெயர், 'மாணிக்கவாசகர்' என்பது காரணப் பெயரே, இயற் பெயரன்று, (இயற் பெயர் - வீட்டாரிட்ட பெயர்). அவ்வாறே அவர் திருவாதவூரில் தோன்றியதனால் பெற்ற 'திருவாதவூரர்' என்ற பெயருங் காரணப் பெயரே. பெற்றோர் பெயர்கள் தெரியவில்லை.

திருஞானசம்பந்தப் பெருமான் தம் திருப்பெயரையும் ஊரையும் தம் திருப்பதிகப் பாடல்களின் இறுதிப் பாடல்களில் அகச் சான்று படக் கூறியுள்ளார். சுந்தரமூர்த்திகளும் அவ்வாறே கூறியுள்ளார். இவ்வாறு நம் பெருமானும் திருநாவுக்கரசரும் தம் இயற் பெயர்களையும், ஊர்களையும் தம் பாடல்களிற் கூறவில்லை. நால்வரில் சுந்தரர் மட்டுமே தம் பெற்றோர் பெயர்களைக் கூறியுள்ளார். ஏனையோர் கூறிற்றிலர். இவ்வாறு அகச் சான்றாகக் கூறியுள்ள வற்றிற்கு மாறாக, பெருமான் வரலாறு கூறும் நூல்கள் பெருமானின் பெற்றோர், ஊர்ப் பெயர்களுக்குப் போதிய சான்றுகளில்லை.

பெரும் பெயர்ச் சான்றோர்கள் - அதிலும் மக்களாற் றெய்வம் எனப் போற்றப் பெறும் அருளாளர்களின், பிறந்த ஊர், பெயர், குலம் ஆகியவை அகச் சான்று வேண்டாத அளவுக்கு உண்மை உடையனவாகும். இவ் வுண்மை உலகச் சான்றோர்கள் தோன்றிய ஊர்கள் எல்லா நாடுகளிலும் எல்லாராலும் அன்றும் இன்றும் ஒரே வகை யாகக் குறிக்கப்படுதல் காணலாம். இவை பற்றி மாற்றுக் கருத்துக்களில்லை.

எனவே, பெருமானின் வரலாறு கூறும் பெரும் பற்றப் புலியூர் நம்பி என்பார் அருளிய திருவிளையாடற் புராணமும், பரஞ்சோதியார் அருளிய திருவால்வாயுடையார் திருவிளை யாடற் புராணமும், கடவுள் மாமுனிவர் அருளிய திருவாத வூரடிகள் புராணமும் ஆக மூன்று நூல்களும் பெருமானின் ஊர், நாடு, குலம் பெயர்களை ஒன்றுபட்ட வகையில் கூறுதல் பொருத்தமே என்று ஏற்றுக் கொள்ளலாம்.

பெருமான் காலம்

இதுபற்றி அறிஞர்களிடையே, கருத்து வேற்றுமை உண்டு. 3-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியே என்பது அருட்டிரு. மறைமலை அடிகளாரின் கணிப்பாகும். இதனை 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் தாம் எழுதியுள்ள மாபெரும் நூலில் கூறியுள்ளார். இதில் காலம் பற்றிய ஆராய்ச்சி மட்டும் 550 பக்கங்களாகும்.

இவ்வராய்ச்சியின் வானனைய அறிவின் மாட்சியை அறியக் கூடிய ஆற்றலுடையார் மிகச் சிலரேயாவர். இதனை அந்நூலைப் பயின்று வியப்பும், திகைப்பும் கொண்ட பேரறிஞர்கள் பாராட்டாலறியலாம். இவ்விருபதாம் நூற்றாண்டின் தமிழ் நாட்டின் மாபெரும் புலவர்களில் - அறிஞர்களில் – ஆய்வாளர்களில் பெரும் பான்மையோர் கருத்து. 'பெருமான் காலம் அடிகள் கூற்றை ஏற்பதே.'

சிறுபான்மையோர் கருத்து பத்தாம் நூற்றாண்டு என்பதாம். சிறியேன் கருத்து, தேவையில்லை யாயினும் அறிய விரும்புவார்க்கு எந்தையார் கருத்தையே யான் வணங்கி ஏற்கின்றேன் என்பதேயாம்.

எந்தையாரின் (தோற்றம்: 1876 - மறைவு: 1950).

எந்தையார் காலத்தும், அதன் பின்பும் அவர்கள் கருத்தை ஆராய்ச்சியை ஏற்காது 10–ஆம் நூற்றாண்டு எனக் கூறும் அறிஞர்கள், அதனைத் தம் வாய் மொழியாகத் தனிப்பட்டோரிடத்தும் சொற்பொழிவுகளிலுங் கூறுகின்றனர். மற்றுஞ்சிலர், அடிகள் காட்டும் ஆய்வுக் கருத்துக்களைச் **சான்றுகள் காட்டி** எழுத்தால் மறுக்காமலே 10-ஆம் நூற்றாண்டே என்கின்றனர். இஃதென்ன முறையோ?

எந்தையாரின் 3-ஆம் நூற்றாண்டே என்பதற்கான ஆய்வுகளை நிரலே மறுத்துத் தம் நூலில் அறிஞர் எவரேனும் நிறுவும் வரையில் பெருமானின் காலம் மூன்றாம் நூற்றாண்டே என்று கொள்ளற் பாலதாம்.

ஆய்வுரை முகவுரை

இப்புராண வரலாற்றில், கூறப் பெற்ற பெருமானின், வரலாற்றில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகள் - செய்திகள் யாவை? என்பனவற்றைப் பெருமானின் வாய்மொழிகளாம் திருவாசகப் பாடல்களில் உள்ள அகச்சான்றுகள் கொண்டு ஆய்வு செய்வோம்.

பாண்டியனிடம் முதலமைச்சர்

''பெருந்துறையிற் சிவபெருமான் அருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்து கரைந்து இருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்து பெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்து
இருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூர்
அடிகளடி இணைகள் போற்றி.''

— சிவஞான முனிவர்.

கடவுள் காட்சிப் படு பொருளா?

உலகச் சமயங்கள் யாவும் கடவுள் அருவம் என்றே கூறும். ஆனால், இந்து சமயம் அருவம் என்பதை ஒப்புக் கொண்டு அவர் உருவமும் ஆவர் அருவுருவமும் ஆவர்; என்றே கூறுகின்றது. அருவத்திற்கும் அப்பாற் பட்டதும் என்றும் கூறும். 'அருவம்' என்றால் 'பொருளே இல்லை' என்று ஆகிக் 'கடவுளே இல்லை' என்று தானே ஆகும்! இதனைக் கடவுள் அருவம் என்பார் சிந்தித்தல் வேண்டும். சிவநெறியில் அருவம் என்பது உருவத்தின் நுண்பொருளே யாகும். இதனைச் சைவ சமயக் கொள்கைகளை விளக்கும் சிவஞான சித்தியார் என்ற மெய்யுணர்வு (தத்துவம்) நூல்,

'அருவினில் உருவந்தோன்றி அங்காங்கி பாவமாகி
உருவினில் உருவமாயே உதித்திடும் உலகமெல்லாம்'

என்று விளக்குகின்றது.

உருவினில் உருவமாயே-பொருளிலிருந்து பொருளாகவே என்று கூறுகின்றது. நீரணு நுண் பொருளாய்க் காணா நிலையிலிருந்தது. காரணங்கள் கூடும் போது மேகமாகக் காணப்படுகின்றது. மேகப் பகுதியைக் கையினால் பிடித்துக் காட்ட ஒண்ணாது. அம்மேகமே சற்றுப் பருப் பொருளாகி நீராகின்றது. பின்னும் அது பனிக் கட்டியாகும் போது பிடிக்கப்படும் பொருளாகின்றது. இம் மாற்றங்களை அறிவார், அருவம் போல் காணப்படாத நீர்ப் பொருளே, நீரணுவே, அருவம், மேகமாகிக் காட்சிப் பொருளாகும் நீரே, அருவுருவம் பிடித்து எடுக்கும் பனிக் கட்டியே உருவப் பொருளாகவும் ஆவதை யறியாதார் யார்?

•

ஆகவே ஈதறிவோர், நீர், ஆவியினும், நுண்ணிய நீரணு வாக இருந்ததை இல்லை என்று கூறமாட்டார் அன்றோ? ஆகவே, அருவம் என்ற பொருள் ஒன்று இருத்தல் கூடாது என்றறிகின்றோம் அன்றோ? அப்படிக் கடவுள் அருவம்

(இல்லாத பொருள்) என்றால் கடவுள் உண்டு என்பது தவறன்றோ? ஆகவே கடவுள் உண்டு என்பார் நம்பிக்கை உடையார், பத்திமை உடையார் கடவுளை அருவம் என்று கூறுதல் தவறு என்று உணர்தல் வேண்டும்.

உலகப் பொருள்களை ஆராயும் இக்காலத்து விஞ்ஞானிகள் அனைவரும் வானம் என்ற வெளியாக விளங்குவதும் உருவுடைய நுண் பொருளே என்றும் இவ்வான் நுண் பொருள், மேலும், மேலும் அடுக்கடுக்காக நுண் பொருளாக முடிவின்றி உள்ளது என்றும் ஆய்ந்து நிலை நாட்டியுள்ளனர். இவ்வகையில் அருவம் என்ற சொல்லுக்கு இல்லாத பொருள் என்று பொருள் கூறல் பொருந்தாது என்பதை அறியலாம். மூலப் பொருளில்லாது பொருட்கள் எங்ஙனந் தோன்றும்? தாயில்லாது சேயேது? வித்தில்லாது மரமேது? அருவம் என்றும் மிக மிக - காணக் கூடாத நுண் பொருளில்லாவிடில் உலகில் காணப்படும் பொருள்கள் எல்லாம் தோன்றா அன்றோ? இம்முறையினாற்றான்,

வானத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நீரும், நீரிலிருந்து தீயும், தீயிலிருந்து மண்ணும், மண்ணிலிருந்து எல்லாப் பொருள்களுந் தோன்றுகின்றன. இம்முறையினைப் பொருளாராய்ச்சியாளர் - நாத்திகர் யாவரும் ஒருமுகமாகக் கண்டு கூறும் உண்மையாகும். ஆகவே, இல்லாத பொருளிலிருந்து இருக்கும் பொருளாகிய கடவுள் விளங்காது; தோன்றாது என்றறிகின்றோம். ஆகவே, கடவுள், இறைவன் உள் பொருளே என்பது உறுதியாகின்றது. ஆம்! மண் முதல் ஐந்து பொருட்களின் அணுக்கள் வானில் உள்ளதால் அவை வானிலிருந்து தோன்றலாம். வானுக்கு மூலப் பொருள் யாது என்னில், ஐம் பொருள்களுக்கும் மூலமாய நுண் பொருள் ஆம் மாயை என்க. மாயைக்கு மூலம் ஆற்றல் (சக்தி). அதற்கு மூலம் கடவுள் (சிவம்) ஆகும். இவ்வாறு கூறுவது சிவநெறி. இத்தகு இறைவன் : சிவன்.

'நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க!'

— திருஅண்டப் பகுதி வரி 49.

'கண் முதல் புலனால் காட்சியும் இல்லோன்'

— திருஅண்டப் பகுதி வரி 113.

ஆவன். இப்படிப்பட்ட இறைவன் ஒருவனே.

'நிலம்நீர் நெருப்புயிர்
நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோடு
எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகேழ் எனத்திசை
பத்தெனத்தான் ஒருவனுமே
பலஆகி நின்றவா
தோள்நோக்கம் ஆடாமோ'.

— திருத்தோள் நோக்கம் 5.

'வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி யுயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்று
அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை
என்சொல்லி வாழ்த்துவனே.'

— திருச்சதகம் 15.

ஆகின்றான் என்று மணிவாசகப் பெருமானும், சைவ சமய ஆசிரியர்கள், அடியார்கள் அனைவரும் ஒரு முகமாகக் கூறியுள்ளனர்; ஆழ்வார்களும் இவ்வாறே அருளிச் செய்துள்ளனர் தம்மாயிரம், ஆயிரம் பாடல்களில். அவை எல்லாம் கூறின் விரிவாம் என அஞ்சி விடுப்போம்.

•

இங்ஙனம் நிலம், நெருப்பு, நீர், காற்று ஆகிய நாற்பொருளுந் தன்னில் தோன்ற இடங் கொடுத்து நிற்கும்'வான் முதலாம் மிக மிக நுண்ணிய பொருள்களை எல்லாம், எல்லையற்ற பெரும் உலகங்கள், அண்டங்கள், பேரண்டங்களை

எல்லாம் தன்னில் அடங்க விளங்குபவனே இறைவன் ஆவன். எல்லாம் ஒரே தனிப் பொருளாயிருப்பின் உயிர்கள் பயன் பெறா. ஆக அவன், 'வான் முதல் பல பொருட்களா யிருப்பது உயிர்கள் நலம் பல பெறவே' என்றறிதல் வேண்டும். ஆகவே, அவன் என்றும் நிலைத்த பொருளாயிருத்தல் வேண்டும்.

ஆதலின் அவன்,

'வான்கெட்டு மாருதமாய்ந் தழனீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையன் '

— திருத்தெள்ளேணம் 18.

ஆவன். இத்தகைய பெரும் பொருளாகிய இறைவன், தாய் சேய்க்காக யாவற்றையும் அருளுடன் இழக்கத் துணிவான் அன்றோ? அத்தாயினும், சாலப் பரிந்து மண்ணுயிர்கள் வாழ இன்புற - உய்ய எவ்வகைக் கைம்மாறுங் கருதாது எல்லாப் பொருட்களையும் அருளியிருக்கின்றான்.

இவ்வாறு எல்லாப் பொருட்களுந்தன்னிடந் தோன்றற்கு இடந்தந்து நிற்கும் வான்போல் இவ்வான் முதலாம் பொருட்கள் யாவும் தன்பால் தோன்றி, நின்று ஒடுங்கிப் பயன் பெறவே அருளால் இறைவன் அவற்றினும் மிக மிக நுண் பொருளாய் உள்ளான். அந்நுண் பொருளாகிய இறைவன் எல்லாப் பொருட்களிலும் வான்போல் - காற்றுப் போல் ஊடுருவி நிற்கும் நிலையில் அருவப் பொருளாய்க் கருதப் பெறுகின்றான். மண், நீர், தீ என்னும் காணும் உருவப் பொருளாகவும் நீரினும் தீ நுண்ணியது. கண்ணால் காணக் கூடியது; ஆனால், நீர் போல் அள்ளி எடுக்க ஒண்ணா அருவுருவப் பொருளாகவும் உள்ளது. ஆகவே, மண், நீர், தீ, காற்று, வான் முறை முறையே உருவத் தன்மை குறைந்து, தீயில் அருவுருவாய்க் காட்சிப் படவும், வான் காட்சிப்படாத அருவப் பொருளாயும் நிற்கும். அவற்றில் இறைவன் மிகவும் நுண்ணியனாய் இறைவன் கலந்து நிற்பன் என்பதனை அறிந்து கொள்ளல் வேண்டும்.

இப்பொருட்கள் எல்லாம் இவ்வாறு உருவம், அருவுருவம், அருவப் பொருட்களாக அமைந்திராவிடில் மக்களும், மற்ற உயிர்களும், மரஞ் செடி, கொடிகளும் எங்ஙனம் தோன்றும்? ஆகவேதான் இறைவன் எல்லா உயிர்களிலும் பொருட்களிலும் உடலில் உயிர் போல் ஊடுருவி நிற்கின்ற நிலையைச் சிவ நெறி 'அத்து விதம்' (இரண்டற்ற நிலை) என்று கூறும். இந்நிலையில் அவனை அருவன், உருவன், அருவுருவன் என்று மூன்று திருமேனிகளை உடையவன் என்று சிவநெறி கூறும்.

முப் பொருட்களிலும் இப்படி அவன் கலந்து நிற்பது தன் ஆற்றலாம் - சக்தியினால் அவற்றை இயங்கச் செய்து உயிர் களுக்கு வேண்டும் நலங்களை வழங்கவேயாம். அம்முறையில் அம்மூன்று உருவங்களும் இறைவனாகச் சிறப்பித்துக் கூறப் பெறுகின்றன. உடலையே உயிர் என்றும் உயிரையே உடல் என்றும் கூறுவதேபோல் என்பதால். ஆகவே பெருமானும் இறைவனை,

'புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப்
பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி
முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத்
தாவர சங்கமத்துள்'ளான்

— சிவபுராணம் 36, 40 வரிகள்.

என்று பாடுகின்றார்.

•

உயிர் இல்லாவிடில் உடல் இயங்காவாறுபோல இறைவன் எல்லா உயிர்களினும், பொருட்களிலும் ஊடுருவி நிற்காவிடில் உலகம் எப்படிச் செயற்படும்? ஆகவேதான் உலகம் இயங்க இறைவன் அவற்றின் உயிர்க்கு உயிராக ஊடுருவி

நிற்கின்றான் என்பதை,

'...... உயிர்கட்கும் உயிரே'

— கோயில் திருப்பதிகம் 4.

என்று பாடுகின்றார். இறு - தங்குதல் (எல்லாப் பொருட்களிலும் உயிர் போல் ஊடுருவி இருத்தல்), அன் — ஆண்பால் விகுதி. ஆகவேதான்,'கடவுளை' 'இறைவன் என்று அழகிய தமிழ்ச் சொல் ஆன்றோரால் ஆக்கப்பட்டது' என்றறிந்து மகிழ்வோமாக.

இப்படி இறைவன் எல்லாப் பொருட்களிலுங் கலந்து நிற்கும் நிலையைச் சிவநெறி 'கலப்பு நிலை' (தடத்தம்) தடத்த நிலை - உருவ நிலை என்றும், உயிர்களின் அறிவில் இறைவன் ஊடுருவி நின்று இயக்கும் நிலையை உடனாகும் நிலை (அருவுருவ நிலை) என்றும், உயிரையும் உயிரற்ற பொருட்களையும் கடந்து நிற்கும் அருவ நிலையை இயல்பு நிலை (சொரூப லட்சணம்) என்றும் சைவ சமயம் விளக்கும்.

முன்னுங் கூறியவாறு உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று திருமேனிகளையும் இறைவன் கொண் டருளுவது உயிர்கள் இனிது வாழவே, உய்யவேயாம். இதனைச் 'சிவஞான சித்தியார்' என்னும் மெய்யுணர்வு நூலின் ஆசிரியராம் அருணந்தி சிவாசிரியர்,

'உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவி றந்த
அருமேனி அதுவுங் கண்டோம் அருவுரு ஆன போது
திருமேனி உபயம் பெற்றோம் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே.'

என்று அருளிச் செய்துள்ளார். இதுகாறும் விளக்கியபடி இறைவன் அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று திருமேனி உடையனாய்க் காட்சிப்படும் பொருளே என்பது பெருமானின் திருவாக்குகளாலும் நன்கு விளங்குதல் காண் கின்றோம் அன்றோ?

இறைவன் மாந்தர் வடிவு கொள்வாரா?

வரம்பில்லாப் பேரருள் உடைய இறைவன் தன்னையே விரும்பி உருகும் தூய சான்றோர்க்குக் காட்சிப்படான் என்னில் அவனை 'அருளாளன்' என்று கூறத் தகா தன்றோ? உலகப் பொருட்களைக் காண்பதால் நுகர் வதால் தானே! இன்பமும், பயனும் அடைகின்றோம். அது போல் தெய்வத் தன்மை நிறைந்த சான்றோர்க்கு இறைவன் காட்சிப்பட்டால் அன்றி அவர்கள் இன்பம் பெற்று அமைதி யடைய முடியுமா? அத்தகையார்க்கு அவன் காட்சிப்படக் கூடாது என்னும் அருளில்லாதவனா? ஆகவே, அவன் மாந்த வடிவில் வருதல் கூடும்.

இறைவன் அங்ஙனங் காட்சிப்படுங்கால் அவன் நம்மைப் போல் ஊனுடம்புடையன் ஆகான். ஊனுடம்பு கொண்டால் அவன், காமம், வெகுளி, மயக்கம், பசி, சோர்வு, விருப்பு, வெறுப்புக்களுக்கு ஆளாகல் வேண்டும். ஆதலின் இறைவன் அடியார்களை ஆட்கொள்ள வருங்கால் அவன் மேற் கொள்ளும் திருமேனி நிழற் படங்களில் காணுமாறு அமைந் திருக்கும். அல்லது அவ்வொரு சிறு நேரத்தில் அருளால் ஊனுடம்புங் கொள்ளலாம். பொன்னன் என்பான் ஒருவன் வேறு ஒருவனாக இயலாது; அவனுக்கென ஒரு வடிவ மிருத்தலின். ஆனால் தனக்கென உருவமில்லா இறைவன் தான் வேண்டும் வடிவங் கொள்ளல் இயல்வது தானே! அச்சிறு நேரத்தும், பிறகுங் கூட அவன் மேற் சொன்ன குறைகளில்லா தூய உடம்பினனாக இருத்தல் கூடும். அவன் தான் வரம்பில் ஆற்றலுடையனாயிற்றே! ஆகவே, அவன், மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல மானுடச் சட்டை யுடன் வருதலும் வந்து தன்னடியவர்களை ஆட் கொள்வதும் இயல்வதே!

அன்றியும், தமிழ் நாட்டில் - பாரத நாட்டில் தமிழ்ச் சான்றோர்கள் கூறும், அடையாளங்களுடன் கூடித் தன் அடி யார் விரும்பும் அம்மையப்பராக - அம்பலக் கூத்தனாக

தென்முகக் கடவுளாக-அம்மையாக,சோதியாக, முருகனாக, ஐயப்பனாக, ஆனைமுகனாக, திருமாலாக இன்ன பிற வடிவினனாகக் காட்சிப்படுவன். ஆம்! அவர்கள் அவ்வடிவு களில் தானே அவனை நினைத்திருப்பர்; வழிபட்டிருப்பர். இம்முறையில் பெருமானுக்குச் சிவபிரான் குருவடிவாக அம்மையப்பனாகச் சோதியாகக் குதிரைப் பாகனாகக் கூலியாளாக வந்து காட்சிப்பட்டதைச் செயற்பட்டதைக் கூறும் முன்,இறைவன் காட்சியைப்பெறுதற்கான சான்றோர் களின் தகுதிகள் எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்? என்று ஒரு சிறிதாராய்ந்து காண்போம்.

குருவின் காட்சிக்கான தகுதிகள்

தெய்வம் நிகழ் நம் பிரானுக்கு - இறைவனைக் காணும் பெரு நிலையினர்க்கான முன்னுணர்வும், பெரும் பத்திமையும் திருப்பெருந்துறையை நெருங்க நெருங்கப் பள்ளத்தில் பாயும் வெள்ளம் போல் மிகுந்து கொண்டே வந்தது. அதனால், 'என்னை ஆளும் அண்ணல் இங்கேதான் இருக்கின்றார்.' என்னும் இணையில்லா நம்பிக்கை மிகுந்து வந்ததனால் விரைந்து நகரை உற்றுத் திருக்கோயிலில், தம்மை மறந்த நிலையில் புகுந்து, வலமாக வருகின்றார். வடக்குத் திருச் சுற்று மாளிகையில் (பிரகாரம்) குருந்த மரத்தடியில் - நிழலில் அடியார் சூழ்ந்திருக்க ஓரிருக்கையில் குருவின் கோலங் கொண்டு சிவபெருமான் அமர்ந்திருக்கக் கண்டார். பேரொளி பொலியுந் திருமேனியுடன் - ஒளி வீசுந் திருமுகத்தின் திருவாயால் பெருமானைப் பார்த்து 'வருக! வருக!!' என்று மகிழ்வுடன் புன்னகையுடன் வரவேற்றான். தன் ஒளிமிகும் கண்களால் அவரை நோக்கினான். அடுத்து ஈசன் தன் இரு திருவடிகளை அவர் திருமுடிமேல் சூட்டினான். அவர்க்கு ஒரு வார்த்தையை உபதேசித்தான். இவற்றை எல்லாம் பெருமான்,

'திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்)மே வியசீர்
இருந்தவா றெண்ணி ...
நினைந்து...' **— அருட்பத்து 10.**

என்று கூறியுள்ளார். இவ்வாறே அருட்பத்தின் பத்துப்

பாடல்களிலும் பாடியுள்ளார். அக்காட்சி பெற்ற பின் பெருமான் அதனையே நினைந்து நினைந்து போற்றியதற்குச் ‘செழுமலர்க்குந்த(ம்)மே வியசீர் இருந்தவாறு எண்ணி நினைந்து’ என்ற தொடர் போதிய அகச் சான்றாகும். கடவுட் காட்சி, அழகும், அருமையும், பெருமையும் சொற்களில் ஏன்? உணர்வுக்கும் எட்டா மாட்சியது அன்றோ? அது கண்டோர் அதனை நினைந்தவாறே - வியந்தவாறே - நினைந்து மகிழ்ந்தவாறே - பேரின்ப நிலையில் நிலைத்திருப்பர் அன்றோ?

‘பெருமானுக்கு இக்காட்சி, திருப்பெருந்துறையைச் சார்ந்திருந்த பெருஞ் சோலையிலிருந்த குருந்த மரத்தின் நிழலில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். அக்காலத்தில் கோயிலில் நடந்திருக்க வியலாது. அதற்குச் சான்றாக இப்போது ஆங்குள்ள பெருங் கோயிலில் மூலத்தானத்தில் சிவலிங்க உருவமில்லை. குரு அமர்ந்த பீடமே உள்ளது. என்று எந்தையார் எழுதியுள்ளார். மற்றும், ‘அக் கோயில், பாண்டியன் குதிரை வாங்கக் கொடுத்த பொன்னைக் கொண்டு பெருமானால் கட்டப்பட்டது; அது தவறாகாது பொருத்தமே! முறையே’ என்றும் எழுதியுள்ளார். பெருமானைப் பற்றிய புராணங்களில் இது பற்றி ஓரளவு இப்படியே கூறப்பட்டுள்ளன. வழக்கிலும் கோயிலைப் பெருமானே கட்டினார் என்றே இன்றும் கூறப் பெறுகின்றது.

இதுபற்றி நம் ஆய்வுக் கருத்துக்களைப் பின்னர்க் காண்போம்.

இனிப் பெருமானுடைய திருவாக்கின்படி,

‘திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்’

என்பதற்குத் திருத்தமான நீண்ட (பெரிய) பொழில் (சோலை) சூழ்ந்திருக்கும் திருப்பெருந்துறை என்றுதான் பொருள் கொள்ளல் வேண்டும். ஏனெனில், அவரை ஆண்ட இடம் இன்று கோயிலின் வடக்குத் திருச்சுற்று மாளிகையில்,

குருந்த மரத்தின் கீழ் உள்ள (இன்று அவ்விடத்தில் அம்மர மில்லை; அம்மரம் இருந்து பட்ட அடையாளம் மரப்பகுதி உண்டு); பீடத்தில்தான் சிவபெருமான் அடியார் புடை சூழ இருந்து அடிகளை ஆட்கொண்டார் என்று கருத இட முண்டு. மேற் கட்டுரையில்,

'திருப்பெருந்துறை உறை கோயிலுங் காட்டி'

'நின்கோயில் வாயிலிற் பிச்சன் ஆக்கினாய்'

'தேரார்ந்த வீதிப் பெருந்துறையான்'

'திருப்பெருந்துறை உறை - (சிவபெருமானே நீ) உறை - (எழுந்தருளி) உள்ள கோயிலுங் காட்டி' என்பதனாலும்.

'நின்கோயில் வாயிலில்! (யான்புகும் போதே) என்னைப் பெரும் பத்திமைப் பித்தங் கொள்ளச் செய்து விட்டாய்' என்பதனாலும் குருந்த மரம், கோயிலின் வடக்குத் திருச் சுற்றில் (பிராகாரம்) அமைந்திருத்தல் வேண்டும் என்பது உறுதியாகின்றது. பரஞ்சோதியார் தம் திருவிளையாடற் புராணத்தில் ஆலயத்துள் புகுந்து வலமாக வரும்போது குருந்த மரத்தடியில் நிழலில் குருநாதனைக் கண்டார் என்கின்றார். அப்பாடல், பின்னால் உரியவிடத்தில் காட்டப் பெறுகின்றது.

வாய்மொழியாக உள்ள திருவாசகப் பாடல்களாவன :

'அருபரத் தொருவன்
அவனியில் வந்து
குருபரன் ஆகி
அருளிய பெருமை'

— **போற்றித் திருவகவல் 75, 76.**

'பொங்கு மலர்ப்பாதம்
பூதலத்தே போந்தருளி
... ...
எந்தரமும் ஆட்கொண்டு'

— திருஅம்மானை 1.

'சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி
எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின்
உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணன்...'

— திருஅம்மானை 18.

'பெற்றி பிறர்க்கரிய
பெம்மான் பெருந்துறையான்'

— திருஅம்மானை 20.

'கோனவன்போல் வந்தென்னைத்
தன்தொழும்பில் கொண்டருளும்
வானவன்...'

— திருஅம்மானை 14.

'.. பெருந்துறையான்
காட்டா தனஎல்லாங்
காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டி ..
... ...
ஆட்டான்கொண்டு ஆண்டவா
பாடுதும்...'

— திருஅம்மானை 6.

அவனி - உலகம், பூதலம் - மண்ணுலகம், போந்தருளி - வந்து, எளி வந்து (யாராலுங் காண முடியாத பெருமை

மிகுந்த இறைவன்) எளியவன் போல வந்து, பெற்றி - தன்மை,பெம்மான் - பெருமான். என் உள்ளத்தின் உள்ளே - என் உயிரின் அறிவில். ஒளி திகழ - உண்மை அறிவின் ஒளி விளங்க. அளி – இரக்கமுடன் பெருமான் (பெருமையுடையவன்)கோனவன் - அரசன், தொழும்பு – அடிமை, தாள் + தாமரை - தாட்டாமரை (தன்) திருவடியாகிய தாமரை மலரை, ஆள் + தான் - ஆட்டான் (என்னை) ஆளாக. கண்ணார் - கண்ணாக்கினிய. மேற்காணும் வரிகளால் 'இம் மண்ணுலகில் திருப்பெருந்துறையில் இறைவன் தன் ஒளி மிகுந்த திருமேனி விளங்கக் குருவின் கோலத்துடன் எளிமையாக எழுந்தருளி வந்து (ஓர் இருக்கையில்) அமர்ந் திருந்து என்னிடம் இரக்கங் கொண்டு யான் அறிய வியலாத மெய்யாம் பேரறிவினைத் தந்தான்; சிவமாகிய தன்னை எனக்குக் காட்டினான். தன் திருவடிகளைக் காட்டித் தன் பேரின்பத்தையுந் தந்தான். என்னை அடிமையாக்கிக் கொண்டான்' என்று பெருமான் தாம் கடவுளைக் கண்ட காட்சியையும் அவன் தனக்குத் தந்த பெரும் நலங்களையும் தெளிவாக விளக்கி உள்ளமை காணலாம்.

அங்ஙனங் காட்சிப்பட்ட இறைவன் மானிட உருவில் தான் வந்தான் என்பதையும் தன்னை நோக்கினான் என்பதையும்

'... ...நீ
எளியை ஆகிவந்து
ஒளிசெய் மானுடம்
ஆக நோக்கியும்'

— திருச்சதகம் 91.

என்று கூறினார்.

'...... உன்தன்
வண்ணந்தான் அதுகாட்டி
வடிவு காட்டி
....
வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற்
காத்தாட் கொண்டாய்'

— திருச்சதகம் 25.

என்று தெளிவுபடக் கூறுகின்றார்.

மூவகைத் தீட்சைகள்

1 காண்டல் அருள்

சைவ சமயக் கொள்கைப்படி இறைவன் மெய்யடியார்களை ஆட்கொள்ளும் முறைகள் மூன்று வகையாகும். அவை அடியவர்களைக் கண்ணால் பார்த்தல் (நயன தீட்சை) தொடுதல் (பரிச தீட்சை) வாக்கினால் அருளல் (வாக்குத் தீட்சை) இம் மூன்றையும் இறைவன் தனக்குச் செய்தான் என்பதைப் பெருமான்,

'மருளனேன் மனத்தை மயக்கற
நோக்கி மறுமையோடு
இம்மையும் கெடுத்த
பொருளனே ...'

— அருட் பத்து 9.

'என்னை ஆண்டு ... நோக்கினாய்......'

— திருச்சதகம்.

' ......நீ
எளியை ஆகிவந்து
ஒளிசெய் மானுடம்
ஆக நோக்கியும்'

— திருச்சதகம் 91.

' . ...என்றெனைப்
புரிந்து நோக்கவும்'

— திருச்சதகம் 93.

'பெருந்துறையான் ஆட்கொண்டு
• பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம்
வந்து'

— திருவெண்பா 6.

என்று அருளிச் செய்துள்ளார்.

மயக்கு அற அறியாமை முழுவதும் புரிந்து - விரும்பி. இவற்றால் யாவரும் அறியா இறைவன், திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் வீற்றிருந்து தம்மை நோக்கி அருள் நோக்கஞ் செய்தருளினான் என்பதும் அதனால் பெருமான் அறியாமை அனைத்தும் அறவே நீங்கப் பெற்று மெய்யறிவு முற்றும் நிறையப் பெற்றுப் பிறவாப் பெருநிலை பெற்றாரென்பதும் விளங்கக் காணலாம்.

2 தொடுதல் அருள்

அடுத்துத் 'தேவர்கனாவிலுங் காணா'ச் சிவபெருமான் தன் திருவடிகள் இரண்டையும் அவர் திருமுடி மேல் சூட்டினான். இதனைப் பெருமான் ஐந்திடங்களில் கூறியுள்ளார். அவற்றிலிரண்டு :—

'பூவார் அடிச்சுவடு
என்தலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ'

— **திருத்தெள்ளேணம் 7.**

'இணையார் திருவடி
யென்தலைமேல் **வைத்தலுமே**
துணையான சுற்றங்கள்
அத்தனையும் துறந்தொழிந்தேன்.'

— **திருப்பூவல்லி 1.**

'எந்தையெந் தாய்சுற்றம்
மற்றும்எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை
ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்'

— **திருப்பூவல்லி 2.**

தேவானவா - நான் தேவனானவிதம்.

அவ்வருள் நிகழ்ச்சி நிகழ்ந்த அப்போதே, பெருமான் தமக்குத் துணையானவர்களையும், சுற்றத்தாரையும், மற்றுமுள்ள எல்லாப் பொருட்களையும் கைவிட்ட பேருணர்வு பெற்றார். இதனைப் பேரின்பம் பெறும் தூய உயிர் பெற வேண்டிய வீட்டு நெறிக்குரிய பேருணர்வு என்று மெய்யுணர்வு நூல்கள் கூறும், பாச நீக்கம் என்பர் ஆன்றோர். மற்றும் பெருமான் துணையான சுற்றங்கள் என்று கூறுவதால் அமைச்சர், மனைவி, மக்கள், பெற்றோர், உடன் பிறந்தார் முதலாம் சுற்றத்தாரை உடையராயிருந்தார் என்னும் அவர்தம் வரலாற்றுக் குறிப்புந் தெரியலாகின்றது. இந்நிலையில் நிலைத்து நிற்கும் பெருமான் பல ஆண்டுகள் வரவு, செலவு பார்த்துக் கோயில் கட்டி இருக்கக் கூடுமா? அதுவுந் திருப்பெருந்துறைக் கோயில் மிகப் பெரிய கற்கோயிலாற்றே! இவற்றை எல்லாம் கற்பனையாகக் கூட எண்ணிப் பாராமல் - சான்றேதுமில்லாமல் செவி வழிச் செய்தி ஒன்றே கொண்டு பாண்டியன் குதிரை வாங்கத் தந்த பொன்னைக் கொண்டு பெருமான் கோயில் கட்டினார் என்றல் பொருந்துமா? பொருந்தாதே!

அதனை மறுத்து அடியேன் இந்நூலை எழுதும் முன்பு, சென்னை சைவ சித்தாந்த மகா சமாசத்தின் திங்கள் வெளியீடான 'சித்தாந்தம்' மலர் 54, இதழ் 5-இலும் (1981 மே) 'செந்தமிழ்ச் செல்வி' சிலம்பு 55, பரல் 11, 12-இலும் எழுதியுள்ள கட்டுரையைப் பின்னே அமைத்துள்ளேன்.

பெருமான் முடிமேல் இறைவன் திருவடிகள் வைத்தமையால் இது பரிச தீட்சை எனப்படும்.
பரிசம் - தொடுதல்.

3 ஓதல் அருள்
(வாக்குத் தீட்சை)

நமசிவாய - வணக்கம் சிவனுக்கு.

இதனைப் பருமை (தூல) பஞ்சாட்சரம். என்றும்,

சிவாய நம - சிவனுக்கு வணக்கம்.

இதனை நுண்மை (சூட்சும) பஞ்சாட்சரம் என்றும் கூறுவர். பஞ்சாட்சரம் – ஐந்து எழுத்து.

முன் காட்டிய நயன, திருவடி தீட்சைகளுக்குப் பின் இறைவன் பெருமான் திருச்செவியில் 'திருவைந்தெழுத்து' ஆம் ஒரே மந்திரத்தை மெல்லென ஓதினான். திருவைந்தெழுத்து, 'நமச்சிவாய' என்றும் 'சிவாய நம' என்றும் இரு வகையாகும். இரண்டின் பொருளும் ஒன்றே. இம் மந்திரத்தின் சிறப்புக்களை எல்லாம், தேவாரம் முதலாம் பன்னிரண்டு திருமுறைகளிலும், சிவஞான போதம் முதலாம் பதினான்கு மெய்யுணர்வு நூல்களிலும், ஏனை மெய்ஞ்ஞானியர் பாடல்களிலும் மறைமலையடிகள் முதலாம் பேரறிஞர்களின் நூல்களிலும், கட்டுரைகளிலும் பன்னூறு பக்கங்களில் விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளன, காண்க!

பெருமானுக்கு அருளப்பட்ட இம்மந்திரம் இருவகை அஞ்செழுத்துக்களில் 'நமச்சிவாய' என்னும் ஒரே வார்த்தையே ஆகும்.

'நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுள்ளம்
புகுந்தடியேற்கு அருள்செய்தான்
ஊன்ஆகும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே.'

— திருவேசறவு 10.

என்னும் பாடலில் உள்ள 'நமச்சிவாய' என்பதனையே மறுத்துக் கூறும் 'சிவாய நம' என்பதே குரவன் ஓதியது என்னலாமே. என்னில், பெருமான் 'நமச்சிவாய' என்றே மேற்காட்டியவாறு சிவபுராணத்தின் முதலில் அமைத்தாராதலின் அம் மந்திரமே முதலில் அவர்க்கு இறைவனால் அருளப்பட்ட தென்பது உறுதியாகின்ற தன்றோ, என்க.

சிவபெருமான் குருவடிவில் தோன்றி ஓதியது பலவாகும். மந்திரங்களோ - சொற்களோ அல்ல. அவ்வொரு மந்திரமே என்பதனைப் பெருமான்,

'மன்ன! என்னைஓர்
வார்த்தைஉட் படுத்துப்
பற்றினாய்...'

— செத்திலாப் பத்து 2.

என்ற ஐயத்திற்கிட மின்றி அருளிச் செய்துள்ளமையால் தெளியலாம்.

மேற்பாட்டால், அடிகள் 'தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்'(தம் இறைமை இன்ப அடைவைக் (அனுபவம் - நுகர்ச்சியை) கூறுகின்றார்.) யான் வேண்டாமலே - தேடாமலே - அழையாமலே சிவபிரான் தானே வலிய வந்து எனது உள்ளம் புகுந்து எனக்கு அருள் செய்தான் என்கின்றார். இவ்வாறு இறைவன் தானே வந்து அவர்க்கு அருள் புரிந்தான் என்றால் அவர்தம் அளக்கலாகாப் பத்திமையின் உயர்ந்த பாங்கு உரைக்க ஒண்ணுமோ? தகுதி உடையார் பதவியைத் தேடிப் போவதில்லையே! அது அவரை நாடித்தானே வரும்? மற்றும், இறைவன் அருளிய செவியறி உறுத்தலால் (உபதேசம்) தாம் பெற்ற மற்றொரு பெரும் பயனையும் பெருமான் 'தம் ஊன் தசைகள் நிறைந்த உயிர் வாழ்க்கை (உலக வாழ்வு)யைக் கடிந்து ஒதுக்கி விட்டுப் பேறு பெற்றேன்' என்றும் அருளினார். அஃதாவது பிறப்பு, இறப்பு என்னும் அறியாமையுந் துன்பமும் மிக்க வாழ்வை விடுத்தேன். பிறவாப் பேரின்ப வாழ்வு பெற்றேன் என்கின்றார். திருவள்ளுவர் கூறும்,

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி'

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்'

என்னும் பெருநிலை அன்றோ பெருமான் பெற்றது!

இறைவனின் கண்ணருளால் பெருமானுக்கு, அறியாமை யகன்றது. மெய்யறிவு நிறைந்தது. தொடுதலருளால் - கட்டுக்கள் அகன்றன. ஓதலருளால் - மீண்டும் பிறவியில்லாப் பேரின்பம் கிடைத்தது என்று அறிகின்றோம். ஆகவே, ஒருவன் எய்த வேண்டிய அரும் பெரும் பேறுகளை எல்லாம் நம் பெருமான் பெற்றுச் சிவமாந் தன்மை பெற்றார். இதனை அவர் தாமே அருளிய,

'முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே'

என்று பாடுகின்றார்.

— அச்சோப் பதிகம் 1.

இதுகாறும் கூறியவற்றால், பெருமானுக்கு இறைவன் குரு வடிவில் தோன்றி அருளிய மூவகை அருளிப் பாடுகளை யும் அவற்றால் பெருமான் பெற்ற பெரு நலங்களையும் அறிந்தோம்.

'மாணிக்கவாசகன்' என்று இறைவன் பெயர் தந்தானா?

இங்ஙனம் பெருமான், மூவகை தீட்சைகளும் இறைவனால் அளிக்கப் பெற்ற உடன் தன்னுடல் பொருள், ஆவியனைத் தையும் அவனுக்கே காணிக்கையாக்கி விட்டார். சிவ பிரான் அளித்த பேரின்பத்தில் மூழ்கியவராய் அவனைப் பத்திமையால் பணிந்து மகிழ்ந்தவராய் உள்ளம் உருக மெய்ம் மயிர் பொடிப்ப விழிநீர் பொழிய அன்புணர்ச்சி மிக்கவராய்

இனிய செந்தமிழில் தேன்மாரி என அவன் புகழைப் போற்றிப் பாடலானார். பாட்டின் சொற்களும், தொடர்களும் மாணிக் கங்கள் போல் ஒளி வீசின. அவ்வொளி உலகப் புற ஒளியைப் போல் - மின் ஒளியைப் போல இடையிடையே தடைபடுவது அன்று. கால – தேச எல்லைகட்குக் கட்டுப்பட்டதும் அன்று. இறைவன் ஒளி போல மக்கள் உள்ளத்தே உள்ள அறியாமை இருளை அறவே அகற்றி மெய்யறிவாம் உள்ளொளியைத் தந்து அவர்கட்குப் பிறவிப் பயனாம் பேரின்பத்தை- வீட்டைத்(மோட்சம்) தரும் உண்மை ஒளியாகும். இவ்வருமை பெருமைகளைஎல்லாம் நோக்கி மகிழ்ந்த ஈசன் பெருமானுக்கு 'மாணிக்கவாசகன்' எனப் பெயர் தந்தான் என்று பெரு மானைப் பற்றிய புராணங்கள் கூறுகின்றன.

பெருமான் வாக்கில் அப்படிச் சிவபிரான் தமக்குப் பெயர் தந்தான் என்றில்லை. ஆயினும் அவர்தம் பாடல்கள் அதிலடங்கியுள்ள மெய்யுணர்வுக் கருத்துக்கள் மாணிக்கங் கட்கு மேலாம் ஒளியுடையன என்பதைப் பறைசாற்றக் காணும், அன்றல்ல இன்றைய சான்றோர்கள் அனைவருமே ஒரு முகமாகப் பெருமான் பாடல்களை மாணிக்கவாசகங் களாகவே கண்டனர்; காண்கின்றனர். ஆகவே, இறைவன் தான் பெருமானுக்கு மாணிக்கவாசகன் என்று பட்டஞ் சூட்ட வேண்டுமென்பதில்லை யன்றோ? இச் சிறப்புணர்ந்தன்றோ சிவப்பிரகாசர் பெருமானைப் பாராட்டி மேற் பாடல்களில் பெருமான்,

'முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனை'

'செம்மைநலம் அறியாத
சிதடரொடும் திரிவேனை'

என்று தாம் தம்மொடு சேர்ந்தாரைக் குறிப்பிடுகின்றார். 'இம்மூர்க்கர்', 'கயவர்' அரசு அமைச்சர்கள் அதிகாரிகளா யிருத்தல் கூடும். அடிகள் தாம் அமைச்சராக இருந்தவ ராயிற்றே!

இப் பதவியிலுள்ளோர் 80% பேர் தம் பதவிகளை நிலைப் படுத்திக் கொள்வதற்காகச் செய்யும் பழி பாவங்களை இன்றுங் காண்கின்றோம் அல்லமோ?

இதனாலும் பெருமான் அரசியலிலிருந்து விலகி ஈசன் அருளில் திளைக்க விரும்பினார். பெரிதும் முயன்றார். இதனால் பெருமான் தன் வரலாற்றின் பகுதி காணப் பெறு கின்றதையும் அறியலாம்.

கடவுளைக் கண்டார்

'இல்லை என்பார்' அதற்குக் கூறும் முதன்மையான காரணம், கடவுளை அவர்கள் ஓர் உருவில் - மனித வடிவில் காண விரும்புகின்றார் என்னலாம். குறிப்பிட்ட வடிவில் இருந்தாலன்றோ அவரைக் காணக் கூடும். நம் உடலிலுள்ள உயிரையும் அன்பு, இரக்கம், சினம் முதலாய குணங்களையும் காணக் கூடவில்லையே! வானத்தையும் பார்க்க முடிய வில்லையே! அறுவகைச் சுவைகளையும் காண்கின் றோமோ? இல்லையே! ஆனால், நம்புகின்றோம் நம்பித் தானாக வேண்டும்.

எனவே, எல்லா நுண்பொருள்களையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் மிக நுண்பொருளாம் கடவுள் அவற்றினும் நுண்மையாகத்தானே இருப்பன்! கண் பொருட்களைத்தான் காணும், இசையை - ஒலியைக் காது தான் கேட்கும். இப்படியே ஏனைய புலன்களும் ஒவ்வொன்றை மட்டுமே உணரும். அன்பு, அருள், இரக்கம், முதலாய உணர்ச்சிகளை ஐம்புலன்கள் அறியா. ஆனால் மனத்தின் வாயிலாக உயிரறி கின்றது; உணர்கின்றது. அதுபோல இறைவன் இருப்பை மேலான பண்புகள், ஒழுக்கங்கள், செயல்கள் முதலியவற்றால் நிறைந்த ஆன்றோர்களால்தான் நன்கு உணர முடியும்.

உலகெங்குந் தோன்றிய சான்றோர்களான ஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், நம் பெருமான், காரைக்காலம்மையார், திருவள்ளுவர், நம்மாழ்வார்,

வள்ளலார், தாயுமானார், பட்டினத்தார், அருணகிரியார், இராமகிருட்டிண பரம அம்சர், விவேகானந்தர், ஏசுகிறித்து, மகம்மதுநபி முதலாம் அக் காலத்தோரும், இக்காலத்தில் மகாத்மா காந்தியடிகள், தால்சுதாய் முதலியோரும் பன்னாட்டுக் கலைஞர்களும் சேக்கிழார், கம்பர், காளிதாசர், சேக்குவீயர், பாரதியார் ஆகியவர்களும், அறிவியலறிஞர் களான ஈன்சுடீன் முதலியோரும் ஆல்பர்ட் சுவைசர், பிளாரன்சு, நைட்டிங்கேல் முதலாம் அருளாளர்களும், மருத்துவர்களும், இராச இராசச் சோழர், வீரபாண்டியக் கட்டபொம்மன், சிவாசி, நெப்போலியன் போன்ற மாபெரும் வீரர்களும் இறை இருப்பில் அழுத்தமான நம்பிக்கையும் பத்திமையுடையராய் விளங்கியதை அறியாதார் யார்?

இன்னும் ஏழையரும், அறிவிற் குறைந்தோரும் ஆன எளிய மக்களுக்குள்ள நம்பிக்கையும், பத்திமையும் ஏட்டி லடங்குமோ? இவற்றின் விளைவே உலகெங்கும் - எல்லா நாடுகளிலும், நகரங்களிலும், பேரூர், சிற்றூர்களிலும், பட்டி தொட்டிகளிலும், கோயில்களும், விழாக்களும், பண்டிகைகளும், சடங்குகளும், நோன்புகளும், வழிபாடு களும் நிகழக் காண்கின்றோம். ‘இல்லை’ என்பார், நூறாயிரவரில் ஒருவர் தானும் உளரோ? என்று ஐயுறும் நிலையில் கடவுள் நம்பிக்கையும், பத்திமையும் யாண்டும் காற்றுப் போல் நிறைந் திருத்தலை யாவரும் அறிவரே!

கடவுளைக் காணக் கூடவில்லையே! என்ற ஏக்கம் எல்லார்க்கும் உண்டு; பொருள் வேண்டும் என்னும் ஏக்கம் போல. அது முயற்சியினால் சிறிதே கிடைக்கும், முயற்சியும் அறிவுங் கூடினால் பின்னும் சிறிது கூடுதலாக வரும். இவற்றுடன் கல்வி, அறிவு, ஆற்றல் முதலியன மிக மிக அதற் கேற்பப் பொருளும், பதவியும் மிகுதியாகக் கிடைக்கும். ஆனால் இவற்றொடு அன்பு, அருள், இரக்கம், கொல்லாமை, புலாலுண்ணாமை, தன்னுயிர் போல் மண்ணுயிரைக் கருதித் தொண்டு நெறி நிற்பார்க்குக் கடவுள் அன்பு மேலும் மிகும். இவர்களிலும் இடையறாது இறை உணர்வும், பத்திமையும் மிக்கவர்க்குக் கடவுளார்வம் மேலும் மிகும். மற்றும் தானம், நோன்பு, வழிபாடு, யோகம் மிக்கார்க்கு இறைவன் அருள் கூடும்.

இவற்றொடு இறைப்பற்று ஒன்றிலேயே ஊன்றி நிற்கும் ஞானியர்க்கு புலனின்பங்கள், உலகப்பற்றுக்களை அறவே தாமாகவே நீங்கும். அந்நிலையில் இறைவன் மனித வடிவில் மறைந்து நின்று உதவுவான். இவ்வுயர் நிலையில் நின்றார், தம்மையும் அறவே மறந்து அவனைக் காணும் பித்தராகி அல்லும், பகலும் நீரில் ஒருவனால் அமிழ்த்தப் பட்டவன் அப்பிடியினின்றும் விடுபட்டு மூச்சுவிட வெளியே வரத் துடிப்பதுபோல ஈசனைக் காண ஒவ்வொரு நொடியும் அழுது புலம்பிக் கதறித் துடித்துக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அவன் திருநாமத்தை ஓதி, வேண்டுந்தனையும் வாய்விட்டு அலறி அழைப்பார்க்கே இறைவன் காட்சிப் படுவன்.

இவ்வுண்மை இக்காலத்துத் தொண்ணூற்றாறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த இராமகிருட்டிணப் பெருமான் வரலாற்றால் இனிது விளங்கும். இதேபோல், ஏன்? இதற்கு மேலாகவும் சிவபெருமானைக் காணப் பெரும் பாடுபட்ட பெருமானுக்குக் கடவுள் தன்னைக் காட்டினான் என்பதைப் பின் வரும் அவர்தம் வாக்குகளால் அறியலாம்.

'கண்ணால் யானும்
கண்டேன் காண்க!'

— திருவண்டப்பகுதி 58.

'கண்ணார் நுதலோய்!
கழல்இணைகள் கண்டேன்
கண்கள் களிகூர'

— குழைத்த பத்து 9.

(என்) கண்கள் களிகூரக் கண்டேன். களிகூர - மகிழ்ச்சி மிகுதியாகுமாறு (கண்டேன்).

'......... களித்தனன்
உன்னைக் கண்ணுறக்
கண்டுகொண் டின்றே'

— கோயில் திருப்பதிகம் 6.

இதன் பொருள்: 'இன்று நீ என் கண்களின் முன் தெளிவாகத் தோன்ற நான் உன்னைக் கண்டு களித்தேன்.'

'உண்டோர் ஒண்பொருள்
என்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண் அலி
யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள
வாவந்து தோன்றினாய்'

— திருச்சதகம் 42.

அறியொண்கிலை — அறியப்பட மாட்டாய்
உள்ளவாறு — உள்ளபடி (அம்மையப்பனாய்)

'திகழா நின்ற
திருமேனி காட்டி
என்னைப் பணிகொண்டாய்'

— குழைத்தபத்து 10.

என்னைப் பணி கொண்டாய் — என்னை உன் ஆளாக ஆக்கிக் கொண்டாய்.

'பருவரை மங்கைதன் பங்கரைப்
பாண்டியற்கு ஆரமுதாம்
ஒருவரை ஒன்றும் இலாத
வரைக்கழற் போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி
மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி உருவறி
யாதென் தன் உள்ளமதே.'

— திருப்பாண்டிப்பதிகம் 1.

பருவரை — பெரியமலை (இமயம்) யிற்றோன்றிய,
மங்கை — மங்கையாம் பார்வதியாரைத்தன்
பங்கர் — பாகமாகக் கொண்டவர்,
பாண்டியற்கு — பாண்டியனுக்கு,
தெரிவர — (யான்) காணுமாறு,
உருக்கி — (என் உள்ள மெல்லாம்) உருகச் செய்து.

இப்பாட்டில் இறைவன் குதிரைமேல் அமர்ந்து தமக்குக் காட்சி வழங்கியதைத் தெளிவு படக் கூறுகின்றார்.

இதுவரை கூறிய சிறு விளக்கத்தாலும், பெருமானுடைய வாய்மொழிகளாலும், எல்லாம் வல்ல மெய்ப் பொருளாம் கடவுளைத் தம் உள்ளம் நிறைவு பெற்று, பெருங்களிப்புக் கொள்ளப் பெருமான் தம் கண்களால் – உருவத் திருமேனி (மனித உருவில்) யாகக் கண்ணாரக் கண்டார். என்பது உறுதியாகின்றது. அப்படிக் காட்சி தந்த இறைவன், பெருமான் மனமும், கண்ணும் நிறைவு கொள்ளும் வரையில் அஃதாவது போதிய நேரம் அவர் முன் நின்றான், இதனைப் பெருமானே தெளிவு படக் 'கண்ணார வந்து நின்றான்' என்றார். முன்னும் இது காட்டப்பட்டது.

காட்சியின் விளக்கம்

அம்மையோடப்பனாய்க் காட்சி கண்டமை

இதுபற்றிப் பெருமான், எட்டு இடங்களில் கூறுகின்றார். அவற்றிலிரண்டு :

'கருவாய் உலகினுக்கு
அப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல்
மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில்
அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவர்க்கே
சென்றூதாய் கோத்தும்பீ.'

— **திருக்கோத்தும்பி 14.**

(உலகினுக்குக்) கருவாய் — முதற் பொருளாய்,
மாதினொடும் வந்தருளி — அம்மையுடன் வந்து காட்சி யளித்தான்.

'கனவேயும் தேவர்கள்
காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத்
தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட்
கொண்டவா .... ..'

— **திருத்தெள்ளேணம் 10.**

•

கனவேயும் — கனவில் கூட,
கனைகழலோன் — வீரக்கழலை அணிந்த (இறைவன்),
வளைத்தோளி — வளையலணிந்த தோளுடைய அம்மை,
நனவே — (நான்) விழித்திருக்கும் போதே.

இவற்றால், இறைவியோடு இறைவன் (அம்மையப்பனாய்) தம் கனவில் அல்ல, நனவே - (நான்) விழிப்பு நிலையில் உள்ள போதே காட்சி அளித்து என்னை ஆட்கொண்டான் என்று தெளிவு படக் கூறுகின்றார்.

அந்தணன் உருவில் வந்தாண்டான்

'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.'

— குறள்.

என்போரே ஆசிரியராதற்கு (குரு) உரியராதலின் இறைவன் தம்மை குரு வடிவில் வந்தாண்டான் என்பதனைத் தான் அந்தணனாய் வந்து ஆண்டான் என்கிறார். அவ்வாறு அந்தணக் கோலத்துடன் வந்து தம்மை ஆண்டமையை ஐந்திடங்களில் கூறுகின்றார். அவற்றிலிரண்டு :

'உருநாம் அறியவோர்
அந்தணனாய் ஆண்டுகொண்டான்'

— திருத்தெள்ளேணம் 1.

'அந்தணன் ஆகி
ஆண்டுகொண் டருளி'

— கீர்த்தித்திருவகவல் 42.

உரு (தன்) — வடிவை.

பேரொளியாய்க் காட்சி அளித்தான்

'மெய்ஞ்ஞான மாகி
மிளிர்கின்ற மெய்ச்சுடரே'

— சிவபுராணம் 38.

'சோதியாய்த் தோன்றும் உருவமே'

— கோயில் திருப்பதிகம் 9.

'அந்தமில் பெருமை
அழலுருக் கரந்து
சுந்தர வேடத்து
ஒருமுதல் உருவுகொண்டு'

— கீர்த்தித் திருவகவல் 92, 93.

அழல் உருவே இறைவன் வடிவாகும். அதனை மறைத்துக் கொண்டு சுந்தர வேடம் - தலையில் உருத்திராக்க வடம், காதில் குண்டலங்கள், உடலெல்லாம் வெண்ணீறு, மார்பிலும், கைகளிலும் உருத்திராக்க வடங்கள், இவையே சுந்தர வேடமாகும். குருவடிவில் வந்த சிவ பெருமான் இக்கோலத்துடன் எழுந்தருளியே பெருமானை ஆண்டான் என்பது இவ்வரிகளால் விளங்கக் காணலாம். அந்தணக் கோலமும் இதுவே; பார்ப்பான் வடிவில் வந்தாண்டான் என அடிகள் கூறுவதும் இஃதே.

'பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்து
பார்ப் பான்என'

— சென்னிப்பத்து 4.

அடியார் சூழக் குருவாய் வீற்றிருந்தான்

மேற்காணுமாறு திருப்பெருந்துறையில், கோயிலுக்குள் வடக்குத் திருச்சுற்றில் 'ஆராலுங் காண்டற்குரியனா'கிய ஈசன் அடிகளை ஆட்கொள்ளக் குருந்த மரத்தடியில் அடிகளை எதிர்பார்த்து மெய்யடியார்கள் புடை சூழ வீற்றிருந்தான் என்ற உண்மையை மேலே அடிகளின்

திருவாக்குகளால் அறிந்தோம். அங்ஙனம் வந்து வீற்றிருந்த சிவபிரான் தனியாக இருக்கவில்லை. மெய்யடியார் புடை சூழ இருந்தான் என்பதைப் பெருமானே,

'பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்து' என்றும்,

'....மெய்ம் முழுதுங்கம்பித்து
அழுமடி யாரிடை ஆர்த்துவைத்
தாட்கொண் டருளிஎன்னை'

— நீத்தல் விண்ணப்பம்.

என்றும், தாமே அருளியுள்ளமையா லறியலாம்.

காட்சியின் மற்றும் பல செய்திகள்

மேற்காட்டிய பல பாடல்களில் கூறியவை தவிர மேலும் தாம் கண்ட காட்சியைப் பெருமான் பின் வருமாறு விளக்கி யருள்கிறார்.

'மெய்யேஉன் பொன்னடிகள்
கண்டின்று வீடுற்றேன்'

— சிவபுராணம் 32.

'நிலந்தன்மேல் வந்தருளி
நீள்கழல்கள் காஅட்டி'

— சிவபுராணம் 59.

'ஆற்ற லதுவுடை
அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி
நிமிர்ந்து காட்டியும்'

— கீர்த்தித் திருவகவல் 103, 104.

'நாதப் பெரும்பறை
நவின்று கறங்கவும்'

— கீர்த்தித் திருவகவல் 108.

' ....
கழுநீர் மாலை
ஏலுடைத் தாக
எழில்பெற அணிந்தும்'

— கீர்த்தித் திருவகவல் 113, 114.

வீடுற்றேன் — வீடுபேறு பெற்றேன். வீடு — விடுதலை: மோட்சம் — பேரின்பம்; நீற்றுக் கோடி — திருநீறு அணிந்து நிமிர்ந்து அமர்ந்து (தன்னைக் காட்டினார் என்பதாம்.)

நாதப் பெரும்பறை அப்போது ஒலித்தது. பெருமான் செங்கழு நீர்ப் பூமாலையை அழகு பெற அணிந்திருந்தான்.

மேற் கண்டவாறு, பெருமான் தாம் கண்ட கடவுட் காட்சியையும், பெற்ற மூவகை தீட்சைகளையும் தம் வாக்காலறிவித்துள்ளார். இஃதவர் தன் வரலாறாக, உண்மைச் செய்திகளாக உள்ளமை உலகச் சான்றோர்கள் யாவராலும் வியந்து மகிழ்ந்து போற்றற்குரியன வாகும்.

இறைவன் இருப்பிற்கும், அவன் தக்க சீர் அடியார்க்குக் காட்சிப்பட்டு அருள் செய்வன் என்ற உண்மைக்கும் நம் மணிவாசகப் பெருந்தகையாரின் வரலாறு வான் ஞாயிறாய் மாந்தரை உய்விக்கும் என்பது உறுதியாம். வாழ்க! வாதவூர் அடிகள் சேவடிகள்.

பெருமான் பெற்ற பேரின்ப நிலை விளக்கம்

இவ்வாறு இறைவன் தோன்றி அருள் செய்தமையால் தாம் பெற்ற பேரின்பத்தினைப் பெருமான் தம் பாடல்களில் விளக்கியருள்கின்றார். அவற்றைக் காண்போம்.

'பொய்யா யினஎல்லாம்
போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி
மிளிர்கின்ற மெய்ச்சுடரே'

— சிவபுராணம் 37, 38.

'மறையோர் கோலம்
காட்டி அருளலும்
உலையா அன்பென்பு
உருக ஓலமிட்டு
அலைகடல் திரையின்
ஆர்த்தார்த்து ஓங்கித்
தலைதடு மாறா
வீழ்ந்துபுரண்டு அலறிப்
பித்தரின் மயங்கி
மத்தரின் மதித்து
... ...
ஆற்றேன் ஆக
அவயவம் சுவைதரு
கோற்றேன் கொண்டு
செய்தனன்
... ...
சொல்லுவ தறியேன்
வாழி முறையோ
தரியேன் நாயேன்
தானெனைச் செய்தது
தெரியேன் ஆஆ
செத்தேன் அடியேற்கு

அருளிய தறியேன்
    பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல
    கில்லேன்
... ...
    உள்ளகம் ததும்ப
... ... அமுதம்
    மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்
    கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும்
    நாயுடல் அகத்தே
... ... இன்தேன்
    பாய்த்து நிரம்பிய
அற்புத மான
    அமுத தாரைகள்
ஏற்புத் துளைதொறும்
    ஏற்றினன் உருகுவது
    ... ...
அள்ளூறு ஆக்கை
    அமைத்தனன், ...
    ... .. என்னிற்
கருணை வான்தேன்
    கலக்க
        பரா அமுது
    ஆக்கினன்.''

— திருவண்டப்பகுதி 149 முதல் 181 வரை.

'நவமாய செஞ்சுடர்
    நல்குதலும் நாமொழிந்து
சிவமான வாபாடித்
    தெள்ளேணம் கொட்டாமோ'

— திருத்தெள்ளேணம் 4.

'முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே.'

— அச்சோப்பதிகம் 1.

'புன்புலால் யாக்கை புரைபுரை
கனியப் பொன்னெடுங்
கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியைஆய்
ஆண்ட ஈசனே...'

— பிடித்தபத்து 10.

'அரைசனே அன்பர்க் கடியனேன்
உடைய அப்பனே
ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின்
றுருக்கிப் பொய்யிருள்
கடிந்தமெய்ச் சுடரே.'

— கோயில் திருப்பதிகம் 3.

'மண்ணதனிற் பிறந்தெய்த்து
மாண்டுவிழக் கடவேனை
எண்ணம்இலா அன்பருளி
எனைஆண்டிட் டென்னையும்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத்
தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே.'

— அச்சோப்பதிகம் 4.

'உய்யும்நெறி காட்டுவித்திட்
டோங்காரத் துட்பொருளை
ஐயன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே.'

— அச்சோப்பதிகம் 7.

'மாறிநின் றென்னை மயக்கிடும்
வஞ்சப் புலனைந்தின்
வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்
சோதி . '

— கோயில் திருப்பதிகம் 1.

'அன்பினால் அடியேன் ஆவியோ
டாக்கை ஆனந்த
மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள்
தந்தாய் ..'

— கோயில் திருப்பதிகம் 2.

'தந்ததுன் தன்னைக் கொண்டதென்
தன்னைச் சங்கரா
ஆர்கொலோ சதுரர்
அந்தம்ஒன் றில்லா ஆனந்தம்
பெற்றேன் யாதுநீ
பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம்
பெருமான் திருப்பெருந்
துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம்
கொண்டாய் யான்இதற்
கிலனொர்கைம் மாறே.'

— கோயில் திருப்பதிகம் 10.

மத்தர் - களியாட்டம் ஆடுபவர்
தலைதடுமாறா - தலைகீழாக
ஆற்றேன் - பொறுக்க மாட்டேன்
தரியேன் - தாங்க மாட்டேன்
ஆரேன் - நிறைவடையேன்
ஒல்லகில்லேன் - தாங்க மாட்டேன்
உள்ளகம் - மனம்
ததும்ப - நிறைந்து வழிய
ஊன் தழை - ஊனின் தசைகள்
குரம்பை - உடல்
அள்ளூறு - இனிமை ஊறும்
ஆக்கை – உடல்
பரா அமுது - மேலான அமிர்தம்
நவமாய - புதுமையான
செஞ்சுடர் - கடவுள்
நல்குதலும் - தந்த உடன்
நாம் ஒழிந்து - நான் என்ற உணர்ச்சி நீங்கி
தெள்ளேணம் - தோள்களை அசைத்தாடும் ஆட்டம்
முயல்வேன் - சேர்வேன்
பாறும் வண்ணம் - நீங்கு (மாறு)
அச்சோவே - வியப்பை உணர்த்துஞ் சொல்
புன் - இழிவு
பொன் நெடுங்கோயிலா - பொன் ஒளி மிகுந்த (என்)
மனத்தையே கோயிலாக
எளியையாய் – (நீ) எளியவனாக வந்து
புரை புரை - துளைகளில் தோறும்
எய்த்து - தளர்ந்து
எண்ணமிலா - எண்ணி முடியா
ஆண்டிட்டு - ஆண்டு
சுண்ணம் - பொடி
தூய் - தூய்மையான
மாறி நின்று - மாறாக நின்று
(நன்னெறிக்கு மாறாக இருந்து)
என்பரமல்லா - எனக்குத் தகுதியில்லாத
ஆர் கொலோ - யார்?
சதுரர் - திறமையானவர்
இலன் - இல்லேன்.

மற்றும்,

'மண்ணதனிற் பிறந்தெய்த்து
மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி
எனைஆண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத்
தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே'

— அச்சோப்பதிகம் 4.

'செம்மைநலம் அறியாத
சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து
முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி
நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே'

— அச்சோப்பதிகம் 9.

செம்மை நலம் அறியாத சிதடர் :
(மக்களினம் நல்வாழ்வு வாழ நன்மைகள் செய்யாது தன்னலமே பேணும்) கயவர்.

அச்சோப்பதிகத்தின் இவ்வரும் பாடல்களில் விளக்கி அருள்கின்றார்.

சிதடர் - கீழ் மக்கள் : கயவர்.

ஆண்டிட்டு - ஆண்டு

சிவிகை - பல்லக்கு

•

என்று சிவபெருமான் தமக்கு அருளிய அருளிப்பாடுகளை வியந்து வியந்து ஆனந்தக் களிப்பில் ஆழ்ந்து ஆரவாரஞ் செய்கின்றார். என்னைப்போல இவ்வொப்பில்லாப் பெரும் பேற்றைப் பெற்றவர் ஆர் (ஒருவரும் இலர்) என்று ஆரவாரிக்கின்றார். அறை கூவுகின்றார். ஆணவத்தால் அன்று.

அவர்தாம், தம்மை 'நாயிற்கடையாம் நாய்' என்றவர் ஆயிற்றே! அப்படியானால் இப்படி ஆர் பெறுவார்? என்று அறை கூவல் விடலாமா? என்னில் 'சிவபிரான் தமக்களித்த பேர் அருளைப் பாராட்டிப் போற்றிப் புகழவேயாம்' என்க.

உலக இன்பங்களும் அவற்றைப் பெறப்படும் துன்பங்களும்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் வாயிலாக மக்கள் பொருட்களை நுகர்ந்து இன்பம் பெறுகின்றனர். தம் வாழ்நாள் முழுவதும் மெய்(உடம்பின்)யினால் உடலுறவினால் வரும் ஊற்றின்பத்தையே (பரிச உணர்ச்சி) பெரிதென எண்ணி அதனை அடைதற்காகக் கல்வி கற்றும், தொழில்கள் பல செய்தும் படும் பாட்டை யாவரும் அறிவர். இதனைக் காதல் என்றும் கூறுவர்.

அவர் காமத்தினால்,உடலின்பத்திற்கான உணர்ச்சியின் மிகுதியால் படுந்துன்பங்கள் எத்தனை?எத்தனை? அவற்றிற்காகப் பொன், பொருளையும் உயிரையும் இழக்க முன்னிற்கின்றனர். கொலை முதலாம் கொடுந்தொழிலுஞ் செய்கின்றனர். தூக்கில் தொங்குவதையும் அவர்கள் ஏற்கின்றனர். களவு, கள், பொய் முதலிய தீச் செயல்களையும் துணிந்து செய்கின்றனர். கையூட்டும் (லஞ்சம்) வாங்குகின்றனர். பேராசை, ஊழல் வணிகம், அரசதிகாரம், பட்டம், பதவிகள் யாவற்றிலும் ஈடுபடுகின்றனர். இவ்வுடலின்பத்திற்காக இழிந்தோரும், உயர்ந்தோரும் செய்த கொடுமைகளைத் தான், சிலப்பதிகாரம், இராமாயணம் முதலாய காப்பியங்களும் விரித்துரைக்கின்றன அல்லவோ?

மாந்தர், இவ்வளவு அல்லல்களையும் பொருட்படுத்தாது பெருமளவுக்குக் காம உணர்ச்சியால் ஐம்பொறிகளில் வரும் ஐம்புல இன்பங்களை அடையப்படும் பாட்டினை எடுத்துச் சொல்லச் சொற்களில்லை. உணர்வினால் மட்டுமே அவற்றை உணரக் கூடும். அவ்வின்பத்தைப் பெற மாந்த உயிர் மட்டுமன்று.எல்லா உயிர்களும் படும் வேதனைகளுக்கு எல்லையுண்டோ?

அவ்வின்பத்தையடையக் கருவியாக உள்ள ஆணின்மீது பெண்ணும், பெண்ணின் மீது ஆணுங் கொள்ளும் ஆசைக் கடலுக்குக் கரையேது? அதையடைய உறக்கமில்லாது தவிக்கின்றன. அப்போது ஒரு நொடி நேரம் ஓர் ஊழி (யுகம்) ஆகின்றது. துன்பத்தால் துடிக்கின்றன. இமைப் பொழுதும் அந்நினைவன்றி வேறு நினைவு அவைகட்கிரா. இராப் பகலாக அதைப் பெறத் துடிக்கும், பதறும், அழும், ஏங்கும், தவிக்கும் பித்துப் பிடித்தவை போல் தம்மை மறந்து செயற்படும்.

பெற்ற இன்பத்தால் பெறும் நலங்களும்

அதைப் பெற்று விட்டாலோ, உடலில் உள்ள பொறிகள் முழுவதும் இன்ப நிறைவாகும். உயிரும் இன்ப நிறைவாகும். ஆடும், பாடும், உருளும், புரளும், எக்களிப்புக் கொள்ளும், அமைதிப் பேரின்பத்தில் ஆழ்ந்து இன்புற்றிருக்கும், தம்மை மறக்கும்.

இறைவனைப் பெறப் பெருமான் பட்டபெருந் துன்பங்களும் பெற்ற பேரின்பங்களும்

இவற்றைப் போலவே, இறைவன்பாற் பெருங் காதல் (பேரன்பு) கொண்டு அவனைக் காண – அவனையடைய அவன்தரும் பேரின்பத்தைப் பெற மெய்யுணர்ந்த மேலோர் - சான்றோர், அடியார் படுந்துன்பங்கள் எத்துணை! எத்துணை! அவனையடையப் புலனடக்கம், தியானம், நோன்பு, பூசை முதலிய முயற்சிகளையும், இடைவிடாத பத்திமையையும், அவற்றால் தாம் பெற்ற கடவுட் காட்சியையும் பேரின்பத்தினையும் தெய்வம் நிகழ் மணிவாசகப் பெருமான் போன்றோர் தாம் உணர்வர்; உணர்ந்து கூறுவர்.

பெருமான் பெருமை

அவர்களிலும் உயர்ந்த கலைப்புலமையும் உயர் பதவியும் கொண்டோர் ஒரு சிலரே. அவர்களிலும் ஒப்பற்ற கவிஞராயும் விளங்கியவர் உலகில் மணிவாசகப் பெருந்தகையார் ஒருவரே யாவர். தம் பத்திமைச் செயல்களையும், பெருங் கடவுட் காதலையும் கடவுட் காட்சியையும் பெற்ற பேரின் பத்தையும் தம் நுகர்வுகளையும் தேனினும் இனிய உணர்ச்சி மிக்க பாடல்களாகத் தந்தாரில் அவரை யொப்பார் உலகில் எவருமிலர். அப்பெருமானளித்தத் திருவாசகம், திருக் கோவையார் என்னும் கவின்மிகும் கற்பார் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளும், உருக்கும், இறைவன் சேவடியில் அன்பை ஊட்டும் மெய்ப் பொருளை அடையும் வேட்கையை ஊட்டும் வேறு மறைகள் (வேதங்கள்) உலகில் உண்டோ? அவரைப் போல் தாம் கண்ட கடவுட் காட்சியைத் தெளிவு படத் தம் வாக்கால் தந்தவர் தாம் உளரோ? உளரோ? ஆதலினாற்றான், பெருமானின் மெய் வரலாறாக, தன் வரலாறாக அன்றோ? அவர்தம் பாடல்கள் விளங்குகின்றன!

உலகந் தோன்றிய காலந் தொட்டு இன்றளவும் மனிதன் பெற்ற மெய்யுணர்வுக் காட்சி நுகர்ச்சிகட்கு நம் பெருமானே எடுத்துக் காட்டாவர்; முதன்மைத் தலைவராவர். இவை யாவற்றையும் விளக்குவனவே மேலே பல தலைப்புக்களில் காட்டியுள்ள பெருமானின் பத்திமை முயற்சிகளும், அருளிய பாடல் வரிகளும், பாடல்களுமாம்.

மற்றுமோர் சிறப்பும் பெருமான்பாடல்களில் காட்சிதரும். அவை:‘‘ஏனைய ஆன்றோர்கள் பெரும்பாலும் இறைவனைப் படர்க்கையிலேயே பாடுவர். நம் பெருமானோ இறைவனை முன்னிலைப் படுத்தியே 90% விழுக்காடு பாடுவர். அவனிடம் பேசுவர். தம் குறைகளைக் கூறுவர். அவனை வேண்டுவர், புகழ்வர், போற்றுவர், அழுவர், கெஞ்சுவர், மிஞ்சுவர், ஊடுவர், கூடுவர், ஏசவுஞ் செய்வர். அவன் தமக்குத் தந்த தொல்லைகளையும், கொடுமைகளையும், தமக்குத் தந்த ஒப்பில்லாப் பேரின்பங்களையும், பதவிகளையும் கூறுவர்.

கூறிப் பெரு மகிழ்வு கொள்வர். களி கூர்வர், ஆடுவர், பாடுவர், ஆனந்த நிலை எய்துவர், தம்மை முற்றிலும் மறந்து பேரின்ப நிலையில் (சமாதி) மூழ்கியிருப்பர். பின்பு, அவனருளைப் பெறத் துடிப்பர், புரண்டு அழுவர், வேண்டுவர், அவனோடு கூடுவர், இரண்டறக் கலந்து சிவமாவர்; சிவநிலையில் நிற்பர்'' என்பனவாம்.

பெருமானின் இச்சிறப்பியல்களெல்லாம் அவர்தம் பாடல்கள் நன்கு தெளிவுபட விளக்குவனவாம். ஆனால், அவர் தம் உணர்ச்சிகளை எல்லாம் காட்ட எளியேனுக்கோ, பிற புலவர்க்கோ இயலாது; இயலாது. படிப்போர் பேர் அறிவிற்கும், நுகர்வுக்கும், பெரும் பத்திமைக்கும், உணர்வுக்குமே அவை புலனாம்.

இறைவன் அளித்த இன்பம்

இதுபற்றிப் பெருமான் பெற்ற பேரின்பத்தினை அவர் தம், முற்காட்டப் பெற்ற-பிற்காட்டப் பெறும் பாடல் வரிகள், பாட்டுக்களின் கருத்துக்கள் செய்திகளை மட்டும் சுருக்கமாக ஈண்டுக் காண்போம்.

''சிவபெருமானே! காலத்தில் அழியக்கூடிய பொய்யான உலகப் பொருட்களை எல்லாம் யான் உணராவாறு - பற்றாதவாறு செய்து விட்டாய். உன் திருவுருவைக் காட்டினாய். அதனால் அன்பினால் எனது தசைகள் மட்டு மல்ல என் எலும்புகளும் உருகி விட்டன. கடலின் அலைகள் மேலுங் கீழுமாக வீழ்ந்து புரள்வதுபோல நான் நீ தந்த பேரின்பத் தேனால் கள்ளுண்டவன் போலக் களிப்புக் கடலில் தலை கீழாக வீழ்ந்து புரண்டு சிவனே! சிவனே! என்று ஓலமிடுகின்றேன்! பித்துப் பிடித்தவன்போல் செய்வ தறியாது செயற்படுகின்றேன். என் உடம்பை - உயிரைத் தேன்கூடு ஆக்கி விட்டாய்; இவ்வின்பத்தினைச் சொல்லுந் திறமை இல்லேன்; இவ்வின்பத்தைத் தாங்கிக் கொள்ள என்னாலியலாது; செத்தே போனேன். அதனை உண்டும்

நான் அமைதி - நிறைவு கொள்ள முடியவில்லை! கள்ளுண்டவன் போல அதனை மேன்மேலுண்டு இன்புறவே விரும்புகின்றேன். ஆ! மெய்யடியார்களே! அவன் எனக்குத் தந்த பேரின்பத்தின் பெருமையைக் கேளுங்கள். என் உடம்பிலுள்ள மயிர்க்கால்கள், நரம்புகள், எலும்புத் துளைகள், தசை நார்களில் எல்லாம் இன்பத்தை நிறைத்து விட்டான் என் உடம்பையே இன்பஞ் சுரக்கும் பொருளாக்கி விட்டான்; என் உயிரிலும் தன் அருளாம் தேனை நிறைத்து விட்டான்; என்னை அமிர்தமாக்கி விட்டான்; என்னைச் சிவமாக்கி விட்டான்.''

கடவுட் காட்சி வேண்டுவோர் இயல்பு

மாந்தர் தாம், வாழ்வதற்கு வேண்டிய ஒரு சிறு பொருளைப் பெறுதற்காக நாளெல்லாம் விறகு வெட்டியும், சுமை சுமந்தும், கடும் வெய்யில், மழையில் உழுதும், கல் உடைத்தும் படுந் துன்பங்கள் எவ்வளவு? அதற்கு மேலும் பொருள் பெற வண்டிகள் ஓட்டியும், தெருத் தெருவாகப் பல மணி நேரம் நடந்தும், பல கற்கள், பண்டங்களைக் கூவி விற்றும், தொழிற்சாலைகளில் உழைத்தும் படுந் தொல்லைகள், துன்பங்கள் எவ்வளவு? மேலும் பொருள் பெற எழுத்தர், ஆசிரியர், பேராசிரியர், வழக்கறிஞர், பொறியாளர் ஆதற்கு ஆண்டுக் கணக்கில் மிகு பொருள் செலவிட்டு இரவு பகலாய்ப் படித்துழன்றும், பல்வகைப் பணிகளாற்றியும் படும் வேதனைகள் தாம் எத்தனை? எத்தனை? படையில் பணிபுரிவதும், உயிர்விடுவதும் பொருளுக்காக அன்றோ?

இவ்வளவு பெற்றாலும் வாழ்வில்படும், அல்லல்களுக்கு அளவுண்டோ? உண்டோ? புலன் இன்பங்கட்காக உயிர் விடத் துணிந்து செயற்படுவோரு முண்டே! வாழ்வே போராட்டம். உயிரைப் பணயம் வைத்தன்றோ அருஞ் செயல்கள் முடிக்கப்படுகின்றன. இமய உச்சியை எட்டவும், வானில் பறப்பதும், போர்க்களத்தில், நிற்பதும், இதற்குச் சான்றாகும் அன்றோ? இவ்வளவு முயற்சிகளுக்கிடையே அன்பு, இரக்கம், அருள், மெய்யறிவு, மெய்யுணர்வு, இறையன்பு, உயிர்களிடத்தன்பு முதலிய உயர் பண்புகளைப்

பெறுதல் மாந்தரிடத்தில் மிக மிகக் குறைவே அன்றோ? இவற்றிற்கு மாறாக, உலகெங்கும் பகைமை, பேராசை, பொறாமை, கொலை, களவு, கள், காமவெறியாற் செய்யுங் கொடுமைகள், பொய், கையூட்டு (லஞ்சம்) முதலாம் தீமைகளை அன்றோ காண்கின்றோம்.

மிகப்பெரும்பாலும் மனிதகுலம் பெறுஞ்சிறு பொருளுக்கே பதவிக்கே இவ்வளவு பெரும் பாடுபட வேண்டியுள்ளதே! இவற்றால் பெறும் நற்பயன்கள் சிலவே! பாவங்களோ பலப்பல என்றால், எல்லாம் வல்ல மெய்ப்பொருளாம் காண்டற்கரிய கடவுளைக் காண்டல் என்னும் பெரும் பொருளை அடைய வேண்டுவோர், அதற்குப் படிகளாக உள்ள இறையன்பு, உயிர்களிடத்தன்பு, கொல்லாமை, புலாலுண்ணாமை, உண்மை, கொடை, நோன்பு அவா இல்லாமை, சமநோக்கு முதலாம் உயர் பண்புகள் யாவும் நிறைந்தாராய் இருத்தல் வேண்டுமே! அவர்கட்கே தவம் கை கூடும். அத்தவத்தால் இறைவனைத் தவிர வேறு பொன், பொருள், புகழ், புலன் இன்பங்கள் எவற்றையும் அவர் கனவிலும் நினையார். உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவனுக்கே தந்து துன்பங்கள் தாக்கினும் வருந்தார். அவையும் 'சிவன் அருளே' எனக் காண்பர்; மகிழ்வர். அவன் சேவடிகளிலேயே ஈடுபட்டு அவனை வழிபடுவர்; அல்லும், பகலும் ஒவ்வொரு நொடியும் பத்திமையால் உருகி நிற்பர்; அவனைக் காண்பதற்குக் கன்றைப் பிரிந்த ஆவைப் போலக் கதறுவர்; துடிப்பர்; அழுவார் இத்தகையார்க்கே கடவுட் காட்சி கிடைக்கும்.

இராமகிருட்டிணபரம அம்சர்

இவ்வாறு தம்மை மறந்து பத்தி செய்து, 'இறைவியின் காட்சியில்லாமல் வாழின் உயிரைப் போக்கிக் கொள்வேன்' என்று ஆவேசங் கொண்டு ஓடி வாளை எடுத்துத் தம்மைக் கொன்று • கொள்ள முற்பட்டபோது தானே அவருக்குக் காளியம்மையின் காட்சி கிடைத்தது! என்பதை உலகம் அறியுமே! இக்காட்சியினைத் தம் மாணவர் வீவேகானந்தருக்கு அப்பெருமான் அறிவித்ததும் உலகம் அறியுமே! அது போல் அல்லாமல் நம் பெருமானோ, இறைவனைக்

காண்பதற்குத் தாம் கொண்ட பேராார்வத்தையும், பெரும் முயற்சிகளையும், துன்பங்களையும் தாமே தம் பாடல்களில் அகச்சான்று விளங்க அருளியுள்ளார். அவற்றிற் சிலவற்றை இங்குக் காண்போம்; கடவுட் காட்சியைப் பின்னர்க் காண்போம்; கடவுட் காட்சிக்கு முன்னதே காரணமாதலின்.

பெருமானின் பத்திமைப் பித்தம்

'உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.'

— திருப்புலம்பல் 3.

அமையும் - போதும்
கன்று + ஆ = கற்றா (கன்றைப் பிரிந்த)
ஆ - பசு

'அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே ஏசற்றேன்'

— கோயில் மூத்ததிருப்பதிகம் 5.

இரைதேர் - இரையை நோக்கியபடி
ஏசு அற்றிருந்தே - கவலை கொண்டு
ஏசற்றேன் - வாடினேன்.

'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துஉன்னைப் போற்றி
சயசயபோற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே.'

— திருச்சதகம் 1.

மெய் - உடலி(ல்)
அரும்பி - (மெய்) சிலிர்த்து
கழற்கு - (உன்) திருவடிகட்கு (உன்னிடம்)

'ஆடு கின்றிலை கூத்துடை
யான்கழற்கு அன்பிலை
என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும்
செய்கிலை பணிகிலை
பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின்
றதுமிலை துணையிலி
பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ
றலறிலை செய்வதொன்று
அறியேனே.'

— திருச்சதகம் 31.

(ஏ மனமே! சிவபெருமானை நினைத்து)
ஆடுகின்றிலை - ஆடாமலிருக்கின்றாய்
அன்பிலை - அன்பு - செய்யாமலிருக்கின்றாய்
தேடுகின்றிலை - அவனைத் தேடவில்லை
அலறு இலை - (சிவனே! சிவனே!) என்று அலறாமலிருக்கின்றாய்!

'சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள்
என்றென்றே வருந்துவனே.'

— திருச்சதகம் 12.

வருந்துவனே - வருந்துகின்றேனே!

'பாடிற்றி லேன்பணி யேன்மணி
நீயொளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்
டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவன் எவ்விடத்
தான்எவர் கண்டனரென்று
ஓடிற்றி லேன்கிடந் துள்ளுரு
கேன் '

— நீத்தல் விண்ணப்பம் 45.

(உன்னை) பாடிற்றிலேன் - பாடவில்லை
நீ ஒளித்தாய்க்கு - (சிவனே) நீ மறைந்துள்ளாய்,
அது தாளாமல் என்
பச்சூன் - பச்சை (ஊனை இவ்வுடலை)
வீடிற்றிலேன் - அழிக்காமலிருக்கின்றேன்.

'ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில்
தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
... ...'

— திருச்சதகம் 14.

புத்தேளிர் - தேவர்
கோமான் - அரசனே
சாமாறே - சாவதற்கே.

'மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றிங்
கெனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
உடையாய் பெறநான்
வேண்டுமே'

— பிரார்த்தனைப் பத்து 3.

மருளார் மனத்தோர் - அறியாமை உடையோர் (பொதுமக்கள்)
உன் மத்தன் - பித்தன்
வருமால் - வருகின்றான்
வெருளா வண்ணம் — அஞ்சாதபடி.

இப்படி இரவு பகலாக இறைவனைக் காண அழுதும், தொழுதும் சிவனே! சிவனே என்று அலறியும், பாடியும், பரவியும் தெருத் தெருவாக அலைந்தும், தேடியும், ஓடியும், தரையில் வீழ்ந்து புரண்டும், வருந்தியும் ஏங்கியும் பித்தனைப் போல் வாடியும், வருந்தியும் கதறியும் பெருமான் ஏக்கற்றிருந்த நிலையில்தான், இறைவன் அவர்க்குத் தன் திருவுருவைக் காட்டினான். அவரை ஆட்கொண்டான், அவர்க்குப் பேரின்பந் தந்தான்

பெருமான் தாம் பெற்ற பேரின்ப நிலை கூறல்

'பொய்யாய செல்வத்தே
புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக்
கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாஎன் ஆருயிரே'

— திருக்கோத்தும்பி 17.

‘மறையோர் கோலம்
  காட்டி அருளலும்
உளையா அன்பென்பு
  உருக ஓலமிட்டு
அலைகடல் திரையின்
  ஆர்த்தார்த்து ஓங்கித்
தலைதடு மாறா
  வீழ்ந்துபுரண்டு அலறிப்
பித்தரின் மயங்கி
  மத்தரின் மதித்து
... ...
ஆற்றேன் ஆக
  அவயவம் சுவைதரு
கோற்றேன் கொண்டு
  செய்தனன்
... ...
சொல்லுவ தறியேன்
  வாழி முறையோ
தரியேன் நாயேன்
  தானெனைச் செய்தது
தெரியேன் ஆஆ
  செத்தேன் அடியேற்கு
அருளிய தறியேன்
  பருகியும் ஆரேன்
... ...
அற்புத மான
  அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும்
  ஏற்றினன் ......’

— திருவண்டப்பகுதி.

மத்தர் - கள்ளுண்டு களிப்போர் (போல்)
ஆற்றேன் – பொறுக்க முடியவில்லையே!
கோற்றேன் - கொம்புத்தேன்
தரியேன் - பொறுத்துக் கொண்டிருக்க மாட்டேன்
பருகியும் - அருந்தியும் (குடித்தும்)
ஏற்பு - எலும்பு.

'சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே.'

— அச்சோப்பதிகம் 1.

'புன்புலால் யாக்கை புரைபுரை
கனியப் பொன்னெடுங்
கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியைஆய்
ஆண்ட ஈசனே
... ...'

— பிடித்தபத்து 10.

'... ... ...
எனைஆண்டிட் டென்னையும்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத்
தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே.'

— அச்சோப்பதிகம் 4.

ஆண்டிட்டு - ஆண்டு.

'உய்யும்நெறி காட்டுவித்திட்
டோங்காரத் துட்பொருளை
ஐயன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே.'

— அச்சோப்பதிகம் 7.

'மாறிநின் றென்னை மயக்கிடும்
வஞ்சப் புலனைந்தின்
வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்
சோதி ... .'

— கோயில் திருப்பதிகம் 1.

'தந்ததுன் தன்னைக் கொண்டதென்
தன்னைச் சங்கரா
ஆர்கொலோ சதுரர்
அந்தம்ஒன் றில்லா ஆனந்தம்
பெற்றேன் யாதுநீ
பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம்
பெருமான் திருப்பெருந்
துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம்
கொண்டாய் யான்இதற்
கிலனொர்கைம் மாறே.'

— கோயில் திருப்பதிகம் 10.

ஆர்கொலோ - யார்
சதுரர் - கெட்டிக்காரர்
இலன் - இல்லாதவன்.

முன்னும், இங்கும் காட்டிய பாடல்களின், சுருங்கிய உரை நடையாவது :— என் தீவினைகளைக் களைந்து, என் உயிரின் அழுக்குகளை (ஆணவம்,கன்மம், மாயை) எல்லாம் நீக்கினான்; நான் சிவமாகி விட்டேன். நான் பெற்ற பெரும் பேற்றைப் பெற்றார். யார்? என்னை அவன் சிவமாக்கிய பின்பே ஆண்டு கொண்டான்.என் இழிவான உள்ளத்தையே தன் ஒளி மிகுந்த பொற் கோயிலாகக் கொண்டான். என் உள்ளத்திலிருந்த பொய் இருளை(அறியாமை)யை நீக்கி விட்டாய்! அரசனே! என் அப்பனே! யாராலும் எண்ணி முடியாதவாறு அன்பை எனக்கருளினாய்!என்னை உன்னடி யானாக்கிக் கொண்டாய்! பிறவா நெறி அருளினாய் உன் திருநீற்றை எனக் களித்தாய்! உன் தூய சிவநெறியையே யானடையுமாறு செய்தாய்! இப்பேற்றை ஆர் பெறுவார்?

•

ஐயன், எனக்கு ஓங்காரத்தின் உட்பொருளைத் தெரிவித்தான். அந்தோ இதனை ஆர் பெறுவார்? என்னை மயக்கும் வஞ்சகமான புலன்களில் எல்லாம் என் அவா செல்லாதபடி அடைத்து விட்டாய். அவற்றில் எல்லாம்

அமிர்தமே (பேரின்பமே) நிறைத்து விட்டாய் என் உள்ளத்துள்ளே எழுகின்ற சோதியாயுள்ளாய்! எனக்குத் தகுதியில்லாப் பேரருளைத் தந்து விட்டாய்! உன்னையே எனக்குத் தந்தாய்! (நீயோ பெரியோன்) சிறியனாம் என்னை, வாங்கிக் கொண்டாய்! சங்கரா! இதனால் நான் பேரின்பத்தைப் பெற்றேன். ஆனால் நீ என்னிடம் பெற்ற பொருள் ஒன்றுமில்லையே! ஆதலின், நமக்குள் நடந்த இவ்வாணிகத்தில் திறமையானவர் யார்? (நான்தான், நீ அல்லன்) திருப்பெருந்துறையில் வாழும் சிவனே! ஈசனே! நீ என் உடலையே இருப்பிடமாகக் கொண்டாய். இப் பேருதவிக்கு யான் செய்யக் கூடிய கைம்மாறு ஏது? என்பதாம்.

பெருமானின் மேற்காட்டிய பாடல்களே இறைவனளித்த இவ்வகையான இன்பங்களை எல்லாம் அவர் நுகர்ந்தவர் என்பதற்குப் போதிய சான்றாம். இவ்வாறு பெருமானின் மேற்காணும் பேரின்ப நுகர்வுச் செய்திகள் அவர் வரலாற்றில் இல்லாவிடின் இறைவன் அளிக்கும் பேரின்பத்தின் அருமைகள் உலகவரால் உணரப்படாவன்றோ?

பெருமான் பெற்ற பேறுகளையும், பேரின்பங்களையும் விளக்கி எழுத முற்பட்டால் அது பெரிய தொரு நூலாகி விடும். ஆதலின், அஞ்சி அவற்றை இவ்வளவில் நிறுத்த வேண்டியதாகி விட்டது. எனினும் ஒன்று கூறி அமைவோம்.

அஃது 'அடிகள் வாழ்வும், வாக்கும் சைவ சித்தாந்த மெய்யுணர்வு நூல்களில் விளக்கப்படும் கோட்பாடுகட்கு எடுத்துக் காட்டாகும்' என்பதே. இல்லை, பெருமானின் வாழ்வும், வரலாறும், வாக்குமே சிவநெறியின் கோட்பாடுகளாக வகுக்கப் பெற்றன. எனின் அதுவே முழு உண்மையாகும் என்னலாம். அவற்றையும், இவற்றையும் பொருத்திக் காண்பார் இவ்வுண்மையை உணர்வர். அப்படி ஒரு நூல் சித்தாந்தப் பேரறிஞர்களால் எழுதப் பெறச் சிவபிரான் அருள்வானாக.

இறைவன் பிரிவாற்றாமை

இனிப் பெருமான், அருள் பெற்றபின் சிவனையும் அவன் அடியாரையும் பிரிவாற்றாது பட்ட பெருந்துன்ப நிலையைப் பார்ப்போம். சிவகுரு அருள் செய்து உடனே மறைந்தான். அவனுடன் வந்த அடியார்கள் சிலர் அவனுடன் கலந்தனர்; சிலர் அவனுடைய தழலில் புகுந்து மறைந்தனர். அவ்வளவில் பெருமான், தம் தலைவனின் பிரிவாற்றாது அழுது வீழ்ந்து புரண்டு அலறித் துடித்தார். உயிர்விடத் துணிந்தார். அது கண்ட இறைவன் 'அன்பனே நீ தில்லையில் உள்ள பொன்னம்பலத்திற்கு வருக' எனப் பணித்தான். எஞ்சி யிருந்த அடியவருடன் புலியூரிலுள்ள பொன்னம்பலமடைந் தான். இந்நிகழ்ச்சிகட்கான அடிகளின் வாய்மொழிகளாவன:

'வினையிலே கிடந்தேனைப்
புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன்
என்பாய் போல
இனையனான் என்றுன்னை
அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரான்ஆனாய்க்கு
இரும்பின் பாவை
அனையநான் பாடேன்நின்
றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன்
ஆவி சோரேன்.'

— திருச்சதகம் 22.

இரும்பின் பாவை - இரும்புப் பொம்மை (போலிருக்கிறேன்.)
பொய்மை - (பொம்மை)

இப்பாட்டில், பெருமான், தாம் வினைப் பிறவி என்னும் வேதனையில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்தபோது தாம் சிறிதும் எதிர்பாரா நிலையில் சிவபிரான் திடுமெனத் தோன்றி என் எதிரில் வந்து தன்னை எனக்கு இன்னான் (நான் இறைவன்) என்று அறிவித்தான் என்னை ஆட்

கொண்டான். அப்படிப்பட்ட பேரருளாளனை நான் புகழ்ந்து பாடவில்லையே! அவனைப் பிரிந்து ஆற்றாது சிவனே! சிவனே! என்று அலறவில்லையே! கதறிக் கதறி வற்றிப் போகவில்லையே! உயிரை விடவில்லையே!

ஐயோ! ஐயோ! 'நான் ஏன் உயிரோடிருக்கின்றேன்' என்று துடியாய்த் துடிக்கின்றார் என்பது தெளிவாகின்றதன்றோ? அன்றியும்,

'தாயி லாகிய இன்னருள்
புரிந்தஎன் தலைவனை
நணிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை
உருள்கிலேன் ...'

— திருச்சதகம் 39.

நணிகாணேன் - (எப்போதும் இடையறாது தொடர்ந்து) காணப் பெறவில்லையே!
வரை உருள்கிலேன் - மலையிலிருந்து குதித்து உருண்டு மடியவில்லையே!

'மணி நீ ஒளித்தாய்க்குப் பச்சூன் வீடிற்றிலேன்'

நீத்தல் விண்ணப்பம் 45.

பச்சூன் – என் உடலில் உள்ள பச்சை ஊனை அறுத்தெரியவில்லையே.

'அறுக்கி லேன்உடல்
துணிபடத் தீப்புக்கு
ஆர்கி லேன்
பொறுக்கிலேன் உடல்
...
இறக்கி லேன்உனைப்
பிரிந்தினி திருக்க
... .'

— செத்திலாப் பத்து 6.

உடல் துணிபட - என் உடலைத் துண்டு துண்டாக வெட்டி எறியவில்லையே
தீப்புக்கு ஆர்கிலேன் - தீயில் வீழ்ந்து சாம்பலாகவில்லையே.

நின்,

'மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டுய் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுடுத்திங்கு
இருப்ப தானேன் ...'

— திருச்சதகம் 52.

' உன்றன் திருக்குறிப்புக்
கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங்கு
இருப்ப தானேன் ..'

— திருச்சதகம் 55.

இது - இவ்வுடல்.

'நாயி னேனை
நலமலி தில்லையுட்
கோல மார்தரு
பொதுவினில் வருகென
ஏல என்னை
ஈங்கொழித்து அருளி
அன்றுடன் சென்ற
அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற
உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார்
எரியிற் பாயவும்
... ...
இறைவன் ஈண்டிய
அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப்
புக்கினி தருளினன்'

— கீர்த்தித் திருவகவல்.

ஏல! - அடா : (விளி) முன்னிலை ஒருமைச் சொல். இச்சொல் இன்றும் தஞ்சை, மதுரை, நெல்லை முதலிய மாவட்டங்களில் அவ்வாறே வழங்கக் காண்கின்றோம்.

'உரியேன் அல்லேன் உனக்
 கடிமை உன்னைப்
 பிரிந்திங்கு ஒருபொழுதும்
தரியேன் நாயேன் இன்ன
 தென்று அறியேன்
 சங்கரா கருணையினாற்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
 என்றுன் பெய்கழல்
 அடி காட்டிப்
பிரியேன் என்றென் றருளிய
 அருளும் பொய்யோ?
 ... .'

— எண்ணப் பதிகம் 2.

ஒரு பொழுதும் - ஒரு நொடியும்
பெரியோன் ஒருவன் - இறைவனைப் படர்க்கையினால் குறிப்பிடுகின்றார்.

பெருமான் அமைதி கொண்டார்

இவ்வாறு குருவின் பிரிவாற்றாது உயிர்விடத் துடித்த பெருமான் பின்னர்ப் பின் வருமாறு சிந்திக்கின்றார். 'பெருமானே! நீ என்னை ஆட்கொண்ட போதே என் உடல், பொருள், உயிர் அனைத்தையும் உனக்கு ஒப்படைத்து விட்டேன்; உன்னடிமை நான், ஆகவே, அடிமையாகிய நான் உன் ஆணைப்படி உயிரை வைத்திருக்க வேண்டும்!

உன்னைப் பிரிந்து உயிர்விட அடிமை நாய் போன்ற எனக்கு ஏது அதிகாரம்? இந்த உயிரை உடலில் வை. அல்லது உன் திருவடியில் வை. அப்படி உன் விருப்பப்படி நடப்பதன்றி நான் உயிர்விட நினைக்க எண்ணலாமா? தவறு; தவறு. உன் கருத்துக்கு மாறாக நான் இறக்க எண்ணுவதா? என் அடிமைத்தனம் மிக நன்றாயிருக்கிறதே' என்று அமைதியடைந்தார்.

இதனைப் பெருமானுடைய,

‘அன்றே என்தன்
ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய்
என்னை ஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு
எனக்கு உண்டோ எண்தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய்
பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே’

— குழைத்தபத்து 7.

‘நாயிற் கடையாம்
நாயேனை நயந்து
நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி
உன்வசமே வைத்திட்
டிருக்கும் அது அன்றி
ஆயக் கடவேன்
நானோதான் என்ன
தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய்
உன்னுடைய கழற்கீழ்
வைப்பாய் ... ...’

— குழைத்தபத்து 8.

காயம் - உடல்.

‘... ... யாக்கை
விடும்ஆறும் வந்துன்
கழற்கே புகும்ஆறும்
... ... எண்ணக்
கடவேனோ அடிமை
சால அழகுடைத்தே’

— குழைத்தபத்து 9.

யாக்கை - உடல்.

அண்மையில், வடநாட்டில் ஒருவன் தன் மனைவியின் பிரிவாற்றாது அவள் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் வீழ்ந்து உயிர் விட்டமை செய்தித் தாளில் வெளியானது யாவரும் அறிவரே! ஒருத்தியின் உடலின்ப, அன்புக்கே கணவன் உயிர் விட்டான் என்னில் இறைவனால் ஆட் கொள்ளப் பெற்று அவன் பேரின்பத்தின் பெருஞ்சுவை கண்ட மெய்யுணர்வின் நிறைவு கொண்ட பெருமானுடைய பிரிவாற்றாப் பாடல்கள் எத்துணை உண்மையானவை என்பதை நன்கு உணரலாம். இப்பாடல்களே, பெருமானின் கடவுட் காட்சியும், பெற்ற பேரின்பமும் உண்மை, உண்மை என்றே மெய்யறிவாளரான சான்றோர் அனைவருக்கும் ஒப்ப முடிந்த உறுதியாகும். அல்லாவிடின் உணர்ச்சியின் வெள்ளப் பெருக்காகப் பெருமானின் மேற்காணும் பாடல்கள் அமையா அன்றோ?

பெருமானின் இவ்வாக்குகளே, அவர்தம் தன் வரலாறாக-அகச்சான்றாக அமைந்திருத்தல் 'உண்டு' என்னும் உலகர் யாவர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனியாம் அன்றோ? இறைவன் இருப்பிற்கும், மெய்யடியார்கட்கு இறைவன் குருவாய் வந்து மெய்யுணர்வளித்துப் பேரின்பம் வழங்கு தற்கும் நம்பிக்கை தரும் சான்றுகள் அன்றோ? வேறு நாடு களிலும், மொழிகளிலும் பெருமான் போன்ற தெய்வம் நிகழ் சான்றோர்களும், அவர்தம் வாக்குகளாம் மெய்ம் மறைகளும் இருந்திருக்கலாம். ஆனால் அத்தகைய சான்றோர்களும், தெய்வ மறைகளும் இருந்தமைக்குச் சான்றுகளில்லையே!

ஆனால், பாரத நாட்டிற்கு அதிலும் தமிழ் நாட்டிற்கு அத்தகு சான்றோரான மணிவாசகப் பெருந்தகையும், அவர் தம் அருள் வாக்கான திருவாசக மாமறையும் எளிதில் கிடைத் துள்ளமை நாமும், உலகவரும் செய்த பெருந் தவந்தான் என்னே! என்னே!

பிரிவாற்றாமையால் விளங்கும் ஏனைய செய்திகள்

பெருமானின் இவ்வருமை உணர்ந்தே பெருமானை ஆட் கொள்ளத் திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் சிவபிரான் அடியார் புடை சூழ வீற்றிருந்த நிலையை முன்னமே கூறியுள்ளோம்.

அடிகளை ஆட் கொண்டபின் இறைவன் அவரைத் தில்லையம்பலத்திற்கு வருமாறு கூறியதை அறிந்தோம். அதன்பின் குருவுடன் வந்து அமர்ந்திருந்த அடியார்களிற் சிலர் அவனுடன் இரண்டறக் கலந்து ஒன்றாயினர். சிலர் சிவபெருமான் உருவாம் அருட் பெருந்தீயில் புகுந்தனர். பின், ஏனையோருடன் இறைவன் தன் இருப்பிடமான புலியூர்ப் (சிதம்பரம்) பொன்னம்பலஞ் சேர்ந்தனன். இவற்றைப் பெருமான் தம் திருவாக்கால் பல விடங்களில் அருளிச் செய்கின்றார். ஆனால் தம்மை மட்டும் (உலகில்) 'இரு' என்று சொல்லிப் போய் விட்டாரே! என்று ஏங்கித் தவிக்கின்றார். இதற்கான பெருமானின் பாடல்கள்:

'அன்றுடன் சென்ற
    அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற
    உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார்
    எரியிற் பாயவும்
...   ...
இறைவன் ஈண்டிய
    அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப்
    புக்கினி தருளினன்'

— கீர்த்தித் திருவகவல்.

எய்தவந் திலாதார் - உடன் செல்லாதவர்.

'மெய்யி லங்குவெண்
    நீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பருன்
    மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப்
    புகுத விட்டுநீ
போவதோ சொலாய்
    பொருத்தம் ஆவதே.'

— திருச்சதகம் 92.

பொய்யில் - பொய்யான உலகில்.

'அரத்த மேனியாய்
அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந்
தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை
யோ ... ...'

— திருச்சதகம் 93.

அங்கு - தில்லை
இங்கு - திருப்பெருந்துறையில் (உலகில்)

' அடியாரிடை ஆர்த்துவைத்
தாட்கொண் டருளிஎன்னை'

— நீத்தல் விண்ணப்பம் 27.

ஆர்த்து - சேர்த்து வைத்து.

'நாயி னேனை
நலமலி தில்லையுட்
கோல மார்தரு
பொதுவினில் வருகென
ஏல என்னை
ஈங்கொழித்து அருளி'

— கீர்த்தித் திருவகவல்.

ஈங்கு - திருப்பெருந்துறையில் (மண் உலகில்)

'மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாஎன்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ'

— கோயில் மூத்த திருப்பதிகம் 8.

மருளார் - மருண்ட
தெருளார் - தெருண்ட (தெளிந்த அறிவுடைய)
கூட்டம் - (உன்னுடன் வந்த அடியவர்) கூட்டம்.

என்பனவாம். இறைவன் பெருமானை இவ்வுலகிலிருக்க என்றதற்கான காரணத்தை மேலே 'ஓர் அமைதி' என்ற தலைப்பில் எழுதி உள்ளோம். காண்க!

ஓர் அமைதி

இனி, இறைவனைப் பிரிந்து பெருமான் ஆற்றாது தவித்ததேன்? என்பதனை ஒரு சிறிது ஆராய்ந்து ஓர் அமைதி காண்போம்.

கடவுளின் (சிவத்தின்) மிக்க பெரும் பொருள் யாது மில்லை. அது தரும் பேரின்பமும் அளவில்லாப் பேரின்ப மாகத் தானே இருக்கும்! மின் ஆற்றல் அளவுக்கு மேற் பட்டால் அதனைத் தொட்டார் அக்கணமே மாய்வர். அதுபோல் 'இறைவன் அளிக்கும் ஒரு துளி அருளாம் பேரின்பத்தை உயிர் தாங்காது, சமாதி நிலையில் தன்னை மறந்து பெருங்குடியன் போலப் பேரின்பத்தில் மூழ்கிக் கிடக்கும், அவ்வின்பம் மேலும் ஒரு தினையளவு கூடினால் உயிர் போய் விடும் மதுவின் அளவிற்கு ஏற்ப மயங்கிக் கிடக்கும் காலமும் (நேரம்) அமையுமன்றோ? அதுபோல இறைவன் தரும் பேரின்பத்தின் அளவிற் கேற்பத் தெய்வம் நிகழ் சான்றோர்க்கும் சமாதி நிலை (ஆனந்த நிலை) அமை யும்' என்பர் இராமகிருட்டிண பரம அம்சர்.

இப்பேரின்ப நிலையைத் தமக்கருள விவேகானந்தர் தம் குருவாம் பரம அம்சரைப் பல முறையும் வற்புறுத்திப் பன்னாள் வேண்டி வந்தார். ஒருபோது பரம அம்சர், அவர்க்கு அதனை ஒரு கணமே ஒரு சிறிதே அருளினர். உடனே விவேகானந்தர் மயங்கிச் சமாதி நிலையில் மூன்று நாட்கள் வரையில் ஆழ்ந்திருந்தார். பின்பும் அப்பேரின்ப நிலையிலே என்றும் மூழ்கி இருக்க விவேகர் பெரிதும் விரும்பினார். குருநாதரை அருளுமாறு வற்புறுத்தி வேண் டினார். 'அவ்வின்பத்தின் நிலையை இயல்பை ஒரு சிறிதுங் கூறவியலாது' என்கிறார் விவேகர்.

மற்றும், அம்சர் மேற் கூறியவாறு 'இறைவன் தரும் பேரின்பத்தின் அணுவளவே உயிரால் தாங்கும் அதற்கு மேல் ஒரு துளிப் பேரின்பம் பெற்றால் உயிர்போம். ஆதலால் இறைவன் தன் பேரின்பத்தை அடியவர்க்கு அளவே வழங்குவது, உலகர் அவர்களால் நலம் பெறவே, அவர்களை வாழச் செய்யவே. இவ்வாறு ஓரணுவளவு இன்பத்தையே

அளிக்கின்றான்' என்கிறார். ஆதலினாற்றான் நம் பெருமான் அச்சிறு அருளின்பத்தைத் தாங்க இயலாமல் 'அத்தா!' செத்தே போயினேன் :

'ஆற்றா இன்பம்
அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப்
பொறுத்தல் புகலேன்'

திருவண்டப்பகுதி.

என்கின்றார்.

இத்தகு பேரின்ப நிலையைப் பெற்றதால்தான் பெருமான் அதனைப் பிரியாது பெற்றின்புற, அப்பேரின்ப மான சிவத்தினைப் பிரிந்திருக்க ஆற்றாது தவித்தார் என்றும், உயிர்விடத் துணிந்தார் என்றும், பின் இறைவன் ஆணையை எண்ணி அமைதி கொண்டார்என்றும் உலகோர் உணர்தல் வேண்டும். மற்றும் அம்சர் கூறியுள்ளது போலப் பெருமான் மன்பதை உய்யத் திருவாசகம், திருக்கோவையார் திருமறையை அருளினார் என்றும், தம்மை மக்கள் காணவும் தாம் காட்டிய நன்னெறியினைப் பின் பற்றி உய்யவும், போற்றி வழிபடவும் திகழ்ந்தார் என்றும், சிவபிரான் எழுந் தருளியுள்ள திருத்தலங்கள் தோறும் சென்று வழிபட்டார், பாடினார் என்றும் நாம் அறிதல் வேண்டும். இவ்வுண் மையைப் பெருமானே,

'நெறிசெய் தருளித்தன்
சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை
ஆண்டபிரான்.'

— திருப்பூவல்லி 8.

நெறி - கடவுளையடையும் வழி (சமயம் இங்குச் சிவநெறி)

'நாயேனைத் தன்அடிகள்
பாடுவித்த நாயகன்'

— திருக்கோத்தும்பி 12.

என்று தம்மை இறைவன் திருத்தொண்டுக்காகவே ஆட் கொண்டருளினான் என்று கூறுவதனால் அறியலாம்.

அதனாலன்றோ, இன்றும் தில்லை முதலாம் திருத்தலங்களும், தமிழ் மறை ஓதல்களும் தமிழ்நாடு எங்கும் புகழுடன் திகழ்ந்தோங்கிச் சிறக்கின்றன. தமிழ்நாடு உலகெலாம் போற்றுமாறு - பாராட்டுமாறு வணங்குமாறு விளங்குகின்றது! பல்கோடி மக்கள் தெய்வ அன்பு பெற்றுப் பண்புடையராய் வாழ்கின்றனர்! வாழ்க!

பெருமான் திருத்தொண்டும், சிவபிரான் அருளும்!

இங்ஙனம் பெருமான், குருவின் பிரிவாற்றாமையால் பெருந்துயரில் தவித்ததும் பின் இறைவன் தோன்றித் தில்லையம்பலம் வருக எனக் கூறியதும் ஆய நிகழ்ச்சிகட்குப் பின் பெருமான் அமைதி கொண்டு சிவத் தியானத்தில் அமர்ந் திருந்தார். அத்தேனிப்பில் (தியானம்) தம்மைமுற்றும் மறந் திருந்தார். அதனால் நாட்கள் பல சென்றன. இரவு இது, பகல் இது என்றும் அடிகளால் அறியக் கூடவில்லை. இதனைப் பெருமானே,

'எனைநான்என்பது அறியேன்பகல்
இரவாவதும் அறியேன்'

— உயிருண்ணிப்பத்து 2.

என்று தெரிவிக்கின்றார்.

'அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற்றிருந்தே ஏசற்றேன்'

— கோயில் மூத்த திருப்பதிகம் 5.

என்று தாமே கூறுமாறு இரவு பகலாகச் சிவ சிந்தனையில் மூழ்கியிருந்தார் பெருமான்.

ஆட்கொள்ளப் பெற்றபின் அடிகளின் நிலை

இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர்கள், தம் சொற் செயல்கள் அனைத்தையும் இழப்பர். தம்மைப் பற்றிய நினைவை அறவே இழப்பர். ஊண், உடையை மறப்பர்.

மனம் போனவாறு இறைவனை எண்ணிய நிலையில் ஆடுவர், பாடுவர், அழுவர்; இறைவர்க்காம் வழிபாடுகளை வெறி கொண்டு செய்வர். அவனைப் பற்றிய நினைவை அன்றி வேறு நினைவில்லாதிருப்பர்; தாம் ஒரு பொருள் என்ற உணர்வே இல்லாமலிருப்பர். தம் உடற்குண்டாம் கேடுகளைத் துன்பங்களை உணரார். பித்தர் போன்றிருப்பர், சிலபோது பலபோது கல்லாய் அமர்ந்திருப்பர், பிணம்போல் சமாதி நிலையில் கிடப்பர். இவ்வெல்லாம் நம் பெருமானுக்கு அமைந்து விட்டன. ஆம்! ஆட்கொள்ளப் பெற்றவர் அந் நிலைகளில் தானிருப்பர் என்று இராமகிருட்டிண பரம அம்சருங் கூறுகின்றார். அவரே அப்படித் தானிருந்தார்.

அவரே கூறுகின்றார், 'நான் தேவியால் ஆட் கொள்ளப் பெற்ற பின் உற்றார், உறவினர், ஏனையோர் யாரையும் என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. யாவும், நிழல்கள் போல் தோன்றின. நான் ஒரு மனிதனா? என்ற ஐயம் எனக்கேற்படும். அப்போது அதனை அறியக் கண்ணாடி யின் முன் நின்று என் கண்களில் விரலை விட்டுப் பார்ப் பேன். உணர்ச்சியிராது, ஆடையுமில்லாது சிலபோது அலைவேன். தேவியின் அருளைப் பெறத் துடிப்பேன்.

அன்னையோ! அன்னையோ! என்று அலறுவேன். மணிக் கணக்காக மலர்களைப் பறிப்பேன். தீபாராதனைத் தட்டை அம்மையின் முன் சுற்றிக் கொண்டே இருப்பேன். பல கணங்கள் இவ்வாறு கழியும். அன்னையே! உன்னைக் காணாது வாழ்கின்றேனே! என்று அலறுவேன். ஓலமிடு வேன்! கண் நீர் மழை கொட்டுவேன். கீழே வீழ்ந்து அரண்டு கதறுவேன்; இராப் பகல் தெரியாது. மாலையில் கோயில் மணியோசை கேட்டதும் அம்மா! உன்னருளை என்று பெறுவேன்? என்று உன்னைக் காண்பேன்! உன் னருள் பெறாது ஐயோ! ஒரு நாள் போயிற்றே! என்று பெருவருத்தங் கொண்டு ஏங்குவேன், துடிப்பேன். அவளையன்றி ஏதும் எண்ண முடியாமலிருந்தேன். பார்ப் போர் என்னைப் பித்தன் என்று ஏசினர். கூறினர். அது பற்றி எனக்குச் சிறிதும் வருத்தமில்லை. ஒவ்வொரு நொடி யும் அவளைக் காணத் துடித்தேன்.

இவ்வாறு யான் கொடுந் துன்பங்கள் படும்போது அருளன்னை என்முன் தோன்றிக் காட்சி தந்து என்னைத் தேற்றித் தடவி - இன்சொல் கூறி அமைதி செய்வாள். அதனால் யான் அமைதி பெற்றுப் பேரானந்தப் பெருநிலை அடைவேன். அளவிலா ஆனந்தங் கொள்வேன்' என்று கூறியுள்ளார்.

நம் பெருமான் இறைவன் காட்சியும், அருளும் பெற்ற பின் இதே நிலைகளில் தான் இருந்தார் என்பதற்கு மேலே காட்டிய பெருமான் திருவாக்குகளைக் கண்டோம். மற்றும் அவ்வாக்குகளில் காணப்பட்டனவும், காணப் பெறாதனவு மாகிய பாடல்களை இங்குக் காண்போம்.

அவை :—

'இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்காதான் தாள்வாழ்க!'

— சிவபுராணம்.

'எனைநான் என்பது அறியேன்பகல்
இரவாவதும் அறியேன்
மனவாசகம் கடந்தான்எனை
மத்தோன்மத்தன் ஆக்கிச்
சினமால்விடை உடையான்மன்னு
திருப்பெருந்துறை உறையும்
பனவன்எனைச் செய்தபடிறு
அறியேன்பரஞ் சுடரே.'

— உயிருண்ணிப் பத்து 3.

படிறு — குறும்பு, வம்பு,
வேடிக்கை — ஆட்டம்.

'கயல்மாண்ட கண்ணிதன்
பங்கன்எனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண் டருவினைச்
சுற்றமும்மாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள
வாசகம்மாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ.'

— திருத்தெள்ளேணம் 11.

அயல்மாண்டு — என்னை அடுத்த பொருட்கள் யாவும் மறைந்தன.
அருவினைச் சுற்றம் — அரிய பெரிய பணிபுரியும் அரசு ஊழியர்கள் (திருப்பெருந்துறைக்குப்பெருமானுடன்வந்தோர்)
மயல் மாண்டு — (தம்) அறியாமை நீங்கியது
வாசகம் மாண்டு — பேசா நிலை அடைந்தேன்
என் செயல் மாண்டு — அன்றாடப் பணிகள் : கடமைகள் நீங்கின.

'இன்றெனக் கருளி இருள்கடிந்
துள்ளத்து எழுகின்ற
ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற
நினைந்தேன் நீயலால்
பிறிதுமற் றின்மை'

— கோயில் திருப்பதிகம் 7.

நினைப்பு அற — என்னைப் பற்றிய: உலகம் பற்றிய நினைவுகள் நீங்கின.
நினைந்தேன் — (அந்நிலையில் உன்னை) நினைக்கின்றேன்.

'மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றிங்
கெனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்மை
உடையாய் பெறநான்
வேண்டுமே'

பிரார்த்தனைப் பத்து 3.

மருளார் மனத்தோர் — அறிவில்லாப் பொதுமக்கள்
உன்மத்தன் — பித்தன்
வருமால் – வருகிறான்
வெருளா வண்ணம் — அஞ்சாதபடி, வெறுக்காதபடி, மருட்சியடையாத படி.

'பேசப் பட்டேன் நின்னடி
யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல
ராலுன் அடியானென்று
ஏசப் பட்டேன்........'

— திருச்சதகம் 82.

நின்னடியாரில் ஒருவனாக உலகத்தாரால் பேசப்படுகின்றேன்; ஏசப்படுகின்றேன்.

'சகம்பேய் என்று
தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து
நாடவர் பழித்துரை
பூணது ஆகக்
கோணுதல் இன்றி'


— போற்றித் திருவகவல்.

சகம் — உலகத்தார்,
பேய் — (தம்மைப்) பேய் என்று கூறிச் சிரிக்க,
நாணது ஒழிந்து — (அதற்காக) வெட்கப்பட வில்லை.

'சூடகம் தோள்வளை
ஆர்ப்பஆர்ப்பத் தொண்டர்
குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை
ஆர்ப்பஆர்ப்ப நாமும்
அவர்தம்மை ஆர்ப்ப
பாடக மெல்லடி
யார்க்கும்மங்கை பங்கினன்
எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை
அன்னகோவுக்கு ஆடப்பொற்
சுண்ணம் இடித்தும்நாமே'

— **திருப்பொற்சுண்ணம் 7.**

நாடவர் — உலகத்தார்
நந்தம்மை — நம்மை (என்னை)
ஆர்ப்ப ஆர்ப்ப — (பித்தன் என்று) ஆரவாரஞ் செய்ய
நாமும் அவர் தம்மை – நானும் அவர்களை (உலகப் பொருட்களுக்காகப் பித்துப் பிடித்துப் பேயாய் அலைபவர்) என்று ஆரவாரஞ் செய்வேன் என்பனவாம்.



'சித்தாந்தம்'

(1981 – மே இதழ்)

பாண்டியன் குதிரை வாங்கத் தந்த பொருளைக் கொண்டு மாணிக்கவாசகர் கோயில் கட்டினாரா?

(பேராசிரியர். மறை. திருநாவுக்கரசு, சென்னை.)

முகவுரை

செந்தமிழ் மாமறையாகிய திருவாசகத்தை அருளிச் செய்த மணிவாசகப் பெருந்தகையார் தெய்வ நிகழ் சான்றோராவர். 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்' என்ற அவர்தம் வாய்மொழியால் அவர் சிவமாம் நிலை பெற்றவர். இதனை வலியுறுத்தும் அப் பெருமான் அருளிய மற்றோர் திருப்பாட்டு,

'அவமாய தேவர்
அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்தென்னை
ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர்
நல்குதலும் நாமொழிந்து
சிவமான வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ'

என்பதாம். இங்ஙனமாகச் சிவமாக்கிவிட்ட மாபெரும் ஒப்பற்ற பெருந்தகையை 'மணிவாசகர் அறிவினாற் சிவனே என்பது திண்ணம்', என்ற திருக்கோவையாரின் உரையாசிரியராகிய பேராசிரியர் உறுதி உரை உண்மையின் முழு உருவேயாகும்.

இறைநிலை எய்தற்காம் சீர்மிகு பெருந்தகையாரின் பிறப்பேதூய்மையும் நேர்மையுமாகத்தானே அமைந்திருத்தல் வேண்டும். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்'

'கருவிலே திருவுடையார்' என்னும் மூதுரைகள் உண்மையே அன்றோ? இதனை இக்காலத்தே வாழ்ந்த தெய்வம் நிகழ் சான்றோர்களான வள்ளல் இராமலிங்கர், இராமகிருஷ்ணர், மாமுனிவர் காந்தியடிகள் ஆகியோரின் இளமைக்கால — இடைமைக்கால வாழ்க்கை வரலாறுகள் நம் கண்முன் காட்சியன்றோ?

இம் மேதகு பண்புகள் எல்லாம் அறிந்துதானே! பாண்டியன் இப்பெருமானை, 'முற்றுணர்ந்த அமைச்சரினும் முதலமைச்சர்' (பரஞ்சோதி திருவிளையாடல்) ஆக்கிக் கொண்டான்!

அரசுத் துறைகளில் பணியாற்றும் மிக எளிய ஊழியருங் கூட ஒரு துறைக்காக உள்ள பொருளை வேறு ஒரு துறைக்கு செலவிட ஒருப்பட மாட்டார் அன்றோ? அதற்குமாறாகச் செலவிட்டால் 'அரசின் ஒறுப்புண்டு. வேலையும் போய் விடும், மானமும் அழியும், பழியுமுண்டாம்' என்ற எளிய செய்திகளை அவர் அறிவரே! நில வரி வாங்கும் ஊழியர் ஒருவர் தாம் திரட்டிய பணத்தைக்கருவூலத்தில் கட்டுவதன்றி மருத்துவ மனை கட்டற்கும், ஏழைகட்குக் கல்வி, உணவளிக்க முற்படுவாரா? இதை நினைவிற் கொண்டால்,

முதலமைச்சராம் நம் பெருமானார் இச்சிறிய உண்மைகளை அறியாதிருப்பாரா?

அறிந்தும்,

'ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்'

•

'கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்'

இவ்வொழுக்கங்கட்கு மாறாக நடப்பாரா?

இவ்வடிப்படை உண்மைகளை எல்லாம் மறந்தோ, நினைவு கூராமலோ, ஆராயாமலோ பெருமானுடைய வரலாறு பற்றிப் பொதுமக்கள் கூறி வந்த செவி வழிச் செய்தியை உண்மை எனக் கொண்டு என்றும் அழியா எழில் மிகு இலக்கியமாம் வேப்பத்தூரார் திருவிளையாடல் புராணம் பரஞ்சோதி முனிவரருளிய திருவாலவாயுடையார் திருவிளை யாடற் புராணம் கடவுள் மாமுனிவர் அருளிய திருவாதவூர் அடிகள் புராணம், முதலாம் நூல்கள் தோன்றின. அத்தீஞ் சுவை மிக்க காப்பியங்களில் பெருமானார். பாண்டியன் குதிரைகள் வாங்கத் தந்த பொன்னைக் கொண்டு திருப் பெருந்துறையில் திருக்கோயில் பணிகளுக்குச் செலவிட்டார் என்று அப்புராணங்களில் பலவோர் பாடி விட்டனர்.

இப்பெருங் கவிஞர்கள் யாவரும் பெருமானார் காலத் தவர் அல்லர். பெருமானார் காலத்திற்குப் பல நூற்றாண்டு கட்குப் பின் தோன்றியவர்கள். பெருந்தகையின் காலம் மூன்றாம் நூற்றாண்டே என்பதே மறைமலையடிகள், கா. சுப்பிரமணியப் பிள்ளை முதலாம் பேரறிஞர்களின் கூற்றாகும்; எழுத்தாகும். இவ்வுண்மையை உணர வேண்டு வோர் மறைமலையடிகள் யாத்த மாபெரும் நூலாகிய 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் பெரு நூலைப் படிப்பார்களாக. ஆயிரம் பக்கங்கள் கொண்ட அந்நூலின் காலம் பற்றிய ஆராய்ச்சி மட்டும் எழுநூறு பக்கங்களாகும்.

மூன்றாம் நூற்றாண்டல்ல பத்தாம் நூற்றாண்டு என்னும் அறிஞர்கள் கூட பெருமானின் வரலாறு பற்றிய மேற் கூறிய நூல்கள் ஏறத்தாழ இரண்டு மூன்று நூற்றாண்டிற்குப் பிற் பட்டன என்பதை ஒப்பியுள்ளனர். பெரியோர்கள் வாழ்ந்த காலத்திலேயே எழுதப்பட்ட வரலாறுகளில் கூடத் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன.

அரசன் குதிரை வாங்கத் தந்த பெரும் பொருளை வானனைய தம் பெரும் பத்திமையால் — தன்னை மறந்த நிலையில் கோயில் பணிகளுக்குச் செலவிட்டார் என்று அமைதி கொள்கின்றனர். அம்முறையார் பெருமானுக்குப் பழி இல்லை என்று கூறவேயாம்.

இப்பழி தரும் செய்திக்கு எவ்வகையான சான்றுகளும் இல்லை என்பதை ஒரு சிறிது விளக்கவே மாசற்ற மாணிக்கமே மணிவாசகர் என்ற உண்மையினை அவர்தம் வாழ்க்கை வரலாறாகத் திகழும் திருவாசகப் பாடல்களின் அகச்சான்றுகளைக் கொண்டு நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அறிஞர்கள் இதனைப் படித்து மணிவாசகப் பெருந்தகையின் தெய்வ மாண்பைக் கொண்டாடுவார்கள் என்று நம்புகின்றேன்.

பரஞ்சோதியார் திருவிளையாடல் 15-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதன்று. இப்புலவர் பெருமான் வாசகரின் வரலாறு பற்றி முந்தை ஆசிரியர்கள் கூற்றையே 90% ஏற்றுக் காப்பியஞ் செய்தருளினார். அதில் பெருமான் அரசன் தந்த பொன்னைத் தாம் திருப்பெருந்துறையில் அவனருள் பெற்ற பின்பு எவ்வாறு கோயில் திருப்பணிகட்குச் செலவிட்டார் என்பதனைத் தம் நூலுடன் வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தில்,

'வள்ளல் வாதவூரர் முனிகளும் மன்னவன் பரிமாக்
கொள்ள நல்கிய பொருளெலாம் திருந்தில் வந்தாண்ட
பிள்ளைவான் மதிச்சடை முடிப்பெருந்துறை மறையோர்க்கும்
உள்ளவாதரம் பெருகமுன் வேண்டியாங் குய்ப்பார்.'

'சிறந்த பூசைக்குந் திருவிழாச் சிறப்புக்கும் செல்வம்
நிறைந்த ஆலயத் திருப்பணித் திறத்துக்கும் நிரப்பி
அறந்தவாத பேரன்பர்க்குஞ் செலுத்தி அத்தலத்தே
உறைந்து அவாவற இன்னணம் ஒழுகுநாள் கழிப்பார்.'

என்று பாடியுள்ளார். இப்பாடல்களால் பெருமான் அரசன் பணத்தை மறையோர்க்கும், இறைவன் நாட்பூசை, திருவிழா, கோயில் திருப்பணி, அடியார்கட்கும் செலவிட்டார் என்றறியக் கிடக்கின்றது. இதில் கோயிலைக் குறிக்கும்போது, 'செல்வம் நிறைந்த ஆலயம்' என்று குறிப்பிட்டிருப்பதும்,

அரசன் தூதுவர்கள் திருப்பெருந்துறையுற்றுத் திருக் கோயிலின் கோபுர வாசலில் நின்றனர். 'அரசன் பொருளால் குதிரைகள் வாங்கி விட்டீரா' என்று பெருமானைக் கேட்க, அப்போது கோயிலுக்குள்ளிருந்து பெருமான் கோபுரத்திற்கு வெளியே போந்து தூதுவர்கட்குச் செய்தி கூறுகின்றார் என்றவிடத்துப் பரஞ்சோதியார் கூறும்,

'சென்று கோபுரவாயிலின் புறம்பு போய்த்திரண்டு
நின்ற வளவன் தமர்களை நேர்ந்தனர் நோக்கா'

இப்பாடல் வரிகளால் பெருமான் திருப்பெருந்துறைக்கு வருவதற்கு முன்பே அங்கே கோயில் சிறந்த பெரிய நிலையில் இருந்த தென்பதனை அறியலாம். அன்றியும், பெருமான் மதுரையிலிருந்து திருப்பெருந்துறையை நெருங்கும் போதும், பின் கோயிலுட் சென்றதும், கோயிலின் திருச்சுற்று மாளிகை யில் வலமாக வரும்போது குருந்த மரத்தின் நிழலில் இறை வனைக் கண்டதும் ஆகிய நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்தும் பரஞ்சோதியார்,

'கோயிலை அடைந்து குளிர் வான்புனல் குடைந்து
வாயிலை யடைந்து உடல் மண்ணுறவிழுந்து'

'ஆலய மருங்கு வலமாக வருவார்முன்
மூல மறை ஓதிமுடியாத பொருள் தன்னைச்
சீலமுனிவோர் தெளிய மோனவழி தேற்றும்
கோலமுற நின்றதோர் குருந்தை எதிர்கண்டார்'

என்பதால், பெருமான் திருப்பெருந்துறைக் கோயிலைக்கட்ட வில்லை என்பதும், அவர் வருகைக்கு முன்னே அங்குக் கோயில் சிறந்த முறையில் திகழ்ந்து விளங்கி நின்றது என்பதையும் நன்கறியலாம்.

சிவமான பெருமானும் தம் வாசகப்பாடல்களில்,

'திருப்பெருந் துறைஉறை
கோயிலும் காட்டி'

— **திருப்பள்ளி எழுச்சி.**

'நின்கோயில் வாயிலிற் பிச்சனாக்கினாய்'

— **ஆனந்தா தீதம்.**

'.. ... திருப்பெருந்
துறையில் நிறைமலர்க்
குருந்தமே வியசீர்'

— **அருட்பத்து.**

'தீட்டார் மதில்புடைசூழ்
தென்னன் பெருந்துறையான்'

— **திருவம்மானை.**

'தேரார்ந்த வீதிப்
பெருந்துறையான் '

— **திருப்பூவல்லி.**

என்றெல்லாம் பாடுதலாலும் தெளியலாம். இங்ஙனமெல்லாம் புறச் சான்றுகளும், அகச் சான்றுகளும் இருக்கப் பெருமான், அரசன் குதிரை வாங்கத் தந்த பொருளைக் கொண்டு கோயில் கட்டினார் என்று கூறுதல் சிறிதும் பொருந்தாமை யும் உண்மையில்லாமையும் ஆகும் என்பது நன்கு விளங்கு கின்றதன்றோ?

ஆம் அது பொருத்தமே! ஆனால் மேற்பாட்டுக்களில் (63 - 65) காணுமாறு பெருமானார் அரசன் பொன்னை மறையோர் நாட் பூசை, திருவிழா, கோயில் திருப்பணி, அடி யார்கட்குக் 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளை யாருக்கு உடைப்பதுபோல்' வழங்கலாமா? அது நேர்மையா? முறை கேடல்லவா? என்ற கேள்விக்கு விடை என்ன? என்ற கேள்வி எழுமே என்னில் கூறுவாம்.

குதிரை வாங்க அரசன் பொன் தந்தான். பெருமான் அது செய்யாது மேற்கூறியவாறு செலவிட்டார் என்பதற்குப் பெருமானின் திருவாக்கால் ஒப்புதலாம் அகச்சான்று ஒன்றும் இல்லையே! அணுவளவும் இல்லையே! எல்லாம் பெருமான் காலத்திற்குச் சில பல நூற்றாண்டுகட்குப் பிற்பட்ட திரிபுற்ற செவிவழிச் செய்திகள் தாமே!

பெருமான் மீது பழி சுமத்துவோர் கூறும் இப்புறச்சான்று களை அகச்சான்று காணும் அறிஞர்கள் ஒரு சிறிதும் ஏலாரன்றோ?

'அங்கண் விசும்பின் அகனிலா பாரிக்குந்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்
மறுவாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமாசுறின்'

— நாலடியார்.

என்பதற்கேற்ப இறைவனடியார் தம்பால் அணுவளவு குற்ற மேற்படினும் பெரிதும் அழிந்து வருந்துவர். இவ்வுண்மையை அப்பரடிகள் தாம் சமண சமயச் சார்பில் இருந்தமை பற்றிப் பெரிதும் நொந்து வருந்திப் பாடியுள்ள பாடல்கள் பலப்பல. அவற்றில் இரண்டிடங்கள்,

'அமணர்கள் அறவுரை கேட்டல மந்தேன்'

'புள்ளிருக்கும் வேளூரானைப் போற்றாதே
ஆற்றநாள் போக்கினேனே'

இவ்வாறே சுந்தரர் பெருமானும் தாம் சங்கிலி நாச்சி யாருக்களித்த வாக்கைக் கைவிட்டமைக்காக மிகப் பெரிதும் வருந்திப் பாடிய பாக்கள் பல. அவற்றுள் சான்றுக்காக இரண்டு பாடல்கள்,

'பிழை உளன பொறுத்திடுவர் என்றடியே பிழைத்தக்கால்
பழி அதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்'

'சங்கலிக்கா என்கண்கொண்ட பண்ப'

இங்ஙனம் தெய்வச் சான்றோர் தம் குறைகளை விண்டு கூறி வேதனைப் படுவரேயன்றி அதனை மறைக்கார்.

அரசியல் தலைவர் மட்டுமல்லர்-தெய்வ நிகழ் சான்றோ ராகிய காந்தியடிகள் தம் தவறுகளைப் பெரிதாகக் கருதி 'இமாலயத் தவறு' என்று பெரிதும் வருந்தியுள்ளார்.

இவற்றால், நம் பெருமானார் தவறு செய்திருப்பரேல் அதனை மறைக்காமல் பெரிதும் எடுத்துக் கூறி வருந்தி இருப்பாரன்றோ?

ஆனால், செந்தமிழ் மாமறையின் தெய்வப் பெருமான் தம் பெரும் பிழை, பெருங் குற்றம், பெரும் பாவம் என்றெல் லாம், வருந்தி, வருந்தி அழுதழுது பாடிய பாடல்களில் செம்பாதிக்கு மேல் அக்குறைகள் இவை எனக் கூறுகின்றார். அவற்றிற் சில,

'ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில்
தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே'

'யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்'

'யான் பாவியேன்......'

'புழுக்கணுடைப் புன்குரம்பைப்
பொல்லாக் கல்வி ஞானமில்லா
அழுக்கு மனத்தடியேன்... '

'பொய்யெல்லாம் மெய்யென்று
... .
மையல்உறக் கடவேனை'

'மண்ணதனிற் பிறந்தெய்த்து
மாண்டுவிழக் கடவேனை'

'யான் யாவரினுங் கடையனாய நாயினேன்'

'பொல்லா நாயான நீசனேன்..... '

சிவமாம் மெய்ப்பொருளை அறிந்து அடைந்து பேரின்பம் பெறாது வாணாளை வீணாக்குவதே - அழிதன் மாலைத் தான உலகச் செல்வங்களில், இன்பங்களில் தாம் திளைத் திருத்தலையே பெருமான் தன்னைப் பலவிடத்தும் 'பொய்யன்'என்று கூறிக் கொள்கின்றார். இதனை அவர் தம்,

'பொய்யாய செல்வத்தே
புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக்
கிடந்தேனை ...'

என்ற மெய்யுரையால் அறியலாம்.

இஃதுணராத் தன்மையே,பெருமான் அரசன் பொருளை நேர்மையில்லா வழிகளில் செலவிட்டார் என்று கருத இடம் ஆகின்ற தென்னலாம். போதிய சான்றுகளில்லாமல் இவ்வாறு கூறுவது நீதி மன்றத்தில் எடுபடாதே. தம் கருத்தின் வழியே ஐயுற்றுக் கூறுவன அறிவுடைமையாகாது.

தெய்வப் பெருந்தகையார் தாம் திருப்பெருந்துறையில் கடவுட் காட்சி கண்டமைக்கும், சிவபெருமான் தனக்கு மூவகை தீட்சைகள் செய்தமைக்கும், தாம் சிவமானமைக்கும் தம் வாக்காலேயே சான்றுபடப் பாடியுள்ளார். மற்றும்

அவர் வரலாற்றிற் காணும் நரி பரியாக்கியது. பரிகளைப் பாண்டியனிடம் இறைவன் குதிரைச் சேவகனாகி ஒப்படைத்தல், வைகை வெள்ளம், வந்தியின் பேறு, சிவபிரான் மண் சுமந்தது, பிரம்படிபட்டது முதலாம் நிகழ்ச்சிகளுக்குப் பெருமானுடைய பாடல்களில் குறிப்பான அகச்சான்றுகள் உள்ளன. அவை தெளிவுபடவில்லை. ஆயினும் அவற்றைக் கொண்டும் செவிவழிச் செய்திகளைக் கொண்டுந்தான் பெருமானைப் பற்றிய புராணங்கள் எழுந்தன. இவைகளை விட மேலே சொன்ன அகச்சான்றுள்ள பாடல்களில் பெருமானின் வரலாற்று நிகழ்ச்சிகளே உலகில் எங்குங் காண ஒண்ணாச் சிறப்பினவாம் என்றறிதல் வேண்டும்.

அவையே போதுமானவை. குறிப்பாகக் கருதக் கூடிய அகச்சான்று வரலாறுகள் இல்லாவிடின் பெருமானின் தெய்வத் தன்மைக்குக் குறையொன்று மில்லை.

ஆகவே, இதுவரை ஆய்வு செய்யப்பட்டதிலிருந்து பாண்டியன் குதிரை வாங்கப் பெருமானிடம் பெரும் பொருள் கொடுத்தது, அவரது செய்யாது அப்பொருளைக் கொண்டு கோயில் கட்டியது முதலாம் செய்திகட்கு ஒரு சிறிதும் ஆதாரங்கள்—சான்றுகள் இல்லை என்பதை நன்கறியலாம்.



நம்பிகள் திருவிளையாடலிலும் பெருமான்கோயில் கட்டினார் என்றில்லை

பாண்டி நாட்டின் மதுரையை அடுத்துள்ள செல்லி நகர்ப் பெரும் பற்றப் புலியூர் நம்பி என்னும் பெரும் புலவர் அருளிச் செய்த திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம் என்னும் காப்பியம்.

பண்டாரகர். உ. வே. சாமிநாதய்யர் அவர்களால் 1906-இல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்நூலின் முகவுரையுள் பண்டாரகர், நம்பிகள் காலம் 'இற்றைக்கு சுஎகூ (679) ஆண்டுகட்கு முன் பிறந்தவர் என்று மட்டும் தெரிகின்றது' என்று ஆய்வு காட்டி எழுதி யுள்ளார்.

1906-க்குப் பின் இன்று 1983 நிகழ்வதால் 679-உடன் 77 ஆண்டுகளைக் கூட்ட நம்பிகள் இன்றைக்கு 756 ஆண்டு கட்கு முன்பிருந்தவர் என்றாகின்றது.

இந்நம்பிகள், சேக்கிழார், கம்பர் காலத்திற்குப் பிற் பட்டவர் என்பதைப் பண்டாரகர், பெரியபுராணம், கம்ப ராமாயணம் நூல்களிலிருந்து நம்பி எடுத்தாண்டுள்ள பாடல் களின் பகுதிகளை அந்நூலின் முகவுரையில் 'நூலாராய்ச்சி' என்ற பகுதியில் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆகவே, நம்பியின் காலம் சேக்கிழார், கம்பர் காலத் திற்குப் பிற்பட்டது என்பது தெளிவாம்.

சேக்கிழார், கம்பர் காலம் 12-ஆம் நூற்றாண்டாகும். அதற்குப் பின் நம்பி திருவிளையாடல் புராணம் ஆக்கப் பட்டதால் இப்புராணம் 13-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்னலாம்.

பண்டாரகர் இப்பதிப்பினால் திருவிளையாடல்களில் நம்பியாருடையதே முற்பட்டது முதலாவது என்பது உறுதியாகின்றது.

இதில் பெருமான் திருப்பெருந்துறையைச் சேர்ந்து,

'ஆங்கவர் ... ... பொய்கை
ஓங்கு நீராடி வெண்ணீறணிந்து *உயர் ஆலயத்துப்
பாங்குறும் இறைவன் தன்னைப் பணிகுவான்
... ... அடைந்தார்'

என்றும்,

பெருமான் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றபின்,

'புரவிகொள வந்த பொருள் அனைத்தும் பின்
வருங் காரியம் ஒன்றும்
பாரார் ஆகி ... ..
தொண்டர் எலாம்-கொளும் எனக் கொடுத்தார்'

கொளும் — கொள்ளும் (கொள்வீர்).

இவற்றால், பெருந்துறையை அடையும் முன்பே 'உயர் கோயில் இருந்ததென்பது உறுதியாதல் காண்கின்றோம். அன்றியும், பெருமான் தம்மிடம் 'குதிரைகள் வாங்கப் பாண்டியன் தந்த பெரும் பொற்குவை எல்லாம் தொண்டர் எல்லார்க்கும் அளித்துவிட்டார்' என்று மட்டுமே இப்பாட்டில்

---

* உயர் ஆலயம் - பெரிய கோயில். ஆம்! இன்று திருப்பெருந்துறையிலுள்ள கோயிலும் அரிய வேலைப்பாடுள்ள கோயிலாகவே திகழ்கின்றது.

கூறப் பெற்றுள்ளதாலும், கோயில் கட்டினார் என்று கூறப் பெறாமையாலும், மற்றும் நம்பியின் திருவிளையாடல்களில் உள்ள பாட்டுக்களில்,

'சோதி ஆலயத்துப்புக்குத் தொழுது சொல்வார்'

'வாமா கொண்டுவரச் சொல்லி வழுதி
ஓலை வர விட்டான்
ஆமா ஒன்றுங் கொண்டதில்லை
தனமும் அடியார் தமக்கிட்டேன்'

என்று கூறப் பெற்றுள்ளமையாலும் பெருமான் கோயில் கட்டவில்லை என்ற கூற்று உண்மையாதல் காண்கின்றோம்.

நம்பியார்க்கு ஏறத்தாழ இரு நூறாண்டுகட்குப் பின் தோன்றிய பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தாலும் பெருமான் கோயில் கட்டவில்லை என்பது உண்மையாதலை 'பெருமான் கோயில் கட்டினாரா' என்று மேலே உள்ள நம் கட்டுரையில் விளக்கியுள்ளோம் காண்க.

மற்றும், 18-ஆம் நூற்றாண்டினரான 'திருவாதவூரர் புராணம்' இயற்றிய கடவுள் மாமுனிவரும் தம் சிறு காப்பியத்தில், பெருமான் கோயில் கட்டினார் என்பது பற்றி யாதுங் கூறவில்லை.

மாறாகத் தம்மை ஆட்கொண்ட சிவபிரான் ஆணைப் படி, பெருமான் குதிரை வாங்கப் பாண்டியன் தந்த பொருளை எல்லாம் திருப்பணி, அருந்தவர், வறியவர்கட்கு அளித்தார்

என்றே கூறியுள்ளார். இதனை அப்புராணத்துள்,

'பெருந்துறை உறைவார் அன்பு
பெறுந்திரு அடியாராகி
இருந்தார் தம்மின் மேன்மை
எய்தினர் முகத்தை நோக்கித்
திருந்திய பொருள் ஈதெல்லாம்
*திருப்பணிக்களியும் மேலாம்
அருந்தவர்க்கு உதவும் இல்லாதவர்க்கு
அருளும் என்றார்.' (124)

'தம்பெரு முதல்வர் சொல்லத்தகும் மொழிப்படியே
செம்பொருள் யாவும் அன்பின் திறத்துளார்
தொலைத்த பின்னர்' (125)

இங்ஙனம் வரலாறு கூறிய மூவரும் பெருமான் கோயில் கட்டினார் என்று கூறிவில்லை.

பெருமான் வரலாற்றை 13-ஆம் நூற்றாண்டில் முதலிற் பாடிய நம்பியும் 15-ஆம் நூற்றாண்டினரான பரஞ்சோதி யாரும் பெருமான் திருப்பெருந்துறையைச் சேர்ந்தவுடன் மேற்காட்டிய பாடல்களிற் காணுமாறு குளத்தில் நீராடிக் கோயிலுக்குள் சென்றார் என்பதாலும், முனிவரும் கோயில் கட்டினார் என்று கூறாமையாலும், பெருமான் திருப்பெருந் துறைக்கு வருவதற்கு முன்பே மாபெரும் சிவபிரான் கோயில் அங்கிருந்த தென்றறிகின்றோம். ஆகவே, பாண்டியன் தந்த பொருளைக் கொண்டு கோயில் கட்டினார் என்று பெருமான் மீது அடாப்பழி கூறுதல் மாபெரும் பாவமாம் என்று அறிந்து அவ்வாறு கூறுதலைக் கைவிடுவோமாக.

நம் கட்டுரையைச் 'சித்தாந்தத்'தில் கண்ட அன்பர் திரு. பி. கே. குமாரசாமி என்பார். 1982 ஏப்ரல் சித்தாந்தத் தில் 'கோயில் கட்டினார்' என்று எழுதியுள்ளார். அக்கட்டுரை

---

* திருப்பணி என்பது, கோயிற் பூசனைக்குரிய கட்டளை களுக்கும், மற்றுக் கோயிலின் சிறு சிறு பழுது பார்ப்புக் களுக்குமாக இருக்கலாம். கோயில் கட்டும் பணிக்காக இருக்காது. ஆம்! பெரிய கோயில் தான் முன்பே உள்ளதே.

யின் இந்த என் கட்டுரைக்குச் 'சித்தாந்தம்' ஆசிரியர் திரு. மு. அருணாசலம் எம். ஏ., அவர்கள் சித்தாந்தய் 1982 சூலைத் திங்களில், திரு. பி. கே. குமாரசாமி அவர்களின் மறுப்பை யான் மறுத்தெழுதிய கட்டுரை பற்றித் தம் கருத்தை வெளியிட்டுத் தம் தீர்ப்பையுங் கூறியுள்ளார். அவற்றைக் காண்போம்.

சித்தாந்தம் ஆசிரியர் திரு. மு. அருணாசலம் எம். ஏ., மேற்காணும் என் கருத்துக்கள் பற்றித் தம் கருத்துக்களைக் கூறுகின்றார் அவற்றை எல்லாம் யான் மறுக்கப்புகின் அவை பல பக்கங்களாகி விடும். சுருங்கக் கருதி அவர்தம் கருத்துக்களில் உள்ள சில கருத்துக்கள் பற்றி என் விளக்கமாவது :

1. ஆசிரியர் கருத்து :

'மாணிக்கவாசகர் அரசன் குதிரை வாங்கும் பொருட்டுத் தந்த பொருளைக் கொண்டு கோயில் கட்டச் செலவிட்டார் என்று கடவுள் மாமுனிவர் செவிவழிச் செய்தியை நம்பி எழுதி விட்டார்' என்னும் என் கருத்தைக் காட்டி 'இது ஏற்கத்தக்கது அன்று என்கின்றார்'

ஆனால் சித்தாந்தம் 1981 வைகாசி இதழில் 99–ஆம் பக்கத்தின் இறுதிப் பிரிவில் 'கடவுள் மாமுனிவர் .... பாண்டியன் குதிரை வாங்கத் தந்த பொன்னைக் கொண்டு திருப்பெருந்துறையில் திருக்கோயில் பணிகளுக்குச் செலவிட்டார்' என்று தான் நான் எழுதியுள்ளேன், 'கோயில் கட்டச் செலவிட்டார்' என்று எழுதவில்லையே. முனிவர், அவ்வாறு 'கோயில் கட்டச் செலவிட்டார்' என்று தம் புராணத்துள் சொல்லவில்லை. மற்று, அப்புராணத்துள் தம்மையாட் கொண்ட சிவகுருநாதனின் ஆணைப்படியே

அரசன் தந்த பொன்னைச் செலவிட்டார் என்பதனை மேல் இந்நூலுள்,

'பெருந்துறை உறைவார்' (124.)

'தம் பெரு முதல்வர்' (125.)

(கடவுள் மாமுனிவர் அருளிய வாதவூரடிகள் புராணம் பாடல்கள்) என்ற பாடல்களையும், அவற்றின் பொருள்களை யும் எடுத்துக் காட்டியுள்ளேன். அவற்றால் முனிவர் கோயில் கட்டுதல் பற்றி யாதொன்றும் கூறவில்லை என்பது நன்கு விளங்குதல் காண்க!

ஆகவே, ஆசிரியர் யான் கூறாததைக் கூறியதாகக் கொண்டு 'இது ஏற்கத் தக்க தன்று' என்றெழுதி யுள்ளமை பொருந்தாதே.

2. ஆ. க.

சேக்கிழார் பார்க்காது சொல்வதை நம்பக்கூடுமென்றால் .... 'மாமுனிவர், பெருமான், கோயில் கட்டினார்' என்று கூறுவதை நம்புவதில் என்ன தடை?'

என் விளக்கம் :

மாணிக்கவாசகர் வரலாறு பற்றிய நம் நூல் ஆய்வுரையே யாகும். நம்புதல், நம்பாமை பற்றியதல்ல. இதனை ஆசிரி யரே, தம் கருத்துரையில் மேலே 'எண் 1 (ஒன்றில்) நம்பிக் கை வேறு ஆய்வு வேறு என்கிறார்.'முழுமையும் உண்மையே' என்று என் கருத்தை ஒப்புக் கொள்கின்றார். எனவே, அவர் தம் 2-ஆவது, கருத்து முன்னுக்குப் பின் முரணாகின்றது. அதற்கு என் விளக்கம் வேண்டிய தில்லையன்றோ? ஒரு செய்தியை, கதையை ஒருவர் நம்புவதாலும், நம்பாமை யாலும் அவை உண்மையாகி விடாது. அதனாற்றானே

நீதிபதிகள் எதையும் சான்றுகள் கொண்டு ஆய்ந்து முடிவு செய்கிறார்கள். ஆய்வுரை நூல்களின் இலக்கணமும் அது தானே! ஆசிரியர் அதை விட்டு 'சேக்கிழார் பார்க்காது சொன்னதை நம்பக் கூடுமென்றால்' முனிவர், 'கோயில் கட்டினார் என்று கூறுவதை நம்புவதில் என்னதடை?' என்று கேட்பது, சிறந்த ஆய்வாளர் என்று கூறப் பெறும் ஆசிரியர் வினா வியப்பாகுமன்றோ?

3. ஆ. கருத்தின் வினாவின் சுருக்கம்

'மாணிக்கவாசகரும், அப்பரும் தாம் பிறந்த ஊர் திருவாமூர், திருவாத ஊர் என்று அகச்சான்று படக் கூற வில்லையே! அவர்கள் வரலாற்றை யாத்த ஆசிரியர்கள் தாமே கூறுகின்றனர். அவற்றை ஏற்கும் போது அவர்கள் கூறும் வரலாற்றிலுள்ள அனைத்தையும் ஏற்கவே வேண்டும். தள்ளுவது ஆய்வுணர்வுக்குப் பொருந்தாது.'

என் விளக்கம் :

கம்பர், புகழேந்தி போன்ற பெரும் புலவர்களும், இராம லிங்க வள்ளலார், தாயுமானார், சேக்கிழார் முதலாம் தெய்வச் சான்றோர்களும் தாம் பிறந்த ஊர்களைத் தங்கள் நூலில் அகச்சான்று படக் கூறவில்லை. ஆயினும் அவர்கள் பிறந்த ஊர்களை அவ்வவ்வூராரும், பிறஊரவரும் ஒரே வகையில்தான் கூறுவர். பிற நாடுகளிலும் ஆன்றோர் பிறந்த ஊர் பற்றி மாறுபட்ட கருத்தில்லை. ஏசு பெத்தலகேம் என்னும் ஊரில் பிறந்தார் என்றவை உலகறியுமே! இவர்கள் பிறந்த ஊரின் பெருமையை ஊரவர் கைவிடாரன்றோ? இக்காலத்தும் ஆன்றோர், புலவர், அரசியற்றலைவர்கள் பிறந்த ஊர்கள் பற்றி மாறுபட்ட கருத்தில்லையே! ஆகவே, திருவாதவூரர், அப்பர் பிறந்த ஊர்கட்கு அகச்சான்று வேண்டியதில்லையே! ஆகவே ஆன்றோர் பிறந்த ஊர்கட்கு அகச்சான்று வேண்டிய தில்லை! புறச்சான்றே அகச்சான்றாம் என உணர்வோமாக.

ஆகவே, புராணகாரர்கள் கூறும் ஆன்றோர் பிறந்த ஊர்களை ஏற்பதால் அவர் கூறும் வரலாறுகள் யாவும் நிகழ்ந்தவை என்று ஏற்கவேண்டு மென்பது என்ன

முறையோ? அவ்வான்றோர்கள் வரலாற்றை உடனிருந்த சான்றோர் கூறின் ஏற்கலாம். ஆனால் அவ்வான்றோர் காலத்திற்குப் பன்னூறு ஆண்டுகட்குப் பின் வந்த புராணகாரர் கூற்றை எங்ஙனம் ஏற்றல் கூடும்? அவர்கள் திரிபுற்ற செவி வழி வந்த அல்லது நூல்கள் வழி வந்த செய்திகளைச் சான்றில்லாமல் - ஆய்வில்லாமல் ஏற்றல் ஏற்குமா? அவ்வாறு ஏற்பது ஆய்வுணர்வுக்குப் பொருந்தும் என்பது பொருந்தாது என்பதே ஆய்விலக்கணங் கூறும் அறிஞர் கருத்தாம். நீதி மன்றத்தில் ஒரு சாட்சி சொல்வதை முழுவதும் ஏற்க வேண்டு மென்பதில்லை. குறுக்குக் கேள்விகள் கேட்டுப் பொருந்தாதவற்றை ஏற்காது பொருந்தியவற்றை ஏற்பதே சட்ட நூலின் முடிபாகும்; நடை முறையில் உள்ளதும் இதுவே.

இங்ஙனமாக இதனை உணர்ந்தோ, உணராமலோ 'ஆகவே புராணகாரர் கூறும் ஒரு கூற்றை ஏற்கும் நாம் 'கோயில் கட்டினார்' என்ற பிற கூற்றுக்களையும் ஏற்கத் தான் வேண்டும்' என்று எழுதுதல் பெரிதும் வியப்பளிப்பதாம்.

எண் 6. ஆ. க. சுருக்கம்

பெருமானின் அறிவு, விருப்பம், செயல்கள் யாவும் சிவபிரானால் ஆட்கொள்ளப் பெற்றபின் சிவபிரானுடையவை ஆகிவிட்டன. ஆதலின் பெருமான் கோயில் கட்டல் முதலியன யாவும் இறைவன் செயல்களாகி விட்டன. ஆகவே, கோயில் கட்டியது சிவன் செயலாகி அதற்குரிய பொறுப்பு இறைவனையே சாரும் என்பதாகும். (பெருமானைச் சாராது என்பது கருத்து).

என் விளக்கம் :

இறைவனைப் பெருமான் 'நீதியே' என்றாதலின் அவன் நீதி தவறி நடப்பானல்லன். நடந்தால் அவன் குற்றப்படுவான். அப்போது பெருமானுடைய செயலுங் குற்றமாகி விடுமே!

'நன்றே தரினும்
நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்'

என்பது தானே ஆன்றோரியல்பு. அதற்கு மாறாக இறைவனும், பெருமானும் நடப்பர் என்று கனவிலும் கருத முடியாதே! கட்டினேன் என்று பெருமான் வாக்கில் அகச்சான்றில்லை. அவர் வரலாறு கூறும் மூன்று நூல்களிலும் இல்லை. மாறாக அவற்றில் பெருமான் பெருந்துறையை அடையு முன்பே ஆங்குப் பெருங் கோயிலிருந்தது என்பதற்குப் பெருமான் வாக்கிலும் புராண ஆசிரியர்கள் வாக்கிலும் அகச்சான்று, புறச்சான்றுகளை மேலே நூலுள் காட்டினோம். ஆகவே, 'பெருமான் கட்டினார்' என்று கொண்டு சித்தாந்தம் ஆசிரியர் கூறுவன பொருந்தாமை தெளிவாம்.

6-இல் ஆ. கருத்தில் மற்றொரு பகுதியாவது :

'கோயில் கட்டவில்லை என்றால் அரச தண்டனை, துன்புறல், நரிபரியாதல் - வைகை வெள்ளம், பிட்டுக்கு மண் சுமத்தல் முதலிய பல பகுதிகள் பொருளற்றனவாகி விடும்'

என் விளக்கம் :

'புராண ஆசிரியர் மூவரும் பெருமான் காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் பிற்பட்டவர். பெருமான் வரலாற்றை நேரிலறிந்த வருமல்லர். செவிவழியாகக் கிடைத்த செய்திகளே' என்பதை மேலே நூலுள் விளக்கியுள்ளோம். ஆசிரியர் அக்கதைகளை உண்மை எனக் கொண்டு ஆய்வு செய்வது எவ்வாறு பொருந்தும்? பொருந்தாதே! அச்செய்திகள் பெருமானுக்காக நடந்தவை என்பதற்கு அகச்சான்று, புறச்சான்றுகளில்லையே! புராணகாரர் கூறும் இச் செய்திகட்கு அவற்றிற்கான சான்றுகளைக் கூற வில்லையே!

இறைவன் திரிபுரம் எரித்தது, விடமுண்டது, காலனைக் காய்ந்தது, தக்கன் தலையைக் கொய்தது, மண்டை யோட்டில் பிச்சை எடுத்தது, பிரமன் மால் காணாது நின்றது முதலாம் கதைகளைப் பெருமான் பாடுகின்றார். அவற்றின் மூலம் இறைவன்றன் உண்மைத் (தத்துவம்) தன்மையை விளக்கவே என்பதைச் சிறிது அறிவுடையாரும் அறிவர். அதை விட்டு அக்கதைகள் நடந்தனவென்று எண்ணுதல் ஏற்புடையதாகுமோ? இதுபோலத் தான்.

ஆசிரியர் கூறும், பிட்டுக்கு மண் சுமத்தல் போன்ற கதைகள் என்னலாம். இல்லை நடந்ததென்றால் சான்று களில்லையே! இருந்தால் ஏற்கலாம். திருப்பெருந்துறை யில் கடவுளைக் கண்டது, அருள் பெற்றது, நரி பரியானது, இறைவன் பரிமேல் வந்து தம்மை ஆண்டது முதலியவற் றிற்குப் பெருமான் வாக்காம் அகச்சான்றுள்ளன. அவற்றை ஏற்கும்போது இவற்றை ஏற்கலாமே எனின் நம்புவார் நம்பலாம், ஏற்கலாம். ஆனால் அவற்றிற்குச் சான்று களில்லையே!

பெருமான் பெருமைக்கு இச்செய்திகளில்லா விட்டாலும் குறை ஒன்றுமில்லையே! கடவுட் காட்சி, அருள் பெற்றமை திருவாசகப் பெருமறையை அருளியது முதலாம் அரிய செய்திகளே பெருமானின் ஒப்பற்ற உயர்வுக்குப் போது மானவை. கதைச் செய்திகளை வைத்துத்தான் பெருமா னுக்குப் பெருமை என்று கருதுவதால் யாது பயன்? இவை பற்றி எல்லாம் மேலே நூலுள்ளும் விளக்கியுள்ளோம். எனவே, சான்றில்லாக் கதைகளைக் கொண்டு பெருமானின் பெருமையை ஆசிரியர் நிலை நாட்ட முற்படுவது பயனில்லா முயற்சியாம்.

எண் 8. ஆ. க சுருக்கம் :

'கோயில் கட்டவில்லை என்பதற்கு அசைக்க முடியாத சான்று இருந்தாலொழிய, கட்டினார் என்பதுதான் முடிவான நிலை பெற்ற உண்மைச் செய்தி.'

என் விளக்கம் :

‘திருப்பெருந் துறைஉறை
கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதுங்
காட்டிவந் தாண்டாய்’

— திருப்பள்ளி எழுச்சி.

‘நின்கோயிலில் பிச்சன் ஆக்கினாய்’

ஆனந்தா தீதம்.

‘தீட்டார் மதில்புடைசூழ்
தென்னன் பெருந்துறையான்’

திருவம்மானை.

‘தேரார்ந்த வீதிப்
பெருந்துறையான் .....’

திருப்பூவல்லி.

பெருமானின் அகச்சான்றான இப்பாடல் வரிகளால் பெருமான் திருப்பெருந்துறைக்கு வருமுன்பே அங்குக் கோயிலிருந்ததும், பெருமான் அதில் தம்மை ஆட்கொண் டமையும் கூறியுள்ளார்.

பெருமான் வரலாற்றைக் கூறும் மூன்று நூல்களும் அங்கு முன்பே கோயிலுள்ளமை கூறிப் பெருமான் அதனுள் சென்று அருள் பெற்றார் என்கின்றனர்.

மேலும், அந்நூல்களில் ‘பெருமான் கோயில் கட்டினார்’ என்று கூறப்படாமை மேல் இந்நூலுள்ளும் ‘சித்தாந்தத்தின்’ கட்டுரைகளிலும் காட்டப்பட்டுள்ளன. ஆசிரியர் அவற்றைப் பாராமலிருக்க முடியாது. பார்த்தும் இப்படி அசைக்க முடியாத சான்றுகளைக் காட்டி இருந்தும் ‘கட்டினார் என்று தீர்ப்பளிப்பது ஏனோ? இஃது ஆசிரியத் தன்மைக்கு அழகா?

ஆசிரியர்தாம் 'பெருமான் கோயில் கட்டினார்' என்பதற்கு அசைக்க முடியாத சான்று காட்ட வேண்டுமே அன்றி, 'கட்டவில்லை' என்று கூறும் யான் சான்று காட்டவேண்டிய தில்லை' என்று வழக்கறிஞர்கள் கூறுகின்றனர். இம்முறை தான் சட்ட நூல் விதியாம். இதனை ஆசிரியர் அறியார் போலும்!

9. ஆ. க. 'இவ்வளவும் வேண்டாத ஆராய்ச்சி. இதுபற்றிய விவாதம் இதனொடு முடிவுறும்'

என் கருத்து :

ஆராய்ச்சிக்குத் தடைபோடும் ஆசிரியர் எழுதுவன யாவும் ஆராய்ச்சிகள் தாமே! அவற்றைக் கைவிடாத ஆசிரியர் பிறர் ஆய்வுகளுக்குத்தடைபோடுதல் பொருந்துமா? இதுவா ஆசிரியர் உரிமைத் தன்மை? இலக்கணம்? அறிஞர் களே! சைவ சித்தாந்தப் பெருமன்றத்து உறுப்பினர்களே! உங்கள் தீர்ப்பைக் கூறுமாறு வேண்டுகின்றேன்.

சித்தாந்தம் 1982 சூலை இதழில் 'மாணிக்கவாசகர் கோயில் கட்டவில்லை' என்ற என் கட்டுரையில் '......என் கருத்துக்களை விளக்கிப் புறச்சான்று, அகச்சான்றுகளைக் காட்டியும், மற்றும் பெருமானின் வரலாற்றை முழுமையாக ஆய்வு செய்தும் 'மாணிக்கவாசகர் வரலாற்றாய்வுரை' என்னும் நூலைச் சென்ற பங்குனித் திங்களில் எழுதி முடித் துள்ளேன். இந்நூல் துந்துபி ஆண்டின் இறுதிக்குள் அம்பலவாணர் அம்மை அருளால் வெளியாகும். அதிலும் 'பெருமான் கோயில் கட்டவில்லை' என்று சான்றுகள் காட்டி எழுதியுள்ளேன். அறிஞர்கள் அந்நூலைக் காண்பார் களாக என்று வேண்டுகின்றேன். அதன்பின் பெருமான் கோயில் கட்டினாரா? இல்லையா? என்பனவாம் தம் கருத்துக்களைச் சான்றுகளுடன் கூற வேண்டுகின்றேன்' என்ற என் வேண்டுகோளை ஆசிரியர் பொருட்படுத்தாமை ஏனோ?

திருப்பெருந்துறைக் கோயில் வரலாற்று ஆய்வு

'தமிழகக் கோயிற் கலைச் செல்வர்'
தி. இராசமாணிக்கம், பி. ஏ., பி காம்.,
விசாரத் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் (ஓய்வு)
23, கல்யாண்ஜி மில் வீதி, பொள்ளாச்சி
கோவை மாவட்டம்.

'வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம் திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மணமும் கரைந்து கண்கள்தொடு மணற் கேணியிற் சுரந்து நீர்பாய மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப் பெய்தி அன்பர் ஆகுநரன்றி மன்பதை உலகில் மற்றையுர் இலரே.' என்பர் சிவப்பிரகாசர்.

'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது உலக வழக்காக வழங்குவது. தீந்தமிழில் தித்திக்கும் திருவாசகத்தை அருளிய மணிவாசகப்பெருமான் ஞானப்பேறு பெற்ற தலம் திருப்பெருந்துறை. தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியினின்றும் 14 கிலோ மீட்டர் தொலைவில் இவ்வூர் உள்ளது.

மக்கள் பிறவிப் பெருங்கடலை நீந்திப் பிறப்பு இறப்பு இல்லாப் பெம்மானை நினைத்து இன்ப நிறைவாய் மகிழு மாறு திகழும் பெருந்துறையாக விளங்குவதால் திருப்பெருந் துறை எனப்பெயர் பெற்றது போலும். ஏனைய சிவன் கோயிலின் கருவறையில் இறைவனின் இலிங்கத் திருவுரு இல்லாது ஆவுடையார் என்ற இருக்கை (பீடம்) மட்டும் இருப்பதால் இஃது ஆவுடையார் கோயில் எனவும் வழங்கப் பெறுகிறது. இந்த ஊர் பவித்திர மாணிக்க சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டது எனவும் தெரிகிறது. ஞாயிற்றின் ஒளி, உயிர்கள் உலகில் வாழ இன்றியமையாதது. கதிர்ச் செல்வன் கிழக்கில் தோன்றுகின்றான். எனவே உயிர்களின் நல் வாழ்விற்காக அமைந்த கோயில்கள் பொதுவாகக் கிழக்கு நோக்கிக் கட்டப்படுகின்றன. ஆகம விதிகளின்படி கோல

வெண்ணீற்றானின் கோயில் கிழக்கு வடக்கு நோக்கி இருக்கலாம். வெல்போர்க் கொற்றவையின் கோயிலை தெற்கு நோக்கி அமைப்பதற்கு விதி உண்டு ஏனைய சிவன் கோயில்களினின்று மாறுபட்டு ஆங்குள்ள கோயில் தெற்கு நோக்கி உள்ளது இதன் தனிச் சிறப்புகளின் ஒன்றாகும்.

கோயிலின் நுழைவாயிலின் முன் மண்டபத்தில் உள்ள தூண்களில் பிச்சை உகக்கும் பெம்மான் (சிவபெருமான்) வடிவம் காணப்படுகிறது. ஆகம விதிகளுக்கு மாறுபட்டு இந்த வடிவும் கோவணத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இதை அடுத்து இவ்வடிவம் தனக்கே உரிய தாண்டவம் ஆடிய நிலையில் 8 கைகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. அடுத்து ஆடவல்லானுடன் போட்டியிட்டு தோற்ற காளி 12 கைகளுடன் காணப்படுகிறாள். கடைசியில் தன் வல்லுகிரால் (நகம்) வல் அவணன் (இரணியன்) வயிற்றைக் கீறிய உக்ர நரசிம்மன் 10 கைகளுடன் உள்ளான்.

கீழ்ப்புறத்தில் தமிழர்களின் தனிப் பெருங் கடவுளாம் முருகன் தன் ஊர்தியான மயிலின் மீது எழிலாக அமர்ந்து இருக்கின்றான். அதை அடுத்துக் கறைக்கண்டன் தன் காளையுடன் காணப்படுகிறான். அடுத்து திருமால் 4 கைகளுடன் அமைக்கப்பட்டுள்ளான்.

மண்டபத்தினைக் கடந்தால் ஆயிரங்கால் தூண்களில் அகோர வீரபத்திரர், இரண வீரபத்திரர் உள்ளனர். மண்டபத்தின் மேல் பாகத்தில் கிழக்கு நோக்கி மணிவாசகப்பெருமான் திருமுன் (சந்நிதி) உள்ளது. முதல் திருவாயிலில் அதிகார நந்தி உள்ளது.

'மற்றவர்க்கு எல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையிற் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினாற் பெற்றான்
காப்பதக் கயிலை மால்வரைதான்.'

என்ற சேக்கிழார் பெருமான் திருவாக்கின்படி, கயிலை

மலையைக் காப்பவர் இவரே. எனவே, கோயில் வாயிலில் இவர் அமைக்கப்பட்டுள்ளார். இந்தக் கோயிலில் விடை உருவில் நந்தி பெருமான் இல்லை; இங்குள்ள மணிவாசகப் பெருமானே நந்தியம் பெருமானாகக் கருதப்படுகிறார். இந்த மண்டபத்தின் முன்புறத்தில் உள்ள இருதூண் கருங்கற்களால் முறுக்கேறிய கடிவாளங்களை இழுத்துப் பிடித்துக் கொண்டு குதிரைகள் மீது அமர்ந்துள்ள வீரர்கள் காணப்படுகின்றனர்.

வீரபத்திரர் சிலைகளுக்கு எதிர் வரிசையில் தெற்கு நோக்கி வாயிற்காப்போர் இருவர் அமைக்கப்பட்டுள்ளனர். 4 கைகளும் கோரைப் பற்களும் கொண்ட அவர்களது காலடியில் சிங்கங்கள் காணப்படுகின்றன. கீழ்ப்புறமாக உள்ள தூணில் ஓர் உடம்பு 3 தலைகள் கொண்ட கீரியின் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. மேற்புறமாக உள்ள தூணில் நங்கை நல்லாள் ஒருத்தியைக் கைகளால் தூக்கிய நிலையில் ஒருவன் காணப்படுகிறான். அவன் அணிந்துள்ள காலணி தற்காலப் பாணியில் (Boots) உள்ளது காணத் தக்கது. இத்தகைய வடிவம் பெரிய அளவில் திருநெல்வேலி மாவட்டத்தில் கி. பி. 1546 முதல் 1572 வரை ஆண்ட கிருஷ்ணப்ப நாயக்கரால் கட்டப் பெற்ற கிருஷ்ணபுரம் கோயிலில் காணப் பெறுகிறது.

இந்த மண்டபத்தைச் சுற்றி நான்கு புறங்களிலும் 2 அடி அகலமுள்ள கொடுங்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை நான்கு புறங்களிலும் நான்கு விதமாக உள்ளன. இங்கு உள்ள பல மண்டபங்களில் காணப்படும் கொடுங்கைகள் தான் இந்தக் கோயிலின் தனிப் பெருஞ் சிறப்பாம். 'மாணிக்க வாசகர் மண்டபம்' 'பெரிய மண்டபம்' என்னும் இந்த மண்டபத்தின் உண்மையான பெயர் இரகுநாத பூபால மண்டபம் என்பது. இரகுநாத பூபாலனின் உருவமும், பெயரும் இங்குக் காணப் பெறுகின்றன.

இரகுநாத பூபால மண்டபத்தை அடுத்துக் கோயிலை அணி செய்யும் கோபுரம் உள்ளது. கோபுரத்தில் உள்ள 5 நிலைகளும் 'நமசிவாய' என்ற ஐந்து எழுத்தைக் (பஞ்சாட்சரம்) குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. கோயில் 3 திருச் சுற்றுக்களைக் கொண்டது.

வெளித் திருச்சுற்றின் மேல் புறத்தில் 'வெயில் உவந்த விநாயகர்' எழுந்தருளியுள்ளார். 'நிலவு உவந்த முடியினோடு வெயிலுவந்த மழகளிறு' என இவரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் போற்றிப்பாடியுள்ளார். அடுத்து, 'திருத்தமாம் பொய்கை' உள்ளது

திருச்சுற்றின் மேல் கோடியில் சிற்பக் கலையுலகில் புகழ் பெற்ற 'தியாகராச மண்டபம்' உள்ளது. இங்கும் மண்டபத்தின் நுழைவாயிலைக் கல்லாலான முறுக்குக் கயிற்றினால் பிணைக்கப் பெற்ற குதிரை மீது அமர்ந்துள்ள வீரர்களைக் கொண்ட தூண்கள் அழகு செய்கின்றன. மேல் விதானத்தில் நடுவில் தாமரைப்பூ உடன் 12 இராசிகள் கொண்ட சதுர அமைப்பு காணப்படுகிறது. இவ்விராசிகள் ஒவ்வொன்றில் இருந்தும் கற்சங்கிலிகள் தொங்குகின்றன. இவை ஒரே கல்லில் ஒன்பது அங்குல வட்டத்தில் வளையம் ஒன்றில் ஒன்றாகப் பிணைத்துத் தொடரும் திறம், சிற்பியின் கலைத் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

நுழை வாயிலை அடுத்து மணிவாசகப் பெருமான் அமைச்சர் கோலத்திலும், அவரை அடுத்து முத்துவிநாயகரும், அவருக்கு எதிரில் மகாலிங்க மூர்த்தியும் காணப்படுகின்றனர். இந்தக் கோயிலில் உள்ள தூண்களின் மேற்புறத்தில் அமைக்கப் பட்டுள்ள சிங்கங்களின் வாயினின்றும் மனிதன் குதிப்பது போன்ற உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. மண்டபத்திற்கு முன்னால் மேல் விதானத்தின் நடுவில் தாமரை மொட்டும் அதைச் சுற்றிலும் நடனப் பெண்களும் கொண்ட சதுர அமைப்பு உள்ளது.

மண்டபத்தின் முன்னால் உள்ள தூண்களில் கரும்பு வில்லும் மலர் வாளிகளும் கையில் ஏந்திய உருவிலாளனாகிய மன்மதனும், கிளியின் மீது அமர்ந்துள்ள அவனது வாழ்க்கைத் துணைவியான இரதிதேவியும் உருவாக்கப்பட்டுள்ளனர். இரதியின் சடையின் பின்னல் அழகுற அமைந்துள்ளமை காண வேண்டிய ஒன்று. இந்த மண்டபத்தில் காணப்படும் கொடுங்கைகளின் அமைப்பு நம் முன்னோர்களின் கலைத் திறமைக்குச் சான்று பகர்கின்றது. முறுக்குக் கம்பி, பட்டைக் கம்பி, திற்னைக் கம்பி என ஆறு வேறு வேறு வகையான

வற்றைக் குறுக்காக வைத்து, அதன்மேல் உலோகத்தகடு போர்த்தது போன்று கருங்கல்லில் உருவாக்கப்பட்டுள்ள கை புனைந்து இயற்றிய கலை வண்மை கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கன. இக் கொடுங்கைகளில் பல திறப்பட்ட பூங்கொடிகள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தகைய சிற்பக்கலை நுட்பங்களைக் கொண்ட கொடுங்கை தமிழகத்தில் வேறு எந்தக் கோயிலிலும் இல்லை. 4 அடி அகலம் 1 அடி கனம் கொண்ட கற்களைக் கொண்டு இவற்றை உருவாக்கி இருக்க வேண்டும். இது,

'திறமான புலமையெனில் வெளி நாட்டார்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.'

என்ற தேசிய மகாகவி பாரதியார் வாக்குப்படி, ஜேம்ஸ் பெர்கூசன் போன்ற வெளிநாட்டு சிற்பக்கலை வல்லுநர்களால் பாராட்டப் பெற்றது. அக்காலத்தில் சிற்பிகள் கோயில் கட்ட எழுதிக் கொடுக்கும் ஒப்பந்தத்தில் 'தாரமங்கலம் தூண்கள், திருவலஞ்சுழி பலகணிகள், ஆவுடையார் கோயில் கொடுங்கைகள் நீங்கலாக செய்து கொடுப்போம்' என்று எழுதிக் கொடுப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இதனால் இங்குள்ள கொடுங்கைகளின் நுண்ணிய வியத்தகு வேலைத் திறமையை உணர்ந்து கொள்ளலாம். இங்குள்ள கொடுங்கைகள் கல்லால்தான் செய்யப்பட்டனவா என்பதைக் கண்டறிய வெள்ளையன் ஒருவன் துப்பாக்கியில் சுட்டுப் பார்த்ததாகவும், அதன் அடையாளமாகக் கொடுங்கைகளில் துவாரங்கள் உள்ளன என்றும் செவிவழிச் செய்தி ஒன்று நிலவுகிறது.

இந்த மண்டபத்தின் பெயர், 'இராசகோபாலப் பெருமாள்' எனக் கல்வெட்டில் காணப்படுகிறது. அச்சுத பூபால மண்டபம் என்றும் இந்த மண்டபம் அழைக்கப் பெற்றதாகக் கல்வெட்டினின்றும் தெரிய வருகிறது. இம் மண்டபத்தினை யொட்டித் திருச்சுற்றில் வடபுறமாகத் தலமரமான குருந்தமரம் உள்ளது.

மூன்றாவது திருச்சுற்றின் முன்புறத்திலுள்ள பஞ்சாட்சர மண்டபம், 'கனக சபை' என்றும் கூறப்படும். இங்குள்ள தூண்கள் ஒன்றில் குதிரைச்சாமி வடிவம் இருக்கும் காரணத்தால், இது குதிரைச்சாமி மண்டபம் என்றும் அழைக்கப் பெறும். மணிவாசகப் பெருமான் தமது திருவாசகத்தில்,

'குதிரைச் சேவகன்
ஆகிய கொள்கையும்'

என்றும்,

'சீரார் பெருந்துறையான்
பந்தம் பரியப் பரிமேற் கொண்டான்'

என்றும்,

'கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி'

என்றும்,

'பள்ளிக் குப்பாயத்தர்பாய் பரிமேல் கொண்டுஎன்
உள்ளங் கவர்வரால்'

என்றும்,

'நற்பரிமேல் வருவானை'

என்றும்,

'பரிமிசை வந்தவள்ளல்'

என்றும்,

'பரிமேற் கொண்ட சேவகனார்'

என்றும்,

'கதிரை மறைத்தன்ன சோதி
கழுக்கடை கைப் பிடித்து
குதிரையின் மேல் வந்து'

என்றும்,

'ஆடல் அமர்ந்த பரிமாவேறி
ஐயன் பெருந்துறை ஆதி'

என்றும்,

'காட்டகத்து வேடன்கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன்'

என்றும் அருளியதற்கு ஏற்ப, 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றும் இல்லா' இறைவன் குதிரை மீது அமர்ந்து அமைக்கப்பட்டுள்ளான். நரியைப் பரியாக்கியவன் என்பதற்கேற்ப நரியின் உருவும் இதில் செதுக்கப்பட்டுள்ளது. குதிரைச்சாமியை அடுத்து, பாண்டிய மன்னனும், எதிரில் உள்ள தூணில் மணிவாசகப் பெருமானும் காணப்படுகின்றனர். பஞ்சாட்சர மண்டபத்தின் 2 அடி நீளமுள்ள கொடுங்கையில் பட்டை, உருண்டை, மற்றும் முறுக்குக்கயிறு போன்ற மூன்று அமைப்புகள் குறுக்காகக் காணப்படுகின்றன.

பஞ்சாட்சர மண்டபத்தின் மேற்புறமாக சிவானந்த மணிவாசகரின் திருமுன் உள்ளது. ஒன்பான் கோள்கள் இங்குத் தனியாக இல்லை. தஞ்சைப் பெரிய கோயில், திருநெல்வேலி மாவட்டம் திருவாலீசுவரம் கோயில் போன்ற முற்காலச் சோழர்களின் கோயில்களில் சனியின் திருமுன் மட்டுமே உள்ளது. ஏனைய கோள்கள் அமைக்கப்படவில்லை. பிற்காலக் கோயில்களில் இவை தனியாக உள்ளன. இந்தக் கோயிலில் மணிவாசகர் திருமுன் உள்ளது தூண்களில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது திருச்சுற்றில் முன்புறத் தூண்களில் சேதுபதி மற்றும் சிவகங்கைக் குறுநில மன்னர்களின் உருவங்கள் உள்ளன. இது நடனசபை என்று சொல்லப்படுகிறது. மேற்புறத்தில் அண்ணலும் அன்னையும் பார்த்தனுக்காகப் 'பாசுபதம்' என்னும் படைக்கலம் அளிக்க எடுத்த வேட்டுவக்கோலம் காணப்படுகிறது. திங்களை முடிமேல் அணிந்தானின் கொண்டையும், சடையின் பின்னலும், பின்னலில் கடைசியில் உள்ள முடிச்சும், மலையரையன்பாவை வேடிச்சியாக அணிந்துள்ள பல திறப்பட்ட அணிகலன்களும்

காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். வேடிச்சி யின் கையில் உள்ள கூடை, கல்லா அல்லது பிரம்பா எனக் காண்போரை ஐயத்தில் ஆழ்த்துவதாக உள்ளது. கீழ்ப் புறத்தில் சோமாசி மாற நாயனாருக்காக இறைவனும் இறைவியும் எடுத்த புலையன், புலத்தியர் வடிவங்கள் காணப்படுகின்றன. காலனைக் காலால் காய்ந்தவன் மற்றும் பண் நிலாவிய மொழி அம்மையின் தலைகளில் காணப்படும் கொண்டையின் விரிப்புகளின் கலை மாண்பினைக் காண 'நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான் முகனே' என்று அருணகிரிநாதர் மொழிந்தது போன்று கூறினால், அது சற்றும் மிகையாகாது. இறைவன் முகத்தில் உள்ள கிருதாமீசையும், கையில் கொம்பும் இயற்கையாக உள்ளன. இங்குள்ள தூண்கள் இரண்டில் ஒன்றில் பாண்டியன் மணி வாசகப் பெருமானை வணங்குவது போன்ற கோலமும், எதிர்த்தூணில் மணிவாசகப் பெருமானின் துறவிக்கோலமும் காணப்படுகின்றன. துறவுக் கோலத்தில் தலை மொட்டை அடிக்கப்பட்டு, உருத்திராக்க மாலை சுற்றி அணியப்பட் டுள்ளது. இங்குள்ள கொடுங்கைகள் இரண்டு பட்டைகளைக் குறுக்காகக் கொண்டன. மேலும் தியாகராச மண்டபத்தில் உள்ள கொடுங்கைகளில் பூங்கொடிகள் அமைக்கப்பட்டிருக்க, இங்குள்ளவற்றில் பூக்கள் தனித் தனியாகக் காணப்படுகிறது.

இரண்டாவது திருச்சுற்றில் மேற்புறத்தில் எண்ணெய்க் கிணறு உள்ளது. அன்பர்கள் தாங்கள் இறைவனுக்கு வேண்டிக் கொண்டதற் கிணங்க எண்ணெய் கொண்டு வந்து இந்தக் கிணற்றில் ஊற்றுவார்கள். அது இறைவனது பூசனைக்குக் கொள்ளப் பெறும்.

முதல் திருச்சுற்றில் அன்னை யோகாம்பிகையின் திரு முன் தெற்கு நோக்கி உள்ளது. அதற்கு எதிரில் மணிவாசகப் பெருமானின் திருமுன் வடக்கு நோக்கி உள்ளது. இது தேவ சபை எனப்படும் மணிவாசகப்பெருமானின் திருமுன், 'அருள் மூலஸ்தானம்' என்றும், அவரது திருவுரு, திருவருளால் கிடைக்கப் பெற்ற மூர்த்தி என்றும் வழங்கப் பெறுகிறது. ஏனைய சிவன் கோயில்களில் உள்ளது போன்று, இங்குச் சண்டிகேசுவரர் திருமுன் இல்லை. மாணிவாசகப் பெருமான் தான் சண்டிகேசுவரர். அன்னையின் திருமுன்பில் (சந்நிதி)

திருவுரு ஏதும் இல்லை. நூறுஇதழ் கொண்ட தாமரை இருக்கை (சததள பத்மபீடம்) மட்டுமே உள்ளது. பொன்னாற் செய்த அன்னையின் இரு பாதுகைகள் அதன் மீது வைக்கப்பட்டுள்ளன. திருமுன் பின்பகுதியில் உள்ள பலகனி மூலம் தான் அன்பர்கள் தாமரை இருக்கையைக் காண வேண்டும். இங்குள்ள தூண் ஒன்றில் உடல் ஒன்றும் தலைகள் மூன்றும் கொண்ட சிங்கத்தின் வடிவம் உள்ளது.

அன்னையின் சந்நிதியின் முன்புறம், அண்ணலின் கருவறையை ஒட்டி 8 கைகளுடன் வீரபத்திரர் மேற்கு நோக்கி உள்ளார். ஆகம விதிகளின்படி வீரபத்திரர் அச்சத்தை அளிக்க வாயில் கோரைப் பற்களுடன் அமைக்கப் பட வேண்டும். ஆனால் அப்படி இல்லை சப்த மாதர்களுடன் அமைக்கப்படும் வீரபத்திரர் முகத்தில் மட்டும் சாந்தம் தவழ வேண்டும். இங்குச் சப்த மாதர்கள் வடிவங்கள் இல்லாது இருப்பினும், வீரபத்திரர் அமைதி கொண்டவராகக் காணப் படுகிறார். அன்னையின் திருமுன்பிற்குக் கிழக்கிலும் அண்ணலின் கருவறைக்கு வடக்கிலும் தல மரமான குருந்தம் கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் கங்கைவார் சடைக் கரத்தான் உரு தெற்கு நோக்கி இருக்க, மணிவாசகப் பெருமான் வடக்கு நோக்கி ஆன்மீக அறிவுரைகளைக் கேட்பது போன்று காணப்படுகிறார். ஆடவல்லான் வடிவம் சிவன் கோயில்களில் பொதுவாக உலோகத்தில் அமைந்து இருக்கும். இங்குக் கல்லில் காணப் பெறும் ஆடவல்லான் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளான்.

கருவறைக்கு முன்னால் மேடை மண்டபம் ஒன்று உள்ளது. இது சத் சபை என்று கூறப் பெறுகிறது. கருவறைக்கும் சத் சபைக்கும் இடையில் உள்ள அந்தராளம் என்னும் பகுதி சித் சபை என்றும், அதை அடுத்த கருவறை ஆனந்த சபை என்றும் அழைக்கப் பெறுகின்றன.

இறைவனது இயல்பை,

'இன்னஉரு இன்னநிறம் என்று அறிவதேல் அரிது'

எனத் திருஞானசம்பந்தப் பெருமானும்,

'இன்ன உரு என்று அறிவொண்ணாதான்'

என அப்பர் பெருமானும்,

'இன்னது என்று அறியாத தேனை'

என மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்துள்ளனர். அவர்களது திருவாக்குகளுக்கு ஏற்ப, ஏனைய கோயில்கள் போலன்றி, இங்குக் கருவறையில் இறைவனது உருவம் இல்லை. ஆவுடையார் என்ற இருக்கை மட்டுமே உள்ளது. அதன்மேல் பொற் குவளை வைக்கப்பட்டுள்ளது. இறைவனது திருநாமம் 'ஆத்ம நாதர்' என்பது. ஏனைய கோயில்கள் போன்று இங்குக் கொடிமரம், காளை இல்லை. கோயிலுக்கு எதிர்ப்புறம் உள்ள குளக்கரையில் துதிக்கையுடன் 11 கைகள் கொண்ட விநாயகருடைய சிறிய கோயில் உள்ளது. ஆகம விதிகளின்படி இத்தகைய வடிவம் மகாகணபதி எனப்படும்.

இங்கு இறைவனுக்குப் படைக்கப்படும் அமுது ஏனைய கோயில்களினின்றும் வேறுபட்டுள்ளது. பகலிலும், இரவிலும் புழுங்கல் அரிசிச் சாதம் ஆவியுடன் சத் சபையில் உள்ள மேடை மீது அன்பர்கள் முன்னிலையில் படைக்கப்படுகிறது. பகலில் முளைக்கீரையும், இரவில் பாகற் காயும் சமைத்துப் படைக்கப்படுகிறது. உடல் நலம் குறித்துப் பல் வேறு பொருள்களை விலக்கக் கூறும் மருத்துவர் கீரையைத்தினமும் உட்கொள்ள ஆலோசனை கூறுவார். அது போன்றே பாகற்காயையும் உணவில் சேர்க்க வற்புறுத்துவார். இவ்வாறு உடல் நலத்திற்கு உறுதுணையாக உள்ள பொருள்களை இறைவனுக்குப் படைப்பது குறிப்பிடத் தக்கது. மேலும் இறைவனுக்குக் காட்டப்படும் கற்பூர ஒளி கருவறையின் உள்ளேயே வைக்கப்படுகிறது. ஏனைய கோயில்கள்போன்று, அன்பர்கள் வணங்கக் கற்பூர ஒளி வெளியில் கொண்டு வரப் படுவதில்லை. இறைவிக்கும் மணிவாசகப் பெருமானுக்கும் ஒரே சமயத்தில் கற்பூர ஒளி காட்டப் பெறுகிறது.

'பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்'

எனக் கூறப் போந்த தமிழ் மூதாட்டி ஔவையார்,

'இறைவரோ தொண்டருள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'

என்றார். தொண்டர், எல்லாம் வல்ல இறைவனினும் பெரியவர் என வலியுறுத்துகின்றார், ஆழ்வார்களில் சிறந்தவராகிய நம்மாழ்வார்,

'தொண்டர் தொண்டர் தொண்டர்
தொண்டன் சடகோபன்'

என்று தன்னைக் குறிப்பிடுவதின் வாயிலாகத் தொண்டரின் சிறப்பைச் சுட்டிக் காட்டுகிறார். தொண்டர்தம் பெருமையை விளக்க எழுந்தவை தான் ஆளுடைய நம்பிகளின் 'திருத் தொண்டர் தொகையும்'. அதன் வழி நூலான நம்பியாண்டார் நம்பிகளின் 'திருத்தொண்டர் திருவந்தாதியும்', அதன் சார்பு நூலான சேக்கிழார் பெருமானால் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப் பெற்ற திருத்தொண்டர் புராணமும் ஆகும்.

'கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ்செம் பொ(ன்)னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.'

என்றெல்லாம் தொண்டர்களின் சிறப்பு, தொண்டர் புராணத்தில் பேசப் பெறுகிறது. அத்தகு பெருமை மிக்க தொண்டருக்குச் சிறப்பிடம் அளிக்கும் கோயில் 'திருப்பெருந்துறையாம்'. இங்கு மணிவாசகப் பெருமானுக்குத் தான் முதலிடம் அளிக்கப் பெறுகிறது. நந்திகேசுவரரும், சண்டிகேசுவரரும் மணிவாசகர்தான். இறைவனின் திருவீதி நாயகர் (உற்சவ மூர்த்தி) வடிவங்கள் இல்லை. மணிவாசகப் பெருமானின் எழுந்தருளும் மேனிகளுக்குத்தான் (உற்சவ மூர்த்தி)எல்லாத் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. அவரது திருவீதி நாயக வடிவம்தான் திருவிழாக் காலங்களில் திருவீதிகளில் காட்சி அளிக்கின்றது.

மணிவாசகப் பெருமானின் காலம் பற்றி இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவர் கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர் சிலர். வேறு சிலர் இவர் 9—ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பர். மணிவாசகப் பெருமான் தமது திருச்சிற்றம்பலக் கோவையில்,

'வரகுணன் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்'

என்றும்,

'இருங்களியானை வரகுணன்'

என்றும் பாண்டியப் பேரரசன் வரகுண மகாராசனை ஈர் இடங்களில் குறிப்பிட்டுள்ளார். வரகுண மகாராசன் பாண்டிய நாட்டில் கி. பி. 792 முதல் 835 வரை கோலோச்சியவன். எனவே மணிவாசகப் பெருமானை 9 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதலாம்.

தமிழகத்தில் ஆலய வழிபாடு பண்டை நாள் தொட்டு இருந்து வந்துள்ளது. இதற்கு இலக்கியச் சான்றுகள் பல உள்ளன எடுத்துக் காட்டாக மலை படுகடாம் என்ற சங்க நூலில்,

'உயர்நிலை மாக்கல்புகர் முகம் புதைய
மாரியின் இகுதருவில்லு மிழ்கடுங்கணைத்
தாரொடு பொலிந்த வினைநவில் யானைச்
சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ இலஞ்சி
ஓரியாற்று இயவின் மூத்தப் புரிசைப்
பராவரு மரபின் கடவுள்.'

என்று கூறப்பட்டுள்ளது. நவிர மலையில் வணக்கத்திற்குரிய கடவுள் எழுந்தருளியுள்ள திருக்கோயில் பழைய மதிளை உடையது. அதன் உச்சியில் ஒளி திகழும் பூத் தொழில் செய்யப் பெற்றுள்ளது. ஆற்றின் வழியில் உள்ள அந்தக் கோயில் பகைவரின் கடுங்கணைகளுக்குப் புறங்கொடாத யானைப் படையைக் கொண்டது.

'கூடஞ்சூழ் மண்டபமுங்குலாய வாசற்
கொடி தோன்றும்
மாடஞ்சூழ் மணிக் கோயில்'

என்றும்,

'கோபுரஞ்சூழ் மணிக் கோயில்'

என்றும், திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்துள்ள மையால் அற்றை நாட் கோயில்கள், கூடம், மண்டபம், கொடிமரம், மாடம், கோபுரம் ஆகியவற்றைக் கொண்டன என்பது தெரிகிறது.

'குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன கோயில்கள்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை கோட்டமும்'

என்று மணிமேகலையில் குறிப்பிட்டாற் போன்று, செங்கல் மற்றும் மரம் ஆகியவற்றால் கட்டப் பெற்றவையாம். தென் ஆர்க்காடு மாவட்டம் மண்டகப்பட்டில் உள்ள முதல் குடைவரைக் கோயிலில், மரம், செங்கல், உலோகம் ஆகியவையின்றி மும்மூர்த்திகளுக்குக் கோயில் கட்டியதாகக் கி. பி. 600 முதல் 630 வரை ஆண்ட விசித்திரசித்தன் என்ற பல்லவப் பேரரசன் முதல் மகேந்திரவர்மன் பெருமிதம் கொள்வது இதை உறுதிபடுத்துகிறது. மரம் செங்கல்லால் கட்டப் பெற்ற அற்றை நாள் கோயில்கள் இன்று இல்லாமைக்குக் காரணங்கள் இரண்டு :

1. அவற்றால் காலத்தை எதிர்த்து நிற்க இயலவில்லை.

2. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கற்றளிகள்

(கருங்கல்லாலான கோயில்கள்) கட்டத் தொடங்கிய பின், மண்தளிகள் (செங்கல்லாலான கோயில்களை) கற்றளிகளாக மாற்றப்பட்டன. எடுத்துக் காட்டாக, கி. பி. 949 முதல்

957 வரை ஆட்சி புரிந்த சோழ மன்னன் சிவஞான கண்ட ராதித்த சோழனின் தேவி செம்பியன் மாதேவியால் திருநல்லம், திருக்கோடிக்கா, திருமணஞ்சேரி, திருவக்கரை ஆகிய கோயில்கள் கற்றளிகளாக அமைக்கப் பெற்றன. கி. பி. 660 முதல் 680 வரை செங்கோலோச்சிய பல்லவப் பேரரசன் முதல் பரமேச்வர வர்மனால் தமிழகத்தின் முதற் கற்றளி கூரத்தில் கட்டப் பெற்றது.

தமிழகக் கோயிற் கலையை நன்கு ஆராய்ந்த பிரெஞ்சு நாட்டுப் பேராசிரியர் 'ஜோவியோ தூப்ரே' என்பார் தமது 'தமிழகக் கோயிற் கட்டிடக்கலை' என்ற நூலில் இதை ஐம் பெரும் பாணிகளாகப் பகுத்துக் கூறியுள்ளார். அவை :-

1. பல்லவர்கள் பாணி கி.பி. 600 முதல் 850 வரை குடை வரைக் கோயில்கள்.

2. முற்காலச் சோழர்களின் பாணி கி. பி. 850 முதல் 1100 வரை அற்புதமான மிகப் பெரிய விமானங்கள்.

3. பிற்காலச் சோழர்களின் பாணி கி. பி. 1100 முதல் 1350 வரை வானளாவிய வேலைத் திறமை மிக்க கோபுரங்கள்.

4. விசய நகரப் பாணி கி. பி. 1350 முதல் 1600 வரை. கல்யாண மண்டபங்களும் ஆயிரங்கால் மண்டபங் களும்.

5. தற்காலப் பாணி கி. பி. 1600 முதல் தற்காலம் வரை மிகப் பெரிய திருச்சுற்றுகள்.

குறிப்பிட்ட மன்னர்களால் கட்டப் பெற்ற கோயில் களில் பிற்கால மன்னர்கள் இறைவனுக்குத் தாங்கள் ஆற்றும் பணியாகப் பல்வேறு அமைப்புகளைக் கட்டியுள்ளனர் இதனால் தமிழகக் கோயில்கள் பொதுவாக ஒரு திட்டத்தை

அடிப்படையாகக் கொண்டு கட்டப் பெற்றவையாக இரா. எடுத்துக்காட்டாக உலக வரலாற்றில் மாமன்னர்கள் எனச் சிறப்பிக்கப் பெறும் ஒரு சிலரில் ஒருவனும் கி. பி 985 முதல் 1014 வரை சோழப் பேரரசனாக விளங்கியவனுமான முதல் இராச இராச சோழனால் கட்டப் பெற்றது தஞ்சைப் பெரிய கோயில். இந்தக் கோயிலின் திருச்சுற்றில் வடகிழக்குப் பகுதியில் 13-ஆம் நூற்றாண்டில் கோனேரின்மை கொண்டான் என்ற பாண்டிய மன்னன் அன்னை, பெரியநாயகிக்குக் கோயில் எழுப்பினான். 17–ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னன் வடமேற்குப் பகுதியில் முருகனுக்கு கோயிலும் கி. பி. 1803-இல் மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோசியால் தென்மேற்குப் பகுதியில் பிள்ளையார் கோயிலும் அமைக்கப் பெற்றுள்ளன. இலக்கியம் கல்வெட்டு கோயில் கட்டிட அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு ஒரு கோயிலின் காலத்தை முடிவு செய்ய வேண்டியுள்ளது. பல்லவப் பேரரசன் முதல் மகேந்திர வர்மனின் சமகாலத்தவரான அப்பர் பெருமான் தம்மை சேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் பேரூர் பிரமபுரம் பேராவூரும் பெருந்துறை காம்பிலி பிடவூர் என்று குறிப்பிட்டுள்ளார். மணிவாசகப் பெருமான் தமது ஆனந்தா தீதம் என்ற பகுதியில்,

‘உன் கோயில் வாயிலில்
பிச்சனாக் கினாய்’

என்று திருப்பெருந்துறையில் உள்ள கோயிலைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் திருப்பள்ளியெழுச்சியில் ‘திருப்பெருந்துறையுறை கோயிலுங் காட்டி’ என்று திருப்பெருந்துறையில் தம் காலத்தில் கோயில் இருந்ததைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே மணிவாசகப்பெருமான் காலத்தில் திருப்பெருந்துறையில் கோயில் ஏற்கனவே இருந்தமை புலனாகிறது.

இக் கோயிலின் கருவறையின் சுவர்களில் காணப்பெறும் அரைத் தூண்கள், பலகை, தாமரை, தாடி, கலசம் போன்ற உறுப்புக்களைக் கொண்டுள்ளன. மேலும் கும்ப பஞ்சரம் என்ற அமைப்பும் காணப்படுகிறது. தூண்களில் காணப்

பெறும் போதிகைகள் பல்லவர்கள் பாணியில் நடுவில் பட்டையுடன் கூடிய தரங்கை அமைப்பைக் கொண்டவை அல்ல. முற்காலச் சோழர்களின் பாணியில் போதிகைகளின் முனைகள் செதுக்கப்பட்டும் காணப்பட வில்லை. அவை பிற்காலச் சோழர்களின் பாணியில் அமைந்துள்ளன. திரு நெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த திருவாலீசுவரம் கோயி லில் உள்ள அர்த்த மண்டபத்தில் உள்ள தூண்களின் போதி கைகள் பல்லவர்கள் பாணியிலும் மகா மண்டபத்திலுள்ள தூண்களின் போதிகைகள் முற்காலச் சோழர்களின் பாணி யிலும் அமைந்துள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

ஆதலால் இந்தக் கோயில் 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. மேலும் புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில்களில் விசயாலயச் சோழிச்சுரத்தில் உள்ள தூண்களின் போதி கைகள் நடுவில் பட்டையுடன் கூடிய தரங்க அமைப்பைக் கொண்டன. காளியாப்பட்டி, பனங்குடி, திருப்பூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் உள்ள தூண்கள் கோண வடிவைக் கொண்டன. விரலூர், விசலூர் ஆகிய இடங் களில் உள்ள கோயில்களில் உள்ள தூண்கள் முனை வெட்டப் பட்ட போதிகைகளைக் கொண்டன. இவ்வாறாக 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில்களில் உள்ள தூண்கள் பல்லவர்கள் மற்றும் முற்காலச் சோழர்களின் கலைப்பாணி யில் இருக்க, இந்தக்கோயிலில் அத்தகைய அமைப்புக் காணப் படவில்லை. எனவே கருவறையின் காலத்தை 12-ஆம் நூற்றாண்டாகக் கணக்கிட வேண்டி யுள்ளது.

முற்காலக் கோயில்களில் அன்னைக்கெனத் தனியான அமைப்புகள் இல்லை. கோயிலில் அர்த்த மண்டபத்தில் யோகேசுவரி என்ற அன்னையின் வடிவம் வைக்கப்பட் டிருக்கும். கி. பி. 1012 முதல் 1044 வரை அரசாண்ட கங்கையும் கடாரமும் கொண்ட முதல் இராசேந்திர சோழன் தான் கட்டிய கங்கை கொண்ட சோழிச்சுரவத்தில் அன்னைக்கெனத் தனியாகத் திருக்காமக் கோட்டம் என்ற அமைப்பினைக் கட்டினான். கி. பி. 1070 முதல் 1120 வரை ஆட்சி புரிந்த முதற் குலோத்துங்க சோழன் காலம்

முதற் கொண்டுதான் திருக்காமக் கோட்டம் கோயில் கட்டிட அமைப்பில் இடம் பெற்றது. மணிவாசகப் பெருமானின் செப்புப் படிமம் கொண்ட திருமுன் அன்னையின் திருமுன் பிற்கு எதிராக உள்ளது. சிவனடியார்களின் செப்புப் படிவங் களைக் கோயிலில் வைத்து வணங்கும் முறை மாமன்னன் முதல் இராசராசசோழன் காலத்திலிருந்துதான் ஏற்பட்ட தாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கோயில் மண்டபங்களில் உள்ள தூண்கள் பெரிய அளவினதாகவும் சிங்க முகப்புக் கொண்டனவாகவும் உள்ளன. மேலும் ஒரே கல்லில் தூண் மற்றும் குதிரை வீரன் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. பல்லவர்கள் மற்றும் முற்காலச் சோழர்கள் காலத்தில் கட்டப்பெற்ற மண்டபங் களில் உள்ள தூண்களில் இத்தகு சிற்பங்கள் இல்லை. புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மேலே குறிப்பிட்ட இடங்களில் உள்ள கோயில்களின் தூண்களில் இத்தகு சிற்பங்கள் இல்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. வியத்தகு கலைத் திண்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இலைகளைக் கொண்ட தூண்களை மண்டபத்தில் அமைப்பது விசய நகரப் பாணியாகும். எனவே இங்குள்ள பல்வேறு மண்டபங்கள் 15-ஆம் நூற்றாண் டிற்குப்பின் கட்டப்பட்டதாகக் கருத வேண்டியுள்ளது.

பண்டைக்காலக் கோயில்களைப் போன்று மணிவாசகப் பெருமான் காலத்து ஏற்கனவே இருந்த கோயிலும் மண் தளியாகத் தான் இருந்து இருக்க வேண்டும். 7-ஆம் நூற் றாண்டின் இறுதியில் கற்றளிகள் கட்டத் தொடங்கி விட்ட மையால், 9-ஆம் நூற்றாண்டில் இந்தக் கோயில் கட்டப் பட்டிருப்பின், கற்றளியாகத்தான் கட்டப்பட்டிருக்கும். 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மணிவாசகப் பெருமான் காலத்தில் கோயில் கட்டப்பட்டு இருப்பின், கருவறை அக் கால அமைப்பைக் கொண்டு இருக்கும். இற்றை நாள் கோயிலில் அத்தகைய அமைப்பு காணப்படவில்லை. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் 7-ஆம் நூற்றாண் டில் கட்டப் பெற்ற கருவறையை இன்றும் காணலாம் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. மண் தளிகள் தான்

கற்றளிகளாக மாற்றப்பட்டன. பிற்காலத்தைச் சார்ந்தவர்கள்தாம் தம் காலத்திற் கேற்ப அமைப்புகளைக் கட்டியதைத் தஞ்சைப் பெரிய கோயில் போன்றவற்றினின்றும் தெரியலாம்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால், திருப்பெருந்துறைக் கோயில் கருவறையின் காலத்தை 12-ஆம்நூற்றாண்டாகவும், ஏனையவற்றின் காலத்தை 15-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகவும் கருத வேண்டியுள்ளது.

திருப்பெருந்துறைச் சிவபெருமான் எழுந்தருளியுள்ள பெருங் கோயில் மணிவாசகப் பெருமான் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டது என்பதற்கு மேற்காணும் கட்டுரையில் காணப்படும் முதன்மையான சான்றுகள் ஐந்து. அவை யாவன :—

1. கோயில் கருவறை அமைந்துள்ள திருச்சுற்றில் மணிவாசகப் பெருமானுக்குத் தனிக் கோயில் அமைந்துள்ளமை.

2. அடுத்துள்ள திருச்சுற்றில் மணிவாசகப் பெருமான் துறவிக் கோலத்தில் திருவாசகத்தைக் கையில் ஏந்தி நிற்க, எதிரில் பாண்டிய மன்னன் வணங்கியவாறு நிற்பது.

3. மற்றோர் வெளிச் சுற்றில் மண்டபத்தில் பெருமானுக்காகக் குதிரைச் சேவகனாக வந்து சிவபெருமான் காட்சி அளிக்கின்ற கோலத்தில் உள்ள பெருங் கற்சிலை உள்ளமை.

4. அண்ணலின் கருவறைக்கு வடக்கில் தல விருட்சமான குருந்தமரம் கல்லில் செதுக்கப்பட்டுள்ளதும் அதில் சிவபெருமான் தெற்கு நோக்கி இருக்க மணிவாசகப் பெருமான் வடக்கு நோக்கி ஆன்மீக அறிவுரை கேட்பது போல் உள்ளமை.

5. இக்கோயிலில் நந்தியம் பெருமாளாகவும் சண்டிகேசுவரராகவும் மணிவாசகப் பெருமானின் திரு உருவங்களாகவே உள்ளமை, என்பனவாகும்.

இறைவன் பரிமேல் வந்தது உண்மையே!

மேலே, கோயில் கட்டினரா? என்ற தலைப்பிற் கூறப் பெற்ற கருத்துக்களைக் கருதும்போது, அஃது உண்மையல்ல வென்று அறிகின்றோம். ஆனால், புராணங்களில் கூறுகின்ற படி, 'அரசன் ஒற்றரால் தான் தந்த பொன்னால் பெருமான் குதிரை வாங்காமல் அதனைக் கொண்டு கோயில் கட்டினார் என்று நம்பினான். ஆதலின், உடனே குதிரை கொணரு மாறு ஓலை எழுதி விடுத்தான். அதனைக் கண்ட பெருமான் மிக வருந்தித் தம்மை ஆட்கொண்ட இறைவனிடம் முறை யிட்டார். அதற்கு இறைவன்'ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும் என்று பாண்டியனுக்கு விடை அளிப்பாய்'என்றான்.

பெருமான் அவ்வாறே செய்து, இறைவன் தந்த மாணிக்கத்தைக் கொண்டு மதுரை சென்று பாண்டியனுக்குக் கை உறையாக வழங்கினார். மேற் கூறியவாறு குதிரைகள் வரும் என்றார். அரசன் பின்னும் ஒற்றரால் குதிரைகள் வாரா என்றறிந்து பெருமானைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினான்.

பெருமான் பெரிதும் வருந்தி ஆலவாய் அண்ணலை நோக்கி வேண்டி அழுதார். உடனே சிவபிரான் அவர் துன்பத்தை நீக்க விரும்பினான் என்பவற்றிற்குப் பெருமான் வாக்கு மூலமாம். அகச் சான்றுகளில்லை. ஆனால், நரி களைப் பரிகளாக்கினான். பூதகணங்களைப் பரிகளின் பாகர்களாக்கினான். தான் தலைமைச் சேவகனாகி 'திண் சிலை ஏந்தி'ப் பேரழகான கோலத்துடன் மதுரையிற் புகுந்தான். பின் குதிரைகளை எல்லாம், தலைமைச் சேவக னாக வந்த இறைவன் வேந்தனிடம் ஒப்படைத்து மறைந் தான் இதனைப்பாண்டியன் அறியவில்லை'என்பது முதலாம் பெருமான் வரலாறாகப் புராணங்களில் கூறப் பெற்றவை கட்குப் பெருமானுடைய பாடல்களில் அகச்சான்றுகள் உள்ளன. அவற்றைக் காண்போம்.

'மாவார ஏறி
மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலம்
திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக்
குற்றேவல் கொண்டருளும்'

— திருப்பூவல்லி 20.

மா — குதிரை, குற்றேவல் — பணி.

இப்பாட்டால், குதிரை மீது இறைவன் அமர்ந்து மதுரை வந்தமையும், அவன் அழகு, தெய்வத் தன்மையுடன் விளங்கியமையும், தம்மை ஆட்கொள்ளவே அவன் வந்தான் என்பதையும் பெருமான் தெளிவுபடத் தெரிவிக்கின்றார். அப்படி வந்தவன் தனியாக வரவில்லை, குதிரைத் தொகுதிகளுடன் வந்தான் என்பதை,

'ஏறுடை ஈசன் இப்புவனியை உய்யக்
கூறுடை மங்கையுந் தானும் வந்தருளிக்
குதிரையைக் கொண்டு குடநாடு அதன்மிசை
சதுர்படச் சாத்தாய்த்தான் எழுந்தருளியும்'

ஏறுடை — காளையை (வாகனமாய்க் கொண்ட)
இப்புவனியை உய்ய — இவ்வுலகத்தார் உய்யுமாறு (தம் பொருட்டு)
குடநாடு — திருப்பெருந்துறைக்கு மேற்கே (குடம்) உள்ள நாடு (மதுரை)
சதுர்பட — திறமையாக,
சாத்தாய் — தொகுதியான கூட்டத்துடன்

என்கின்றார்.

தமக்காகவே இவ்வாறு வந்தான் என்பதை,

'ஞாலம் மிகப் பரிமேற் கொண்டு நமையாண்டான்'

ஞாலம் மிக — உலத்தார் வியந்து போற்ற
பரிமேற் கொண்டு — குதிரை மீதமர்ந்து (என்று உறுதிப் படுத்துகின்றார்.)
நமை — நம்மை (என்னை)

அப்படி வந்தவன் முழு முதற் பரம்பொருளாம் சிவ பெருமானே யாவன் என்பதனை,

'இந்திரனும் மாலயனும்
ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச்
சிவன்அவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு
தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்கும்
சீரார் பெருந்துறையான்
பந்தம் பரிய
பரிமேற்கொண் டான்தந்த
அந்தம்இலா ஆனந்தம்
பாடுதுங்காண் அம்மானாய்'

— திருஅம்மானை 3.

என்னும் இச் செய்யுளால் அறிவிக்கின்றார்.

மேலும் இதனால், இறைவன் அருமை பெருமைகளைக் கூறி வியந்து போற்றி மகிழ்ந்து அத்தகு மேலோன் தம் பொருட்டு மிக எளியனாய் வந்து தம்மை ஆட்கொண்டான் என்றும், அவன் என்னுடைய பந்த பாசங்களை அறுத்து எனக்கு முடிவில்லாப் பேரின்பத்தை அளித்தான் என்றுங் கூறிக் களிப்படைகின்றார் என்பதையும் காண்கின்றோம்.

இப்படி வந்தவனை 'இறைவனே என்று அறியாமற் போனானே பாண்டியன்!' என்று பரிவு கூர்கின்றார். அயனும், மாலும், ஆராலும் காண்பதற்குக் கூடாதவனாகிய சிவபிரானை இப்பாண்டியனால் அறிய முடியாதது இயல்பு தானே என்பதை,

'ஈண்டிய மாயா இருள்கெட
எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ
னும்சொல்ல வல்லன் அல்லன்'

— திருப்பாண்டிப்பதிகம் 6.

மீனவன் — பாண்டியன்.

மற்றும், இவ்வரிகளால் பெருமான் இறைவனின் இம் மாபெரும் ஒப்பற்ற காட்சியால் தம் 'மெய்யறிவை' உணர்வை நெருக்கமாகக் கப்பிக் கொண்டு மறைத்து நின்ற அறியாமை இருள் அகன்றது; மெய்ப் பொருளைக் கண்டற்குரிய எல்லா உண்மைகளும் விளங்கின' என்னும் தம் அடைவையும் (அனுபவம்) தெளிவுபடுத்துகின்றார்.

தமக்காக எளிமையாய் வந்த அருமையை எண்ணி எண்ணி ஏங்குகின்றார். ஐயோ! இறைவனுக்குச் செய்ய வேண்டிய பெரிதாம் அன்பு, அச்சம், அடக்கம், வணக்கம் வழிபாடுகளை எல்லாம் இவர்கள் அறிந்து செய்யவில்லையே; என்ற பெருமானுடைய ஏக்கமும், 'பாண்டியனும் சொல்ல வல்லன் அல்லன்' என்னும் பெருமான் மனக் குறையும் தெரிகின்றது. இவை மட்டுமா? இப் பாடல்களால் பெருமானின் இணையில்லாப் பெருமையும் பெரும் பத்திமையும் அல்லவா! தெரிகின்றன.

•

உலகப் பொருள்களாகிய பொன், பொருள்கள், இன்பங்கள், புகழ் முதலியவற்றைப் பெற மாந்தன் வரம்பு மீறிச் செயற்பட்டுப் பழி, பாவங்கள் செய்கின்றான். அவற்றால் பிறப்பு, இறப்பு, இருவினைகளால் பற்றப்பட்டு மீளாத்

துன்பங்கட்கு ஆளாகின்றான், அவற்றிலிருந்து அவன் விடுபட்டு நிலையான பேரின்பத்தைப் பெறுதல் வேண்டும். அதற்கு எவ்வகையான பற்றுமில்லாப் பரமனைப் பற்றிக் கொள்ள வேண்டும். இப்பேருண்மையினைத் திருவள்ளுவப் பெருந்தகையார்,

'பற்றுக பற்றற்றான்
பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'

என்றார். அதனைத் திருவுள்ளத்திற் கொண்டே நம் பெருமானும்,

'பெற்றி பிறர்க்கரிய
பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல்
வந்தருளித் தன் அடியார்
குற்றங்கள் நீக்கிக்
குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத்
தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப்
பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம்
பாடுதுங்காண் அம்மானாய்.'

— **திருஅம்மானை 20.**

என்று இப்பாட்டில் அருளினார். அஃதிருக்க மற்றும் இதனுள்,

குற்றமுடையாரை இறைவன் ஆட்கொள்வானா?

'...தன் அடியார்
குற்றங்கள் நீக்கிக்
குணங்கொண்டு கோதாட்டி'

என்று பெருமான் அருளிச் செய்கின்றமையால், பெருமான்,

பாண்டியன் தந்த பொருளைக் கோயில் கட்டிய தமது குற்றங் கூறுகின்றார் என்று கருதலாமோ? என்னில் ஆகாது. குறை குற்றங்களுடையோரை இறைவன் தன்னடியாராக ஏலான். அவர்பால் குணங்கள் மிகுந்திருப்பினும் ஏலான். அணுவளவு குற்றமிருப்பினும் அதற்குத்தக ஒறுத்தே அதனைப் போக்கிய பின்பே அவரை ஏற்பான். ஆடையை அரசன் அழுக்கைப் போக்கித் தூய்தான பின்பு தானே அணிவான்? என்பதுபோல. இங்கே பெருமான் குற்றமென்று குறிப்பிட்டது, பொதுவாக மாந்தனிடம் உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆம் குற்றங்களையே யாம். இல்லை. முற் கூறியவாறு கோயில் கட்டிய குற்றமே எனின் பெருமான் அதை ஒப்புக் கொண்டு இங்கேயோ, வேறு பாடல்களிலேயோ குறிப்பாகக் கூடக் கூறவில்லையே! ஏதோ புராணங் களில் கூறியது கொண்டு பெருமான் மீது பழி கூறுவது பொருந்தாது; பொருந்தாது, பொருந்தாது. பெரும் பாவம்; பெரும் பாவம்! மேலும் பெருமான்,

'சீரார் அருளாற் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட
சிவலோகா'

— **பிரார்த்தனைப் பத்து 9.**

என்றருளிச் செய்தமையாலும் முக்குற்றங்களை நீக்கியே ஆன்மாக்களை இறைவன் ஆண்டு கொள்வன் என்ற உண்மை விளக்குதல் காணலாம். இவ்வாறே, நம்பியாரூரராம் சுந்தரரும் தம் தேவாரத்துள்,

'குற்றம் ஒன்று அடியார் இலர் ஆனால் கூடுமாறு
அதனைக் கொடுப்பானை'

— **திருநீடூர்த் தேவாரம்.**

அதனை — பேரின்ப நிலை (வீடு).

தெய்வச் சான்றோர்கள் யாவரும் இவ்வாறே அருளி யுள்ளனர். இவ்விளக்கங்களால் பெருமான் பாண்டியான் பணத்தால் கோயில் கட்டினார் என்பது பொருந்தாமை தெளிவாம் என்றறிவோமாக. இவ்வாறே பெருமான்,

'... நம்
களவ றுத்துநின் ருண்டமை'
— திருச்சதகம் 35.

'...என் பொய்ம்மை
யாட்கொண் டருளிடும்
பெருமை போற்றி'
— திருச்சதகம் 69.

'தீர்க்கின்ற ஆறென் பிழையைநின்
சீரருள்... '

'..... களைந்தாய் என்னைக்
குற்றம் ...'

'.. ... ... சிறியேன்
பிழைக்கஞ்சல்...'

'என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேன்.'
— நீத்தல்விண்ணப்பம்.

வேசறுவேன் — வருந்துவேன்.

'பேயேன துள்ளப்
பிழைபொறுக்கும் பெருமையன்'
— திருக்கோத்தும்பி 12.

'பிழைத்தால் பொறுக்க
வேண்டாவே...'
— குழைத்தபத்து 1.

என்று பெருமான் மேற்காணும் தம் பாடல் வரிகளில் முறையே களவு, பொய்ம்மை, பிழை, குற்றம், என்று கூறுவனவும்,

'ஆடு கின்றலை கூத்துடை
யான்கழற்கு அன்பிலை
என்புருகிப்
பாடு கின்றலை பதைப்பதும்
செய்கிலை பணிகிலை
பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின்
றதுமிலை துணையிலி
பிணநெஞ்சே
தேடு கின்றலை தெருவுதோ
றலறிலை செய்வதொன்று
அறியேனே.'

— திருச்சதகம் 31.

ஆடுகின்றிலை — (சிவபிரான் அருளி எண்ணி)
ஆடாமலிருக்கின்றாய்

அன்பு இலை — அன்பு இல்லாமலிருக்கின்றாய் பாடுகின்
றி(ல்)லை, செய்கி(ல்)லை செய்யவில்லை

இலை — இல்லை.

'தவமே புரிந்திலன் தண்மலர்
இட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை
யேன்உனக் கன்பருள்ளாம்
சிவமே பெருந்திரு வெய்திற்றி
லேன் ....'

— திருச்சதகம் 5.

'நீச னேனை ஆண்டாய்க்கு
நினைக்க மாட்டேன்...'

— திருச்சதகம் 51.

'சிந்தை செய்கைகேள்வி வாக்குச்
சீரில் ஐம்பு லன்களான்
முந்தை யானகாலம் நின்னை
எய்தி டாத மூர்க்கனேன்'

— திருச்சதகம் 79.

'ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில்
தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்...'

புத்தேளிர் — தேவர்,
தூகேன் — கூட்டுவதில்லை,
சாமாறே — சாவதற்கே,
சதுர் — திறமை (பத்திமை ஆற்றல்).

என்று பாடுவன எல்லாம் தாம் பத்திமை செய்யாக் குறை பாடுகள் பற்றியனவேயாம். அன்றி அரசன் தந்த பணத்தைக் கொண்டு கோயில் கட்டினார் என்பதை மறைமுகமாகவுங் குறிக்காது என்பதை நன்கு அறியலாம். இதனை மேலே காட்டியுள்ள பலப் பலவாம், பாடல்களும் வலியுறுத்தலைக் கண்டோம். 'நம் களவறுத்து நின்று ஆண்டான்' என்று பெருமான் கூறுவதன் பொருள்தான் யாதோ என்னில் 'ஈசனே பொருள் என்பதை மறந்து உலகப் பொருள்களை அடைவதிலேயே காலமெல்லாம் போக்கிய கள்வன் ஆவேன்' என்பதேயாம். இக்கூற்றை வற்புறுத்துவது போலத் தம்மை,

'கள்வன் கடியன்
கலதிஇவன் எண்ணாதே
வள்ளல் வரவர
வந்தொழிந்தான் என்மனத்தே'

— திருக்கோத்தும்பி 19.

என்று கூறுகின்றார். அப்பர் பெருமானும் தம்மைக் 'கள்ள னேன்' என்கிறார்; தம் தேவாரத்தில். 'கள்வன்' என்பதற்கு உலகோர் பொருளைத் திருடியவன் என்று பொருள் கொண் டால் சிவன் அவரை ஆளான் அன்றோ? ஆகவே, 'களவு' என்பதற்கு நாம் கொண்ட பொருளே உண்மைப் பொருளாம் என்பதறியலாம்.

எனவே, இதுகாறும் ஆய்ந்து கண்டவாறு இறைவன் குற்றமுடையாரை ஆட் கொள்ளான் என்பதறியலாம். ஆகவே, தூய ஆன்மாவாம் நம் பெருமானையே ஆட் கொண்டான் என்பதை அறியலாம். இதனை,

'உணக்கி லாததோர் வித்து
மேல்விளை யாமல்
என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம்
நீவந்து காட்டி
னாய்கழுக் குன்றிலே.'

— திருக்கழுக்குன்றப்பதிகம் 1.

'விருப்பு, வெறுப்புக்கள் அற்றபடியால் என்வினைகள் என்னை விட்டகன்றன; என் ஆத்மா அதனால் தூய தாயிற்று; அதனால் சிவபிரான் எனக்குத்தன் அளவு படாப் பேரொளியால் ஆன திருவுருவைக் காட்டி என்னை ஆட்கொண்டான்.'

என்பதே அடிகளின் மேற்காட்டிய வாய்மொழியின் பொருள்.

ஆகவே, இதுவரை கண்ட ஆய்வினால் தம்மைப்பற்றிக் கூறிய குறைபாடுகளுக் கெல்லாம் இவ்வாறே பொருள் கொள்ளல் வேண்டும் என்பதே பொருத்தமாம் என்றறி வோமாக. மற்றும், அரசன் பொன்னைக் கொண்டு குதிரைகள் வாங்காது கோயில் கட்டினார் அக்குறையைக் காட்டுவனவே என்று கருதல் தவறாகும், பாவமாகும் என்றும் அறிவோமாக.

நரியைப் பரியாக்கிய துண்மையே

'குதிரையைக் கொண்டு
குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த்
தானெழுந் தருளி.'

'மாவார ஏறி
மதுரைநகர் புகுந்தருளி'

என்று அடிகள் கூறும் குறிப்புக்களால் அவற்றைச் சிவபிரான் மதுரைக்கு வருமுன்னே படைத்துக் கொண்டான் என்பது தெளிவாம். அப்படிப் படைத்துக் கொள்ளப்பட்ட இடம் திருப்பெருந்துறையை அடுத்துள்ள காடுகளாக இருத்தல் வேண்டும் என்பது,

'பெற்றி பிறர்க்கரிய
பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல்
வந்தருளி...'

பெருந்துறையான் 'கொற்றக் குதிரையின்மேல் வந்தருளி' என்ற பெருமானின் வாக்கின் குறிப்பால் அறியப் பெறுகின்றோம்.

'இரும்புதரு மனத்தேனை
ஈர்த்தீர்த்துஎன் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக்
காட்டினைஉன் கழல்இணைகள்
ஒருங்குதிரை உலவுசடை
உடையானே நரிகள்எல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவாறு
அன்றேஉன் பேரருளே'

திருவேசறவு 1.

'நரியைக் குதிரைப்
பரியாக்கி ஞாலமெல்லாம்
நிகழ்வித்துப்
பெரிய தென்னன்
மதுரையெல்லாம் பிச்ச
தேற்றும் பெருந்துறையான்'

— ஆனந்தமாலை 7.

'அரிய பொருளே
அவிநாசி அப்பா
பாண்டி வெள்ளமே
தெரிய அரிய
பரஞ்சோதி செய்வ
தொன்றும் அறியேனே'

— ஆனந்த மாலை 7.

'ஞால மிகப்பரிமேற்
கொண்டு நமையாண்டான்'

— திருப்பொன்னூசல் 8.

ஞாலம் — இங்கு மதுரை நகரத்து மக்கள்;
உலகோர் என்றும் கொள்ளலாம்.
மிக — மிகவும் வியந்து உய்ய
குதிரைப் பரியாக்கி — இரு பெயரொட்டுப் பண்புத் தொகை
நமை — நம்மை (என்னை)

இறைவன் நரிகளாக்கினான் என்பதை இப்பாடல்களாலும், வரியாலும் நன்கறியலாம்.

பெருமான் பொருட்டே பரிமேல் வந்தான்

இதனைப் 'பரிமேற் கொண்டு நமை ஆண்டான்' என்பதால் அறிகின்றோம். 'ஞாலம் எல்லாம் நிகழ்வித்து' என்பதற்கு மேலே விளக்கங் கூறப்பட்டது. இனி, 'மதுரை எல்லாம் பிச்சது ஏற்றும் பெருந்துறையான்' என்றதன் பொருளாவது, இறைவன் நரிகளை எல்லாம் பரிகளாக்கி வந்ததும், அவற்றின் பல்வகையான — திறமான ஆடல்களைக் காட்டியதும், பாண்டியனிடம் அவற்றை விற்றதும், அவன் தந்த பெரும் பொன்னை விலையாக ஏற்க மறுத்து மறைந்ததும் ஆகிய இவற்றை எல்லாம் மதுரை நகர் மக்கள் பார்த்து வியந்து மகிழ்ந்து பித்தர்போல் களி கூர்ந்தனர் என்பதாம்.

'பாண்டியன் தனக்குப் பரிமா விற்று' என்பதனால் இறைவன் அரசனுக்கு அவைகளை விற்றதும், 'ஈண்டு கனகம் இசையப் பெறாது' என்பதனால், இறைவன் நிறைவாக உள்ள அப் பொற்குவியலை ஏற்க மறுத்ததும் அகச் சான்றாக விளங்கி நிற்கக் காண்கின்றோம்.

'இவ்வரும் பெறல் ஆடல்களைச் செய்தவன் எதோ ஒரு திறமை மிக்க மனிதனே' என்று கூறுதல் கூடாது. இறைவனே என்பதை உலகர்க்கு உணர்த்தவே பெருமான்,

'பருவரை மங்கைதன் பங்கரைப்
பாண்டியற்கு ஆரமுதாம்
ஒருவரை ஒன்றும் இலாத
வரைக்கழற் போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி
மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி உருவறி
யாதென்தன் உள்ளமதே'

— திருப்பாண்டிப்பதிகம் 1.

என்ற பாட்டினால் உறுதிபட உரைக்கின்றார். இதன் பொருள் முன்பே கூறப் பெற்றது.

பருவரை மங்கை — பெரிய மலை (இமயம்) அரசன் மகளைப் (பார்வதி)
பங்கர் — பாகமாக உடையவர் (தன்னிடப் பக்கத்தில் கொண்ட சிவபிரான்)
ஒன்றுமிலாதவர் — (தமக்குத் தேவையாக) ஒரு பொருளும் இல்லாதவர்.
தெரிவர — (தான் இறைவனே என்பதை யாவரும்)தெரிந்து கொள்ளுமாறு குதிரை மேல் அழகு மிக அமர்ந்திருந்தான்.
உருக்கி — (அத்தோற்றம் எல்லார்) மனதையும், என்னையும் உருக்கி விட்டது.
சேவகனார் — (குதிரைப் பாகனாக வந்த இறைவன்)
சேவகன் — பணி செய்பவன்
ஒருவரை அன்றி — அவரைத் தவிர
உருவு — வேறொருவர் உருவத்தை; வடிவை.

'தெரிவர நின்றுருக் கிப்பரி
மேற்கொண்ட சேவகனார்'

'மீனவனும் சொல்லவல்லன் அல்லன்'

என்கின்றாராதலின், தாம் மட்டும் அவனை இறைவனே என்று அறிந்தார் என்பது விளக்கமாகின்றது. இங்ஙனம் பரிமேல் வந்தவன் 'காண்டற்கரிய கடவுள்' தான் என்பதை இப் பாட்டில் மட்டுமா பெருமான் கூறுகின்றார். பல பாடல் களிற் கூறுகின்றார். அவற்றிற் சில :—

'பாரின்ப வெள்ளம் கொளப்பரி
மேற்கொண்ட பாண்டியனார்'
— திருப்பாண்டிப் பதிகம் 3.

'புரவியின் மேல்வரப் புந்திகொ
ளப்பட்ட பூங்கொடியார்'
— திருப்பாண்டிப் பதிகம் 9.

'மதுரைப் பெருநன்
மாநகர் இருந்து
குதிரைச் சேவகன்
ஆகிய கொள்கையும்'
—கீர்த்தித் திருவகவல்.

பாண்டியன் — இறைவனைப் பாண்டியன் என்பது மரபு.

இவ்வாறு பெருமான் தம் வாசகத்தில் இறைவனைப் பாண்டியன் என்றும் சோழன் என்றும் சேரன் என்றும் கூறுகின்றார். மற்றும் 'பருவரை' என்னும் மேற்பாட்டில் கூறியவாறு பெருமானுக்கு மட்டுமே சிவபிரான் 'தெரிவர நின்றான்' என்பதும், அது கண்டு அவர் உருகி அவன் சேவடி களை இறைஞ்சினார் என்பதும்,

'... கழற் போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி
மேற்கொண்ட சேவகனார்'

என்னும் பெருமான் திருவாக்குகளே போதிய அகச்சான்றாம் என்க.

குதிரைப் பாகனாக வந்த இறைவன் தோற்றம்

'வெள்ளைக் கலிங்கத்தர்
வெண்திரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர்
அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர்
பாய்பரி மேல்கொண்டென்
உள்ளங் கவர்வரால்
அன்னே என்னும்'

— அன்னைப்பத்து 7.

வெள்ளைக் கலிங்கத்தர் — வெண்மையான உடையை இடையிலணிந்திருந்தார்.
வெண்திருமுண்டத்தர் — நெற்றியில் வெண்மையான திருநீறணிந்திருந்தார்.
பள்ளிக்குப் பாயத்தர்—அரசர் குதிரையிலமர்ந்திருக்கும்போது உடலில் அணியும் பட்டினாலான நீண்ட சட்டை அணிந்திருந்தார்.

'நீண்ட கரத்தர்
நெறிதரு குஞ்சியர்'

— அன்னைப்பத்து 5.

'கண்ணஞ் சனத்தர்'

— அன்னைப்பத்து 2.

அஞ்சனம் — மை.

இறைவனுடைய தலையின் முடி நெளி நெளியாக இருந்த தாம். அவர்தம் கண்களில் மை பூசப் பட்டிருந்ததாம்.

'மாவார ஏறி
மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலம்
திகழப்.....'

தேவு — கடவுள், இறைவன், சிவன்.
தேவார்ந்த கோலந்திகழ — இறைவனே என்னும் அழகு திகழுமாறு.

'இறைவன் இவ்வாறான தோற்றங்களுடன் வந்தான்' என்று அடையாளங்களுடன் கூறுகின்றார்.

பரிகள் நரிகளாயினவா?

பரிகளைப் பெற்றுக் கொண்டபின் பாண்டியன் 'பெருமானைப் பணிந்து தான் அவர்க்குச் செய்த கொடுமைகளைப் பொறுத்தருள வேண்டினான். பல சிறப்புக்களையும் வழங்கினான். மீண்டும் அமைச்சராக்கினான். அரசன் தான் வாங்கிக் கொண்ட குதிரைகள் அன்றிரவே, முன்போல் நரிகளாகிக் காட்டிற்குள் ஓடி ஒளிந்தன. அதனால் வெகுண்ட மன்னன் பெருமானை ஒறுக்கத் தண்டலாளர்களை ஏவினான். அவர்கள் பெருமானை இழுத்துச் சென்று கடும் வெய்யிலில் வையையாற்று மணலில் நிறுத்தினர். முதுகில் கல்லேற்றி வருத்தினர். பெருமான் மதுரை நாயகனை நோக்கி வருந்தி முறையிட்டார்' என்று புராணங்கள் கூறும் நிகழ்ச்சிகட்குப் பெருமானுடைய அகச்சான்றுள்ள பாடல்களில்லை.

வெள்ளப் பெருக்கு

அவ்வளவில், ஆலவாய் அப்பன் பெருமானின் துயரைப் போக்கவும், அவர் பெருமையை அரசனுக்கும், உலகோர்க்கும் உணர்த்தவும் வைகை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுமாறு செய்தான். வெள்ளம் இருகரைகளையுங் கடந்து நகருள் புகலாயிற்று. அது கண்ட மக்கள் முறையிடப் பாண்டியன் கரையை உயர்த்துமாறு குடிகளுக்கு ஆணையிட்டான். அதன்படி ஒவ்வொருவரும் தம் பங்கிற்குக் கரையை உயர்த்தினர்.

வந்தி அம்மையார்

இந்நிலைமையில், மதுரை நகரத்தின் ஓர் ஒதுக்குப் புறத்தில் மிக ஏழையாகிய முதுகிழவி, பிட்டு சுட்டு விற்றுப் பிழைப்பவள், வந்தி என்பாள், சிவ பத்திமையிலும் முதிர்ந்தவள். அரசன் ஆணைப்படி, தன் பங்கின் கரையை

அடைக்க ஆளில்லாது தவித்தாள். சொக்கலிங்கப் பெருமானை நோக்கி முறையிட்டு வருந்தினாள். அவள் பத்திமையில் மகிழ்ந்த சொக்கன் அவள் துயர் துடைக்கவும், பெருமான் வருத்தத்தை நீக்கவும் திருவுளங் கொண்டார். ஒரு கூலியாள் வடிவில் வந்தியிடம் வந்தார். அவளிடம் உதிர்ந்த பிட்டைக் கூலியாகப் பெற்றுக் கொண்டு, சுமையடையில் கூடை, கையில் மண்வெட்டியுடன் ஆற்றின் கரையை அடைந்தார். ஆடிப் பாடிக் கொண்டு கரையை அடைக்காமல் வாளா இருந்தார். ஆங்கிருந்தார் யாவரும் அரசர்க்கு இக்கூலியாளின் ஆடலைக் கூறினர். அப்போது கூலியாளாய் வந்த இறைவன் ஒரு கூடை மண்ணைத்தன் தோளில் வைத்திருந்தார்.

அரசன் யாவருங் காண அவனை நோக்கி, 'கரையை அடையாது ஏன் வாளா இருந்தாய்' என்று வெகுண்டு தன் கையிலிருந்த பிரம்பால் கூலியாளின் முதுகில் ஓங்கியடித்தான். உடனே இறைவன் தன் தோளிலிருந்த கூடை மண்ணை உடைப்பில் கொட்டி மறைந்தான். உடைப்பு அடைபட்டது. கரை உயர்ந்தது, வெள்ளமும் வடிந்தது. அரசன் அடித்த அடி அவன் மேலும் பட்டதுடன் அங்கும், எங்கும் உள்ள எல்லா உயிர்கள் மீதும், பொருள்கள் மீதும் பட்டதாம். இவ்வாறு பட்டது எல்லா உயிர்களிலும், பொருள்களிலும் இறைவன் இரண்டறக் கலந்துள்ளான் என்பதைக் காட்டுகின்றது என்று புராண ஆசிரியர்கள் அருமையான விளக்கங் கூறியுள்ளனர்.

இஃது ஒரு புறம் நிற்க. இந்நிகழ்ச்சியால் வந்தியம்மையார் சிவனுலகடைந்தார். பாண்டியன் பெருமானைப் பணிந்தான். பெருமானோ சிவபெருமான் தனக்காக எளி வந்து கூலியாளாய்'அடிப்பட்டுப் புண்பட்டு மறைந்தமை கண்டார். அழலில் பட்ட வெண்ணெய் போல் உருகினார் கண்களில் மாரி என நீரைக் கொட்டினார்; அழுதார் நடுங்கினார்; வேர்த்தார், பதைத்தார், கதறினார், ஆ! என்றலறிக் கீழே வீழ்ந்து புரண்டார்; 'சிவனே! சிவனே! என்று ஓலமிட்டார்; எளியேனுக்காகவா இத்துன்பங்களை ஏற்றாய்!' அப்போது உணர்ச்சி மிக்க பாடல்கள் பலப்பல அவர் தம் திருவாயினின்றும் உலகுய்ய வெளிப்பட்டன.

மீண்டும் பெருமானைப் பணிந்தான் பாண்டியன். பொறுத்தருள வேண்டினான்; அமைச்சராயிருக்க வேண்டினான். பெருமான் ஒருப்படாது தம்மை ஆட்கொண்ட இறைவனையே இடைவிடாது நினைந்தவராய் அவன் பிரிவாற்றாது அவனை அடையும் ஆர்வத்தால் பேரன்பால் அழுது துடித்தார் வேறொரு நினைவும் அவர் உள்ளத்தில் இல்லை. இவற்றை எல்லாம் மேலேயும் இங்கும் காட்டிய, காட்டும் பெருமானின் பின்வரும் வாய் மொழிகளால் அறியலாம்.

இவற்றிற்கான சான்றுகள்

இறைவன் பாண்டியனிடம் குதிரைகளைக் கொடுத்தது அவன் அவைகளைப் பெற்றுக் கொண்டது, ஆகிய காட்சிகளை எல்லாம் கண்ட நகர் மக்கள் வியந்து செய்வதறியாது பித்துப் பிடித்தவர் போல் செயலற்றனர் என்பதும் மேலே கண்டோம். அதனால் இறைவன் பெருமான் பெருமையை உலகுக் கறிவிக்கவே, வையையில் வெள்ளப் பெருக்கை ஏவினான் என்பதும் விளங்கவே இப்பாட்டு அமைந்துள்ளது என்று கருதலாம் மற்றுமுள்ள நிகழ்ச்சிகட்கு உரிய சான்றுகளாவன :—

‘மதுரைப் பெருநன்
மா நகர் இருந்து
குதிரைச் சேவகன்
ஆகிய கொள்கையும்
ஆங்கது தன்னில்
அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந்து
அருளிய பரிசும்’

— கீர்த்தித் திருவகவல்.

பாங்காய் — பண்போடு (அவள் வறுமை நோக்கி எளிய கூலி கேட்டுப் பெற்றுக் கொண்டது)
(உதிர்ந்த பிட்டு)

'மண்பால் மதுரையிற்
பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன்
தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம்
பூவல்லி கொய்யாமோ'

— திருப்பூவல்லி 16.

பிட்டமுது — பிட்டை அமுதம் போல் (அவளன்பு நோக்கி சுவைத் துண்டான்).

'பிட்டு நேர்பட மண்சு
மந்தபெ ருந்து
றைப்பெரும் பித்தனே'

— திருக்கழுக்குன்றப்பதிகர் 2.

நேர்பட — (கூலியாகப் பிட்டுக்கு) ஒப்புக் கொண்டு.

' ... .கவி மதுரை'

'பெரிய தென்னன்
மதுரையெல்லாம் பிச்ச
தேற்றுய் பெருந்துறையாய்
அரிய பொருளே
அவிநாசி அப்பா
பாண்டி வெள்ளமே'

— ஆனந்தமாலை 7.

'மண்சுமந்து கூலிகொண்டு
அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி
பாடுதுங்காண் அம்மானாய்'

— திருவம்மானை 8.

அக்கோவால் — அந்தப் பாண்டியனால்.

வியத்தகும் இந் நிகழ்ச்சிகளைக் கண்ட பாண்டியன் பெருமானைப் பணிந்து முன்போல் அமைச்சர் பதவியை ஏற்க வேண்டிய போது அவர் மறுத்து விட்டார் என்பதற்கு

'வானேயும் பெறில்வேண்டேன்
மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச்
சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள்
என்றென்றே வருந்துவனே'

— திருச்சதகம் 2.

வானேயும் பெறில் வேண்டேன் — வானுலகப் பதவி பெற்றாலும் (ஏற்க மாட்டேன்)
மண்ணாள்வான் — பாண்டியன்.

'வானேயும்' என்றதில் உள்ள உம்மையால், அரசன் பெருமானை அமைச்சர் பதவி ஏற்க வேண்டினான் என்பது தெளிவாகின்றது.

பெருமான் திருப்பெருந்துறையில் இறைவனின் பேரருளைப் பெற்று மெய்யடியராய் இருந்த நிலையைப் பாண்டியன் தவறுதலாக எண்ணி அவமதித்தான். அதனால் அவர்க்குப் பல கொடுமைகளைச் செய்தான். பின்பு நரி பரியானது, வெள்ளம் முதலாம் அருள் நிகழ்ச்சிகளைக் கண்டான். அதனால் தன் தவற்றையும், பெருமான் பெருமையையும் அறிந்தான். ஆகவே, அவரிடம் மதிப்புக் கொண்டு அவரைப் பதவி ஏற்க வேண்டினான். பெருமான் அதற்கிசைய வில்லை என்பன 'மண்ணாள்வான் மதித்தும் இரேன்' என்னும் பெருமான் வாக்கால் அறியப்பெறுகிறோம்.

ஆகவே, இதுகாறும் காட்டிய சான்றுகளாலும் விளக்கங்களாலும் பெருமானுக்காக மேற்காணும் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தமை உண்மையே என்பது உறுதியாக நிலை பெறுதல் அறியலாம்.

இறைவன் கூலியாளாய் வருவானா?
பிரம்படியும் படுவானா?

ஏசு பெருமான் தன் அடியார்களின் கால்களைக் கழு வினார். இராமகிருட்டிண பரமஅம்சர், மலம் எடுக்கும் தோட்டியின் வீட்டினை அவனறியாமல் சென்று தலையில் உள்ள சடையினால் துப்புரவு செய்தார். விவேகானந்தர் சாக்கடையைத் தூய்மை செய்தார். மகாத்மா காந்தியடிகள் தம் ஆசிரமத்தில் மலம் எடுத்தார்; குட்டரோகியின் பாதங் களைக் கழுவித் துப்புரவு செய்தார். புத்தபிரான் 'முடமான இளமறியை (ஆட்டுக்குட்டி) முதுகில்' சுமந்தார். இவர் களாவது தெய்வம் நிகழ் சான்றோர்கள். நிகரற்ற மாபெரும் வெற்றி வேந்தன் நெப்போலியன் தன் இளமையில் - வறுமை யில் பெரும் பசிக்கு அன்போடு உண்டி உதவிய ஏழைக் கிழவியைத் தான் மாபெரும் மன்னனான பிறகு அவள் குடிசைக்குச் சென்று கண்டான். உதவினான், அவள் அழையாமலே.

உண்மை அன்புக்கு முன்னே ஏற்றத் தாழ்வு ஏது? ஆணவம் அழியுமே! அன்பின் மிகை, பரிவு, தொண் டல்லவோ செய்யும்! தொண்டின் வடிவாய் விளங்கிய அப்பர் பெருமான், திருஞானசம்பந்தர், பல்லக்கைச் சுமக்க வில்லையா? தம்மைக் காணவும் மறுத்துப் பெரும் பகைமை கொண்டு தன்னைப் பலவாறு ஏசியும், கண்டால் கொல்லவும் துணிந்திருந்த கலிக்காமர் என்னும் சிவநேசர், வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்ததை அறிந்த சுந்தர மூர்த்தி நாயனார், உடனே விரைந்து சென்று அவர் நோயை நீக்கிய அருமை, சைவ உலகம் அறியுமே! ஆல்பர்ட் சுவைசர் என்ற அருளாளர், பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் முதலியோர் தம்மை முற்றிலுந்தந்து ஆற்றிய அரும்பணிகள், தொண்டுகள் அளவில் அடங்குமோ. இத்தகையார் செயல்கள் இவ்வாறானால், அன்பே - அருளே நிறைவான இறைவன் தன்னடியார் பொருட்டுக் கூலிக்கு மண் சுமத்தல், பிரம்படி படல் போன்ற பணிகளைச் செய்தல் வியப்பல்லவே!

இறைவனுடைய மூவகைத் தொண்டுகள்

தலைவன் ஒருவன் தன்பால் அன்பு செய்வாரின் அன்பினுக்கேற்ப அவன் அவர்களில் ஒரு சிலர்க்குத் தன் ஏவலர்கள் மூலம் உதவுவான். ஒரு சிலர்க்குத் தக்காரைக் கொண்டு உதவுவான். ஒரு சிலர்க்கு நேரில் சென்று உதவுவான். இதுபோலவே, கடவுளும், மனிதர், சான்றோர், குருமார் மூலம் உதவுவான். ஒரு சிலர்க்கு உலகிலுள்ள ஒருவரின் மனித வடிவில், சான்றோர் வடிவில் - தானே மனித வடிவில் குரு வடிவில் வந்து அருள் செய்வான். வானொலியில் பேசியும், உள்ளத்தில் இருந்தும், கனவில் தோன்றியும் அருள் செய்வான்,தொண்டும் செய்வான்.இவை பற்றி எல்லாம் நாம் எழுதி வெளியிட்டுள்ள, பெரிய புராண ஆய்வுரை நூல்கள் நான்கிலும் காணலாம்.

மணிவாசகப் பெருந்தகையார்க்கோ அவர் அளவிலா அன்பு, தூய்மை, தவம் முதலியன நோக்கித் 'தேவர் கனாவிலும் கண்டறியா' 'பாரார், விசும்புள்ளார், பாதாளத்தார், புறத்தார் ஆராலுங் காண்டற் கரியான்'ஆம் இறைவன் குருவடிவாயும், ஓரந்தணனாயும், சோதியாயும், இவ்வடிவுகள் யாவற்றிலும் சிறந்த உண்மை வடிவான அம்மையப்பராகவும் போந்து காட்சியளித்தான், அவரைத் தொட்டான், திருச்செவியில் திருவைந் தெழுத்தை ஓதினான், பேசினான். அவர்க்குக் குற்றேவலுஞ் செய்தான். இவ்வுண்மைச் செயல்களை எல்லாம் நம் பெருமானின் மேற்காணும் அவர்தம் திருவாசகப் பாடல்களால் அகச்சான்றுகளால் அறிந்தோம். அவற்றால் பெருமானின் தன் வரலாற்றுச் செய்திகளை அறிதலோடு அவர்தம் ஒப்புயர் வற்ற தெய்வத் தன்மையும் அறியப் பெறுகின்றோம் அன்றோ?

உலகந் தோன்றிய காலம் முதலாக இன்றளவும் நம் தமிழகத்திலன்றி வேறு நாடுகளில் இத்தகு சான்றோர்களின் தன் வரலாறு கூறும் செய்திகளை அவர்கள் தம் வாக்கினாலேயே அறியப்படுமாறில்லையே! அச்சான்றோர்களின், அடியார்கள் மூலமாகத்தானே அறிகின்றோம்?

ஆனால், மனித குலத்தின் மேன்மைப் பண்புகளுக்கெல்லாம் ஓருருவாய் விளங்கும் சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர், அப்பர் ஆம் சிவநெறியின் மெய்யுணர்வில் நிறைவு பெற்ற தெய்வ நிகழ் சான்றோர்களின், தன் வரலாறாகத் திகழும் அவர்தாம் அருளிய தேவாரம், திருவாசகம் ஆகிய தெய்வச் செந்தமிழின் தேன்பிழிவாகிய ஆயிரக் கணக்கான திருப் பாடல்களாலேயே இறைவனுடைய தொண்டுகளையும் அவர் தம் அருமை பெருமைகளையும் அறிகின்றோம் அன்றோ? இச் சிறப்பியல் முன்னும் ஓரளவு கூறப்பெற்றுள்ளது.

அவ்வகையில், பரம்பொருள், எளி வந்து தனக்குச் செய்த அருளிப் பாடுகளைக் கண்டு உணர்ந்தமையா லன்றோ நம் பெருமான் ஊனையும் உயிரையும் உருக்குமாறு உணர்ச்சி மிக்க திருவாசகப் பாக்களைப் பாடியுள்ளார். ஆதலினாற்றானே 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத் திற்கும் உருகார்' என்ற பொன் மொழியும் எழுவதாயிற்று! ஈதுணர்ந்தே 'நால்வர் நான்மணி மாலை' என்ற தம் நூலுள் 317 ஆண்டுகட்கு முன் திகழ்ந்த சிவப்பிரகாச அடிகள்,

'விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனும் ஆரண மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம்நெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகம்இங் கொருகா லோதின்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.'

— நால்வர் நான்மணி மாலை 4.

என்று திருவாசகச் சிறப்பியல்பை வியந்து பாராட்டிப் பாடி உள்ளார்.

இப்பாட்டின் சுருக்கமான பொருள் :—

'சிவபிரான் அருளிய வேதமோ? (வடமொழி 'இருக்கு, எசுர், சாமம், அதர்வணம்' என்னும் வேதங்களோ?) மணிவாசகர் அருளிய 'திருவாசகமோ' இவற்றில் சிறந்த தெது, என்றால் வேதங்களை ஓதினால் உள்ளம் உருகு பவர் இலர். ஆனால், திருவாசகம் (தமிழ்மறை) ஓது பவர் உள்ளம் உருகி மெய்யடியாராவர் என்பதாம்.

'பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசகம் அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல்வேய்த் தோளிடத்தவனே'

— நால்வர் நான்மணி மாலை 8.

வாச்சியம் — பொருள்

இதன் பொருள் :— திருவாசகமே, மெய்யான 'மறை' அதன் பொருள், 'இறைவனே' என்பதாம்.

கணம்புல்ல நாயனார்,

'முடிவிளக்கு எரித்தும் ...'

இளையான்குடி மாற நாயனார்,

'நெல் முளைவாரி இன்னமு தருத்தியும்'

அரிவாள்தாய நாயனார்,

'... ஊட்டிஅரிந்தும் ...'

திருக்குறிப்புத் தொண்ட நாயனார்,

'தலை,உடை ஒலிக்கும் சிலையிடைமோதியும்'

திருநீலகண்ட நாயனார்,

'...மாதர் வளமை துறந்தும்
'பண்டைநாள் ஒருசிலர் தொண்டராயினர்'

'விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழில் மேனியின் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டனன்'

— நால்வர் நான்மணி மாலை 12.

மேற்காட்டிய ஐந்து நாயன்மார்களும் இறைவனுக்குத் தொண்டராகத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தும் வழங்கினர். இவ்வாறே அவனருள் பெற ஆற்றிய செயற்கருந் தொண்டுகளை எல்லாம் நாம் இயற்றியுள்ள பெரிய புராண ஆய்வுரை நான்காந் தொகுதி நூலாகிய '60 அடியார் வரலாற்றாய்வுரை' முதலாம் நூல்களிலுங் காணலாம்.

இங்ஙன மிருக்கப் 'புகழ் நிறைந்த தன் முடிமேல் இறைவன் மண் சுமந்ததும், பிரம்படி பட்டதும் மணிவாசகப் பெருந்தகையாரைத் தனக்குத் தொண்டனாக்கிக் கொள்ள வேயாம்' என்பது இப்பாட்டின் இறுதி மூன்றடிகளின் செய்திகளாகும் என்றால் பெருமான் அருமை பெருமைகளை அளவிட்டுரைத்தல் யாராலும் இயலாது, இயலாது என்பதே இப்பாட்டின் கருத்தாகும்.

'வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கும்
அருள்செய் சிவனே அலந்தேன் அந்தோ!
முறையோ முறையோ இறையோனே என்று
அழுது செம்பொன் அம்பலக் கூத்தன்
அருளாற் பெற்ற அன்பினில் ஒருசிறிது
அடிய னேற்கும் அருளல் வேண்டும்'

— நால்வர் நான்மணி மாலை 20.

அலந்தேன் — தவிக்கின்றேன்.

இவ்வாறு பெருமான், பெரும்பாடுபட்டு இறைவன் அருள் பெறத் துடித்தார், பெற்றார் என்று திருவாசகப் பெருமையையும், பெருமான் சிறப்புக்களையும் கூறி அஃதில் ஒரு சிறிது தமக்கு அருளுமாறு பெருமானை வேண்டுகின்றார்.

இவ்வாறு பெருமான், சிவபிரான் அருள்பெறத் தவித்தமை, ஏங்கியமை, வருந்தியமை எல்லாம் மேலே காட்டிய 'யானேதும்', 'அறுக்கிலேன் உடல்', 'உரியேன் அல்லன் உனக் கடிமை' முதலாம் பெருமான் திருவாக்குகளால் நன்கறியலாம்.

'பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
(சிவன், இறைவன்)
பேரருள் பெற்றும் பெறாரின் அழுங்கி
(பெறாரின் — பெறாதவர் போல்)
நெஞ்சம்நெக் குருகி நிற்பை நீயே'
— நால்வர் நான்மணி மாலை 28.

அழுங்கி — வருந்தி, நிற்பை — நிற்பாய்.

என்று பெருமானின் இணையில்லாப் பத்திமை நெஞ்சைச் சிவப்பிரகாசர் வியக்கின்றார்!

பெருமானின் இவ்வாறான பெரும் பத்திமை உணர்ச்சிகளை நோக்கியே இறைவன், வெள்ளப்பெருக்கை ஏவியதும், வந்தியம்மையின் கூலியாளாக வந்ததும், பிரம்படி பட்டதும் ஆகிய பெருமான் வரலாற்றுச் செய்திகள் உண்மை, உண்மையே என்றறிகின்றோம். அவற்றிற்கான பெருமான் அருளிய திருவாக்குகளாம் அகச்சான்றுகளையும் முன்பே கண்டோம் அன்றோ?

பெருமான் மீண்டுந் திருப்பெருந்துறை சேர்தல்

'மண்ணாள்வான் மதித்தும் இரேன்' என்றுரைத்து மாணிக்கவாசகர், அரசனை அமைதி செய்து, பள்ளம் நோக்கிப் பாயும் வெள்ளம் போல் இறைவனைக் காணும்

பேரார்வத்தால் மதுரையை நீங்கித் திருப்பெருந்துறையைச் சேர்ந்தார். அவற்றிற்கான அடிகளின் பாடல்கள் :—

'உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.'

— திருப்புலம்பல் 3.

உற்றாரை யான் வேண்டேன் — (மனைவி,மக்கள் முதலாம்) உறவினரை யான் விரும்பேன்.

ஊர்வேண்டேன் — (என் ஊராம் திருவாத) ஊரை விரும்பேன்.

பேர்வேண்டேன் — (அமைச்சர் பதவியாம்) பேரையும் விரும்பேன்.

கற்றாரையான் வேண்டேன் — கல்வி கேள்விகளால் உயர்ந்த அமைச்சர்கள் முதலியோரையும் நான் விரும்பேன்.

கற்பனவும் இனி அமையும் — கற்ற தெல்லாம் போதும்.

உன் கழற்கே — உன்திருவடி (உன்னை) அடைதற்காக

கன்று + ஆ — கற்றாவின் — கன்றைப் பிரிந்த ஆவினைப் போல் உன்னையடையக்

கசிந்து உருக வேண்டுவனே — கசிந்து, கசிந்து கண்ணீர் கொட்டி அழுதழுது உன்னை அடைவதையே விரும்புவேன்.

இப்பாட்டால் பெருமான் யாவற்றையுங் கைவிட்டார்; துறந்தார். ஈசனையடையப் பெருங்கவலை கொண்டார் என்பது உறுதியாகின்றது. இது முன்னுங் காட்டப் பெற்றது. மதுரையை விட்டுப் புறப்பட்டார். திருப்பெருந்துறை உற்றார் எனலாம்.

'சடையானே தழலாடீ
தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ
பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ்
பெருந்துறையாய் அடியேன்நான்
உடையானே உனையல்லாது
உறுதுணைமற் றறியேனே'

— திருப்புலம்பல் 2.

உனை — உன்னை, அல்லாது — அல்லாமல்
உறுதுணை — உறுதியான துணை (எனக்கு)
மற்று — வேறு ஒருவரை
அறியேன் — நான் காணவில்லையே.

இறைவனையடைய ஏங்கிக் கதறல்

திருப்பெருந்துறையை அடைந்தார். சிவபிரானைக் காணாமல், ஈசன் தன்னடியார் புடை சூழ குருந்த மர நிழலில் வீற்றிருந்ததும், தம்மை ஆண்டதும், மறைந்ததும் அவன் உடன் வந்த அடியார்களிற் சிலர் உடன் சென்றதும் அப்பேறு பெறச் சிலர் செந்தீயில் சேர்ந்து மறைந்ததும், அதனால் தாம் பெருந்துன்பக் கடலில் மூழ்கித் தவித்ததும், அந்நிலையில் இறைவன் தோன்றி அமைதி செய்து சிலகாலம் இங்கிருப்பாய் என்றதும் பின், 'தில்லைக்கு வருக!' எனப் பணித்ததும் ஆகிய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தார். அழுது அரற்றிப் புலம்பித் 'திருச்சதகம் என்னும் நூறு பாடல்களை அருளிச் செய்தார். மேலும் அப்பதிகத்தில், 'என்னை அழைத்துக் கொள்! உன்னுடன் வந்த அடியார்களுடன் என்னைச் சேர்த்துக் கொள்! உன்னைப் பிரிந்து வாழேன்' என்று மன்றாடுகின்றார். அப்பாடல்களில் சிலவற்றை — 'இறைவன் பிரிவாற்றாமை' என்னும் தலைப்பில் மேலே காட்டியுள்ள பெருமான் திருவாக்குகள் மெய்ப்பிக்கும். திருப் பெருந்துறையைப் பெருமான் மீண்டும் சேர்ந்தபோது

நினைவு கூர்ந்த முன்னைய நிகழ்ச்சிகளில் சிலவற்றை ஈங்குப் பார்ப்போம் :—

'போரே றேநின் பொன்னகர்வாய்
நீபோந் தருளி இருள்நீக்கி
வாரே றிளமென் முலையாளோடு
உடன்வந் தருள அருள்பெற்ற
(நீ அம்மையுடன் வந்து அருள் புரிய)
சீரே றடியார் நின்பாதம்
சேரக் கண்டும் கண்கெட்ட
(கண் இல்லா - குருடு)
ஊரே றாயிங் குழல்வேனோ
கொடியேன் உயிர்தான் உலவாதே'

— திருச்சதகம் 52.

ஊர் ஏறு — ஊரிலுள்ள மாடு,
உயிர் உலவாதே — என் உயிர் போகவில்லையே.

'யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் துறுமாறே'

— திருச்சதகம் 90.

மானே — (பெரு) மானே,
உனை — உன்னை வந்து,
உறுமாறே — சேருமாறு.

'பொருத்தம் இன்மையேன்
பொய்ம்மை உண்மையேன்
போத என்றெனைப்
புரிந்து நோக்கவும்
வருத்தம் இன்மையேன்
வஞ்சம் உண்மையேன்
மாண்டி லேன்மலர்க்
கமல பாதனே
அரத்த மேனியாய்
அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந்
தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை
யோஎன் எம்பிரான்
வம்ப னேன்வினைக்கு
இறுதி யில்லையே'

— திருச்சதகம் 93.

பொருத்தம் இன்மையேன் — (உன்) திருவடியை அடையுந் தகுதி எனக்கில்லை

போத — (மெய்) அறிவுடையோனே!

அரத்தமேனியாய் — சிவந்த சோதி உருவனே

அங்கு — (உன்) சிவ உலகில்

இங்கு — இந்த உலகில் (திருப்பெருந்துறையில் என்றும் கருதலாம்; திருச்சதகம் இங்கு அருளப் பெற்றதால்)

'உடல்இது களைந்திட் டொல்லை
உம்பர்தந் தருளு போற்றி'

— திருச்சதகம் 64.

களைந்திட்டு — (என் உயிரை) உடலிலிருந்து நீக்கி

உம்பர் — (உன் உடனிருக்கும்) மேல் உலக வாழ்வு

'இங்கிவாழ் வாற்ற கில்லேன்'

— திருச்சதகம் 65.

இவ்வுலகில் (உன்னை விட்டு நீங்கி) வாழ்வதை என்னால் பொறுக்க முடியாது.

'ஒழித்திடிவ் வாழ்வு ......'

— திருச்சதகம் 66.

உன்னைப் பிரிந்திருக்கும் இவ்வாழ்வை ஒழித்திடுவாய்.

'வருகவென் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் '

— திருச்சதகம் 68.

நின்பால் — உன்னிடம்

'பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம்
பரனே பற்றுநான்
மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்
தரசே திருப்பெருந்
துறைஉறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்
துரைக்கேன் ஆண்டநீ
அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன்
கண்டாய் வருகஎன்று
அருள்புரி யாயே'

— வாழாப்பத்து 1.

இலை — இல்லை, உரைக்கேன் — சொல்வேன்.

முன்பு, திருப்பெருந்துறையில் சிவபிரான் குருவாய் வந்து அருள் செய்து மறைந்தபோது அவன் பிரிவாற்றாது கதறிப் பாடிய பாடல்களை மேலே காட்டினோம். இங்குக் காட்டிய பாடல்கள், திருப்பெருந்துறைக்குத் திரும்பி வந்த பின் சிவபெருமானைக் காணாது பெரிதும் வருந்திப் பாடியவையாகும். முந்திய பாடல்களை ஊன்றிப் பார்க்குமிடத்து அவை குருவருள் பெற்றுச் சிவபிரான் மறைந்த நிலையில் பாடியவை என்பதும், இங்குக் காட்டிய பாடல்கள்

இறைவனை அடைதற்காக 'வருக' என்று என்னை அழைத்துக் கொள் என்று வேண்டுவன வாயுள்ளன என்பதும் தெளிவாகும். சில காலம் பெருமான் அங்கிருந்து பின் பல தலங்களை வணங்கப் புறப்பட்டார்.

முதலில், மதுரைக்குத் தெற்கே உள்ள திருஉத்தரகோச மங்கை என்னும் தலத்தை அடைந்தார்.

உத்தரகோச மங்கையில் காட்சி

திருக்கோயில் சென்று பலவாறு பேரன்பால் பணிந்தேத்தினார்; மேல் திருப்பெருந்துறையில் இறைவன் காட்சி தாராமையால் மனமுடைந்து இங்கு வந்த பெருமானுக்குத் தன்னை ஈசன் கைவிட்டானோ என்ற ஐயமும், அச்சமும் ஏற்பட்டது போலும்! அதனால் அப்பா! என்னைக் கைவிட்டு விடாதே என்று இறைஞ்சுகின்றார்; கெஞ்சுகின்றார்; வேண்டுகின்றார். இவ்வுணர்ச்சிகள் எல்லாம் ஒன்று திரண்டு வானிலிருந்து மழை பொழிவது போல் பெருமான் திருவாயினின்றும் 50 பாடல்கள் கொட்டின. அவையே 'நீத்தல் விண்ணப்பம்' என்று பெயர் பெற்றன. அவற்றுட் சில :—

'மறுத்தனன் யான்உன் அருளறி
யாமையில் என்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண்
டாய்வினை யின்தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தர
கோசமங் கைக்கரசே
பொறுப்பர்அன் றேபெரி யோர்சிறு
நாய்கள்தம் பொய்யினையே'

— நீத்தல் விண்ணப்பம் 6.

விட்டிடுதி கண்டால் — கை விடுவாயோ?

•

'பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்
றாக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண்
டாய் ...'

— நீத்தல் விண்ணப்பம் 10.

பொலிகின்ற — (அருள் ஒளி) விளங்கும்
நின்தாள் — உன் திருவடிகளை
புகுதப் பெற்று — (யான்) சேர்ந்து
ஆக்கையை — உடம்பை
போக்கப் பெற்று — (அதனால் ஊண், உறக்கம் இல்லாமல் உடலை) அழியும் அளவுக்கு
மெலிகின்ற — மெலிந்திருக்கின்ற என்னை
விடுதி கண்டாய் — கைவிடுவாயோ?

'என்னைஅப் பாஅஞ்சல் என்பவர்
இன்றிநின்று எய்த்தலைந்தேன்
மின்னைஒப் பாய்விட் டிடுதிகண்
டாய்உவ மிக்கின்மெய்யே
உன்னைஒப் பாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
அன்னைஒப் பாயெனக்கு அத்தனொப்
பாயென் அரும்பொருளே'

— நீத்தல் விண்ணப்பம் 16.

அப்பா என்னை அஞ்சல் — அஞ்சாதே
இன்றி — இல்லாமல்
எய்த்து — சோர்ந்து
மின்னை — மின்னலைப் போல் ஒளி மிக்கவனே!

'மற்றடி யேன்தன்னைத் தாங்குநர்
இல்லை .. ..'

— நீத்தல் விண்ணப்பம் 23.

எளியனாகிய என்னை உன்னைத் தவிரப் போற்றுவார் இல்லையே! என்று கலங்கிப் பெரிதும் ஏங்குகிறார். ஆதலால்,

'...... ...இன்னும் காட்டுகண்
டாய்நின் புலன்கழலே'

— நீத்தல் விண்ணப்பம் 27.

புலன்கழலே — அறிவாம் திருவடிகள்.

'பாடிற்றி லேன்பணி யேன்மணி
நீயொளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்
டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவன் எவ்விடத்
தான்எவர் கண்டனரென்று
ஓடிற்றி லேன்கிடந் துள்ளுரு
கேனின் றுழைத்தனனே'

— நீத்தல் விண்ணப்பம் 45.

பாடிற்றிலேன் — (நான் உன்னைப்) பாடவில்லை.
ஒளித்தாய்க்கு — (நீ காட்சி தந்து) மறைந்து விட்டாய்
அதற்காகப் பெருந்துயரால்
பச்சு ஊன் — (என்) பச்சையான ஊன் (உடம்பை)
வீடிற்றிலேன் — அழிக்காமலிருக்கின்றேனே!
வியந்து — (நீ தந்த உன் அரிய காட்சியினை)
வியந்து போற்றி
ஆங்கு — அசை
தேடிற்றிலேன் — (யான்) தேடவில்லையே!
ஓடிற்றிலேன் — ஓடவில்லையே!

இவ்வாறு பெரிதும் வேண்டி விண்ணப்பித்த பெருமானுக்குச் சிவபிரான் காட்சியளித்தார்.

•

இதனைப் பெருமான் தம் திருவாக்கால்,

'உத்தர கோச
மங்கையுள் இருந்து
வித்தக வேடம்
காட்டிய இயல்பும்'
— கீர்த்தித் திருவகவல்.

என்று அருளிச் செய்துள்ளார்.

வித்தக வேடம் — வியத்தகும் உன் அருமைக் காட்சி(யைக் காட்டினாய்)

பெருமானுக்கு இறைவன்தன் தோற்றத்தைக் காட்டியிரா விட்டால் அவர் 'ஆவி பிரிந்துபோய் இருக்கும்' என்பதை இப்பதிகப் பாடல்கள் தெரிவிக்கின்றன. ஆம்!

'அழுதால் உன்னைப் பெறலாமே'
— திருச்சதகம் 90.

என்று பெருமானே அருளியவாறு அவரைக் காண அழுது புலம்பி ஏங்கிய அவருக்குச் சிவபிரான் காட்சி தாராமலிருப்பானோ? இருந்தால் ...?

பல தல யாத்திரை

பின்பு, பெருமான் பாண்டி நாட்டின் தலங்கள் பலவற்றை வழிபட்டுப் பாடிப் பரவிக் கொண்டே சோழ நாடுற்றுத் திருவாரூர், திருவிடைமருதூர், சீர்காழி, திருவண்ணாமலை முதலாம் திருத்தலங்களை வணங்கிப் பாடிப் பரவினார். திருவண்ணாமலையில் திருவெம்பாவை, திருஅம்மானை ஆய சீர்மிகு பதிகங்களை அருளிச் செய்தார். இவை பற்றிய சிறப்புக்களைப் பின்னே 'பதிகங்கள் ஆய்வு' என்ற தலைப்பில் ஒரு சிறிது பார்ப்போம். பின்பு, தொண்டை நாடுற்றுக் காஞ்சிபுரத்து ஏகம்பனை வணங்கிப் பாடித் திருக்கழுக்குன்றம் சேர்ந்தார்.

•

திருக்கழுக்குன்றத்தில் காட்சி

ஆங்குச் சிவபிரான் வீற்றிருக்கும் மலையை வலமாக வரும்போது இறைவன் அவர்க்குக் காட்சி அளித்தான்.

'பிணக்கி லாத ...

கணக்கி லாத்திருக் கோலம்
நீவந்து காட்டி
னாய்கழுக் குன்றிலே'

கணக்கிலாத் திருக்கோலம் — அளவுபடாப் பேரொளிப் பேரழகான (உன் திருவடிவை)

'...சிறு நாயி
னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள்
வான்வந்து காட்டி
னாய் ... ...'

கடையாய — இழிவான
ஆட்கொள்வான் — அடிமை கொண்டு ஆண்டு கொள்ளும் பொருட்டு

'கலங்கி னேன்கலங் காம
லேவந்து காட்டி
னாய் ...'

'காணொ ணாத்திருக் கோலம்
நீவந்து காட்டி
னாய் ... ..'

காண்பதற்கு ஒணா (ஒண்ணா)-முடியாத (உன்னை எனக்கு

'ஞால மேகரி யாக
நானுனை நச்சி
நச்சிட ...
... ...
நீவந்து காட்டி
னாய் ... ..'

— திருக்கழுக்குன்றப் பதிகம் 5.

நான் உனை நச்சி (உன்னைக் காண விரும்பி) வந்தேன். பேரருளுடன் நீ உன் திருக்கோலத்தை உலகத்தார் சான்று கூறுமாறு எனக்கு நீ காட்டித் தந்தாய். ஞாலம் - உலக மக்கள். கரி - சான்று (சாட்சி) அடியார்கள் தம்மைச் சூழ்ந்து நிற்கப் பெருமானுக்குக் கடவுள் காட்சி அளித்தார் என்பது இப்பாட்டால் சொற்களால் விளக்கமாகின்றது. அது நிகழ்ந்தவிடம் மலையின் கீழ்ச் சரிவில் உள்ள நால்வர் கோயில் உள்ள அழகிய இடமாக இன்றும் அடியவர்களால் போற்றப் பெறுகின்றது. பெருமான் அங்கிருந்து மலைமேல் மருந்தாக அமர்ந்துள்ள மாதேவனைத் தலைமேற் குவித்த கையினராய் - இன்ப வெள்ளம் இரு கண்களில் பொழியக் கண்டார். இறைவன் காட்சி தந்தான். அடியார் முன் வந்து அவன் காட்சியளித்ததை,

'.. ... அடி யார்மு
னேவந்து காட்டி
னாய்கழுக் குன்றிலே'

— திருக்கழுக்குன்றப் பதிகம் 7.

முனே — முன்னே.

என்ற அவர்தம் அகச்சான்று வாக்கால் அறிகின்றோம். இதனால் மற்றோர் செய்தியும் கருதக் கூடியதாக உள்ளது. அது, 'திருக்கழுக்குன்றத்திலுள்ள குன்று வேதமே உருக் கொண்ட வேதமலை (மறைமலை). அதன் மீது அம்மை அப்பன் இலிங்க உருவில் வீற்றிருக்கின்றான் என்பது வரலாறு. இதன் பொருள் மறைகளின் முடிவாக உள்ள பொருள் ஒன்றே! அது சிவமே! ஆதலின் அவன் மறையின் முடிமேல் அமர்ந்துள்ளான். 'வேதகிரீசன்' என்பது அம்

மலையின்மேல் அமர்ந்துள்ள பெருமானுக்குள்ள பெயர்களுள் ஒன்று. ஏனைய பெயர்கள் 'வேதாசலன்', 'மலை மருந்து' என்பன. மலைமேல் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கும் சிவபெருமானை அடிகள் அடிவாரத்திலிருந்து மேலே நோக்கி வணங்கும்போது அவன் தந்த காட்சியினைக் கண்டார். அம்மலையே மறை. ஆதலின் அதன் மீது தம் திருவடிகள் படுதல் கூடாது என்றும் அன்பினால் ஏற்பட்ட அச்சத்தினால் ஏறினாரல்லர் என்றுகருதலாம்' என்பதே.

இவ்வாறே 'காரைக்காலம்மையார், திருவாலங்காட்டுத் திருத்தலத்தைத் தம் தலையால் வலம் வந்து அம்பலவன் சேவடியிலமர்ந்தார்' என்ற தறிந்த, திருஞானசம்பந்தப் பிள்ளையார், 'பேரன்பால் உருகி அஞ்சி அவ்வூருள் புகாது, அத்தலப்பெருமானை வணங்கிப் பாடினார்' என்று சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார். இவ்வாறே, 'திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் தோன்றியருளிய - திருத்தொண்டு புரிந்த சீர்காழி, திருவதிகைத் தலங்களில் அவ்வூர்களின் உள் செல்லாது அவற்றைச் சுந்தரர் வலமாக வந்து வணங்கினார்' என்றும் சேக்கிழார் பெருமான் அறிவித்துள்ளார்.

எனவே, பெருமான் அம்மலைமேல் ஏறாது மலையை வலம் வந்தார் என்று அன்பர்கள் இன்றுங் கூறுவது உண்மையாயிருக்கலாம். அதனால் ஊராரும், வெளியூர் களிலிருந்து வருவாரும் குன்றை வலம் வருவதிலேயே கருத்துடையராய் இருத்தலும், நகருள் நடு நாயகமாக நான்கு கோபுரங்களுடன் திகழும் மாபெருங் கீழ்க் கோயிலுட் சென்று வணங்குதுமே பெரும்பான்மையாம்.

ஆகவே, இதுகாறுங் கண்ட ஆய்வுகளால் பெருமானுக்குத் திருப்பெருந்துறை, திருஉத்திரகோச மங்கை, திருக் கழுக்குன்றம் ஆகிய தலங்களில் எவராலும் காண இயலாத தன் திருவுருவக் காட்சியை இறைவன் காட்டினான். பெருமான் கண்டு களி கூர்ந்தார்; ஈடில்லா இன்பத்தில் மூழ்கினார். இக்காட்சியின் விளக்கம் பற்றி எல்லாம் மேல்,

கடவுள் காட்சிப்படு பொருளா?
கடவுள் மனித வடிவில் வருவாரா?
குருந்த மர நிழற் காட்சி
கடவுட் காட்சி காண்பார் இயல்பு
மூவகை தீட்சைகள்
மாணிக்கவாசகரானார்
கடவுளைக் கண்டார்
காட்சியின் விளக்கம்
காட்சியின் மற்றும் பல செய்திகள்

என்ற தலைப்புக்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ள ஆய்வுரைகளை நினைவு கூர்க. காண்க!

தில்லையிற் கூத்தனை வணங்கல்

திருக்கழுக்குன்றக் காட்சிக்குப் பின் பெருமான் பத்திமையின் உருவாய் — உணர்வின் இலக்கணமாய் — இலக்கியமாய்த் திருநீறு நிறைந்த மேனியராய், விழிநீர் பெருகத் தில்லையை யடைந்தார். திருக்கோயிலுட் புகுந்தார், தில்லைக் கூத்தனை — ஆடும் பெருமானைக் கண்டார். அடியற்ற மரம்போல் வீழ்ந்தார், எழுந்தார். கைகளைத் தலைமேற் குவித்தார். ஆராப் பேரன்பால் உருகி உருகி ஆனந்தக் கண்ணீர் அவர்தம் திருமேனியை நிறைக்கச் செந்தமிழ் மாமறைத் திருவாசகப் பெருமழை, அவர் திருவாயினின்றும் பொழிவதாயிற்று. அவை பத்துப் பாடலாகக் ‘கண்டபத்து’ என்னும் திருப்பெயர் பெற்றன.

அப் பாக்களால் கூத்தப்பிரான் பெருமை பெற்றான். அவன் எல்லையிலா ஆடல் உண்மைகளை உலகோர் பெற்றுய்ந்தார்; உய்கின்றார். தில்லையின் சிறப்பு உயர்ந்து விட்டது; இன்றும் அத்தலம் உலகில் எல்லையில்லாப் பெருமையுடன் விளங்குகின்றது. ‘சைவ சித்தாந்தக் கருத்துக்களே முழு உண்மை உடையவை. தமிழ்மறையே தலை சிறந்த வேதம். தமிழ் மொழியே தெய்வத் தன்மையுடையது;

தமிழ் தெய்வ மொழி; தமிழ் நாடே சிவ உலகம்; மணிவாசகப் பெருந்தகையாரே சிவ பெருமானுக்கும், மேம்பட்டவர்' என்றெல்லாம் போற்றுமாறு அக் கண்டபத்தின் பாடற் பொருள்கள் அமைந்துள்ளன. பெருமானின் தூய ஒப்பற்ற சிவமான உயிரியல்பை அவற்றில் தெளிவுறக் காணலாம். இவ்வெல்லாம் உணர்ந்தே சிவப்பிரகாச அடிகள்,

'தானே முத்தி தருகுவன் சிவன், அவ
னடியன் வாதவூரனைக்
கடிவில் மனத்தாற் கட்டவல் லார்க்கே'

— நால்வர் நான்மணி மாலை 36.

இதன் பொருள் :— 'வாதவூரனாம் பெருமானைத் தம் உள்ளத்தே சிவமாகத் தியானிப்பார்க்குச் சிவபிரான், தானே முன் வந்து பேரின்ப வீட்டை அருள்வான்' என்பதாம். இப்பாட்டின் சிறு விளக்கமாவது : 'மணிவாசகப் பெருமானே, ஒப்பற்ற குரு ஆவர். அவ்வாறறிதல் அறிவாற்றலால் வல்லார்க்கே ஆகும். பேரின்ப வீடு சிவபெருமானாலேயே அருளப் பெறுவது ஆயினும், தன்னை வணங்காது மணிவாசகரை வழிபடுவார்க்குச் சிவன் தானே ஏவலனாகி வந்து அருள்புரிவான்; வீடளிப்பான்' என்பதாம். இப் பாட்டுள் 'சிவன் அவன் அடியன்' என்பது இரு பொருள் உடையது. ஒன்று :— 'சிவபெருமானுக்குப் பெருமான், அடியன் என்பது', மற்றொன்று 'சிவபிரான், பெருமானுக்கு அடியவன்' என்பது. இதில், பின்னைய பொருளே சிவப்பிரகாசர் கருத்தாகும். ஏனெனில், 'மணிவாசகர் பொருட்டாக இறைவன் எளியவனாகக் காட்சி தந்தும், கூலியாளாய் மண் சுமந்தும் ஆகிய செயல்களைக் கருதியும், பெருமானின் வான் போல் வரையறை இல்லா அருமை பெருமைகளை உணர்ந்தும் அவ்வாறு கூறினார்' என்போம். ஆம்! பெருமானும், அவர் போன்ற திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், திருவள்ளுவர் போன்றாரும், தோன்றித் திருமறைகள் அருளா விட்டால் கடவுள் ஏது? பத்திமை ஏது? சிவநெறி ஏது? தீந்தமிழ் ஏது?

இவ்வகைச் சிறப்புகளுக்கெல்லாம் மணி முடி எனத் திகழும் பெருமானின் தன் வரலாற்றுக்கு எடுத்துக் காட்டாக ஒளிரும் அவரருளிய திருப்பதிகங்களில் ஒன்றான அக்கண்ட பத்தின் பாடல்களில் சிலவற்றை இங்கே காண்போம்! 'அவற்றிற்கு அணுவளவு விளக்கமுங் கூறுவோம். விளக்கம் விரிவானால் அஃதோர் தனி நூலாகும்' என்றஞ்சுகின்றோம். எவ்வளவு விளக்கம் தந்தாலும் அப் பாடல்களின் செம் பொருளை உணர்த்த யாராலும் இயலாதே! ஒருவாறு பத்திமை மிக்க சான்றோரால் அவர் மெய்யுணர்வுக்கு ஏற்ற வாறு அப்பதிகத்தின் செம்பொருள் விளங்கும். முற்றும் விளங்க வேண்டுவார் பெருமானின் நிலை பெற்றவராதல் வேண்டும். திருக்கழுக்குன்றப் பதிகத்திற்குப் பின் கண்டப் பத்து அமைந்திருப்பதால், பெருமான் திருக்கழுக்குன்றத் திலிருந்து நேரே தில்லை வந்தார் என்பதற்கு அஃது ஓர் சான்றாகலாம்.

தில்லையில் அருளிய கண்டபத்து
(நிருத்த தரிசனம்)

என்று கண்டபத்திற்கு முன்னும் பின்னும் குறிப்பிட்டுள்ள சொற்றொடர்களைக் கருத்துட் கொள்வோமாக :—

'இந்திரிய வயமயங்கி
இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய்
அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவம்ஆக்கி எனைஆண்ட
அந்தம்இலா ஆனந்தம்
அணிகொள்தில்லை கண்டேனே' (1)

இந்திரிய வயமயங்கி — ஐம்புல ஆசைகளில் மயங்கி
அருநரகில் — கொடிய நரகத்தில்
வீழ்வேற்கு — விழுகின்ற எனக்கு
சிந்தனை — (என்) மனத்தை
தெளிவித்து-தீமை வழி செல்லாது (தடுத்து) (தூய்மை செய்து)
சிவமாக்கி — (என்னைச்) சிவமாந்தன்மை பெறச் செய்து
அந்தமிலா — முடிவில்லாத (ஆனந்தத்தை அளித்த அம்பலவாணனை)

இக் கண்டபத்துப் பதிகத்திற்கு 'நிருத்த தரிசனம்' என்ற குறிப்பு, விளக்கமாகத் தரப்பட்டுள்ளது. இதுபோலவே, திருவாசக அகவல்கள் பதிகங்கட்கு குறிப்பு விளக்கம் தரப் பட்டுள்ளன. எக்காலத்தில், யாரால் அவை தரப் பெற்று உள்ளன என்பது அறியக் கூடவில்லை.

'வினைப்பிறவி என்கின்ற
வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே
தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென்
பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழுந்தில்லை
அம்பலத்தே கண்டேனே' (2)

என் பிறப்பு அறுத்த — (மீண்டும் பிறக்காமல் செய்த)

'உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் உளமன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொள்தில்லை கண்டேனே' (3)

•

உள்புகுந்து — (என்) உடலில் புகுந்து
என் உளம் மன்னி — என் உயிரில் இருந்து
கருத்திருத்தி — கருவை உருவாக்கி
அருத்தி — அன்பு

•

'சாதிகுலம் பிறப்புஎன்னும்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம்இலி நாயேனை
அல்லல்அறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம் பிறர்உருவம்
யான்எனதென் உரைமாய்த்துக்
கோதில்அமுது ஆனானைக்
குலாவுதில்லை கண்டேனே' (5)

பேதை — அறியாமை
பிறர் — (அவர், இவர், நமக்கு வேண்டியவர், வேண்டாதவர், மற்றவர்)
உருவம் — உருவுடைய பொருள்கள்
உரைமாய்த்து—(நான்எனது என்று சொல்லும் எண்ணங்கள்) சொற்கள் அழித்து (எல்லாம் என்னை விட்டு நீங்குமாறு)

'பத்திமையும் பரிசும்இலாப்
பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன்இவன் எனஎன்னை
ஆக்குவித்துப் பேராமே
சித்தம்எனும் திண்கயிற்றால்
திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல்
விளங்குதில்லை கண்டேனே' (7)

பரிசும் — நற்பண்பும்
இலா — இல்லாத
பசு — உயிரு(க்குள்ள)
பாசம் — ஆசைகள், இவன் பித்தன் என்னும்படி என்னை ஆக்கியவன்
பேராமே — (என்னைத் தன்னை விட்டு) நீங்காத(படிசெய்த)
வித்தகன் — திறமையாளன்.

இப்பாடல்களால் பெருமான், 'தன்னை உருவாக்கிப் பிறக்கச் செய்தான். இப்பிறவி முன்வினையால் வந்தது, இவை எல்லாம் அறியாமல் நான் புலன் இன்பங்களில், ஆசைகளில் உழன்றேன்; பல பாவங்களைச் செய்தேன். பலவாகிய வேற்றுமைகளில் கிடந்து உழன்றேன்; யான் எனது என்ற ஆணவத்தால் பல தீமைகளைச் செய்தேன். பத்தியும் நற்பண்புகளும் இல்லாமல் தளர்ச்சியடைந்தேன். நரகப் படுகுழியில் வீழ்ந்து கிடந்தேன், தன் அளவிலா அருளால் அம்பலவன், என்னைத் தன் சேவடி ஒன்றிலேயே (அவனையே) எனக்கு அளவிலாப் பேரின்பத்தை வழங்கினான். ஈடுபடச் செய்து விட்டான். என் அறிவில் மயக்க உணர்வினால் ஏற்பட்ட குறைகளை எல்லாம் அகற்றினான்; என் உயிரைத் தூய்மை ஆக்கினான்; நான் இனிப் பிறவாத படிச் செய்து விட்டான்; எனக்குப் பேரின்பத்தைத் தந்தான்; என்னைத் தன்னைப் போலச் சிவம் ஆக்கி விட்டான்; அத்தகு அருளாளனை இத்தில்லை அம்பலத்தே கண்டேன்' என்று கூறிப் பேரின்பக் கூத்தாடுகின்றார்.

திருவள்ளுவரும், மணிவாசகரும்

மாந்தனாக ஒருவன் பிறப்பதற்குப் பொருள்களிடத்தே அவன் கொள்ளும் ஆசையே காரணம். அந்தப் பல்வகைப் பட்ட ஆசைகளால் பலப்பல செயல்களைச் செய்கின்றான்; அவற்றிடம் ஆறாத அவாக்களால் தீயனவும் நல்லன சிலவும் செய்கின்றான்; அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களில் உழல்கின்றான்; அவற்றால், புண்ணிய பாவங்கள் தோன்ற மீண்டும் மீண்டும் பிறந்தும், இறந்தும் ஓயாத அலை போலத் துன்புறுகின்றான்.

உலகப் பொருள்கள் யாவும் தோன்றும் சிலகால் இருக்கும்; பின் அழியும்; உடம்புகளும் அங்ஙனமே, என்றும் நிலைத்திராதபடியால் இவை, பொய்யாம். ஆம்! ஒரு காலத்தில் இருந்து பின் இல்லாமற் போகின்றன அல்லவா? மண், நீர், தீ, காற்று, வானம் எல்லாம் தோன்றும், நிற்கும், அழியும், என்றும் அழியாத பொருள் இறைவன் ஒருவனே!

ஆகவே, இறைவன் ஒருவனே என்றும் தோன்றி நின்று அழியாது நிலையான பொருளாயுள்ளான். ஆகவே, அவனே மெய், ஏனைய எல்லாம் பொய் என்று அறிந்து அவன் சேவடிகளைப் பற்றி நிற்றல் வேண்டும். அப்படி நின்றால் உலகப் பற்றுக்கள் போம்.

எனவே, மாந்தன் எது மெய்ப் பொருள் என்று அறிந்து பொய்ப் பொருள்களிடத்துள்ள அவாவை நீத்து அதற்குக் காரணமாக உள்ள நான், எனது என்னும் ஆணவத்தையும் அறவே நீக்கல் வேண்டும். அந்நிலையில் விருப்பு, வெறுப்புக் களிலிருந்து நீங்கி என்றும் உள்ள இன்பப் பொருளாம் இறைவன் அருளும் பேரின்பத்தை மாந்தன் பெற்று மீண்டும் பிறவா வீட்டு நெறியை அடைதல் வேண்டும். இதற்கான நல்ல நூல்களையும்; கேள்விகளையும் அவன் பெற்று, நற்பண்பு, நல்லொழுக்கமுடையனாய் உண்மை, கொல் லாமை, புலாலுண்ணாமை, ஆய நல்லொழுக்கங்களை மேற் கொண்டு எல்லா உயிர்களையும் தன்னுயிர் போற் கருதிப் பேரன்பும், தொண்டும் செய்தல் வேண்டும்; தன்னலத்தை அறவே துறந்து அருளாளனாதல் வேண்டும். இப் பேருண் மைகளை எல்லாம் தெய்வப் பாவலர், திருவள்ளுவர் தம் திருக்குறளில்,

'அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து'

'அவா இல்லார்க் கில்லாகுந் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்'

'நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை'

'பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு'

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

'ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்'

'யான்எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்'

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்'

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி'

'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு'

'இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்
துன்பத்துள் துன்பங் கெடின்'

என்று அருளியுள்ளார்.

பெருமான் கண்டபத்தில் அருளிய பதிகப் பாடல்களில் ஐந்தே மேலே காட்டப் பெற்றன. அவற்றிற் காணப்படும் பெருமானின் தன் வரலாறு பற்றிய கருந்துக்களுக்குத் திருவள்ளுவர் பெருமான் கூறியுள்ள உண்மைக் கருத்துக்கள் பொருத்தமாயிருத்தலை மேலே காட்டிய ஒன்று முதல் பன்னிரண்டு வரை உள்ள குறட்பாக்கள் நன்கு விளக்குவன வாகும். கண்டப் பத்தின் ஏனைய ஐந்து பாக்களும் இவ்வாறே இருவர் கருத்துக்களைக் காட்டுவனவாகும்; மேலும் விளக்குவனவும் ஆகும்.

•

மற்றும், திருவாசகப் பதிகங்கள், அகவல்களிலும் திருவள்ளுவரின் இக்கருத்துக்கள் விளங்கக் காணலாம். அவை மேலே காட்டப் பெற்ற பெருமானின் பாடல்களிலும், இனி வரும் பாடல்களிலும் காணப்பெறும் மெய்யுணர்தல் கண்டோம், காண்போம். திருவள்ளுவர் இலக்கணம் கூறினார்; அதற்கு இலக்கியமாகத் திகழ்ந்தார் மணிவாசகர்; திருக்குறள் இலக்கணம் திருவாசகம் இலக்கியம்.

தில்லையில் பெருமான்

கண்டபத்தை அருளிய பின் பெருமான் ❋தில்லை நகர்ப் புறச் சோலை ஒன்றில், ஒன்றிய மனத்துடன் சிவயோகத்தில் சிவபெருமானை அகத்தில் கண்டு தம்மை மறந்திருந்தார். உலக உணர்வு திரும்பியபோது அவனைப் பாடிப் பரவி வழிபட்டார். ஆம்! அப்படித்தானே இருந்திருக்க வேண்டும் இதைப் பெருமானே,

‘கயல்மாண்ட கண்ணிதன்
பங்கன்எனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண் டருவினைச்
சுற்றமும்மாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள
வாசகம்மாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ’

— திருத்தெள்ளேணம் 11.

என்னும் பாட்டில் தம் நிலையைத் தெளிவு படுத்தியுள்ளார். ஆட் கொள்ளப் பெற்ற பின் அடிகள் நிலை என்ற தலைப்பின் கீழும் இப்பாடல் காட்டப் பெற்றுள்ளது. பொருளும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

❋ இச்சோலையிருந்த இடம் இன்று சிதம்பரத்தில் வடக்கு வீதியின் வடகிழக்கு நடுவில் ‘திருப்பாற் கடல்’ என்னும் பெயருடன் உள்ளது. ஆங்கு அதற்காம் சின்னங்கள் உள்ளன. ஆங்கோர் குடிலில் தான் பெருமான் தவமிருந்த செய்தி இன்றும் யாராலுங் கூறப் பெறுகின்றது.

மற்றும்,

'மறந்தேயும் தன்கழல்நான்
மறவாவண்ணம் நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ'

— திருத்தெள்ளேணம் 8.

இதன் பொருள் :— 'நான் மறந்துங் கூட அவனை (சிவன்) மறவாமலிருக்கும் படியான ஆற்றலை அவன் எனக்களித்தான்; அதனைப் பாடிப் தெள்ளேணங் கொட்டுவோம்' என்பதாம்.

இறைவன் எழுத்தாளன் ஆதல்

இறைவன் ஓர் அடியவர் கோலத்துடன் தவநிலையிலிருந்த பெருமானை வேண்டி அவர் சொல்லத் 'திருவாசகம்', 'திருக்கோவையார்' பாடல்களை எழுதினார். அந்நூல்களைப் பொன்னம்பலத்தின் படிகளில் வைத்து மறைந்தார்.

அந்நூல்களின் பொருளாக உள்ளவர்'ஆடும் பெருமானே ஆவர்' என்று அன்பர்கட்குக் காட்டிப் பெருமான் அவனோடு இரண்டறக் கலந்தார் என்னும் புராணத்திற் காணும் செய்திகட்கும் சான்றுகளில்லை.

ஆயினும் இரண்டாம் மூன்றாம் செய்திகள் நடக்கக் கூடாதன அல்ல. நம்புவார் நம்பலாம்.

'சித்தமும் செல்லாச் சேட்சியன்'
— எண்ணத்திற்கும் எட்டாத தொலைவில் உள்ளவன்.

'சொற்பதங் கடந்த தொல்லோன்'
— சொற்களால் சொல்லி முடியாத பழைமையானவன்.

'நூலுணர் வுணரா நுண்ணியோன்'
— நூல்களால் சொல்லி முடியாதவன்.

'அந்தமும் ஆதியும் அகன்றோன்'
— முடிவும் முதலும் இல்லோன்.

'கண்முதற் புலனால் காட்சியும் இல்லோன்'
— கண்முதலாம் ஐம்பொறிகளாலும் அறியா நிலையினன்.

— திருவண்டப்பகுதி.

இப்படிப்பட்ட இறைவனே குதிரைப் பாகன், குரு, அந்தணன், அம்மையப்பன், சோதி ஆகிய வடிவங்களில் தன்னைக் காட்டப் பெருமான் கண்டனர். என்றால் பெருமானுடைய தெய்வத் தன்மைக்கும் அண்டம் அடங்காப் பெருமைக்கும், சிறப்புக்கும், வரலாற்றுக்கும், பாடல்கட்கும் வேறு சிறப்புக்கள் வேண்டுமோ? வேண்டாமே! ஆகவே, சிவபிரான் எழுத்தாளன் பணி புரிந்தமையும், பெருமான் திருவாசகத்தில் பொருள் இவனே என்று கூறி அவனில் கலந்தமையும் இயல்வனவேயாம்; வியப்பில்லை.

புத்தரொடு வழக்கிடல்

இங்ஙனம் பெருமான் இப்பெருந்தவ நிலையிலிருக்கப் 'புத்தகுரு, இலங்கையிலிருந்து வந்து பெருமானோடு வாதம் புரிந்து அதில் தோற்றார். பெருமான் சிவநெறியே உண்மைச் சமயம் என நிலை நிறுத்தி வென்றார். ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார். பெருமான் அருளிய திருச்சாழல் பதிகம் அவ்வழக்குரைகள் அடங்கிய கருத்துடையது' என்பது முதலாம் பெருமான் பற்றிய புராணச் செய்திகட்கு எள்ளளவும் சான்றுகள் இல்லை.

திருச்சாழல் பாடல்களில் வழக்குரைக்(வாதம்)கருத்துக்கள், அஃதாவது புத்த மதம் - சைவ மதம் பற்றிய கருத்துக்களை ஏற்றோ - எதிர்த்தோ ஒன்றுமில்லை; குறிப்புக்கூட இல்லை. இது பற்றிப் பின்னே திருப்பதிக ஆய்வில் காண்போம்.

பெருமான் வரலாறும், திருவாசக அமைப்பு முறையும்

திருவாசகத் திருமறையின் அமைப்பு முறையில் சிவ புராணம் முதலாம் அகவல்கள் அவற்றின் பின் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருவம்மானையைத் தொடர்ந்து நாற்பத்து நான்கு பதிகங்களும் உள்ளன. பெருமான் வரலாற்றிற் காணுமாறு இவைகள் வரிசையாக அமையவில்லை.

			வரிகள்
சிவபுராணம்	திருப்பெருந்துறையில்	அருளியது	95
கீர்த்தித் திருவகவல்	தில்லையில்	,,	146
திருவண்டப்பகுதி	,,	,,	182
போற்றித் திருவகவல்	,,	,,	225
திருச்சதகம்	திருப்பெருந்துறையில்	,,	100
நீத்தல் விண்ணப்பம்	திருஉத்தரகோசமங்கை	,,	50
திருவெம்பாவை	திருவண்ணாமலையில்	,,	20
திருவம்மானை	திருவண்ணாமலையில்	,,	20
திருப்பொற்சுண்ணம்	தில்லையில்	,,	20
திருக்கோத்தும்பி	தில்லையில்	,,	20
திருத்தெள்ளேணம்	,,	,,	20
திருச்சாழல்	,,	,,	20
திருப்பூவல்லி	,,	,,	20
திருஉந்தியார்	,,	,,	20
திருத்தோள் நோக்கம்	,,	,,	14
திருப்பொன் னூசல்	,,	,,	9
அன்னைப்பத்து	,,	,,	10
குயிற்பத்து	,,	,,	10
திருத்தசாங்கம்	,,	,,	10
திருப்பள்ளி எழுச்சி	திருப்பெருந்துறையில்	,,	10
கோயிற்மூத்த திருப்பதிகம்	தில்லையில்	,,	10

			பாடல்கள்
கோயிற்றிருப்பதிகம்	தில்லையில்	அருளியது	10
செந்திலாப்பத்து	திருப்பெருந்துறையில்	,,	10
அடைக்கலப்பத்து	,,	,,	10
ஆசைப்பத்து	,,	,,	10
அதிசயப்பத்து	,,	,,	10
புணர்ச்சிப்பத்து	,,	,,	10
வாழாப்பத்து	,,	,,	10
அருட்பத்து	,,	,,	10
திருக்கழுக்குன்றப் பதிகம்	திருக்கழுக்குன்றம்	,,	7
கண்டபத்து	தில்லையில்	,,	10
பிரார்த்தனைப் பத்து	திருப்பெருந்துறையில்	,,	10
குழைத்தபத்து	,,	,,	10
உயிர் உண்ணிப்பத்து	,,	,,	10
அச்சப்பத்து	தில்லையில்	,,	10
திருப்பாண்டிப் பதிகம்	திருப்பெருந்துறையில்	,,	10
பிடித்த பத்து	திருத்தோணிபுரத்தில்	,,	10
திருவேசறவு	திருப்பெருந்துறையில்	,,	10
திருப்புலம்பல்	திருவாரூரில்	,,	3
குலாப்பத்து	தில்லையில்	,,	10
அற்புதப் பத்து	திருப்பெருந்துறையில்	,,	10
சென்னிப்பத்து	,,	,,	10
திருவார்த்தை	,,	,,	10
எண்ணப்பதிகம்	,,	,,	10
யாத்திரைப் பத்து	,,	,,	10
திருப்படை எழுச்சி	,,	,,	10
திருவெண்பா	,,	,,	10
பண்டாய நான்மறை	,,	,,	7
திருப்படை ஆட்சி	தில்லையில்	,,	8
ஆனந்த மாலை	,,	,,	7
அச்சோப் பதிகம்	,,	,,	10

இவ்வைப்பு முறைப்படி பார்த்தால் சிவபுராணம் திருப்பெருந்துறையில் அருள் பெற்றவுடன் பாடியது என்பது பொருத்தமாக இருக்கலாம். அடுத்துள்ள அகவல்களுள் தில்லையில் அருளப் பெற்றதாகக் காணப்படுகின்றன. திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப் பெற்றதற்குப் பிறகு பெருமான் மதுரை, பின் மீண்டும் திருப்பெருந்துறை, பின் உத்தரகோசமங்கை, திருவண்ணாமலை, பின் தில்லையில் பதினொரு பதிகம். மீண்டும் திருப்பெருந்துறையில் ஒரு பதிகம் அடுத்த பதிகம் 2 தில்லையில், மீண்டும் திருப்பெருந்துறையில், பின் பல தலப் பதிகங்கள் என்று இப்படிப் பதிகங்கள் அமைந்துள்ளதும் பொருத்தமாக இல்லை. இறுதிப் பதிகம் தில்லையில் அருளப்பட்டது. அது பொருத்தமாக இருக்கலாம். ஆனால் பதிகங்களில் காணும் முறைப்படிதான் பெருமான் யாத்திரை செய்தார் என்பதற்குச் சான்றுகளில்லை; இருக்கவும் முடியாது. ஆனால் மிகப் பெரும்பான்மையான பதிகங்கள் அப்பதிகங்களில் குறிக்கப் பெற்றுள்ள தலங்களில் தான் பெருமானால் பாடப் பெற்றன என்று துணியலாம்.

பெருமான் வரலாற்றின் ஆய்வுக்குப் பதிகங்கள் எப்போது எங்கு அருளியவை என்பது உறுதியாகத் தெரிந்தால் அது மிகவும் பயன் தருவதாம். என் செய்வது? தெரியவில்லையே! ஆகவே, பதிகங்களின் வைப்பு முறையைக் கொண்டு பெருமான் வரலாற்றை ஆய்வதற்கில்லை. ஆகவே, வைப்பு முறையைக் கைவிட்டுப் பதிகங்களில் காணப்படும் சான்றுகளைக் கொண்டு பேருமான் வரலாற்றை ஆய்வு செய்வோம். அகவல்களின் வரிகளைக் கொண்டும், சில பல பாடல்களைக் கொண்டும்தான் மேலே ஒரு சிறிது ஆய்வு செய்தோம். இனி அவை நீங்கலாக இங்கே,

அகவல்கள் திருப்பதிகங்களால் அறியப் பெறும் பெருமான் வரலாற்றுச் செய்திகள்

பற்றி இயன்ற வரையில் சுருக்கமாகக் காண்போம்; மேலே காட்டிய பாடல்களில் விளக்கங்கள் கூறப் பெற்றமையால், இவற்றில்,

1. சிவபுராணம் 95 வரிகள்

'நமச்சிவாய வாஅழ்க
நாதன்தாள் வாழ்க'

'கோகழி ஆண்ட
குருமணிதன் தாள்வாழ்க'

கோகழி — திருப்பெருந்துறை

'சீரார் பெருந்துறைநந்
தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம்
அருளுமலை போற்றி'

'மெய்யேஉன் பொன்னடிகள்
கண்டின்று வீடுற்றேன்'

'பொய்யா யினஎல்லாம்
போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி
மிளிர்கின்ற மெய்ச்சுடரே'

'நிலந்தன்மேல் வந்தருளி
நீள்கழல்கள் காஅட்டி'

'ஈர்த்தென்னை ஆட்கொண்ட
எந்தை பெருமானே'

ஈர்த்து — (உலக பாசங்களிலிருந்து நீக்கி என்னைத் தன்னிடம்) இழுத்து.

என்னும் வரிகளால் தம்மைக் குரு வடிவில் வந்து ஆண்டவன் சிவபெருமானே! ஆண்ட இடம் திருப்பெருந்துறையே; பெற்றது நிலையான பேரின்பமே! என்று அகச் சான்று விளங்கப் பெருமான் கூறியுள்ளமை காணலாம்.

2. கீர்த்தித் திருவகவல் 146 வரிகள்

இதில் பெருமான் தம்முடைய வரலாற்றினைச் சற்று விளக்கமாகவே, தெளிவுபடக் கூறியிருக்கின்றார். பல தலங்களில் இறைவன் நிகழ்த்திய ஆடல்களையும், அருளிப் பாடுகளையும் குறித்துள்ளார்.

3. திருவண்டப்பகுதி 182 வரிகள்

இதில் எல்லையில்லாமல் விரிந்துள்ள அண்டங்களின் இயல்பும், அவற்றிலுள்ள உலகங்கள் ஐம்பெரும் பொருள்கள், அவற்றின் ஆற்றல்கள், பயன்கள் அவற்றைப் படைத்தோன் ஆடல்கள் முதலியன வெல்லாம் பெருமான் கூறுகின்றார். தம் வரலாற்றின் பகுதிகளையுங் கூறி அவன் தன்னை ஆட் கொண்ட அருமை பெருமைகளை விளக்குகின்றார். அவன் தனக்களித்த பேரின்ப அடைவுகளை நுகர்ச்சிகளைத் தெளிவுபட விளக்குகின்றார்.

4. போற்றித்திருவகவல் 225 வரிகள்

இதில் மக்கள் கருவாகி, உருவாகி வருதல், அவர்கள் படும் பல்வகைத் துன்பங்கள், பல்வகைச் சமயங்கள் அவற்றின் கொள்கைகளைக் கூறுகின்றார். தமது பத்திமை இயல்பைப் பாங்கினை – விளக்குகின்றார். இறைவனுடைய அருமை, பெருமைகளை ஒவ்வொன்றாகக் கூறிப் 'போற்றி! போற்றி!' என்று போற்றுகின்றார். தமிழில் அருச்சனையை (போற்றி) இவ்வாறு செய்தல் வேண்டும் என்று தமிழர் உய்ய வழி காட்டுகின்றார். அவற்றின் இடையே தம் வரலாற்றின் சிற் சில பகுதிகளைக் கூறிக் கொள்கின்றார்; தம்மையாட் கொண்ட இறைவன்றன் இணையில்லா அருளை விளக்குகின்றார்.

இவற்றின் பொருள், சிறப்பு, விளக்கங்களை அறிய விரும்புவோர், [illegible]ரின் திருவாசக விரிவுரை என்ற ஒப்பற்ற அரிய நூலைக் காண்பாராக. இந்த அகவல்களில்

ஒன்றான திருவண்டப்பகுதியின் அருமை பெருமைகளை வடலூர் வள்ளற் பெருமான் இராமலிங்க அடிகள்,

‘உருவண்டப் பெருமறையென்
றுலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதியெனுந்
திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றெப் பெருந்தவருங்
கூறுகின்ற கோவேநீ
இருவென்ற தனியகவல்
எண்ணமெனக் கியம்புதியே’

என்று பாராட்டிப் போற்றி வியக்கின்றார்.

5. திருச்சதகம்

‘வண்ணந்தான் சேயதன்று
வெளிதே அன்று
அநேகன்ஏகன் அணுஅணுவில்
இறந்தாய் என்றங்கு
எண்ணந்தான் தடுமாறி
இமையோர் கூட்டம்
எய்துமாறு அறியாத
எந்தாய் உன்தன்
வண்ணந்தான் அதுகாட்டி
வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி
வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற்
காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச்
சிந்திக் கேனே’

— திருச்சதகம் 25.

அணு அணுவில் இறந்தாய் — அணுவிலும் அணுவாய் உள்ளாய்

சேயது — சிவப்பு
வெளிது — வெள்ளை
இமையோர் — தேவர் (அறிஞர்)
வண்ணம் — நிறம்
வடிவம் — முழு உருவம்
கழல்கள் — (திருமுகம், திருமார்பு, திருக்கைகள்)
திருவடிகள் (முதலியன.)

இவ்வாறு அறிவின் மிக்காராலும் அறிய ஒண்ணா இறைவன் தன்னை யான் தெளிவாக அறியுமாறு எனக்குக் காட்டினான் என்று பெருமான்கூறுகின்றதனால் இறைவனை அவர் கண்டார் என்பது உறுதியாம் 'அப்படித் தன்னை ஆட்கொண்ட இறைவனின் பேரருளை எண்ணி, என் மனம் உள்ளங்கால் முதல் தலையின் உச்சி வரையில் நெஞ்சாக உருகவில்லையே! என் உடல் முழுவதுங் கண்களாகி வெள்ளம்போல் நீரைப் பெருக்கவில்லையே! என் மனம் — கல்; கண்கள் — மரம். என்று தவிக்கின்றார், துடிக்கின்றார், அழுகின்றார்' இப்பாட்டுக்களும் அவர் கடவுட் காட்சி கண்டார் என்பதற்குப் போதிய சான்றாம்.

'... ... .
என்னையாண்டாய்க்கு
உள்ளம்தாள் நின்றுச்சி
அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம்
கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதாம்
நெஞ்சம் கல்லாம்
கண்இணையும் மரமாம்தீ
வினையி னேற்கே'

— திருச்சதகம் 21.

ஆண்டாய்க்கு — ஆண்டஉனக்கு
தீவினையினேற்கே — பாவியாகிய எனக்கு

சிவபிரானால் ஆட்கொள்ளப் பெற்ற பின் பெருமான் நினைவு முழுவதும் அவனைப் பற்றியே; கண்கள் அவன் சேவடிகளையே (திருவுருவத்தினையே) பற்றின. வணக்கம் எல்லாம் அவன் திருவடிக்கே; பேச்செல்லாம் அவனைப் பற்றியே ஆயின ஆம்! தம் நிலை அவ்வாறு இருந்தமையைப் பெருமானே,

'சிந்தனைநின் தனக்காக்கி
நாயி னேன்தன்
கண்இணைநின் திருப்பாதப்
போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே
ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி...'

— திருச்சதகம் 26.

என்றருளிச் செய்துள்ளார். மற்றும்,

'பண்ணின்நேர் மொழியாள் பங்கநீ
அல்லால் பற்றுநான்
மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத்
தரசே திருப்பெருந்
துறைஉறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு
செவிகண் என்றிவை
நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன்
கண்டாய் வருகஎன்று
அருள்புரி யாயே'

— வாழாப்பத்து 5.

இதன் பொருள் : 'சிவபெருமானே! என்னை நீ ஆண்டது திண்ணமே அன்றோ? ஆதலால், என் எண்ணம், உணர்வு வாய், மூக்கு, செவி, கண், உடல் எல்லாவற்றையும் உன் இடமே வைத்து விட்டேன். ஆகவே, உன்னைப் பிரிந்து உலகில் நான் வாழமாட்டேன். என்னை உன்னிடமே 'வா'

என்றழைத்துக் கொள்' என்று மன்றாடி வேண்டுவதாலும் அறிகின்றோம். இதுபற்றி மேலும் பெருமான் நிலை பற்றிப் 'பிரிவாற்றாமை', முதலிய தலைப்புக்களில் மேலே சிறிது எழுதியுள்ளோம்.

இவ்வாறு, திருச்சதகம் முழுவதும் பெருமான் இறைவன் அளவில்லாப் பெருமைகளையும், தன் சிறுமைகளையுங் கூறுகின்றார். தன்னை அவன் ஆண்டு கொண்ட அருமைகளை எல்லாம் பாடிப் பாடி அவனையன்றி யாதும் அறியாது, வேறு செயலின்றி உருகி, உருகி அவனை அடையத் துடிக்கும் அவர்தம் இயல்பை அவர் தம் வாய்மொழிகளாம் அகச் சான்றுகளாலேயே அறியப் பெறுகின்றோம். மற்றும் இறைவன் தனக்களித்த பேரின்பம் முதலாம் செய்திகளையும் பலவாம் பதிகங்களிலும் விளக்குகின்றார். அவையெல்லாம் மேலேயும் காட்டப் பெற்றுள்ளன.

இவ்வாறே, நீத்தல் விண்ணப்பம் முதல் அச்சோப் பதிகம் வரையிலுள்ள பதிகங்கள், 4 அகவல்களில் இறைவன் தன்னை ஆண்டது, தாம் தம் உடல், பொருள், ஆவி அனைத்தும் அவனுக்கே வழங்கியது, அவன் தந்த பேரின்பம் அவன் பிரிவாற்றாது அவனை அடையத் துடியாய்த் துடித்தமை, முதலாம் பெருமானின் வரலாற்றுச் செய்திகளையும் கண்டோம். ஆகவே அப்பதிகங்களில் உள்ள அச்செய்திகளை விடுத்துப் பெருமான் வரலாற்றிற் காணப்படும் அவர் தம் வேறு வரலாற்றுச் செய்திகளை ஆய்வோம்.

பெருமானும் மாதர் இன்பமும்

பெருமான் வாழ்க்கை வரலாற்றினை, இறைவனால் ஆட்கொள்ளப் பெறுதற்கு முந்திய நிலை, பிந்திய நிலை என்று இரு கூறாகப் பிரிக்கலாம். முதலில் பிந்திய நிலையை இதுகாறும் ஆய்ந்தோம். இனி முந்திய நிலையைப் பார்ப்போம்.

முந்திய நிலையில் :— அமைச்சர் ஆதற்கு முந்தியும், பிந்தியும் அஃதாவது இறைவனால் ஆட்கொள்ளுதற்கு முன் தம் வாழ்க்கை எவ்வாறிருந்தது என்பதனைப் பெருமானே பின் வருமாறு தெரிவிக்கின்றார்.

'மைய லாய்இந்த
மண்ணிடை வாழ்வெனும்
ஆழியுள் அகப்பட்டுத்
தைய லார்எனும்
சுழித்தலைப் பட்டுநான்
தலைதடு மாறாமே
பொய்யெ லாம்விடத்
திருவருள் தந்துதன்
பொன்னடி இணைகாட்டி
மெய்ய னாய்வெளி
காட்டிமுன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே'

— அற்புதப்பத்து 1.

ஆழி — கடல், தலை தடுமாறாமே (அழியாமல்)

'ஏய்ந்த மாமலர்
இட்டுமுட் டாததோர்
இயல்பொடும் வணங்காதே
....
தையல்நல் லாரொடும்
தலைதடு மாறாகிப்
போந்து யான்துயர்
புகாவணம் அருள்செய்து'

— அற்புதப்பத்து 2.

வணம் — வண்ணம் (துன்பத்தில் ஆழ்ந்து போகாதபடி)

'நடித்து மண்ணிடைப்
பொய்யினைப் பலசெய்து
நானென தெனும்மாயக்
கடித்த வாயிலே
நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனை'

— அற்புதப்பத்து 3.

நடித்து — (அமைச்சர் பதவியில் போலி) நடிப்புக்கள் பொய்யினைப் பல செய்து — (இறைவனைப் பெறுதற்கு உதவாத பல செயல்களை எல்லாம்) பொய்யான செயல்கள். நான் எனது எனும் ஆணவத்தால் செயற்பட்டு எதற்கெடுத்தாலும் இது முன்வினையின் விளைவு என்று கூறி விடுவேன். தீமை செய்தலைத் தவிர்க்காது வினையின்மேல் பழியைப் போட்டுத் தீய செய்களைச் செய்தேன் என்றவாறு.

'மாடும் சுற்றமும்
மற்றுள போகமும்
... .
குலாவியே திரிவேனை
....எனது
அகம்புகுந்து ஆண்டதோர்
அற்புதம் அறியேனே'

— அற்புதப்பத்து 5.

மாடு — செல்வம்
சுற்றம் — மனைவி மக்கள் முதலாம் (சுற்றத்தார்)
மற்றுள போகம் — நிலம், வீடு, செல்வம், பதவி முதலிய போகப் பொருட்கள்.

'வணங்கும் இப்பிறப்பு
இறப்பிவை நினையாது
மங்கையர் தம்மோடும்
புணர்ந்து வாயிதழ்ப்
பெருவெள்ளத்து அழுந்திநான்
பித்தனாய்த் திரிவேனை
.. ..எனை
ஆண்டுகொண்டு ...'

— அற்புதப்பத்து 6.

இந்த அற்புதப்பத்தில் மட்டுமல்லாது அச்சோப் பத்திலும், நீத்தல் விண்ணப்பத்திலும், திருத்தெள்ளேணம், அதிசயப் பத்திலும், குலாப்பத்திலும் பெருமான், இவ்வாறே தாம் மாதர் இன்பத்தில் மூழ்கித் திளைத்துப் பித்தனாய்த் திரிந்ததும், பின் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றதும் பற்றி ஐயத்திற்கிடமின்றித் தெளிவாய்க் கூறுகின்றார்.

இறைவனை வழிபடாமல் தாம் மனைவி, தாய், தந்தை, மக்கள், சுற்றம், செல்வம், உலக போகங்கள் முதலிய வற்றிலும் சாதி, குலம், பேராசை வயப்பட்டு அவைகளே மெய் என்று கிடந்ததையுங் கூறுகின்றார். முன்பே நாம் மேலே விளக்கியபடி ஆன்றோர் தம் சிறு குறைகளை மலை யாகப் பெரிது படுத்தி வருந்துவர் என்பதறிந்தோம்.

எனினும், ஓரளவாவது பெருமான் இக்குறைகளுக்கு ஆட் பட்டிருத்தல் கூடும். ஆனால் அதே சமயத்தில் உயர்ந்தோர் போற்றும் ஒழுக்கங்கள் எல்லாவற்றிலும் பெருமான் உல கோரை விஞ்சிய பெரும் பத்தராகவும், இறைவன் அருள் பெறும் வேட்கை மிக்கவராகவும் இருந்தார் என்பதற்குச் சான்றேதும் வேண்டாம். இறைவன்தானே வலிய வந்து அவரைத் தேடி ஆட்கொண்டதே சான்றாம் அன்றோ?

முதல் அமைச்சராக விளங்கிய பெருமான் ஓரளவாவது இவ்வுலக இன்பங்களில் ஆட்பட்டிருத்தல் இயல்பே. இன்றும் இத்தகைய பெரும் பதவியிலுள்ளோர் இவ்வின்பங்களில் திளைத்திருத்தல் காணக் கூடியதே! இவர்கள் உள்ளும் கடவுட் பற்றும், சான்றாண்மையும், உயர்ந்த பண்பும் உடையோரைக் காண்கின்றோம். ஆயினும், அவர்கள் யாவரும் அணுக ஒண்ணாப் பெருநிலையில் – பத்திமையில் பெருமான் இமயம் என இலங்கினார். இதனை அவ்வின்பங் களை எல்லாம் அறவே விடுத்து அவன் ஒருவனையே பெருஞ் செல்வமாகப் பெரும் பேறாகப் பெற்றார் என்பதனை அவர்தம் வாக்கால் அறியலாம்.

'உரைமாண்ட உள்ளொளி
உத்தமன்வந்து உளம்புகலும்
கரைமாண்ட காமப்
பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப்
பறவை இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித்
தோள்நோக்கம் ஆடாமோ'

— திருத்தோள் நோக்கம் 14.

கரைமாண்ட — கரையில்லா
இரைமாண்ட — இரை இல்லாமல்
இந்திரியப் பறவை — (புலன் இன்பங்களாம்) பறவைகள்
இரிந்து — விட்டு.

என்னும் பாடலாலறியலாம்.

உயிரும், உடம்பும் ஒன்றியிருந்து வாழ இயற்கை உணர்வுகளாகிய பசி, நீர், வேட்கை போலக் காதல் உணர்வும் அதன் பயனாகிய சேர்க்கை இன்பமும் நுகர்ந்தே ஆக வேண்டும். அவை தவறே அல்ல; இறைவன் ஆணையே. ஆனாலவை அறவழியில் அமைதல் வேண்டும். கொலை, களவுகள் முதலியவை இயற்கை உணர்வுகளல்ல. பழக்கத்தால் வருவன. அதனாலன்றோ கோடிக் கணக்கானோர் இவற்றைக் கொள்வதில்லை. பொய்யும் இவை போன்றதே. அச்சம், ஆசையால் பொய் தோன்றும். உடலின்பம் இவை போன்ற உணர்வல்ல; செயல் அல்ல. ஞானிகளும் பத்திமான்களும் உடலின்பத்தை ஏன் தவறாக எண்ணுகின்றனர் எனில் இறைவனை அடைதற்கு இவ்வுணர்வு தடையாக உள்ளனவே என்று அவர்கள் கருதுவதே காரணமாகும். அவர் கருத்து சரியல்ல. சரியானால் உண்பது முதலாம் செயல்களும் தவறு என்றாகி விடும் அல்லவா? அஃது இறைவன் கருத்துக்கும், அறம், பொருள், இன்பம், வீடு பேறுகளை அடைதற்கும் தடையாகி விடுமன்றோ? பிறப்பே, படைப்பே தவறாகி இறைவன் அருளுக்கே இழுக்காம் அன்றோ?

அதனாற்றான் சுந்தரமூர்த்தி நாயனார் உடலின்பத்தினைத் தவறு என எண்ணாது அது சிவனருளே! என்று கூறித் தம் மனைவியருடன் கூடி இன்பம் பெற்றார். இதனைச் 'சுந்தரர் வரலாற்றாய்வுரை' என்னும் நம் நூலில் விளக்கியுள்ளோம்.

நம் பெருமானும் தம் திருக்கோவையார் நூலில்,

'ஆனந்த வெள்ளத்து அழுந்தும்
ஓர்ஆருயிர் ஈர்உருக்கொண்டு
ஆனந்த வெள்ளத்திடை திளைத்தால்
ஒக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத்து அறைகழலோன்
அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் முற்றாது
வற்றாது இவ்வணிநலமே'

என்கின்றார்.

ஆயினும், சமய ஞானிகள் பலர் நோக்கில் இவ்வுடலின்பம் உயிர் இன்பம் தவறானது என்ற கருத்து அன்றும் இன்றும் ஊறியே நிற்றல் காண்கின்றோம். என்றாலும் ஈசன்பால் வைத்த வான் போன்ற நேசத்தால் உடல் இன்பத்தை மணிவாசகர், வடலூர் வள்ளலார், இராமகிருட்டிணர் போன்றோர் ஒருசிலர் கைவிடுதல் கண்கூடு.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'

என்னும் வள்ளுவர் வாக்கின்படி உடலின்பமும், கடவுள் இன்பமே யாதலின் அதனைக் கைவிட வேண்டுமென்பது இல்லையன்றோ? இந்நோக்கில் பார்த்தால் பெருமான் நுகர்ந்த மாதரின்பம் தவறல்லவே! எனவே, பெருமான் இறைவன் அருள் பெறும் முன் நுகர்ந்த உடலின்பம் முதலாம் உலக இன்பங்கள், நலங்கள் தவறானவை அல்லது குற்றமுடையன ஆகா என்று உணர்வோமாக.

முழு முதற் பெரும் பொருளாம் சிவபிரான் தந்த ஒப்புயர் வற்ற என்றும் குன்றா, நிலைத்த அழியாப் பேரின்பத்தை நுகரும் பெருமானுக்கு அழியக் கூடிய உலகியல் இன்பங்கள் சிறுமையாகத் தோன்றலும், குறையாகக் குற்றமாகத் தோன்றலும் இயல்புதானே! கோடியாகப் பொன்னைக் குவித்தார்க்குச் சில்லரைக் காசுகள் ஒரு பொருட்டாகுமோ? இஃதொரு புறமிருக்க.

ஓர் ஐயப்பாடு

தமக்குச் சேர்க்கை இன்பந் தந்தாரைப் பெருமான் 'தையலார்' மங்கையர் என்று பன்மையிற் குறிப்பிடு கின்றாரே, அதனாலவர் மாதர் பலரோடு மகிழ்ந்தது தவறாகாதா என்னில், அச்சொற்களை உலகிலுள்ளார் குறை, குற்றங்களைத் தம் மேல் ஏற்றிக் கொண்டு தாம் மாதர் இன்பத்தில் திளைத்ததாகப் பெருமான் கூறியிருக்க லாமோ என்று ஓர் ஐயம் எழலாம். திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகத்தில், தம்மைக்

'குலம்பொல்லேன் குணம்பொல்லேன்
குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன்
ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன்
அல்லேன் வெறுப்பனவும்
மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈயமாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே'

குறியும் — குறிக்கோள்களினாலும்
பொல்லேன் — பொல்லாதவன்
என் செய்வான் — (எந்த நல்லனவும் செய்யாது
தீமையே செய்யும் நான்) எதற்காக
தோன்றினேன் — பிறந்தேன் (பிறந்தது
பயனில்லை) என்பதாம்.

இம் மாபெருங் குறைகள் அவரிடம் இல்லை என்பதற்கு விளக்கந் தேவைப் படவில்லை யன்றோ? இவ்வாறே தவஞானச் செல்வர் தாயுமான சுவாமிகளும்

'எத்தனை ....
ஈகையொடு இரக்கம் என்சென்மத்தும்
நான் அறிகிலேன்
சீலமொடு தவவிரதம் ஒருகனவிலாயினும்
தெரிசனங்கண்டும் அறியேன்
பொய்த்தமொழி அல்லால் மருந்துக்கும்
மெய்ம்மொழி புகன்றிடேன்'

— ஆனந்தமானபரம் 5.

என்று தம்மைப் பெரிதும் இழிவாகக் கூறிக் கொள்கின்றார். இக்கொடுந் தீமைகள் அவரிடமு மில்லை என்பதற்கும் விளக்கம் வேண்டாம். இப்பாடல்களின் பொருள்களைப் பார்த்தால், 'பொது மக்கள் தம் குறைகளை உணர்ந்து இறைவனிடம் முறையிட்டால் அக்குறைகள் நீங்கி நன் மக்களாவர். தமக்கும், பிறர்க்கும் நலஞ் செய்து உய்வர் என்ற அருள் நோக்குடன் அந்த மெய்ஞ்ஞானத் தெய்வம் நிகழ் சான்றோரால் பாடப் பெற்றன' என்பது தெளிவாம்.

ஆனால் பெருமான்,

'பொய்யெல்லாம் மெய்யென்று
புணர்முலையார் போகத்தே
மையல்உறக் கடவேனை
மாளாமே காத்தருளித்
தையல்இடங் கொண்டபிரான்
தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே'

— அச்சோப்பதிகம் 3.

அச்சோவே — ஐயோ என்னும் வியப்பைத் தரும் சொல்.

'வெந்துவிழும் உடற்பிறவி
மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார்
குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு
பரிசறஎன் துரிசுமறுத்து
அந்தமெனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே'

— அச்சோப்பதிகம் 6.

'துடியேர் இடுகிடைத்
தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள்
எத்தனையும் செய்திடினும்...'

— குலாப்பத்து 2.

தூய்மொழியார் — மாதர்
நசையால் — விருப்பத்தால்
செடி ஏறு — பாவம் மிகுந்த
எத்தனையும் — எவ்வளவு (அதிகமாக)

என்று பாடியுள்ள இப்பாடல்களிற் கண்டவாறு அவர் மாதர் இன்பத்தில் மூழ்கி மகிழ்ந்து இராவிட்டால் இவ்வளவு தெளிவாக அழுத்தந்திருத்தமாக உணர்ச்சியுடன் பாடமுடியுமா? இப்படிப்பட்ட என்னைச் சிவன் ஆட்கொண்டானே! இப்பேற்றை என்னை அல்லாமல் ஆர்பெறுவார்? என்றுதான் வியந்து வியந்து பாடி மகிழ்ச்சியாலாட முடியுமா?

•

ஆகவே, இவற்றை எல்லாம் உற்று நோக்கும்போது திருநாவுக்கரசர், தாயுமானவர் பாடல்கள் பிறர் உய்யப் பாடியவை என்பதும், இங்கே காட்டிய பெருமான் பாடல்கள் தம் நுகர்வைப் பற்றியன என்பதும் நன்கு விளங்குவதாம்.

•

எனவே, மாதர் இன்பந்துய்த்த தம் செயலைத்தான், மேலேயும் இங்கேயும் காட்டப்பெற்ற பாடல்களில் தன் வரலாறாகச் செயலாகப் பெருமான் கூறுகின்றார் என்று

அறியப் பெறுகிறோம். அன்றிப் பிறர் குறைகளைத் தம் மேல் ஏற்றி இப்பாடல்களைப் பாடினார் என்ற ஐயப் பாட்டிற்கு இடமில்லை என்று உணர்வோமாக.

மேற் பாடல்களில் பெருமான் ‘தையலார்’, ‘மங்கையர்’ என்று மரியாதையை உணர்த்தும் ஆர்விகுதியைச் சேர்த்துக் கூற வேண்டிய முறைமை பற்றியே அவ்வாறு கூறினார் என்று அறிதல் வேண்டும். ஆகவே, மாதர் பலரோடு என்று கருதல் தவறாகும். நல்லார், தீயோர் என்று கூறுதல் முறையாம்; அன்றி நல்லான், தீயன் என்று குறிப்பிட்டால் அது குறிப்பிட்ட ஒருவனையே சேரும் அன்றோ? ஆகவே, பெயர் குறிப்பிடாது பொதுக் கருத்தைக் கூறவே பெருமான் பன்மையில் அப்படிக் கூறினார் என்பது உறுதியாகும்.

இப்படியன்றிப் பொருட் பெண்டிர், விலைமகளிர், வேசியர் என்ற சொற்களைப் பெருமான் கூறியிருந்தால் அது குற்றமாகக் கொள்ளலாம். அவ்வாறில்லையே! ஆகவே பெருமானை இறைவன் ஆட்கொண்டது தவறாகாது என்க.

பெருமான், ‘தையலார்’, ‘மங்கையர்’, ‘பெண்டிர்’என்று குறிப்பிட்டது தம் மருமைத்திரு மனைவியாரையே என்று அறிதல் வேண்டும். அதனாற்றான் தையலார் மங்கையர் என்னுஞ் சொற்களுக்கு முன் அவர்களை இழிவு படுத்துக் கூறும் சொற்களில்லை ஆம்! இருக்க முடியாது தானே! பெருமான் மனைவியார் தவச்செல்வியாராகத் தானே அமைக்கப்பட்டிருப்பார்! இறைவன் உயர்ந்தார்க்கு உயர்ந் தாரைத் தானே துணைவியாக்குவான்!

பெருமானுக்கு மனைவி மக்கள் உண்டா?

ஆட்கொள்ளப் பெற்ற பின்னர் பெருமான்,

‘துணையான சுற்றங்கள்
அத்தனையும் துறந்தொழிந்தேன்’
— திருப்பூவல்லி 1.

துணையான — பெருந்துணை மனைவி (மனைவியார் தாமே)
சுற்றங்கள் — மக்கள், பெற்றோர், உடன் பிறந்தார்
துறந்தொழிந்தேன் — துறந்து விட்டேன்.

'எந்தையெந் தாய்சுற்றம்
மற்றும்எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை
ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்'
— திருப்பூவல்லி 2.

என்ற இவ்வரிகளில் சுற்றம் என்பதனை விரித்துத் தந்தை, தாய் நெருங்கிய சுற்றத்தாரையும் மற்றும் என்பது, உலகச் செல்வங்களையும் என்று குறிப்பிட்டார்.

'வைத்தநிதி பெண்டிர்
மக்கள்குலம் கல்வி .. '
— திருக்கோத்தும்பி 6.

வைத்தநிதி — (வங்கி போன்ற நிலையங்களில்)
சேர்த்து வைக்கும் செல்வம்.

இவற்றில் எல்லாம் எனக்கிருந்த மயக்கத்தை நீக்கினான் என்று கூறுகிறார். இவ்வரியில் பெண்டிர் என்பதனை அடுத்து மக்கள் என்ற சொல் ஆளப்பட்டுள்ளது காணலாம்.

இக் குறிப்புக்களால் பெருமான் மணமாகி மனைவி, மக்கள், தாய், தந்தை முதலிய சுற்றத்தாரோடு வாழ்ந்தமையும் அவனருள் பெற்றபின் எல்லாவற்றையுந் துறந்தமையும் தெளிவாகும்.

'பிரபு லிங்க லீலை' என்னும் வீர சைவ சமய இனிமை மிகு காவியம், 'வீர சைவக் குரவரான பசவரின் அருமை பெருமைகளை யறிந்த கலியாண புரத்து அரசன் அவரை அமைச்சராக்கிக் கொள்ள விழைந்தான். 'மணமாகாத வரை அமைச்சராக்கல் ஆகாது' என்ற (அக்கால) மரபை ஒட்டி அவர்க்கு மணம் புரிவித்தபின் அவரை அப்பதவியில் அமர்த்தினான்' என்று கூறுகின்றது. மணமாகாத ஒருவர்

அமைச்சராயிருந்தார் என்று இலக்கியங்களில் காண வியலாது. அமைச்சர் என்றாலே இட்மை அகவைக்கு 40-க்கு மேல் உள்ளவராகத் தானே இருத்தல் இயலும். அதிலும் முதலமைச்சர் என்றால் 45-க்கு மேற்பட்ட அகவை யாராக அல்லவோ இருத்தல் வேண்டும். இக்காலத்தும் இஃது பொருத்தமாக அமைந்திருத்தலை அறியலாமே! சிறு பதவியிலிருந்து பெரும் பதவிக்கு வருவதென்றால் அகவை மிகுதியாக இருத்தல் இயல்புதானே!

'சுற்றம் என்னும்
தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப்
பதறினர் ......' — **போற்றித் திருவகவல்.**

பசுக்குழாங்கள் — உறவினரான (உயிர்க் கூட்டம்) உறவினரில் பற்றி அழைத்துப் பதறுபவர்களில் முதன்மையானவர் மனைவி, மக்களே ஆவர். அவர்கள் தாமே, தம் கணவர், தந்தை துறவு பூண்டு வீட்டினை விடுத்து வெளியேறினால் அவர்களைப் பற்றிக் கொண்டு அழுது தொழுது பற்றுவர்? ஆதலினால் பெருமான், தாம் துறந்து செல்கையில் அவர்கள் பட்ட வேதனையை நினைவு கூர்ந்தார் என்பதனை இவ் வரிகள் உணர்த்தும்.

'ஓரொருகால் எம்பெருமான்
என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள்
சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா
நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்
விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே
பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம்
ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்
வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து
ஆடேலோர் எம்பாவாய்'
— **திருஎம்பாவை 15.**

இதன் பொருள் :—

'தோழிகளே ! நம் தோழியைப் பாருங்கள் ! இவள் எப்போதும், 'எம் பெருமான்' 'எம் பெருமான்' என்று நம் சிவபெருமானையே போற்றிச் சிந்தை களிப்படைக்கின்றாள். அவள் கண்களில் பத்திமைப் பெருக்கால் இடைவிடாது நீர் பெருகுகின்றது. இவள் சிவலோகத்திலிருந்து சிவபிரானைப் பிரிந்து இவ்வுலகில் வந்தவள் போல ஆற்றாமையால் பித்தம் பிடித்தவள்போல் இருக்கிறாளே! சிவபிரானைத் தவிர வேறு ஒரு கடவுளை இவள் பணியமாட்டாள். இவளை இப்பெரும் பத்திமை நிலை கொள்ளுமாறு சிவபிரானைத் தவிர வேறு யாரால் (கடவுளால்) ஆட்கொள்ள முடியும்? அத்தகைய சிவபெருமானை தாம் வாயாரப்பாடி நீராடுவோம்'.

இப்பாடலிற் காணும் பத்திமை மிக்க தோழி 'பெருமானின் மனைவியார் ஆவர்' என்று மறைமலையடிகளார் எழுதியுள்ளார்.

'முடித்த ஆறும் என்தனக்கே
தக்க தேமன் அடியாரைப்
பிடித்த ஆறும் சோராமல்
சோர னேனிங்கு ஒருத்திவாய்
துடித்த ஆறும் துகிலிறையே
சோர்ந்த ஆறும் முகங்குறுவேர்
பொடித்தஆறும் இவை உணர்ந்து
கேடென் தனக்கே சூழ்ந்தேனே'

— திருச்சதகம் 57.

இங்கே ஒருத்தி என்று பெருமான் சுட்டுவதும் தம் மனைவியாரையே! வேறொருவராக இருத்தல் இயலாதன்றோ? ஆகவே, பெருமான் சுட்டியுது அவர் மனைவியாரையே என்றும் மறைமலையடிகளாரின் எழுத்து, பொருத்தமே! பெருமான் துறந்து செல்கையில் அவ்வாறு துன்புறக் கூடியவர் அவராகத்தானே இருக்க முடியும்?

எனவே, இதுகாறும் கண்ட ஆய்வுகளிலிருந்து சிவ பிரானால் ஆட்கொள்ளப் பெற்ற பின் மணிவாசகர் ஊர், பதவி, மனைவி, மக்கள், தாய், தந்தை, சுற்றம், உலகப் பொருட்கள் யாவற்றையும் விட்டு வெளியேறினார் என்பதும், அப்போதவர் மனைவியார், மக்கள் முதலியோர் துன்பங் கொண்டு பெரிதும் வருந்தினார்கள் என்பதும், அவர் மனைவி யாரின் பெரும் சிவ பத்திமை இத்தன்மையது என்பதும், அவர்க்கு மனைவி, மக்கள், சுற்றத்தார் உண்டு என்பதும் மேற்காணும் பெருமானின் பாட்டுக்களானும், பாட்டின் வரிகளாலும் உண்மையாம், உறுதியாம் என்பதும் ஐயத்திற் கிடமின்றித் தெளிவாக விளங்கக் காண்கின்றோம் அன்றோ?

மேலும் ஓர் ஐயப்பாடு

ஆம், பெருமான் மனைவி, மக்கள் முதலிய சுற்றத்தாரை உடையராயிருந்தார் என்பது பொருந்தும். ஆனால், அவர் இறைவன் அருள் பெறுதற்கு முந்திய நிலையில் மாதர் இன்பம், உலக இன்பங்களில் மூழ்கியிருந்தமையை அவர் திருவாக்காலேயே அறியப் பெறுகின்றோம். அந்நிலையில் அவரை இறைவன் ஆட்கொள்ளலாமா?என்னில் கூறுவோம்.

அவ்வின்பங்களை எல்லாம் நெறி முறையில் தான் பெருமான் நுகர்ந்தார் என்பதும், அது கடவுள் அருளுக்கு இசைவானவையே என்பதும் மேலே காட்டினோம். ஆகவே, இறைவன் பெருமானை ஆட்கொண்டமை பொருத்தமே என்க. அங்ஙனமானால் ஒரு நெறி முறையில் வாழ்வோர் எல்லார்க்குமே இறைவன் வலிய வந்து காட்சி தந்து ஆளாமை ஏன்? என்பதனை ஒரு சிறிது விளக்குவோம் :—

உலகில் பல் கோடி மக்கள், கொலை, களவு, கள் நீக்கி நெறிமுறைப்படியே வாழ்கின்றனர். சிறுபான்மை பொய்யும், முறையற்ற காமக்களியும் விட்டோர் ஓரிரு கோடிக்கு மேல் இரார். அவற்றுடன் சிற்றுயிர்க் கொலையும், புலையும் புசிப் பும் நீக்கியோர் பன்னூறாயிரவர்க்கு மேலிரார். அவருள்ளும் ஒழுக்கம்,கல்வி,கேள்விகளால் நிறைந்து சீலமும், நோன்பும்,

பத்திமையும், மெய்யுணர்வும், மெய்ப்பொருளைக் காணும் ஆர்வமும் மிக்கார் சில நூறாயிரவர் இருக்கலாம். அவரிலும் எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி அன்பு செய்தும், அவை வாழத் தன்னலத்தை அறத்துறந்து தொண்டு செய்யும் மெய்ஞ் ஞானியராய் வாழ்வார், ஓராயிரவர் இருப்பவர். இவர்களில் குற்றமொன்றுமிலராய்க் குணங்களில் நிறைந்தவ ராய்த் தவத்தின் மிக்காராய் விளங்குவார். ஓரிரு நூற்றாவர் தாம் திகழ்வர். இவருள்ளும் இறைவனைத்தவிர வேறொன்றும் நினையாராய் அவனையடையும் நோக்கம் ஒன்றே கொண்டு துடிப்பவர் ஒரு சிலரே; கொக்கு ஒன்று யாவும் மறந்து தன் இரையாம் மீனையே நோக்கி அசைவற நிற்றல் போல் நம் பெருமான் இறைவனைக் காண அவனை அடைய இராப் பகலாக ஒன்றிய மனத்தினராய்த் துடியாய்த் துடித்து நின்றார். இவ்வாறு தாம் நின்ற நிலையினைப் பெருமானே தம் திருவாக்கால்,

'அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே ஏசற்றேன்'

— கோயில் மூத்த திருப்பதிகம் 5.

என்று கூறியுள்ளார். இப்பாட்டுங் கருத்தும் மேலேயும் காட்டப் பெற்றுள்ளன.

இப்பெரு நிலையில் நின்றார்; நிற்பார் உலகந்தோன்றிய நாள் முதல் இன்றளவும் ஒரு சிலரே இருந்தனர்; இனி இருப்பரோ? அறியோம். நாம், உலகம் அறிந்த வரையில் இவ்வாறு இணையில்லாப் பெருநிலையில் நின்றார் இருவரில் ஒருவரே. உலகஞ் செய்த உயர் தவத்தால் தோன்றிய நம் மணிவாசகப் பெருந்தகையாரே ஆவர். ஏனையவர், திருஞானசம்பந்தப் பிள்ளையார், நாம் மேலுங் கூறியவாறு இவர் போன்றார் சிலர் இருக்கலாம்; இருப்பர். ஆயினும் தாம் இறைவனைக் கண்டது பற்றி அவர்களுடைய திரு வாக்குகளால் ஆன அகச் சான்றுகளில்லையே! ஆனால் பாரதமும் தமிழ்நாடும் உலகும் செய்த பெரும் பேறாக நந் தமிழ் நாட்டில் ஒருவர்க்கு இருவர் கிடைத்துள்ளமை

இறைவன் திருவருளே யாகும். * சம்பந்தர் முன்னைத் தவத்தால் பிறந்தபோதே எவ்வகை முயற்சியும் இன்றி இறைவனைக் கண்டார். நம் பெருமானோ யாராலும் செய்ய வியலாப் பெரும் முயற்சியால் - தவத்தால் - துறவால் - பத்தியால் இறைவனைக் கண்டார். இது செயற்கருஞ் செயலன்றோ? எனவே, இதுவரையில் ஆய்வு செய்தபடி பெருமான் இறைவனால் ஆட்கொள்ளப் பெறுதற்காம் முழுத் தகுதியும் உடையவரே என்பது மலைமேல் விளக்காம் என்று உணர்வோமாக. பெருமானின் இவ்விணையில்லாப் பெருமைகளை நோக்கியே இராமலிங்க வள்ளலார்,

'பெண்சுமந்த பாகப்
பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல்
எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர்
மாறன் பிரம்படியாற்
புண்சுமந்து கொண்டதுநின்
பொருட்டன்றோ புண்ணியனே'

பெண்சுமந்த பாகத்தன் — சிவபெருமான்
மா — குதிரை
எய்தியதும் — வந்ததும்
மாறன் — பாண்டியன்

என்று பாடி மகிழ்கின்றார். பெருமானைப் போற்றுகின்றார். அவர் பேறு கண்டு வியக்கின்றார். வள்ளலார் மட்டுமா?

நன்மகனைப் பெற்ற தாய் தந்தையர் அவனைப் பெற்ற பேற்றைப் பெற்று மனமகிழ்வும், நிறைவுமடைவதே போல் அம்மையப்பனாம் இறைவனும் பெருமானைத் தனக்குப் பேரன்பனாகக் கொண்டு ஆண்டு கொண்டான். உலகம்

---

* இதுபற்றிச் 'சம்பந்தர் வரலாற்றாய்வுரை' என்னும் நம் நூலுள் விளக்கப்பட்டுள்ளது. 1982-இல் இந்நூல் தமிழ் நாடரசின் முதற் பரிசு பெற்றது.

படைத்ததன் நோக்கம் நிறைவுறப் பெற்று மகிழ்வும், மன நிறைவும் பெற்றான் என்று கருதலாம். உலகமும் மகிழலாம். இறைவன் உயிர்களைப் படைத்ததன் நோக்கம் ‘அவை அறியாமைத் துன்பங்கள் அனைத்தும் நீங்கின் தன்னை யடைந்து நிலைத்த பேரின்பத்தில் திளைத்து இன்ப நிறைவாதல் வேண்டும் என்பதே. அவ்வுயிர்களில் தலையாயவர் நம் பெருமான் ஆவர் அன்றோ?

கடவுட் பற்றின் அருமை

மாந்தர் இன்பமுடன் வாழ விரும்புதல் இயல்பே. இன்பத்தைப் பெற உயிர்க்குக் கருவிகளாகக் கண், காது, வாய், மூக்கு, உடல், ஐந்தும் உள்ளன. இவற்றுள் தலையாயது கண். கண்ணினாற் காணும் அழகுணர்ச்சியால் காதல் உண்டாகின்றது; அக் காதல் பல வகைப்படும். இயற்கைக் காட்சிகள், ஓவியக் காட்சிகள், படக்காட்சிகள், உருவக் காட்சிகள் முதலியவை ஆகும். உருவக் காட்சிகளில் தலைமையானது ஆணுக்குப் பெண்ணுருவம்; பெண்ணுக்கு ஆண் உருவம். இவற்றின் விரிவே திரைப்படக் காட்சிகள் முதலாம் கலை உருவங்களாம். அடுத்துச் செவியால் வரும் இசை; உரையாடல்கள்; பாடல்கள் முதலியனவாம்; வாய் அறுசுவை இன்பங்களை அளிப்பது; மூக்கு மண இன்பம்; உடல் தொடுதல்; பொருந்துதல் முதலாம் இன்பங்கள் தருவனவாம். இவற்றில் அறிவில்லாதவரும் அறிவுடையோரும் யாவரும் எளிதில் ஈடுபட்டு இன்பம் அடைவர். ஆதலால் அவற்றைப் பெறத் தம் உடல், பொருள், ஆவியை வழங்கி விடுகின்றனர்.

ஆனால், கல்வி கேள்விகளால் வரும் இன்பங்களை அறிவினால்தான் அறிதல் கூடும்; பெறுதல் கூடும். அன்பு, இரக்கம், அருள், கொல்லாமை, புலால் உண்ணாமை, பிறர் நலம் பெறத் தன்னையே வழங்கும் ஈகம் (தியாகம்) முதலியவை அறிவுக்கும் மேற்பட்ட அற, அருள் உணர்வுகளால் மட்டுமே அறியப் பெறுவன. இவை ஒன்றாலும் அறியப் படாதவன் இறைவன். இதனை மெய்யுணர்ந்த மேலோர் யாவரும் ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

இறைவனைச் சம்பந்தர்,

'இன்னஉரு இன்னநிறம் என்றுஅறிவதேல் அரிது'

என்றும்; அப்பர்,

'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன்இறைவன் என்று எழுதிக்
காட்(ட) ஒ(ண்)ணாதே'

என்றும்; சுந்தரர்,

'இன்னதன்மையன் என்றுஅறி ஒண்ணாஎம்மான்'

என்றும்; நம் பெருமான்,

'கரணங்கள் எல்லாம்
கடந்துநின்ற கறைமிடற்றன்'

கரணங்கள் — கருவிகள் (ஐம்புலன்கள், மனம், சொல், அறிவு, உணர்ச்சி)

' எங்கள் பெருமான்பாதம் இரண்டும்
வினவில் பாதாளம் ஏழினுக்கு அப்பால்'

'சோதிமணி முடிசொல்லில்
சொல்லிறந்து நின்றதொண்மை'

'உணர்வுக்குந் தெரிவரும் பொருளே'

'கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்
தங்கருத்தின் நோக்கரிய நோக்கே'

'ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமில்லான்'

'கண்முதற் புலனால்காட்சியும் இல்லோன்'

என்று கூறியுள்ளார்.

முன்னுங் கூறியபடி இப்படிப்பட்ட பரம்பொருளை அடையவும், காணவும் பெருமானைப்போல் பேரன்பு கொண்டு யாவும் துறந்து,

'இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்காதான் '

என்று பெருமானே கூறுகின்றபடி அவனையன்றி வேறு நினைவில்லாமல்,

'நினைப்பற நினைந்தேன்' (உலக நினைவுகள்)

எல்லாவற்றையும் விட்டு இறைவனையே நினைந்து இராப் பகலாக ஊண், உறக்கமின்றி உருகிப் பேரன்பு கொண்ட நம் பெருமானுக்கன்றி ஏனையோர்க்குக் கடவுட் காட்சியும், அவன் தரும் பேரின்பம் பெறுதலும் இயலாது; இயலாது. இதுவரை செய்த ஆய்வினால் கடவுட் பற்றின் அருமை நன்கு விளங்குவதாம்.

எவரெஸ்ட் மலைமுடியை வெற்றி கண்டார் பலர்; மேலும் பலர் காண்பர், திங்களை அடைந்தாரும் பலர். அமெரிக்காவைக் கண்டுபிடித்தார் கொலம்பஸ், அணுவைக் கண்டார் ஈன்ஸ்டீன். இவ்வாறு அரும்பொருள் கண்டார் பலர், காண்பாரும் பலர். ஆனால், அரும் பொருள்களுக் கெல்லாம் அரும் பொருளாய், பெரும் பொருளாய் யாராலுங் 'காண்டற்கரிய கடவுள் கண்டாய்' என்று அப்பர் பெருமான் அருளிச் செய்த இறைவனை நம் பெருமான், தம் பெரும் முயற்சியால் கண்டார். எனில் இவர்க்கு நிகராவார் அவரே தாம்.

•

ஆகவேதான் இராமலிங்க வள்ளலார் முதலாம் தெய்வச் சான்றோர்கள்,

‘தேடுகின்ற ஆனந்தச்
சிற்சபையின் சின்மயமா
ஆடுகின்ற சேவடிக்கீழ்
ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர்
நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம்
வந்தொருகால் மாற்றுதியே’

‘மன்புருவ நடுமுதலா
மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார்
எல்லோரு மேமாக்க
அன்புருவம் பெற்றதன்பின்
அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினை நீ
எழில்வாத வூரிறையே’

என்று பெருமானைப் பாராட்டுகின்றனர். இரண்டாம் பாட்டுள் பெருமானை வள்ளல் ‘இறையே’ (இறைவனே) என்று போற்றுவது கவனித்து மகிழ்தற்குரியது. பெருமானே, இறைவனைக் காணும் இணையற்ற அருமையைத் தம் திருவாக்கால்,

‘புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாரும்நின் மலரடி காணா
மன்ன என்னைஓர் வார்த்தைஉட் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனமிக உருகேன்
பரிகி லேன்பரி யாஉடல் தன்னைச்
செற்றி லேன்இன்னும் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே’

— **செத்திலாப் பத்து 2.**

'இறைவனைக் காண யோகியர் மழைநீரையும் காற்றையும் உண்டு உள்ளத்தை ஒரு நிலையில் வைத்து உடலசையாமல் தூண் போலிருந்து தவஞ் செய்கின்றனர். அதனால் கரையான்கள் அவர்மீது புற்றை ஆக்கிவிட்டன. புற்றில் மழைநீர் விழ அதிலிருந்து மரங்களும் வளர்ந்து விட்டன. இவ்வாறு கடுந்தவம் செய்தும் அவர்களால் காண ஒண்ணா மன்னவனே' என்பது இப்பாட்டின் முதலிரண்டடிகளின் பொருளாகும்.

இதுவரை செய்த ஆய்வுகளினால், பத்திமை செய்தலும் இறைவனைக் காண்டலும் எவ்வாறு அருமை என்பதறியலாம். அதனாற்றான் உலகோர் கடவுளைவிட அவனைக் கண்ட அல்லது காணத்தம் வாழ்வையே வழங்கிவிட்ட தெய்வம் நிகழ் சான்றோரைக் கடவுளுக்கும் மேலாகக் கொண்டு ஏன்? கடவுளாகவே எண்ணி வழிபட்டு வருகின்றனர் என்ற உண்மையை அறியாதார் யார்?இவ்வுண்மையை இன்றும் இவ்வுலகில் பல்கோடி மக்கள் ஏசு பெருமானைக் கடவுளே என வழிபட்டு வருதலும், புத்தரையும், மகாவீரரையும் தம் புத்த - சைன மதக் கடவுளாகவே வழிபட்டு வருதலும் அறியார் யார்? இக்காலத்துத் தெய்வச் சான்றோராம் இராமலிங்க அடிகள், இராமகிருட்டிணபரம அம்சர் முதலானோரையும் தம் கடவுளாக இறைஞ்சி வருவோரை நாம் அறிவோமே!

அடியார் பெருமை

கடவுளே முதற் பெருமைக்கும் அருமைக்கும் உரியவராயினும், அவரைக் காணும் முயற்சி அதைவிடப் பெரியது. அதில் வெற்றி பெற்று அவரைக் காண்பவர் கடவுளைவிடப் பெரியவர் ஆவர். இவ்வுண்மையை அருமையை அறிந்து தான் ஔவையார்,

'பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகனோ கரியமால் உந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்

அலைகடலோ குறுமுனி கலசத்தில் ஒடுக்கம்
கலசமோ புவியிற் சிறுமண் புவியோ
அரவினுக்கு ஒரு தலைப்பாரம் அரவோ
உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையவளோ இறையவர் உள்ளத்து ஒடுக்கம்
இறையவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'

என்றார்.

அத்தகு பெரியோராம் மாணிக்கவாசகரின் பெருமையை நம்மனோரால் அறிய முடியாதே; சொல்லி முடியாதே! ஆதலினாற்றான் இறைவன் அவருக்கு எளியனாகி வந்து அவரை ஆட்கொண்டான் என்பதனை மீண்டும் உணர்ந்துய்வோமாக.

ஆகவே, அடியார்களின் இப்பெருமைக்குக் காரணம், அவர்கள் உள்ளத்தே இறை அன்பொன்றே மிகுந்து நிற்கும் என்பதே.

'அடியார் உள்ளத்
தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட
கொள்கை... ......'

— கீர்த்தித் திருவகவல்.

மீதூர — மிகுமாறு

என்றவாறு அன்பு மிகுந்த இடத்தில் தானே சிவபிரான்-(கடவுள்) இருப்பான் 'அன்பே சிவம்' அன்றோ? 'அன்பு வேறு சிவம் வேறல்ல' என்கின்றாரே திருமூலர். நூற்றுக்கு நூறு நிறைந்த அன்பினால் மட்டுமே அடையக் கூடியவர் கடவுள். அப்படிப்பட்ட அடியார் சேர்க்கையால் கடவுள் அன்புமிகும் ஆதலினாற்றான்,

'நல்லார் இணக்கமும் நின்பூசைநேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ?' என்றார் பட்டினத்தார்.

'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்'

'தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம்'

என்றார் அப்பர்.

'தொண்டரொடு கூட்டு கண்டாய்'

என்றார் தாயுமானார்.

நல்லார், தொண்டர், நினைப்பவர் அடியார்.

அடியார் — இறைவன் திருவருளையே எண்ணியிருப்பவர்; அவரடிமை யாவர்; அவன் ஆணை வழி செயற்படுவர்.

அடியாரியல்புகளைத் தெய்வச் சேக்கிழார் பெருமான் தம் பெரிய புராணத்தில்,

'மாசி லாத மணிதிகழ் மேனிமேற்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்'

'பூத மைந்து நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காத லுறைப்பி னெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார்'

ஓதுகாதல் — (இறைவன் பெயரைப் பேரன்புடன்) ஓதுவதில் (ஆர்வம் மிக்கவர்) கோதிலாத குணப்பெருங் குன்றனார் (குறையில்லாப் பெருங் குணங்களை உடையவர்).

•

'கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

•

'ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலார்
ஈர வன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னால் விளம்புந் தகையதோ'

'வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்'

கண்டிகை — சிவமணி (உருத்திராக்கம்)
கந்தையே — எளிய வேட்டி, துண்டு.

— திருக்கூட்டச் சிறப்பு என்ற பகுதிப் பாடல்கள்.

'ஈசருக்கே யன்பானார் யாவரையுந் தாங்கண்டால்
கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடி மனமகிழ்வுற்று
ஆசையினா லாவின்பின் கன்றணைந்தாற் போலணைந்து
பேசுவன பணிந்தமொழி யினியனவே பேசுவார்'

'தாவரிய வன்பினாற் சம்புவினை யெவ்விடத்தும்
யாவர்களு மர்ச்சிக்கும் படிகண்டா லினிதுவந்து'

சம்பு — சிவன் (கடவுள்)

'அங்கணனை யடியாரை ஆராத காதலினால்
பொங்கிவரு முவகையுடன் தாம்விரும்பிப் பூசிப்பார்'

அங்கணன் — சிவன் (இறைவன்)

'யாதானும் இவ்வுடம்பாற் செய்வினைகள் ஏறுயர்த்தார்
— (விடைக் கொடியுடைய சிவன்)
பாத விந்தத்தின் பாலாக வெனும்பரிவால்
.... பணிசெய்வார் ... '

பாதார அரவிந்தம் — திருவடித்தாமரை, பணி — தொண்டு

'ஈசனையே பணிந்துருகி யின்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித்தங் கருவிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே யுடல்கம்பித் திடுவார்மெய்க் குணமிக்கார்'

கம்பித்தல் — (அன்பினால்) நடுங்குதல்.

'நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலு நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலு மிமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாத மொருகாலு மறவாமை
குன்றாத வுணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்'

'சங்கரனுக் காளான தவங்காட்டித் தாமதனால்
...... பயன்றுய்ப்பார் ....'

— பத்தராய்ப் பணிவார் புராணப்பாடல்கள்.

பெருமானும் அடியார் இயல்புகளை,

'சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும்
தலைவா என்பார் ...'

— கோயில் மூத்த திருப்பதிகம் 9.

என்று கூறிப் பாராட்டி மகிழ்கின்றார்.

'நல்லாரைக் காண்பதும் நன்றே' அன்றோ?

'நலமிக்க நல்லார் சொல் கேட்பதும்'
நன்மை அன்றோ?

'நல்லார் குணங்கள் உரைப்பதும்'
நன்றேயாகி நம்மைத் திருத்தும் அன்றோ?

'அவரோடு இணங்கி இருப்பதும்'
நம்மை உய்விக்கும் அன்றோ?

இப்பெரும் நலங்களை எல்லாந் தரும் அடியார்களிடத்து அடிகள் கொண்ட பேரன்பைப் பணிவை-பத்தியை அவர்தம் பல பாடல்களாலும் அறிகின்றோம்.

•

அடியார்களைப் பாராட்டிப் போற்றுதல்

* 'கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில்
என்னையும் ஆட் கொண்டருளி'

— திருக்கோத்தும்பி 4.

'பொருட்பற்றிச் செய்கின்ற
பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி
வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார்
சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா
தோள்நோக்கம் ஆடாமோ'

— திருத்தோள் நோக்கம் 3.

பெருமான், 'கண்ணப்பர் போல் பேரன்பு எனக்கில்லையே என்று தம்மை நொந்து கொள்கின்றார் அவர் ஆகம முறைப்படி — அற முறைப்படி பூசை செய்யவில்லை. தம் செருப்பால் சிவபெருமான் முடிமேல் இருந்த பழைய மலர்களை நீக்கினார். தம் வாயிற் கொணர்ந்த நீரைத் திருமுழுக்கிற்காக அவர் முடிமேல் உமிழ்ந்தார். பாவந்தரும் ஊனையும் படைத்தார். வேடர் குலத்தவராதலின் இவை தவறான வழிபாடு என்று அவர் அறியவில்லை. ஆனால் அளவுபடா அன்பினால் வழிபட்டார். அதனால் ஈசன் மகிழ்ந்தார் அவர்க்கருள் புரிந்தார்' என்று சிவபிரான் பேரருளைப் பாராட்டுகின்றார். அப் பாராட்டுக்களால் கண்ணப்ப நாயனாரின் பேரன்பை உலகத்தார்க்கு அறிவிக்கின்றார்.

---

* சிவலிங்க வடிவில் சிவபிரான் தன் திருமுகத்தைக் காட்டித் தம் கண்ணில் குருதி கொட்டினார். அது கண்டு அஞ்சித் தம் கண்ணைப் பெயர்த்தெடுத்து குருதி நிற்குமாறு ஈசன் கண்ணில் அப்பினார்.

கண்ணப்பரையும் இறைவனையும் பாராட்டும் முகத்தான், சிவபெருமானே! கண்ணப்பரைப் போல் நான் உன்பால், பேரன்பு செய்யவில்லை; முறைப்படி உன்னை வழிபடவில்லை; தவறுகளும் பாவங்களும் செய்கின்றேன். எனக்கும் அருள் புரிவாய் என்று இப்பாடலால் இறைவனை வேண்டுகின்றார்.

தம் சிவபூசைக்கு இடையூறு செய்த தம் தந்தையின் கால்களை வெட்டினார் சண்டேசுவர நாயனார். இவர்க்குச் சிவபெருமான் அருள் புரிந்தார். இதனைப் பெருமான்,

'தீதில்லை மாணி
 சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன்
 தாதைதனைத் தாள்இரண்டும்
சேதிப்ப ஈசன்
 திருவருளால் தேவர்தொழ...'

விளங்கினார் சண்டேசுவரர் என்றவரைப் பாராட்டுகின்றார். 'இச்செயல் பொருத்தமே பாவமில்லை. அதனால், சிவபெருமான் திருவருளைப் பெற்றார்' என்று போற்றுகின்றார். இவை பற்றிய ஆய்வை யான் எழுதி வெளியிட்டுள்ள '60 அடியார் வரலாற்றாய்வுரை' என்ற நூலிற் காணலாம்.

'நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு'

'இனநலம் எல்லாப் புகழுந்தரும்'

'இனநலம் ஏமாப்பு உடைத்து'

ஏமாப்பு — பாதுகாப்பு உடையது.

'நல்இனத்தின் ஊங்குத் துணையில்லை'

ஊங்கு — இவ்வுலகில்.

ஆம்! சான்றோர், சான்றோர்பாலரா வரன்றோ?

— புறநானூறு 118.

•

ஒத்த கருத்துடையாரை — ஒழுக்கமுடையாரைக் காண்பார்க்குத் தம் கருத்தில் ஒழுக்கத்தில் மேலும் உறுதியுண்டாம், பயனுமுண்டாம். இவை தமக்கு மட்டுமன்றி உலகோர்க்கும் பயன் தரும் அன்றோ? ஆதலினாலும் பெருமான் அடியார் கூட்டுறவில் ஆழ்ந்த அன்பும் நம்பிக்கையுங் கொண்டு அவர்களை மேற்காணுமாறு சிறப்பித்தார் என்றறிவோமாக; அவ்வொழுக்கங்களைப் பெருமான் தாமும் மேற்கொண்டொழுகினார் என்பதைப் பெருமானுடைய,

'உடையாள் உன்றன்'

என்பது போன்ற பல பாடல்களாலும் அறியலாம்.

மேலே பெருமான் ஈசனை வேண்டியவாறு - விரும்பியவாறு அடியாரொடு கூடி இன்புற்றார். இதனை அவர்தம் திருவாக்கினாலேயே,

'யாவர்கோன் என்னையும்வந்து
ஆண்டு கொண்டான்
... ...
மேவினோம் அவனடியார்
அடியா ரோடும்
மேன்மேலும் குடைந்தாடி
ஆடு வோமே'

என்றும், — திருச்சதகம் 30.

மேவினோம் — கூடினோம்; சேர்ந்தோம்.

'மண்ணி லேபிறந் திறந்துமண்
ணாவதற்கு ஒருப்படு
கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயம்
கண்டாமே'

என்றும், அதிசயப்பத்தின் பத்துப் பாட்டுக்களில் முதல் ஒன்பது பாடல்களில் இறைவன் தன்னைத் தன் அடியார்களுடன் கூட்டி ஆனந்தம் தந்த அருமையினைப் பாடிப் பெரு மகிழ்வடைகின்றார்.

அருள் உள்ளம்

'தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'
— தமிழ்மறை.

'யான்பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம்'
— திருமூலர்.

'எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே'
— தாயுமானவர்.

என்றவாறு பெருமானும் விரும்புதல் வியப்பல்லவே! மேலே காட்டியபடி பெருமான் ஈசன் நினைவன்றி வேறு நினைவே இல்லாமலிருக்கையில் திருவெம்பாவை, திருஅம்மானை, திருத் தெள்ளேணம், திருத்தோள் நோக்கம் முதலாம் பதிகங் களைப் பெண்பாலார் உய்யுமாறு பாடியருள முடியுமா என்ற கேள்வி ஈண்டு எழுதல் இயல்பே! முடியும் என்பதே ஆம் விடையாகும். அதற்கான விளக்கமாவது :—

மெய்யுணர்வு சான்ற தெய்வம்நிகழ் சான்றோர்க்கு இந்நிலையே-சிவயோக-நிலையே பல நாட்கள் நீடித்தால், பசி, முதலாம் உடலுணர்வு அறவே நீங்கும்.

அவர் தொண்டு உலகர்க்கு வேண்டுமாதலால் சிவ பிரான் அருளால் இடை இடையே அந்நிலையினின்றும் அவ்வப்போது அவர் நீங்கப் பெறுவர். உலக நிலைக்கு வருவர். வந்தால் அன்பர்கள் அவரைச் சூழ்ந்து கொள்வர். திரைப்படம் பார்த்த ஒருவன் அதன்பின் பலகாலும் அவ் வெண்ணமே கொள்வன். பிறர்க்கு அதன் சிறப்புக்களையும் நலங்களையும் எடுத்துக் கூறி அவர்களை அது காணுமாறு கூறுவன்; இவ்வாறே பிற உலகப் பொருள்களைத் துய்த்தவர் களும் செயற்படுவர். இதுபோலத் தெய்வச்சான்றோர்களும் செய்வர். இம்முறையில் பெருமானும் தாம் திருவண்ணா மலையில் இருந்தபோது, அது மார்கழி மாதம்.

திருஎம்பாவை

வழக்கப்படி அக்கால மணமாகாத பெண்கள் அந் நகரிலும் வைகறையில் எழுந்து தாம் முன் செய்து கொண்ட ஏற்பாட்டின்படி ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டும், வம்பானஉரைகளைப் பேசிக்கொண்டும் ஊரிலுள்ளதாமரைப் பொய்கையில் நீராடச் செல்வர். சென்று நீரில் தாவி — மூழ்கி — நின்று நீரை ஒருவர் மீது ஒருவர் வாரி இறைத்தும், பலவாறு ஆடியும், பேசியும், மகிழ்வர். பின் கரையேறி உலகம் வாழ மழையைப் பொழிக என வேண்டுவர். பின் இறைவனை நோக்கித் தமக்கு நல்ல கணவர் வேண்டும் என இறைஞ்சி வீடு திரும்புவர். பெருமான் இக்காட்சி யினைக் கண்டார்; பரிவு கூர்ந்தார். இப்பாவையர் ஆடலில் இறைவன் பெருமை, அருள், அவன் அடியார்க்கு அளிக்கும் அளவிலா ஆனந்தம் முதலியவற்றை அமைத்தும், அவர்கள் நல்லடியார்களை வணங்கி உய்யவும், தொண்டு செய்யும், நன் மகளிர் ஆக்கவும் யாவற்றிற்கும் மேலாகச் சிவநேயம் மிக்கவராகவும், பிறவிப் பேரின்பத்தைப் பெறவும் திரு வுள்ளங் கொண்டார்.

அவ்வகையில் கற்பனையாக அவர்கட்குத் தம்மை ஒரு தோழியாக்கிக் கொண்டு இறைவன்தன் பலவாம் பெருமை களை எடுத்துக் கூறித் தம்மை அவன் ஆண்ட எளிமையை யும் அதனாற் பெற்ற இன்பங்களையும் விளக்கி அச்செல்வி யரை அவைகளைப் பெறுமாறு ஆற்றுப்படுத்தும் (நல்வழிப் படுத்தும்) முறையில் இருபது பாடல்களை அருளினார்.

அவையே, 'திருவெம்பாவை' எனப் பெறுகின்ற பதிக மாகத் திருவாசகத்தில் இருபது பாடல்களாகத் திகழ் கின்றன.

அப்பாடல்களில் ஒருவரை ஒருவர் துயில் எழுப்புகின்ற முறையில் பெருமான், 'இறைவனை மறந்தும், பிறவியின் நோக்கத்தை மறந்தும் அறியாமையில் கிடந்து பல துன்பங் களில் உழன்று வாடும் மனித இனம், அவற்றினின்று விடுபட்டு

விழிப்புற்று எழுந்து மெய்யுணர்வு பெற்று இறைவனைப் போற்றி உய்தல் வேண்டும் என்னும் உண்மையை(தத்துவம்) உள்ளுறையாக வைத்துப்பாடி அருள்கின்றார்.

அவற்றில் சில பாடல்களில் உள்ள வரிகள் :—

'ஆதியும் அந்தமும்
இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்
கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ'

வளருதியோ — உறங்குகின்றாயோ?

'ஒண்ணித் திலநகையாய்
இன்னம் புலர்ந்தின்றோ'

'கண்ணைத் துயின்றவமே
காலத்தைப் போக்காதே'

'வானே நிலனே
பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத்
தலைஅளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி
வந்தோர்க்குன் வாய்திறவாய்'

'நம்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா
எங்கோமான் அன்பர்க்கு
... ...
சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய்
மழை.......'

‘உன்அடியார் தாள்பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர்
ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே
தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே
எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும்
இலோமேலோர் எம்பாவாய்’

பெருமான், பெண்டிர் ஆடும் திருவம்மானை, திருப்பொற் சுண்ணம் முதலாம் ஒன்பது பதிகங்களிலும் இம்முறையில் வைத்து இறைவன் பெருமை, தம்மை அவன் ஆண்டு கொண்ட வரலாறு முதலியவற்றை விளக்கிப்பாடி அருள் கின்றார். இவ்வாறே தும்பி, கிளி, குயில் முதலியவற்றை விளித்துப் (அழைத்து) பாடியுள்ளார்.

அதனால் பெருமான் அருள் உள்ளம், மனிதகுல உய் வுக்கு மட்டும் அன்றிச் சிறுதும்பி, குயில், கிளி முதலாம் சிற்றுயிர்களின் உய்வையும் நாடும் உயர்வுடையது என்பதை அறிகின்றோம்.

‘எவ்வுயிரும் பொது எனக்கண்டு இரங்கி உபகரிக் கின்றார் யாவர் அவர் உளந்தான் சுத்த சித்துரு வாய் எம்பெருமான் நடம் புரியும் இடம் என நான் தேர்ந்தேன்’

என்கின்றார் வடலூர் வள்ளற்பெருமான். ஆம்! அவர் அருளியவாறு அம்பலக் கூத்தனை அகத்தில் கொண்டுள்ள நம் பெருமான் திருவுள்ளம் அப்படித் தானே இருக்கும்! மற்றும்,

‘இளமையிற் கல்வி சிலையில் எழுத்து’ என்பார்கள்.

அப் பருவத்திலேயே நல்லொழுக்கங்களையும், கருத்துக்களையும் சிறுவர்கள் உள்ளத்தில் ஊட்டி எதிர் காலத்திலும் அவர்களை நன்மக்களாக வாழச் செய்யும் ஆர்வத்தால் பரிவால் ஔவையார் முதலாம் ஆன்றோர்கள்,

'ஆத்தி சூடி'

'கொன்றை வேந்தன்'

'உலக நீதி'

'நல்வழி'

முதலாம் நூல்களை இயற்றியுள்ளனர்.

'இம்முறை பற்றியும் சிறுமியர் உய்யப் பெருமான்' அன்னைப்பத்தில் பத்துப் பாடல்கள் அருளிச் செய்துள்ளார். சிறுமியர்க்குக் கூறுவன சிறுவர்க்கும் ஆம். ஆயினும் பெண் குழந்தைகள் எளிதில் அன்புடன் ஏற்றுச் செயற்படுவராதலின் பெருமான் சிறுமியர், மகளிர் மேல் வைத்துப் பாடினார் என்னலாம். உண்மை அடியார்கள் போலி அடியார்கள் போல் தம் நலமே கருதி இறைவனை வழிபாடு செய்யார்; தவம் புரியார்; வீடுபெற நினையார்;

'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்
இலங்கும் உயிர்உடல் அனைத்தும்
ஈசன் கோயில்'

எனக் கொண்டு அவ்வுயிர்கள் உய்யத் தொண்டுகள் யாவுஞ் செய்வர். காண்பனவும் சிவமே எனக்கொண்டு — கண்டு மகிழ்வர். வணங்குவர், இவற்றிற்குத் தெய்வம் திகழ் சான்றோர்களின் மேற்கோள் பாடல்கள் காட்டுவதாயின் அஃதொரு தனி நூலாகி விடும். ஆதலின், நம்பெருமான்

பாடல்கள், பாடல் வரிகள் சிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம். அவை,

'நிரந்தஆ காயம் நீர்நிலம்
தீகால் ஆயவை
அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன்
உன்னைக் கண்ணுறக்
கண்டுகொண் டின்றே'

'பார்பதம் அண்டம் அனைத்துமாய்
முளைத்துப் பரந்ததோர்
படரொளிப் பரப்பே'

'ஒன்றுநீ அல்லை அன்றுஒன்
றில்லை ....'

— **கோயில் திருப்பதிகம்.**

'வானும் திசைகளும்
மாகடலும் ஆயபிரான்'

— **திருக்கோத்துப்பி 15.**

'பித்தனே எல்லா உயிருமாய்த்
தழைத்துப் பிழைத்தவை
அல்லையாய் நிற்கும்
எத்தனே ... ...'

— **பிடித்த பத்து.**

என்பன.

ஆகவே, இதுவரை கண்ட ஆய்வுகளிலிருந்து பெருமான் தம்மை மறந்த நிலை (சமாதி நிலை) யிலிருந்து மீண்டும் நிற்கும் நேரங்களில் மன்பதை உய்ய அருள் உரைகள் வழங்கி உலகரை உய்வித்தார்; காண்பன யாவும் சிவமாகக் கண்டார். வணங்கினார் என்பதை அவர்தம் வாய்மொழி யாலறிகின்றோம். ஆதலின் இதுவும் ஒரு வகையில் தம்மை மறந்த நிலையாகும் என்னலாம்.

ஆகவேதான்,

‘எந்நிலையில் நின்றாலும்
எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள்
மறவாமை பொருள்’

என்று சேக்கிழார் பாடுகிறார்.

மாதரை மதித்தல்

‘பெருமானும் மாதர் இன்பமும்’ என்ற தலைப்பில் பெருமான் மாதரை இழிவுபடுத்தும் ஒருவார்த்தையும் கூற வில்லை என்று காட்டினோம். அத்துடன் அல்லாமல் மாதரை மதித்தார்; அவர் முன்னேற்றத்தில் அக்கரை யுடையராயிருந்தார் என்பதற்குத் திருவெம்பாவை முதலாம் பத்துப் பதிகங்களும் சான்றாகும். மற்றும் அவரருளிய ‘திருக்கோவையார்’ என்னும் அகப்பொருள் காவியத்தில் பெண்பாலரின் சிறப்புக்களே அந்நூல் முழுவதும் (400-பாடல்கள்) ஊடுருவி நிற்றல் காணலாம். இவற்றால் பெருமான் தம் மனைவியாரிடத்துப் பெருமதிப்பு வைத்திருந் தார். அதற்கான தகுதிகள் நிரம்பியவராக அவர் திகழ்ந் தார். என்பவற்றிற்கு மேலே பெருமான் அருளிய பாடல் கள் இரண்டைக் காட்டினோம். அன்னைப் பதிகத்தில் ஒரு சிறுமி, சிவபிரான் தோற்றத்தைக் கண்டு அவன் பொலி வையும் அழகையுங் கூறி அவர்பால் தன் மனம் ஈர்ப்புண்ட தைத் தன் அன்னைக்குத் தெரிவிக்கின்றாள். அதனால், பெருமானுக்கு ஒரு மகள் இருந்தாள் என்பதும் கருதலாம்படி உள்ளது. பெருமான் அன்னைப் பத்தை அருளிய காலத்தில் அவள் அகவை பத்துக்கு மேலிராது என்றுங் கருதலாம். பெருமானின் திருச்செல்வியாகப் பிறக்கும் பேறு பெற்ற அச்சிறுமிக்கும் பெற்றோரைப் போலச் சிவபத்தி நிறைந் திருக்கலாமன்றோ? அதனாற் போலும் பெருமான் அன்னைப் பத்து அருளினார் என்றும் கருதலாம்.

அப்பதிகத்தில் காதல் கொண்ட ஒரு தலை மகளின் சொல்லாகப் பொருளாக — உணர்வாக ஒன்றுமில்லை.

திரு அம்மானையில்,

‘சூடுவேன் பூங்கொன்றை
சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி
முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு
உருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச்
சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன்.........’ — திரு அம்மானை 17

என்ற பாட்டில் காணுமாறு தலைவனைக் கூடிய தலைவியின் ஆர்வமிகு சொற்களோ, உணர்ச்சிகளோ ஒரு சிறிதும் அன்னைப்பத்தில் இல்லை என்பதனால் அச்சிறுமி காதலி நிலையினள் அல்லள் என்பதை அறியலாம். அதனாலும் அவள் பெருமானின் மகளாக இருத்தல் கூடும் என்று கருதலாம். அமைச்சராயிருந்தார்க்கு மனைவி இருத்தல் உறுதியாம். மகள் இருக்கக் கூடாதா என்ன? மற்றும் பெண், ஆண் மகன்களும் இருந்திருக்கலாம்; ஒன்று மட்டும் உறுதி. அச் சிறுமியும், அன்னையும் பெருமானின் மகளும், மனைவியும் ஆவர் என்பதே அது.

மேலே கூறியவாறு பெருமான் மகள், மனைவியாரிடம் கொண்ட அன்பினைக் காணும் போது, பெருமான், சிறப்பு முறையில் யாவற்றையுந் துறந்தார். எனினும், மன்னுயிர் யாவும் சிவமே எனக்காணும் பொது நோக்கில் மனைவி, மகள், அடியார் ஏனையோரிடத்தில் பெருமான் அன்பு செய்திருக்கலாம். அது தவறல்லவே; உடல் தொடர்பின்றியும் பரம அம்சர் தம் மனைவியுடன் வாழ்ந்து அன்பு செய்யவில்லையா? தம் அன்னையார், உடன்பிறந்தார், அவர் மக்கள் உறவினர்களிடம் அன்பு கொண்டு அவர்களைப் போற்றிக் காத்து வரவில்லையா?

எனவே, பெருமான், அருள் பெற்ற பிந்திய நிலையிலும் இவ்வாறு யாவரிடமும் அன்பு செய்தார் என்பது உறுதியே. அவரைப் பற்றிய புராண நூல்களில் அவர்க்கு மனைவி, மக்கள் இலர் என்று கூறப் பெறவில்லை.

பெருமானின் அடியார் அன்பு

'இணையார் திருவடி
யென் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள்
அத்தனையும் துறந்து... '

— திருப்பூவல்லி 1.

விட்ட பெருமான்,

'உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
.. ..'

— திருப்புலம்பல் 3.

என்று விட்ட அடிகள்,

'வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம்'

— உயிருண்ணிப் பத்து 7.

என்ற தெய்வ நிகழ் சான்றோர்,

'கொள்ளேன் புரந்தரன்மால்அயன்
வாழ்வு... ... '

— திருச்சதகம் 2.

புரந்தரன் — இந்திரன்
மால் — திருமால்
அயன் — பிரமன் (வாழ்வு உயர்ந்த வாழ்வாம் பதவிகள்)
என்றும் மெய்ஞ்ஞானி அடியார்களிடத்து மட்டும் எனக்கு அன்பு வேண்டும் அவர்களுடன் — இடையில் நானும் ஓர் அடியானாக வேண்டும் என்று அம்பலக் கூத்தனை,

'உடையாள் உன்றன் நடுஇருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேனுன்
அடியார்நடுவுள் இருக்கும்அரு
ளைப்புரி யாய் . ...'

— கோயில் மூத்த திருப்பதிகம் 1.

என்று வேண்டுகின்றார்.

பெருமான் அகவை

பெருமான் அகவை பற்றி அவரைப் பற்றிய புராணங்களில் ஒன்றுங் கூறப் பெறவில்லை. சென்ற ஒரு நூற்றாண்டுக்கு முன் வரையில் சான்றோர் எவராலும் அது பற்றி ஒன்றுங் கூறப் பெறவில்லை. பின் யாரோ ஒருவர்,

'அப்பருக்கு எண்பத்தொன்று அருள்வாதவூரர்க்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம் — இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறுசொன் ஞானசம்பந்தர்க்கு
அந்தம் பதினாறறி'

என்று பாடியுள்ளார்.

இப்பாட்டில் சம்பந்தர் அகவை பதினாறே என்பதற்குச் சேக்கிழாரடிகள் வாக்கில் சான்றுண்டு:—

'புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறு புகலிவேந்தர்'என்று
— **திருஞானசம்பந்தர் புராணம் 1109.**

ஏனைய மூவர் அகவைக்குச் சொல்லப் பெற்றவற்றில் அப்பர் அகவை பொருந்துவதாக இருக்கலாம், சான்றில்லை. பெருமானுக்கும், சுந்தரர்க்குஞ் சொல்லிய அகவைகள், சிறிதும் பொருந்தா. சான்றுகளில்லை என்பது மட்டுமல்ல. அவர்கள் வரலாற்றுச் செய்திகள், பயணங்களைக் காணும் ஆய்வு அறிவில்லாதவர்க்குங் கூட அவை ஏற்கவியலா.

பெருமான் வரலாற்றை நோக்கும்போது அவர் பேரறிவின் மாட்சி நோக்கி மன்னன் அவரை அமைச்சராக்கினாலும் அதுவும் முப்பது வயதுக்கு முன் இருக்காது. இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றபோது 32 அல்லது 35 என்று கொண்டாலும் அன்னைப்பத்துப் பாடும்போது 36 அல்லது 37 இருக்கலாம். எனவே, அவர் மகள் அகவை பத்துக்கு மேலிருக்க முடியாது. அடிகளின் இணையில்லாப் பத்திமை, உணர்ச்சிப் பெருக்கு யாத்திரை செய்த கோயில்கள் பத்துக்கு மேலில்லை என்பதையும் கணக்கிட்டால் பெருமான் தில்லைக்கூத்தனுடன் இரண்டறக் கலந்தபோது அவர் அகவை 38-க்கும் 40-க்கும் இடையில்தான் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்பது உறுதியாம்.

'தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி '

தரிக்கிலேன் பொறுக்க மாட்டேன்.

'உடல்இது களைந்திட் டொல்லை
உம்பர்தந் தருளுபோற்றி'

களைந்திட்டு — நீக்கி
ஒல்லை — விரைவில்
உம்பர் — சிவ உலகு.

'இங்கிவாழ் வாற்ற கில்லேன்'

ஆற்றகில்லேன் — தாங்கமுடியாது.

'ஒழித்திடிவ் வாழ்வு '

— திருச்சதகம்.

'இருளைத் துரந்திட் டிங்கே
வாவென் றங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே'

— ஆசைப்பத்து 1.

அங்கே கூவும் — (என்னை) அங்கிருந்து அழை(ப்பாய்).

'எய்த்தேன் நாயனேன் இனியிங்
கிருக்க கில்லேன் இவ்வாழ்க்கை
...... வாங்காய் ...'

— ஆசைப்பத்து 6.

எய்த்தேன் — உன் பிரிவாற்றாது தளர்ந்து விட்டேன்
இருக்ககில்லேன் — இரேன்
வாங்காய் — எடுத்துக்கொள்.

பெருமானின் இவ்வுணர்ச்சி மிகுந்த உண்மையான வேண்டுகோளை இறைவன் ஏற்காமலிருப்பானோ? பல விடத்தும் பல பாடல்களிலும் இவ்வாறு உறுதியுடன்

வேண்டியுள்ளார்; நீரிலிருந்த மீனை வெளியே எடுத்துப் போட்டால் துடித்தல் போல், சிறிது நேரங் கூடினால் அது இறந்தே விடும் அன்றோ? ஆதலால் இறைவன் ஈதறிபவன் அவர் வேண்டுவதை அருளி இருப்பான் அன்றோ?

மேலும், பெருமான், இறைவனைக் காணும் குறிக்கோள் வெற்றியாயிற்று; திருப்பதிகங்கள் அருளியாயிற்று, பத்துத் தலங்களை வணங்கியுமாயிற்று; ஏனைய தலங்களைத் தம் பாடல்களில் அமைத்து வழிபட்டுமாயிற்று; இறுதியில் தில்லை யுற்றார். அங்கே பெருந்தவஞ் செய்து சிவமாகும் பேறு பெற்றார்.

தில்லையில் பெருமானைப் பற்றிய நிகழ்ச்சிகளில் புத்தருடன் வாதம், ஊமைப் பெண்ணைப் பேச வைத்தமை முதலானவற்றிற்குச் சான்றுகள் ஏதுமில்லை. அப்போது பெருமான் பாடியதாகக் கூறப்பெறும் திருச்சாழலில் புத்த மதம் பற்றியோ அதன் கோட்பாடுகள் பற்றியோ ஏதொரு செய்தியுமில்லை; குறிப்புமில்லை; சான்றுமில்லை.

ஆனால், பெருமான் தில்லையில் அம்பலவன் சேவடியி லமர்ந்தார் என்பது பற்றி மாறுபடுங் கருத்தில்லை. தெய்வம் நிகழ் சான்றோர்களின் பிறந்த ஊரும், பேறு பெற்ற ஊரும் எல்லா நாடுகளிலும் எல்லாராலும் மறவாது போற்றப் பெறு தலை அன்று மட்டுமல்ல இன்றுங் காணலாம். சம்பந்தர், அப்பர், சுந்தரர், திருமூலர், பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார் முதலாம் தெய்வச் சான்றோர் மறைந்த ஊர்களில் அவர்கள் தம் நினைவுச் சின்னங்கள் அல்லது வழிபாடுகள் நடைபெறுதலையும் யாவரும் அறிவர்.

ஆகவே, இதுவ்ரை செய்த ஆய்விலிருந்து பெருமா னுடைய அகவை 35-க்கு மேல் 38 அல்லது 40-க்கு மேலி ராது என்பது நன்கு விளங்கும்.

பெருமான் உலகோர்க்கு விடுத்த அறிக்கை

'யான்பெற்ற இன்பம் பெறுக! இவ்வையகம்'

— திருமூலர்.

என்பதே, தெய்வச் சான்றோரின் பேராசை. இறையருள் பெற்றச் சீவன் முத்தராகி, இறையருளில் இரண்டறக் கலந்து

வீடு பெற்றுள்ள நிலையிலும் இப்பேராவல் அவர்களை விட்டு நீங்காது. ஆம்! சிவபிரான் உயிர்களைப் படைத்தது, அப்பேற்றை உயிர்கள் பெற வேண்டும் என்பதற்காகத் தானே! அவனியல்பு அவனடியார்க்கும் இருத்தல் இயல்பு தானே! அவ்வருள் இரக்கம் நம் பெருமானுக்கும் இருத்தல் இயல்பு தானே!

'பெரியோர் என்போர் பிறர்நோய்கண்டு
எரியின் இழுதாவர் என்க ...'

என்பது ஆன்றோர் இலக்கணம் அன்றோ?

இவ்வியல்பில் தலை நின்ற நம் பெருமான், தாம் பெற்ற என்றும் நிலைத்த அழியாப் பேரின்பத்தைப் பெற்றுய்யுமாறு உலகத்தாரை விளித்துப் பேரன்பொடு இரக்கத்தோடும் அழைக்கின்றார். அது பற்றிய பாடல்கள் சில :—

'பூவார் சென்னி மன்னன்எம் புயங்கப்
பெருமான் சிறியோமை
ஓவா துள்ளம் கலந்துணர்வாய் உருக்கும்
வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப் பட்டன்பாய் ஆட்பட்
டீர்வந் தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட்
டுடையான் கழல்புகவே'

'புகவே வேண்டா புலன்களில்நீர் புயங்கப்
பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கஎல்லாம் வேண்டா
போக விடுமின்கள்
நகவே ஞாலத்து உள்புகுந்து நாயே
அனைய நமையாண்ட
தகவே உடையான் தனைச்சாரத் தளரா
திருப்பார் தாந்தாமே'

'நிற்பார் நிற்கநில் லாஉலகில் நில்லோம்
இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப் புயங்கன்
ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே நிற்கும்
பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்கு
அரியன் பெருமானே'— யாத்திரைப் பத்து 1,2,7.

'காலம்உண் டாகவே காதல்செய்து
உய்ம்மின் கருதரிய
ஞாலம்உண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலம்உண் டான்எங்கள் பாண்டிப்
பிரான்தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே'

— திருப்பாண்டிப் பதிகம் 5.

புயங்கள்—சிவபிரான், பேழ் கணித்தால்—புறக்கணித்தால்
மூலபண்டாரம் — நெருக்கடியான காலங்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மலை போன்ற பெருஞ்செல்வம் (பேரின்பம்)

என்ற கருத்துடையது.

இப்பாடல்களின் சுருங்கிய பொருள்

''மெய்யடியார்களே! வாருங்கள்; ஒன்று பட்டுக் கூடுங்கள்; நிலை இல்லா உலகப் பொருள்களின் மேலுள்ள பற்றுக்களை விடுங்கள்; பொய்யான புலன் இன்பங்களில் கொண்டுள்ள ஆசையை ஒழியுங்கள். அவன் அருளைப் பெற வாருங்கள். என் வேண்டு கோளைப் புறக் கணிக்காதீர்கள். சிவபிரான் தன் பேரின்பச் செல்வங்களை எல்லாம் உங்களுக்களிக்க முன் வந்து வாரி வழங்குகின்றான். இதுபோல் சிறந்த நற்காலம் ஒன்றில்லை, வந்து பெற்றுக்கொள்ளுங்கள்; எளியனாகிய என்னை ஆட்கொண்டான், உங்களையும் ஆட்கொள்வான். ஆகவே, அவனிடம் காதல் (பேரன்பு) செய்து உய்ய முந்துங்கள்.''

என்பதாம்.

மாணிக்கவாசகப் பெருந்தகையாரின்
மலரடி வாழ்க! வெல்க!!